தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகள்
செயலக வெளியீடு.

April 97, Vol 29 No 2

D
V211,31'N9:
N97 29.2
216828

வெளியீடு 10-6-98

Issued 10-6-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 10, 1997 – தொகுதி 29 – எண் 2

Thursday the 10th April, 1997 – Volume 29 – No. 2

பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

1366/98

**10-4-1997**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 257-294

2. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி மன்றத் தலைவர் தாக்கப்பட்டமை 295-298

3. **தகவல் கோரல்—**

பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி நீக்கிவைக்கப்பட்டிருப்பதை இரத்து செய்யக் கோரிக்கை - பேரவைத் தலைவரின் தீர்ப்பு 298-309

4. **மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 10-பால் வழங்கு செயல் திட்டங்கள்

(ஆ) கோரிக்கை எண் 22-கால்நடை வளர்ப்பு

(இ) கோரிக்கை எண் 44-காட்டுவளத் துறை

(ஈ) கோரிக்கை எண் 59-காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

(அ)–(ஈ) 309-426

**மாண்புமிகு** திரு. க. சுந்தரம் 313-314, 407-415

D
V211,31'N97
N97.29.2




| | பக்கங்கள் |
|---|---|
| 4. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி | 321, 389-407 418-421 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 322-327 |
| திரு. தா. உதயசூரியன் | 328-331 |
| திரு. எஸ்.எஸ். முகமது இஸ்மாயில் | 331-338 |
| * திரு. ஜி.எல். வெங்கடாசலம் | 338-342 |
| * திரு. டி. மணி | 342-349 |
| திரு. இ.ஜி. சுகவனம் | 349-354 |
| திரு. ச. இராஜரெட்டி | 355-357 |
| திரு. அ. சுடலைமுத்து | 357-360 |
| * திரு. எல். சந்தானம் | 360-364 |
| திரு. வி.பி. சிங்காரவேலு | 364-369 |
| திரு. பி. வெங்கடசாமி | 369-372 |
| திரு. வெ. சின்னய்யா | 372-375 |
| திரு. ஜி.கே. மணி | 376-379 |
| திரு. சி. ஞானசேகரன் | 379-388 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 427 |


216828
600 008

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 28, தாது, திருவள்ளுவர் ஆண்டு 2028

1997 ஏப்ரல் 10, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பிடி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து"

தடங்கல் நிறைந்த கரடுமுரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துச் செல்வது போல, விடா முயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு வெற்றி கிட்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 501, திரு. அ. மாரிமுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**501—**

**வானூர் தொகுதியில் பல்தொழில் நுட்பப் பயிலகம்**

*1809—**திரு. அ. மாரிமுத்து:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் அரசு பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வானூர் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ளதால், இதுவரையில் எந்தத் தொழிற்சாலைகளோ, எந்தக் கல்லூரியோ, எந்தத் தொழில் பயிற்சி நிலையமோ இல்லாத நிலையில், அந்தப் பகுதியினுடைய மக்களின் நலனைக் கருதியும், அந்தப் பகுதியினுடைய மாணவ மாணவிகளின் வளர்ச்சியைக் கருதியும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதில் மறுபரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிதிநிலை காரணமாக கல்லூரியோ, இப்படிப் பட்ட பல்தொழில் நுட்பப் பயிலகமோ தொடங்குவதற்கு வாய்ப்பில்லை யென்ற கருத்து முடிவு சில ஆண்டுகளுக்கு முன்னாலேயே மேற்கொள்ளப் பட்டுவிட்டது. சுயநிதிக் கல்லூரி, சுயநிதி பல்தொழில் நுட்பப் பயிலகம் என்ற முறையில் நடத்துவதற்கு யாரேனும் முகவர்கள் முன்வருவார்களே யானால், அதுகூடக் கேட்பவர்களுக்கெல்லாம் வழங்கக்கூடிய நிலையிலே இல்லாமல் அவற்றுள் உரிய முன்னுரிமை கருதப்பட்டு வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 502, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**502—**

## ஒரத்தநாட்டில் கலைக் கல்லூரி தொடங்குதல்

*502—**திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் அரசுக் கலைக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை



**திரு. பி. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது பேராசிரியர் அவர்கள் பல முறை இதே கேள்விக்கு பதில் அளித்துவிட்டார்கள். இருந்தாலும் ஓரத்தநாடு தொகுதியைப் பொறுத்தவரையில், 80 விழுக்காடு கிராமங்கள் சூழ்ந்த பகுதி. சுமார் 25 உயர்நிலைப் பள்ளிகள், 10 மேல்நிலைப் பள்ளிகள் போன்ற கல்வி நிறுவனங்கள் எல்லாம் இருக்கின்றன. பட்டுக்கோட்டை, திருவோணம் போன்ற தொகுதிகளுக்கு மத்திய தொகுதியாக ஒரத்தநாடு தொகுதி இருப்பதால், அங்கே ஒரு கலைக் கல்லூரித் தொடங்க வேண்டும் என்ற எங்களுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரிகள் தொடங்கப்படுகிற முறை ஏற்பட்டதற்குப் பின்னர், அரசுக் கல்லூரி தொடங்குகிற அந்தத் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.**

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளிலே பேராசிரியர் பற்றாக்குறை காரணமாக 'கெஸ்ட் லெக்சரர்' போட்டுக்கொள்ளலாம் என்ற அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், அந்த 'கெஸ்ட் லெக்சரர்'-களை ஆண்டுதோறும் நேர்முகத் தேர்வு நடத்தி அவர்களை இணைக்கின்ற முறை கையாளப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அவற்றைத் தவிர்த்து நிரந்தரமாக அந்த 'கெஸ்ட் லெக்சரர்'-களைப் பணியாற்றச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கெஸ்ட் லெக்சரர்' என்ற முறை தற்காலிகமானது. அது ஒரு ஆண்டிலே 10 திங்களுக்காக என்ற முறையில் அமர்த்தப்படுவது. இவர்கள் எத்தனை மணிநேரம் பாடம் நடத்துகிறார்களோ அதற்காக ஊதியம் வழங்கப்படுவது. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகத் தேர்வு செய்யப்படுகிறபோதுதான் நிலையான ஆசிரியர் பணியிடத்தைப் பெற முடியும், அந்தமுறையில் கடந்த ஆண்டிலேயும் பலர் நியமிக்கப்பட்டார்கள். இந்த ஆண்டும் தொடர்ந்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கலைக் கல்லூரியைத் தொடங்குவது பற்றி அரசின் கொள்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். புதிய கல்லூரியைத் தொடங்கவில்லையென்றாலும், இருக்கின்ற அரசுக் கல்லூரிகளை விரிவுபடுத்துகின்ற வகையில் சில பட்டப் படிப்புகள் தொடங்கப்படுமா ? அமைச்சர் அவர்கள்கூட நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்கு வெள்ளிவிழாவுக்காக நெல்லைக்கு வந்திருந்தார்கள். நெல்லையிலே ஒரே ஒரு அரசுக் கல்லூரிதான் இருக்கின்றது. அங்கே, சுற்றுலா-மேல்நிலை, முதுநிலை பட்டப்படிப்பும் மற்றும் 'அப்ளைட் மேத்ஸ்' பட்டப் படிப்பு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதையாவது அரசு தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய செலவினம் எதுவும் இல்லாமல், புதிய நியமனத்திற்குக் கட்டாயம் இல்லாமல், ஏற்கெனவே உள்ள குறைபாடுகளைப் போக்குகிற வகையில் அரசு செயல்பட்டு வருகின்ற நிலையில், புதிய நிதிப் பொறுப்பு எதுவும் அரசுக்கு ஏற்படாது இருக்குமானால், புதிய பாடத் திட்டங்கள் ஏற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி ஒட்டன்சத்திரத்தில் கள்ளிமந்தையம் என்ற இடத்தில், பழனியாண்டவர் கோயில் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான சுமார் 300 ஏக்கர் நிலம் தரிசாக உள்ளது. அந்த இடத்தில் தேவஸ்தானத்தின் மூலமாக ஒரு பொறியியல் கல்லூரியை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அறநிலையத் துறையினுடைய பொருளாதார வசதியைப் பொறுத்தது, அவர்கள் திட்டமிடுவதைப் பொறுத்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாட்டில் ஏற்கெனவே பி.எட்., படிப்பு போதிக்கிற ஆசிரியர்



பயிற்சிக் கல்லூரி இருக்கிறது. அதில் மேலும் சில பாட வகுப்புகளைச் சேர்த்து, கல்லூரியை விரிவாக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்பது தனிக் கேள்விக்குரியது. இருந்தாலும். அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரிகள் அமைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட அனந்தகிருஷ்ணன் கமிட்டியினுடைய அறிக்கை வந்துவிட்டதா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் முழு அறிக்கையை இன்னும் தரவில்லை என்றாலும், குறிப்பாக அவர்களுடையக் கருத்தோட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடையக் கருத்தோட்டத்தில் ஏராளமான சுயநிதிக் கல்லூரிகள் வருவதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அளவோடு, மிகக் குறைந்த எண்ணிக்கையில், தேவைப்படுகின்ற இடங்களிலே மட்டும் சுயநிதிக் கல்லூரிகளை வழங்கவேண்டுமென்று ஆலோசனைத் தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 503, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**503—**

## துணை மின் நிலையம் அமைத்தல்

***463—திரு. ப. பாலசுப்பிரமணியன் :**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டைத் தொகுதி, அதிராம்பட்டினத்தில் 35 கிலோவாட் துணை மின் நிலையம் அமைக்கும் பணியைத் துரிதப்படுத்தவும், அதனை 50 கிலோவாட் மின்மாற்றியாக மாற்றவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அதிராமபட்டினத்தில் 33/11 கிலோவாட் துணை மின் நிலையம்தான் அமைக்கப்பட இருக்கிறது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பகுதியின் உச்ச பளு 4 எம்.வி.ஏ. ஆக அதிகரித்துள்ளதால், இத்துணை மின் நிலையத்தில் ஒரு 5 எம்.வி.ஏ. மின் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 50 கிலோவாட் மின் மாற்றியாக மாற்றிடும் செயற்குறிப்பு ஏதும் இல்லை

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிராம்பட்டினத்தில் தற்போது 33 கிலோவாட் துணை மின் நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் விவசாயம் அதிக அளவில் செய்யப்பட்டு வருகின்றது. அங்கே அடிக்கடி மின்னழுத்தக் குறைவு ஏற்படுவதால் அந்தத் துணை மின் நிலையத்தை 50 கிலோவாட் துணை மின் நிலையமாக மாற்றித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 170 இலட்சம் ரூபாய் செலவில் 33/11 கிலோவாட் துணை மின் நிலையம் அமைக்க இப்போதுதான் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதிராம்பட்டினத்தினுடைய தேவை அதிகரிக்குமானால் அப்போது அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தனியார் துறையின் சார்பாக எத்தனை பேர்களுக்கு மின்சார உற்பத்தி செய்வதற்கு மின் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது? அப்படி அனுமதி வழங்கும்போது அவர்களுக்கு ஏதாவது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியிலே ஒப்பந்தம் செய்யப்பட்ட 16 எம்.ஓ.யு-க்களில் இப்போது 6 நிறுவனங்களுக்கு சுமார் 3,000 மெகாவாட் மின் உற்பத்திக்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தவுடன் 20 இடங்களிலே குறுகிய காலத்தில் மின் உற்பத்தித் தொடங்கும் திட்டத்திற்கான விண்ணப்பங்கள்



கோரப்பட்டு, அதிலே 11 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். மீதம் 9 இடங்களுக்கு மறு டெண்டர் விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிபந்தனை எதுவும் விதிக்கப்படுகிறதா என்று கேட்டார்கள். மின்வாரிய நிதிநிலை அறிக்கையைப்பற்றி விரைவிலே இங்கே விவாதிக்க இருக்கின்ற காரணத்தால், அப்போது விரிவாக அதுபற்றி விவாதிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில், எனது தொகுதியில், வாடிப்பட்டியில் 20 கிலோவாட் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்னும் அந்த வேலை தொடங்கப்படவில்லை. எப்போது அந்த வேலை ஆரம்பிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 கிலோவாட் துணை மின் நிலையம் அமைக்கக்கூடிய செயற்குறிப்பு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருக்குமானால், 33/11 கிலோவாட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடாக அது ஆகி இருக்கும். கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டம் இந்த நிதியாண்டிலே சேர்க்கப்பட்டு வேலைகள் நிச்சயமாக ஆரம்பிக்கப்படும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சுடலைமுத்து.

**திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, போடி தொகுதியில், காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்க, தனியார் துறைகள் முன்வந்தால், அரசு சலுகை ஏதாவது கொடுத்து உதவுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடி பகுதியில் காற்றாடி ஆலைகள் அமைப்பதற்குத் தேவையான காற்றின் வேகம் இருக்குமானால், தனியார் அப்படிப்பட்ட காற்றாடி ஆலைகளை அமைக்க முன்வந்தால், அரசாங்கம் நிச்சயமாக ஊக்கப்படுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறைக்கு மின்சாரம் தயாரிப்பதற்கு அரசு அனுமதி வழங்குகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அனுமதி வழங்கியிருப்பதிலே, அவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை எந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளும்; எந்த அளவுக்குப் பெற்றுக்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் மூலதனம் போட்டு, நம்முடைய மாநிலத்திலே உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்கு, யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் 29 காசுகள் ஆகிறது. ஆனால் வெளிநாடுகளிலிருந்து, தனியார் துறை இங்கே மின்சாரத்தை உற்பத்தி செய்ய வருகின்ற நேரத்தில், இதுவரை வந்த டெண்டரில் கொட்டேஷனில் குறைந்தபட்சம் ஒரு யூனிட்டுக்கு 2 ரூபாய் 24 காசுகளிலிருந்து, அதிகபட்சம் 2 ரூபாய் 49 காசுகள் வரையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவர்கள் போட்டிருக்கின்ற மூலதனம், அதனுடைய திறன் இவைகளைப் பொறுத்து, மத்திய அரசினுடைய கைடுலைன்ஸ்படி, மின்சார வாரியம் விலை நிர்ணயித்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குத்தாலம் தொகுதி, குடவாசலிலே 110/11 கே.வி. துணை மின் நிலையத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு 1997-98 ஆம் நிதி ஆண்டில் அது செயல்படும் என்ற தகவல் எனக்குத் தலைமைப் பொறியாளர் மூலமாகக் கிடைத்திருக்கிறது. அதற்குப் பரிந்துரை செய்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதை வழங்கிய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, அத்துடன் இணைத்து அனுப்பப்பட்ட கடலங்குடி 33 கே.வி. கொண்ட சப்-ஸ்டேஷனை 230 கே.வி. கொண்டதாக மாற்றுகிற, கிரிட் சப்-ஸ்டேஷனாக மாற்றுகிற கருத்துரு அரசுக்கு வந்துள்ளது. அதையும் இணைத்து இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள ஆவன செய்வார்களா என்பதை அறிந்துகொள்வதோடு, கடலங்குடி, திருவலங்குடி ஆகியவை எனது சொந்த ஊர் என்கின்ற காரணத்தால், மண்ணின் மைந்தர் என்ற உணர்வுக்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்கிறார் என்றால் அதிலே நியாயம் இருக்கும் என்ற அடிப்படையில் அந்தத் திட்டம் உடனடியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, மண்ணின் மைந்தர் பிரச்சினையிலே, இந்த அரசு அதை ஒரு கொள்கையாக வைத்திருக்கிறது. நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை இந்த ஆண்டின் நிதிநிலைமையைப் பொறுத்து நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ.அ. ஆண்டமுத்து.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி, வெட்டியம்பாளையம் என்ற என் சொந்த ஊருக்கு அருகில் 100 மெகாவாட் மின் நிலையம் அமைக்கப்பட்டு, ஒரு வருட காலம் ஆகியும் அது இயங்கவில்லை. அதனுடைய டிரான்ஸ்ஃபார்மர் வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இன்னும் திரும்பப்பெறப்படாமல், அங்கு இருக்கின்ற விவசாயப் பெருமக்கள் மின் அழுத்தக் குறைவினால், விவசாயம் செய்ய முடியாமல் அவதிக்குள்ளாகிறார்கள். மண்மங்கலம் போன்ற பல இடங்களில் துணை மின்நிலையம் அமைக்கப்பட்டு, அது செயல்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பது ஒரு சப்-ஸ்டேஷன் நிறுவுவது பற்றி. 100 மெகாவாட் திறன் கொண்ட ஒரு தனியார் சப்-ஸ்டேஷன் எங்கும் கிடையாது. தனியார் துறைக்கு, 100 மெகாவாட் உற்பத்தி செய்வதற்குத்தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, டிரான்ஸ்ஃபார்மர் 100 மெகாவாட்டில் வைப்பதில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்தக் கருத்தை அரசு பரிசீலிக்கும். அந்தப் பகுதியிலே ஒரு துணை மின்நிலையம் வருவதற்கான வாக்குறுதிகள் தரப்பட்டு, அது நிறைவேற்றப்படாமல் இருக்குமானால், அதை இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் அழுத்தக் குறைவு என்னுடைய தொகுதியிலும் நிலவுகிறது. காற்று

அலைகளின் மூலம் மின்சாரம், கடல் அலைகளின் மூலம் மின்சாரம், கரும்புச் சக்கையின் மூலம் மின்சாரம், மாட்டுச் சாணத்தின் மூலம் மின்சாரம் என்று இருக்கக்கூடிய இந்த விஞ்ஞான காலக் கட்டத்தில், இந்த மின் அழுத்தக் குறைவை நிறைவு செய்வதற்கு நம்முடைய அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்னழுத்தக் குறைவு மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் மட்டுமல்ல. தமிழ்நாடு முழுவதும் இருக்கிறது. அதைப் போக்குவதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 40 முதல் 50 இடங்களில் துணை மின் நிலையங்களை அமைக்க ஏற்பாடு செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல, காற்றிலிருந்து மின்சாரம், கடல் அலையிலிருந்து மின்சாரம், சர்க்கரை ஆலையிலிருந்து மின்சாரம் என்றெல்லாம் சொன்னபடி, எல்லா இடங்களிலும், காற்றாலை மூலமாக, சர்க்கரை ஆலை மூலமாக, நீர் மூலமாக, அனல் நிலையம் மூலமாக எல்லாம் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம். ஆனால் அவர் சொன்னதுபோல, கடல் அலையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்குப் போதுமான டெக்னாலஜி இன்னும் தமிழகத்திற்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ், அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் நேற்றெல்லாம் நான் ஊரில் தங்கியிருந்தபோது, பத்து நிமிடத்துக்கு ஒரு தடவை ஒவ்வொரு மணி நேரமும் மின்சாரத் தடை ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அந்த மின்சாரத் தடை, தஞ்சாவூர் ஜில்லா, நாகை காயிதே மில்லத் ஜில்லா, ஏ.டி. பன்னீர்செல்வம் ஜில்லா ஆகிய இந்த மூன்று ஜில்லாக்களிலும் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. அதில் அதிகமான நேரம் மின்சாரம் வருவதில்லை. இப்போது கோடை காலமாக இருப்பதால், மின்சாரத் தடையை உடனடியாக நீக்கி வசதி செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை மாண்புமிகு மெம்பர் சொன்னதைப்போல, அதிராம்பட்டினம் கடற்கரைப் பிரதேசம். அங்கே உப்பு நீர் வருகிறது. அங்கே மின்சாரம் இருந்தால்தான் குடிநீரை நீர்த்தொட்டிக்கு ஏற்ற முடியும். ஆகவே அந்த நீர்த் தொட்டிக்கு நீரை ஏற்றுவதற்கு மின்சாரம்



தடையில்லாமல் கொடுக்க அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தஞ்சை. நாகை போன்ற பகுதிகளில் நேற்றையதினம் அடிக்கடி மின் தடை ஏற்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அது உண்மை. நடந்த மூன்று தினங்களுக்கு முன்பு, நெய்வேலியில் ஏற்பட்ட திடீர் வேலை நிறுத்தத்தின் காரணமாக சுமார் 2,000 மெகாவாட் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக 200 மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்ய முடிந்தது. எனவேதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரவு முழுவதும் தூங்காமல் சம்பந்தப்பட்ட சங்கத் தலைவர்களையெல்லாம் கூப்பிட்டு, எப்படியாவது உடனடியாக வேலைக்குச் செல்ல வேண்டும் என்றும், அங்குள்ள பிரச்சினைகளை இந்த அரசு பரிசீலிக்கும் என்றும் தெரிவித்து, நேற்று முதற்கொண்டு பணியாளர்கள் அங்கே வேலைக்குச் சென்று, இப்போது மின்சாரம் ஒழுங்காக உற்பத்தியாகிறது. இன்று முதற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மாவட்டத்தில் அந்தக் குறைபாடு இருக்காது. கடற்கரை ஓரத்தில் உள்ள அதிராம்பட்டினத்தில் குடிநீருக்கான மின்சாரம் வழங்கப்படுமா என்று கேட்டார்கள். நிச்சயமாக வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 504. திரு. கோ. மோகனதாசன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**504—**

**பூம்புகார் தொகுதியில் துணைமின் நிலையங்கள்**

* 1541—**திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியில் பொறையார், அரசூர், சேமங்கலம் ஆகிய இடங்களில் துணைமின் நிலையங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

ஆம்.

[1997 ஏப்ரல் 10

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, பொறையாரில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுவிட்டது. நன்றி. ஆனால் சேமங்கலம் மற்றும் அரகூரில் இன்னும் தொடங்கப்படவில்லை. அந்தப் பகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால், விவசாயப் பம்ப் செட்டுகளுக்கெல்லாம் மின்சாரம் இல்லை. இப்போது, விவசாயப் பணிகள் ஆரம்பிக்கின்ற இந்த நேரத்தில், மின்சாரப் பற்றாக்குறை இருப்பதால், அங்கே அரகூரிலும், சேமங்கலத்திலும் துணை மின் நிலையங்கள் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் 33/11 கிலோவாட் துணை மின்நிலையம் 162 லட்ச ரூபாய் செலவில் தொடங்கப்பட்டு அதன் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் இப்போது முடிவடைகின்ற தருவாயில் இருக்கிறது. அரகூர், சேமங்கலம் ஆகிய இடங்களில் line safe துணை மின் நிலையங்கள் அமைக்க சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. அதற்கும் இந்த ஆண்டு அந்தப் பணிகளை மேற்கொள்ள வாரியம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *505*, திரு. ம. சண்முகம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**505—**

**பொள்ளாச்சி வட்டத்தைப் பிரித்தல்**

*3310—**திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து, கிணத்துக்கடவைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து, கிணத்துக்கடவைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1997 ஏப்ரல் 10]

முற்பகல் 9-50

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி வட்டமானது மிக அதிகமான பரப்பளவைக் கொண்டது. பொள்ளாச்சி வடக்கு, தெற்கு, ஆனைமலை, கிணத்துக்கடவு இப்படி நான்கு ஒன்றியங்களை உள்ளடக்கி இருக்கின்றது. கிணத்துக்கடவு வட்டம் அமைக்க வேண்டுமென்று அந்தத் தொகுதி மக்கள் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பரிந்துரை செய்துள்ளார்கள். புதிதாகத் தொடங்கப்படுகின்ற வட்டத்திற்கு எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் என்பது பட்டியல் இடப்பட்டு, அந்த ஊராட்சி மன்றங்களின் ஒப்புதல் கேட்கப்பட்ட நிலையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலித்து புதிய வட்டம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவை எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்களின் உணர்ச்சிக்கும், உத்வேகத்திற்கும், உணர்வுகளுக்கும் மதிப்பு அளிக்கின்ற வகையில், அவரது கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *506*, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**506—**

**வீரவநல்லூர் - முக்கூடல் இணைப்புப் பாலம் கட்டுதல்**

*1626—**திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே வீரவநல்லூர்-முக்கூடல் இணைப்புப் பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வீரவநல்லூர்-முக்கூடல் இடையில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட சுமார் ரூபாய் 7 கோடியே 5 இலட்சம் தேவைப்படும். நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, தற்போது பாலம் கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கூடல்-வீரவநல்லூர் இணைப்புப் பாலம், பாப்பாக்குடி ஒன்றியத்தையும் சேரன்மகாதேவி ஒன்றியத்தையும் இணைக்கின்ற ஒரு பாலம். சுமார் 1½ இலட்சம் மக்கள் அந்தப் பாலத்தினாலே பயன் அடைவார்கள். ஆற்றின் தென் பகுதியில் கோமதி மில்லும், வடக்குப் பகுதியில் சன் பேப்பர் மில்லும் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பாலத்தைத் தொழிலாளர்கள் அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய நல்ல வாய்ப்பு ஏற்படும். மேலும், அந்தப் பகுதியிலேயே பீடித் தொழிலாளர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். ஆற்றுக்குத் தென் புறத்திலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அந்தப் பகுதி மக்களெல்லாம் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால் அதிகமாகக் கல்வி அறிவு பெறாமல் தாழ்ந்த நிலையிலே இருக்கின்றார்கள். இப்போது அந்தச் சாலை ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கின்றது. எனவே, அரசு இதனைப் பெருவழித் துறைக்கு மாற்றி, பெருவழித் துறை மூலமாக உடனடியாகப் பாலம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரவநல்லூர் முதல் முக்கூடல் வரையிலான சாலைகள் மூன்று சாலைகள் இருக்கின்றன. அவற்றில் பெருவழித் துறை சார்பாகவும் ஒரு சாலை இருக்கிறது. அந்தச் சாலைகளில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இலட்சக்கணக்கான மக்கள் செல்ல போக்குவரத்து வசதி இல்லை. மூன்று கிராமங்களை உள்ளடக்கிய—. அந்தச் சாலையில் ரூபாய் 7 கோடி செலவழிப்பதைவிட, அந்தப்பகுதி மக்கள் உரிய வழியில் சென்று நெடுஞ்சாலைத் துறையால் கட்டப்பட்டிருக்கிற பாலத்தின் வழியாகச் செல்வதற்கும் வாய்ப்பிருக்கிறது. எனவே தரைப்பாலம் அமைக்கிற திட்டத்தைப் பரிசீலிக்கலாமா என்பதை அரசு யோசித்து வருகிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் *507*, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**507—**

### சிந்தாமணி பகுதிக்குக் குடிநீர் வழங்கல்

**2929*—**திரு. எம். ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்தில் சிந்தாமணி பகுதியிலுள்ள பூசாரி தெருவில் சரிவர குடிநீர் வருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்தில் சிந்தாமணி பகுதியில். அதாவது திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ளடங்கிய சிந்தாமணியில் உள்ள பூசாரித் தெருவில் குடிநீர் விநியோகக் குழாயில் மண் அடைப்பு ஏற்பட்டதன் காரணமாகக் குடிநீர் போதிய அளவு விநியோகம் ஆகாமல், பொதுமக்களுக்குக் கிடைக்காமல் இருந்தது. ஆனால் குடிநீர் விநியோகக் குழாயில் படிந்திருந்த மண் மாநகராட்சிப் பணியாளர்களால் அகற்றப்பட்டும், அந்தப் பகுதிக்குச் செல்லும் குழாயில் வால்வு சரி செய்யப்பட்டும், குடிநீர் விநியோகம் சீரான முறையில் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்பாராத காரணங்களினால் சிற்சில வீடுகளுக்கு மட்டும் குழாய் இணைப்புகளில் சில பழுதுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதுவும் சீர் செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *508*, திரு. கே. மணிவர்மா, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 10

**508—**

**பருத்தி, மஞ்சள் கொள்முதல் செய்தல்**

***[illegible]—திரு. கே. மணிவர்மா:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தண்டராம்பட்டு தொகுதியில், அதிகமாக விளையும் பருத்தி, மஞ்சள் ஆகியவற்றை அங்கேயே கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தண்டராம்பட்டு தொகுதியில் விளையும் பருத்தி மற்றும் மஞ்சளை அருகாமையில் உள்ள தானிப்பாடி துணை விற்பனைக் கூடம் மற்றும் வானாபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டுவந்து விற்பனை செய்யவும் மற்றும் வியாபாரிகள் கொள்முதல் செய்யவும் வழிவகைகளும் வசதிகளும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதி முழுவதும் விவசாயத்தை நம்பி இருக்கின்ற தொகுதி. அங்கே பருத்தி மற்றும் மஞ்சள் பயிரிடுகிறார்கள். தானிப்பாடி மற்றும் வானாபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குப் பருத்தி கொள்முதல் செய்கின்ற வியாபாரிகள் வருவதில்லை. அதனால் சுமார் 100 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள ஊத்தங்கரை, விழுப்புரம் போன்ற வேறு மாவட்டங்களில் இருக்கக்கூடிய நகரங்களுக்கு எடுத்துச் சென்று தான் பருத்தியை வியாபாரிகள் விற்பனை செய்கிறார்கள். அவர்கள் இன்னல் தீர தண்டராம்பட்டில் தனியாகப் பருத்திக்கென விற்பனைக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்கெனவே ஒரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தொடங்கப்பட்டு



1997 ஏப்ரல் 10]

இருந்தது. அங்கே பணிபுரிந்த பணியாளர்களுக்குச் சம்பளம் தரக்கூடிய அளவுக்குக்கூட அங்கே வருமானம் வரவில்லை. அதுமட்டுமல்லாமல் அங்கே விவசாயிகள் அதிக அளவில் உணவுப் பொருள்களைக் கொண்டு வராத நிலையும் இருந்தது என்பதைக் கருத்திற்கொண்டு அது மூடப்பட்டு விட்டது. இப்போது செங்கம் 30 கிலோ மீட்டர் தூரத்திலும், திருவண்ணாமலை 16 கிலோ மீட்டர் தூரத்திலும், வானாபுரம் 20 கிலோ மீட்டர் தூரத்திலும், தானிப்பாடி 15 கிலோ மீட்டர் தூரத்திலும் இருப்பதால், அங்கேயெல்லாம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இருக்கின்றன. ஆகவே உணவுப் பொருள்களை 100 கிலோ மீட்டர் தூரம் எடுத்துச் சென்று விவசாயிகள் வேறு மாவட்டங்களில் விற்க வேண்டிய அவசியமில்லை. அருகில் திருவண்ணாமலை 16 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கொண்டு வரக்கூடிய பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்றால், விவசாயிகள் கொண்டு வந்திருக்கிற அந்த விளை பொருள்களை விற்பனைக் கூடத்திலேயே வைத்து ஈட்டுறுதித் தொகை பெற விற்பனைச் சங்கங்கள் மூலமாகக் கடன் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-ஆம் ஆண்டில் நான் வேளாண்மைத்துறை அமைச்சராக இருந்தபோது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருள்களை விற்பனை செய்வதற்காக வருகை தந்து விற்பனை ஆகாமல் இருந்தாலும், அல்லது அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய காரணத்தால் விற்க முடியவில்லை என்றாலும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அதை வைத்துவிட்டு பொருளீட்டுக் கடனாகத் தர வேண்டுமென்று ஒரு கோரிக்கை வந்த போது, அது நியாயமான கோரிக்கை என்பதால் 1990 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை பொருளீட்டுக் கடன் வழங்கலாம் என்றும், விவசாயிகள் எப்போது அதை விற்க விரும்புகிறார்களோ அப்போது அதை விற்றுவிட்டு கடனைக் கொடுத்து விட்டு, மீதியை அவர்களுக்கு இலாபம் என்ற அளவில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. இப்போது தமிழ் நாட்டில் 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

இருக்கின்றன. இந்த 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் - அரசாங்கத்தினுடைய இடத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தவிர தனியாரிடத்தில் வாடகையிலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இருக்கின்றன. ஆகவே. இந்த 25 ஆயிரம் ரூபாய்கூட குறைந்த தொகை. இன்னும் கூடுதலாக விவசாயிகளுக்குத் தர வேண்டுமென்று ஒரு கோரிக்கை வந்த காரணத்தால், இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் நான் பதில் அளிக்கிறபோதுகூட சொல்லி இருக்கிறேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சொந்தமான இடத்தில் இருக்குமிடங்களில் அந்த பொருளீட்டுக் கடன் பெறக்கூடியவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 35 ஆயிரம் ரூபாயும். அதைப்போல தனியாரிடத்தில் வாடகைக்கு உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இருந்தாலும்கூட அங்கே பொருளீட்டுக் கடனாக 25 ஆயிரம் ரூபாய் வழங்கலாம் என்று அறிவித்து இருக்கிறோம். ஆகவே, 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன் கொடுக்க இந்த அரசாங்கம் ஆணையிட்டு இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மணிவர்மா.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல செங்கம். திருவண்ணாமலை. தானிப்பாடி பகுதிகளில் எல்லாம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளின் விளைபொருள்கள் நியாயமான விலைக்கு விற்கப்படுகின்றன. பருத்தியைப் பொறுத்தவரையில் தனியாக ஒரு கொள்முதல் நிலையம் அமைத்தால்தான் நியாயமான விலை கிடைக்கும் என்ற எண்ணம் அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் மத்தியில் இருக்கிறது. அந்தப் பகுதியில் திருவண்ணாமலை மாவட்டத்திற்கென பருத்தி கொள்முதல் நிலையம் இல்லையென்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அந்தப் பகுதியில் பருத்தி கொள்முதல் நிலையம் தனியாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திலே எல்லாப் பொருட்களையும் கொண்டுவந்து விவசாயிகள் விற்பனை செய்யக்கூடிய





வசதி வாய்ப்புகளைத்தான் நாம் செய்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் இப்போது தண்டராம்பட்டிற்குக் கேட்கிறார். 10 ஆண்டுகளுக்கு முன்னால் அங்கே ஆரம்பிக்கப்பட்டு. அதை மூடி விட்டார்கள். போதிய அளவு விவசாயிகள் அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரவில்லையென்றும். அங்கே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்குப் போதிய ஊதியம் கொடுப்பதற்குக்கூட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வருமானம் இல்லையென்றும் காரணம் காட்டி மூடி விட்டார்கள். வேண்டுமானால் 10 ஆண்டுகளுக்கு முன்பு அது மூடப்பட்ட காரணத்தால் இப்போது துறையின் மூலம் பரிசீலித்து அவசியம் ஏற்படுமானால். கண்டிப்பாக இந்த அரசாங்கம் ஆரம்பிக்க முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 509, திரு. வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**509—**

### கல்லணைக் கால்வாய்களை மராமத்து செய்தல்

*611—**திரு. வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள அனைத்து கல்லணைக் கால்வாய்களையும் தூர் எடுத்து மராமத்து செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள கால்வாய்கள் நிலைமைக்கேற்பவும், நிதி நிலைமைக்கேற்பவும் அப்போதைக்கப்போது சீர்செய்யப்படும்.

**திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியானது கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதியாகும். அந்தப் பகுதியில் கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு குறைந்தது 40 நாட்கள் கழித்துதான் தண்ணீர் வரும் ஒரு நிலை இருந்துவருகிறது. எனவே இதற்கு முன்னுரிமை கொடுத்து கூடுதல் நிதி ஒதுக்கி வாய்க்கால்களை தூர் எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கல்லணைக் கால்வாயினுடைய தலைமடையில் மண்மேடு இருக்கிறது. அதை அகற்றுவதற்கு, அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாயை தஞ்சாவூரில் இருக்கிற காவிரி டெல்டா கால்வாய்களைச் சீரமைப்பதற்காகக் கொடுத்து இருக்கிறார். அதிலிருந்து 17 கால்வாய்களைச் சீரமைக்கும் பணி தொடங்குகிறது. மேலும், 20 ஏரிகளை எடுத்து அதையும் சீரமைக்கத் திட்டமிட்டு இருக்கிறோம். ஏற்கெனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 4 கால்வாய்களையும், 10 கண்மாய்களையும் எடுத்து அதையும் சீரமைக்கும் பணியைச் செய்து இருக்கிறோம். எனவே, நிதி நிலைமைக்கேற்ப எது அத்தியாவசியமாகத் தென்படுகிறதோ, அதற்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 510, திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**510—**

### குண்டாற்றின் கால்வாய்களைச் சீரமைத்தல்

***2141—திரு. சுப. தங்கவேலன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், குண்டாற்றின் பிரதான மற்றும் கிளைக் கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குண்டாறு, முதுகுளத்தூர் தாண்டியவுடன் இரகுநாத காவேரி என்ற பெயரோடு ஓடுகிறது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். கடந்த மானியக் கோரிக்கையில் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆற்றில் இருந்து பிரதான கால்வாய்கள், சித்திரங்குடி, எஸ்.டி.கோட்டை, ஆத்தனூர், சாத்தான்குளம், அதேபோல இளஞ்சம்பூர், சிக்கல், செல்வனூர், மாறந்தை போன்ற பல கால்வாய்கள் சுமார் 9 கி.மீ.-லிருந்து 14 கி.மீ. தூரம் வரைக்கும் பிரிந்து செல்கிறது. இந்தக் கால்வாய்களையும், அதனுடைய கிளைக் கால்வாய்களையும் தூர் வார திட்டமிடப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் இந்த அவையில் கேட்ட கேள்விதான் இது. அவர் ஆக்டிவ் வாய்ஸ்-ல் கேட்டிருந்ததை, இன்றைக்கு பாஸிவ் வாய்ஸ்-ல் கேள்வியாக இவர் போட்டிருக்கிறார். அதுதான் வித்தியாசம். மற்றபடி நான் அன்றைக்கே தெரிவித்தேன், நாராயணக்காவேரிக்கு 4 கோடியே 55 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று. அதேபோன்று இப்போது இரகுநாத காவேரிக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. கீழே இருக்கிற சந்தனத்தேவன் அணைக்கட்டுக்குக்கூட பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. எனவே அதன் தொடர்பாய் இருக்கிற கண்மாய்களுக்குச் செல்கிற கால்வாய்களுக்கும் சேர்த்துத்தான் சீரமைக்கும் பணி செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 511, டாக்டர் பத்மா, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**511—**

### கட்டாய நெல் கொள்முதல்

***1144—டாக்டர் பத்மா:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் கட்டாய நெல் கொள்முதல் செய்த இடங்களில் மீண்டும் கொள்முதல் செய்யும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், குவிண்டாலுக்கு ரூ.35 போனசாக அளிக்கப்பட்டதை உயர்த்தித்தர அரசு ஆவன செய்யுமா?

[1997 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே.

(அ) மற்றும் (ஆ) : ஏகபோகக் கொள்முதல் திட்டம் 15-9-1996 முதல் அமுல்படுத்தப்பட்டு குறுவை 1996 பருவத்தில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 40 ஆக அளிக்கப்பட்ட விவசாயிகளுக்கான ஊக்கத்தொகை, தற்போது சம்பா 1997 பருவத்தில் ரூ. 50 ஆக உயர்த்தியளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநிலத்திற்கே அதிகமாக நெல்லைக் கொடுக்கக்கூடிய தஞ்சை, நாகை மற்றும் ஏ.டி.பி. மாவட்டங்களில் விளையும் நெல்லுக்கு மட்டுமல்லாமல், குறிப்பாக புதுக்கோட்டை மற்றும் திருச்சி ஜில்லாக்களில் ஒருசில இடங்களில் மட்டும் ஊக்கத்தொகையாக 40 ரூபாயைக் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த 40 ரூபாய் என்பது கண்டிப்பாக விவசாயிகளுக்கு—குவிண்டால் ஒன்றுக்கு கொடுப்பது - போதாது (குறுக்கீடு) என்று நினைக்கிறேன். தற்போது அதை 50 ரூபாயாக உயர்த்தி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அது எங்களுக்குப் போதாது என்ற காரணத்தாலும், யூரியா விலை அதிகரித்துள்ளதாலும், விவசாயக் கூலி அதிகமாக இருப்பதாலும், அதை ரூபாய் 100 ஆக ஏற்றித் தர முடியுமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ரூபாய் என்பது ஊக்கத் தொகை மட்டுமல்ல. விவசாயிகளுடைய நெல்லின் தரக்கட்டு 15 ரூபாயிலிருந்து 5 ரூபாயாகக் குறைத்து, அதிலே 10 ரூபாய் விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற வகையிலே ஒரு குவிண்டாலுக்கு இந்தச் சம்பா பருவத்திலே 60 ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டித் தந்திருக்கிறார்கள். இதிலும் பல்வேறு விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் அரசுக்கு வந்தன. எங்களுக்குக் குவிண்டாலுக்கு 100 ரூபாய் தர வேண்டும் என்று கேட்டபோதுகூட, அரசால் இவ்வளவுதான் அளிக்க முடியும். 25 ரூபாய் கடந்த காலத்திலே இருந்ததைவிட அதிகப்படுத்தித் தந்திருந்தாலும், அதைவிடக் குறைவாக வியாபாரிகள் நெல்லைப் பிடிக்கிறார்கள். விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில், அரசு தருகின்ற போனஸ் தொகையைச் சேர்த்து தருகின்ற தொகையைவிட, குறைவாக வியாபாரிகள் பிடித்த



1997 ஏப்ரல் 10]

காரணத்தால், பல்வேறு விவசாயிகள் அரசிடம் கோரிக்கை வைத்தார்கள். நீங்கள், தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக நெல்லைப் பிடியுங்கள் என்று விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலே கேட்டுக் கொண்டதற்கு இணங்க 8 இடங்களிலே நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. அதேபோல் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்குச் சென்றபோது, அங்கே இருக்கின்ற விவசாயிகளும், எங்களுக்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகத் தருகின்ற அந்த விலைக்கு எங்கள் நெல்லைக் கொள்முதல் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு விவசாயிகளுக்குக் கூட்டித் தந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 512, திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**512—**

**கூட்டுறவுப் பண்டகசாலை தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குதல்**

*4021—**திரு. இரா. ஆவுடையப்பன் :**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, விக்கிரமசிங்கபுரம் மதுரா கோட்ஸ் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகச் சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரா கோட்ஸ் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை ரூ. 161 லட்சம் நட்டத்துடன் இயங்கி வருவதால், பிப்ரவரி 1995-லிருந்து பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை. இப்பண்டகசாலையின்

பணியாளர் சங்கத் துணைத் தலைவர், தனி அலுவலர் ஆகியோருடன் கலந்து விவாதித்து மீண்டும் அதனைப் புனரமைக்க செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பண்டகச் சாலையில் உபரியாக இருக்கும் 24 பணியாளர்களை, வேறு கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் நியமனம் செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. இரா. ஆவுடையப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதி, விக்கிரமசிங்கபுரம் மதுரா கோட்ஸ் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குக் கிட்டத்தட்ட 17 லட்சம் ரூபாய் வரை சம்பள பாக்கி இருப்பதாகவும், பல ஆண்டுகளாக அவர்களுக்குச் சம்பளம் கொடுக்காத நிலையில் அவர்களுடைய குடும்பங்கள் இன்றையதினம் கஷ்ட ஜீவனத்திற்கு ஆளாக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிய வருகிறது. எனவே, அரசு உடனடியாக அவர்களுக்கு உரிய சம்பளத்தைக் கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நேரடியாக அவர்களுக்குச் சம்பளம் வழங்க இயலாத நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 7 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட அந்தச் சங்கத்திற்கு 1984-85-லே ரூ.6.9 இலட்சமாக இருந்த நிகர நஷ்டம் இன்றைக்கு ரூ.161 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. ஆரம்ப காலத்திலே 231 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வந்த இந்தச் சங்கத்தில் இன்றைக்கு 77 பணியாளர்கள்தான் இருக்கிறார்கள். இருந்தாலும், கடந்த காலத்தில் இருந்ததைவிட வியாபாரமும் குறைந்திருக்கிறது. அரசின் சார்பாக அதைப் புனரமைக்க வேண்டும் என்று பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதற்குச் சொந்தமான அரிசி ஆலையைப் புனரமைத்து, நேரடியாக விற்பனை இணையமே நடத்துவது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதைப்போல, லாரிகள் ரிப்பேர் செய்யப்பட்டு மீண்டும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டன. அவர்களுடைய சங்கக் கட்டிடத்தை அடகாக வைத்து, மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக கடன்கள் எல்லாம் வழங்கப்பட்டன. இருந்தாலும் அவர்களால், அதை இலாபகரமாக நடத்த முடியவில்லை. இது இன்னும் அரசின் பரிசீலனையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு உதவியும் அவர்களால் இலாபகரமாக நடத்த முடியவில்லை. அங்கிருக்கின்ற அதிகாரிகள், துணைப் பதிவாளர், அந்தச் சங்கத்தை கலைக்கச் சொல்லி, எங்களுக்கு தாக்கீது



அனுப்பியிருந்தாலும், அதைக் கலைக்காமல், தொடர்ந்து நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும். ஆனால், சம்பளத்தைப் பொறுத்தவரையில் தொடர்ந்து பேசித்தான் முடிவு எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மார்க்கெட்டிங் சொசைட்டி தலைவராக நான் இருக்கிறேன். போன மாதம் மீட்டிங் சென்றிருந்தபோது, 50 ரூபாயை படியாகக் கொடுத்தார்கள்; அலவன்சாகக் கொடுத்தார்கள். ஆனால் இந்த முறை, நான் 7—ஆம் தேதி மீட்டிங் சென்றபோது, அதை 30 ரூபாயாகக் குறைத்துவிட்டார்கள். அப்படிக் குறைக்கப்பட்டதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முற்றிலும் வேறுபட்ட கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தைக் கேட்டு, ஆராய்ந்து அவருக்கு தெரிவிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய உறுப்பினர் அவருடைய தரத்திற்கு அவர் படியே வாங்கக் கூடாது. (சிரிப்பு) திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் பணியாற்றக் கூடிய 9,000 தொழிலாளர்கள் உண்மையிலேயே கடுமையான நெருக்கடியில் அதளபாதாளத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய அந்த காலக் கருணையின் காரணமாக அவர்களுடைய படி ஓரளவிற்கு உயர்த்தப்பட்டது. இன்றைக்கு அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் மானியக் கோரிக்கையிலேகூட சங்கங்களை அழைத்துப் பேசி புதிய சம்பள ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். நான் தங்கள்மூலம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், 30 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் தயவுசெய்து தொழிற்சங்கங்களை அழைத்து, ஒரு புதிய 12 (3) ஒப்பந்தம் செய்துகொள்ள

அமைச்சரவர்கள் நேரடியாக ஒரு தேதியை அறிவித்து, சங்கங்களை அழைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் 29 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் என்று சொன்னார்கள். கடந்த வாரம் இன்னொரு கூட்டுறவு விற்பனைச் சங்கம் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே தொடங்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 30 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்த 30-லே ஆறே ஆறு சங்கங்கள்தான் இலாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மீதம் இருக்கின்ற 24 சங்கங்கள் மிகவும் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் 30 மாதம் ஆகியிருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். கடந்த 15, 20 நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்—இதற்கென்று அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை முழுமையாக ஏற்று, அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 2.81 கோடி சம்பளத் தொகையைக் கூட்டித் தருவதற்குரிய ஒப்பந்தம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதிலேதான் தொழிலாளர்களுக்கு ஒருசில மனக்கசப்பு ஏற்பட்டிருக்கிறது. அதிலேயிருக்கின்ற பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் அழைத்துப் பேசுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். விரைவிலே அவர்களை அழைத்துப் பேசி பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 513, திரு. வ. அன்பழகன் மற்றும் திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**513—**

**பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல்**

*951—**திரு. வ. அன்பழகன்,**
**திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பட்டியலில் இடம் பெற்றுள்ள பட்டதாரி இளைஞர்களின் எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டு



சிறப்புத் திட்டம் தீட்டி, அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பட்டியலில் இடம் பெற்றுள்ள பட்டதாரி இளைஞர்களின் எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க, சிறப்புத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வ. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்வது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆந்திராவில் உள்ளதைப்போல ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தாலே போதும் என்ற நிலையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புவதோடு, கடந்த ஆட்சியில் நிறுத்தப்பட்ட வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம் Unemployment relief Scheme மீண்டும் அமல்படுத்தப்படுமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை அரசின் உரிய கவனத்தில் வைக்கப்பட்டு ஆயப்படும். ஆனால் பதிவு பெற்றவர்களுக்கெல்லாம் ஏற்கெனவே கன்செஷன் கொடுத்திருக்கிறோம். மேலும் ஒரு கோரிக்கையை அவர் கேட்டிருக்கிறார். அதையும் அரசு கவனத்தில் கொண்டு உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சுடலைமுத்து :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து தற்போது வேலையில்லாமல் தவிக்கின்ற பட்டதாரிகள் தமிழகத்தில் அதிகம் பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். முந்தைய ஆட்சியில், எத்தனையோ மாணவர்கள் பணம் செலவழித்து பட்டப் படிப்பு முடித்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர். விரைவில் அவர்களுக்கு வேலை கிடைக்காத காரணத்தினால் எத்தனையோ மாணவர்களுடைய வாழ்க்கை துடுப்பு இல்லாத படகுபோல திசை திரும்பி, தீய வழிகளில் சென்று விடாமல் இருக்க வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30-6-1996 அன்றைய நிலவரப்படி மொத்தம் வேலையில்லாமல் உயிர்ப் பதிவேட்டில் இடம் பெற்றிருப்பவர்கள் 35,57,766 பேர். பட்டதாரி இளைஞர்கள் மட்டும் 4,56,444 பேர். இதில் பலபேர் தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் என்று சொன்னாலே, அது வேலை கொடுக்கின்ற இடம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியல்ல. வேலைவாய்ப்பு அலுவலகம் எந்தெந்தத் துறைகளில் எல்லாம் வேலைவாய்ப்பு காலியாக இருக்கின்றது என்ற தகவலைக் கேட்டறிந்து, அந்த 'வேகன்ட் போஸ்ட்'-காலிப் பணியிடங்களுக்கு நேரடித் தேர்வுக்கு அழைப்புகளை அனுப்பி வைக்கிறது. அதுவும்கூட இப்போது பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. காரணம், தனியார் தாங்களாகவே அவற்றை ஃபில் அப் செய்து கொள்கிறார்கள். பொதுத் துறையிலும் அப்படித்தான். கருணை அடிப்படையிலும் போஸ்ட் ஃபில் அப் ஆகிறது. சர்வீஸ் கமிஷன் மூலமும் போஸ்ட் ஃபில் அப் ஆகிறது. ஆகையினாலே, வேலை காலியாக உள்ள இடங்களைப் பற்றிய எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறது. பதிவு செய்பவர்களுடைய எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. ரெஜிஸ்டிரேஷன் செய்து சீனியாரிட்டி அடிப்படையிலே இன்டர்வியூ அனுப்புகிற காரணத்தினாலே பலர் பல ஆண்டுகளாக காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகின்றது.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. ஸ்டாலின்.

**திரு. மு.க. ஸ்டாலின் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்பபு அலுவலகங்களில் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டேயிருப்பவர்களுடைய வயது வரம்பு தாண்டிவிடும்போது, அவர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடுகிறது. எனவே, அவர்களுக்கு ஏதேனும் முன்னுரிமை தரக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விருமபுகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதி மக்கள் ஆகியவர்களுக்கெல்லாம், வயது வரம்பு சம்பந்தமாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல வயது வரம்பு சம்பந்தமாக மீண்டும் பரிசீலித்து, அதுகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசிடம் திட்டம் இல்லை.



1997 ஏப்ரல் 10]

அதிலே இன்னொரு சிக்கலையும் சொல்கிறார்கள். எனவே, வயது அதிகமானவர்களுக்கு 'எக்செம்ஷன்' கொடுத்தால், ஏற்கெனவே வயது குறைவாக இருப்பவர்களும் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்கிறார்கள். இருந்தாலும், அது குறித்து தற்போது அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் என்றால், வேலை கொடுக்கின்ற ஒன்று என்று சிலபேர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது வேலைவாய்ப்பு அலுவலகம் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தினால் எல்லோரும் அதை நோக்கிக் கொண்டிருக்கிறோம். ஒருவேளை வேலைவாய்ப்பு இல்லா அலுவலகம் என்று பெயரை மாற்றிவிடலாமா...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த லெக்சர் எல்லாம் நீங்கள் கொடுக்க வேண்டாம். கேள்விக்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதுவரை தமிழகத்திலே வேலை இல்லாமல் பதிவு செய்து காத்திருப்பவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விளக்கத்தைத் தவறாகப் புரிந்து கொண்டார். வேலை தேடித் தரும் அலுவலகம் என்று இல்லை, வேலைவாய்ப்பு என்றால் எங்கெல்லாம் வேகன்ட் போஸ்ட் இருக்கின்றது என்ற தகவலைத் தெரிந்து அனுப்புகிற இடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் இருந்தாலும், டி.என்.பி.எஸ்.சி. மற்றும் ரெக்ரூட்மென்ட் போர்ட் மூலமாக ஆள் எடுக்கும்போது பத்திரிகையில் விளம்பரம் செய்து எடுக்கின்றார்கள். அந்த வகையிலே பார்க்கும்போது, ஆயிரம் பேருக்கு வேலை இருக்கிறது என்று சொன்னால், கிட்டத்தட்ட 1 லட்சம் முதல் 5 லட்சம் பேர் வரை அழைக்கப்பட்டு, தேர்வு எழுதப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதனால், அரசுக்கும் கூடுதல் செலவாகிறது. அதனால் அந்த வேலைவாய்ப்புக்கு அழைக்கின்றபோது, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து

[1997 ஏப்ரல் 10

இருப்பவர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டாகும் வகையில் அவர்களை அழைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வேலை காலியிடங்கள் அறிவிக்கப்படுகிறபோது பணிமூப்பு அடிப்படையில் எவ்வளவு எண்ணிக்கை இருந்தாலும் அதற்குரிய விதத்தில் அனுப்பியாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த 10 ஆண்டுகாலமாக ஓவிய ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர், கைத்தொழில் ஆசிரியர் போன்ற பணியிடங்கள் நிரப்பப்படாத காரணத்தினாலே, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்பவர்களுக்கெல்லாம் 6 மாதம், 1 வருடம் வயது வரம்பு கடந்து விட்டது. ஆகவே, வரக்கூடிய பணி நியமன காலங்களிலே அந்த 6 மாதம், 1 வருடம் வயது வரம்பைத் தளர்த்தி, அவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கருத்துபோல் பலரும் சொல்லி வருகிறார்கள். அதில் இரண்டு விவாதங்கள் இருக்கின்றன. வயது கருதி முன்னுரிமை கொடுக்கிறபோது, ஏற்கெனவே இளைஞராக உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று இவர்கள் சொல்கிறார்கள். வயதாகிவிட்டது என்று அவர்கள் சொல்கிறார்கள். இருந்தாலும், இப்போது அரசு அதைப்பற்றி சிந்திக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 514, திரு. என். பாண்டுரங்கன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**514—**

### கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தைத் துவக்குதல்

*6193—**திரு. என். பாண்டுரங்கன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 10]

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், சேத்துப்பட்டு பேரூரில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை மீண்டும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், சேத்துப்பட்டு பேரூரில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை மீண்டும் துவங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேத்துப்பட்டு பேரூர் வளர்ந்து வருகின்ற ஒரு நகரம் ஆகும். குறிப்பாக இப்போதெல்லாம் கைத்தறித் துணிகளை பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரும் விரும்பி உபயோகிக்கிறார்கள். குறிப்பாக கோடைக்காலங்களிலே அனைவருமே விரும்புகிறார்கள். இங்கு அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்கூட கைத்தறித் துணிகளை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். எனவே கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்தோடு, சேத்துப்பட்டு பேரூரிலே மீண்டும் அந்த கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தைத் துவக்க அரசு முன்வருமா? அதற்கு ஏற்ற இட வசதியை நாங்கள் ஏற்படுத்தித்தர தயாராக இருக்கிறோம். எனவே, அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களிலே பல மாறுதல்களை எதிர்காலத்திலே செய்வதற்கு பல வழிமுறைகள் ஆராயப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகின்ற நேரத்தில் இதுவும் கவனிக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 515, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 10

515—

## கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்துதல்

*6362—**திரு. மு.பெ. சாமிநாதன் :**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதியில் அமைந்துள்ள பெரியார் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வெள்ளக்கோவில் தொகுதியில் அமைந்துள்ள பெரியார் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை இன்றைக்கு அரசு கூட்டுறவுத் துறையின் மூலம் இயங்கிக் கொண்டிருக்கின்ற நூற்பாலைகளில் சிறந்த முறையில் இயங்கக்கூடிய நூற்பாலையாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட அந்த நூற்பாலையை விரிவுபடுத்தும் திட்டம் இல்லை என்றாலும்கூட அதை நவீனப்படுத்துகின்ற அளவிலே அரசின் செயற்குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை நமது ஆட்சி துவங்கியபோது மூடுகின்ற நிலையில் இருந்த ஆலை. இன்று 92% உற்பத்தித் திறனை அடைந்து இப்போது இலாபகரமாக நடந்து கொண்டிருக்கின்ற ஆலை. எதிர்காலத்திலே நவீனப்படுத்தும்போது இதையும் கணக்கிலே கொண்டு அந்தப் பணி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது எதுவும் செய்வதற்கில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 516, திரு. மீ.அ. வைதியலிங்கம். மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

516—

## சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் கட்டிடம் கட்ட தடை

*376—**திரு. மீ.அ. வைதியலிங்கம் :**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் கட்டிடம் கட்ட விதித்துள்ள தடையை நீக்கும் செயல் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலையில் உத்தண்டி வரையிலான பகுதிகளுக்கு 1990-ஆம் ஆண்டிலேயே தடை நீக்கம் செய்கிறோம் என்று இந்த அவையிலே அறிவிக்கப்பட்டு, அந்த அரசாணை வருவதற்குள் ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்து பழைய கோப்புகளை எடுத்துப் பார்த்து தடை நீக்கம் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கேற்ப கடற்கரை மேலாண்மை திட்டம் தமிழக அரசால் மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை ஆய்வு செய்த மத்திய அரசு 27-9-1996-ஆம் தேதியிட்ட தமது கடிதத்தில் சில நிபந்தனைகளையும் மாற்றங்களையும் எடுத்துக்கூறி மேற்படி மாற்றங்களைச் செய்து மீண்டும் அதனை அனுப்பக் கோரியுள்ளது. மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெற்றபின் அதற்கேற்றவாறு மேம்பாட்டுப் பணிகளும், கட்டுமானப் பணிகளும் நெறிமுறைப்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 517, திரு. கொ.வி. நன்னன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

517—

**செங்கம் தொகுதியில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம்**

*3199—**திரு. கொ.வி. நன்னன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில், மகளிர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எந்த மாதிரியான திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன ?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். 1994-95-ஆம் ஆண்டுகளில் லம்பாடி இனத்தைச் சேர்ந்த 15 பெண்களுக்கு பாய் முடைதல் பயிற்சி தனியார் நிறுவனமான ஒருங்கிணைந்த நலிவுற்ற மக்கள் சமூக நலக் கழகத்தின் சார்பாக அளிக்கப்பட்டது. அந்த 6 மாத காலப் பயிற்சிக்கு மாதம் 250 ரூபாய் உதவித் தொகையாகக் கொடுத்து பாய் முடைதல் பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் வாழ்கின்ற பெண்கள் நிலைமை மிகவும் மோசமானதாக இருக்கிறது. இப்போது அப்படி ஆரம்பித்திருந்தாலும்கூட அது போதாது. அவர்கள் வாழ்க்கையிலே நலிந்து மெலிந்து எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கேள்விக்குறியோடு வாழ்கின்றார்கள். அப்படி வாழ்கின்ற அந்தப் பெண்களின் வாழ்விற்காக இன்னும் என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதுவும் பாக. ஜவ்வாது மலையில் இருக்கின்ற மகளிருக்காக அங்கு என்ன திட்டம் அரசு செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் Andavar Education and Culture Development Centre என்ற நிறுவனத்தின் மூலமாக தையல் பயிற்சிக்காக 25 பெண்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதைப்போலவே ரூரல் பீப்புள் டெவலப்மென்ட் சொஸைட்டி நிறுவனத்தின் சார்பாக 20 பெண்களுக்கு சிமெண்ட் ஜாலி தயாரிப்பதிலே



பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. Social Education and Economic Development Society என்ற நிறுவனத்தின் மூலமாக 20 பெண்களுக்கு பாய் முடையும் பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 518, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

518—

**ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்**

*978—**திரு. ஜி. பழனிசாமி :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரத்தில் அமைந்துள்ள ஆதிதிராவிட ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி ஆதிதிராவிட நலப் பள்ளியைச் சுற்றியுள்ள பெரும்பகுதி ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழக்கூடிய இடமாக இருக்கிறது. நீண்டகாலமாக மிகச் சிறந்த முறையில் பள்ளி செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அந்த ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு அனைத்துக் கட்டிட வசதிகளும் போதுமான அளவுக்கு பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே இடம் இல்லையென்று சொன்னாலும்கூட அதன் அவசியத்தைக் கருதி அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்த ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டில் ஆதிதிராவிட நலத் துறையின் மூலம் 5 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 5 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்த வேண்டும் என்றுதான் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் எதுவும் இல்லை. வரும் ஆண்டில் ஏடி. பன்னீர்செல்வம் மாவட்டம் திருத்துறைப் பூண்டியிலுள்ள அதிசயகட்டளை ஆதிதிராவிட ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு ஆய்ந்து பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 519. திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**519—**

**காவிரி அன்னை திருக்கோயில் கட்டுதல் மற்றும் படகுத்துறை அமைத்தல்**

*3579—**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் காவிரி அன்னை திருக்கோயில் கட்டவும், படகுத்துறை அமைக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் காவிரி அன்னைத் திருக்கோயில் கட்டவும், படகுத்துறை அமைக்கவும், இத்துறையில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியில் இருக்கக் கூடிய ஒகேனக்கல் என்பது மிகச் சிறந்த சுற்றுலா மையம் ஆகும். அந்தச் சுற்றுலா மையத்திற்கு தினந்தோறும் தமிழ்நாட்டினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்தும், அண்டை மாநிலங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். வருகின்ற நேரத்தில் இந்துக்களுடைய புனித நாட்களில் சித்திரைத் திருநாள், ஆடி 1, ஆடி 18 மற்றும் மாதாமாதம் அமாவாசை நாட்களில் மற்றும் விழாக் காலங்களில் எல்லாம் அங்கே வரக்கூடிய பக்தர்கள் காவிரியில் புனித நீராடிவிட்டு வழிபடுவதற்கு அங்கே ஒரு ஆலயம் கூட இல்லை. ஆகவே இங்கே காவிரி அன்னை ஆலயம் அமைக்கப்படுமா என்று எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கே ஒரு காவிரி அன்னை ஆலயம் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். மேலும் அந்தப் பகுதியில் படகுகள் விடுவதற்கான நீர் வீழ்ச்சிகளும் அந்த நீர்த்தேக்கப் பகுதியில் இருக்கின்றன. எனவே அங்கே உல்லாசப் பயணிகள் உல்லாசமாகச் சென்று வருவதற்கு அழகு வாய்ந்த ஒரு படகுத்துறை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி அன்னை திருக்கோயில் கட்டுவது சுற்றுலாத் துறையினுடைய பணிகளில் உள்ளடங்காது. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 520, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**520—**

**அரக்கோணம் ஒன்றியத்தில் அரசுக் கட்டிடங்கள்**

*4094—**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் ஒன்றியம், கோணலம் ஊராட்சியில் காகித அட்டைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கென கட்டப்பட்ட அரசுக் கட்டிடம் இயங்காமல் இருப்பதை பயனுள்ள காரியங்களுக்குப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

அரக்கோணம் ஒன்றியம், கோணலம் ஊராட்சியில் கட்டப்பட்ட அரசுக் கட்டிடம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பயன்படுத்தப்படாத கட்டிடமேதும் தற்போது இல்லை.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அரக்கோணம் தொகுதியில் நாகவேடு என்னும் கிராமத்தில் அம்பேத்கர் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு என்று 120 அடி நீளம் 40 அடி அகலம் கொண்ட ஒரு கட்டிடமும், மகளிர் மேம்பாடு திட்டத்திற்கு என ஒரு கட்டிடமும், விசைத் தறிக்கு என ஒரு கட்டிடமும், அதே போல் மேல்பாக்கம் என்னும் கிராமத்தில் 2 கட்டிடங்களும், பள்ளூர் அலுமினியத் தொழிற்சாலைக்கு என 3 கட்டிடங்களும், அதேபோல் தான் கோணலம் கிராமத்தில் காகித அட்டை தயாரிப்பதற்கு என ஒரு மிகப்பெரிய கட்டிடம் கட்டப்பட்டு தற்போது அவைகள் பயனற்ற நிலையில் இருக்கின்றன. மீண்டும் அத்தகைய கட்டிடங்களில் சம்பந்தப்பட்ட தொழில்களை ஆரம்பித்தால் அந்தப் பகுதியிலே வேலைவாய்ப்பை நாம் உருவாக்க முடியும் என்ற திட்டத்தில்தான் அதைக் கேட்டிருந்தேன். பயன்படுத்தப்படுகிறது என்று அமைச்சரவர்கள் அறிவித்திருக்கின்றார். அது என்ன காரியத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது? அதில் என்ன தொழில் செய்யப்படுகின்றது? அதில் எத்தனைபேர் வேலை செய்கிறார்கள்? இதுவரை அரசு அதன்மூலம் ஈட்டிய வருமானம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட கோணலம் ஊராட்சிக்கு உட்பட்ட அந்தக் கட்டிடத்தில் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, காகித அட்டைகள் தயாரிக்கப்படவில்லை. கதர் வாரியத்திற்குத் தேவையான இரும்புத் தளவாடங்கள் அந்தக் கட்டிடத்தில் தயாரிக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி மன்றத் தலைவர் தாக்கப்பட்டமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவரும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. எஸ்.எஸ். சுப்பிரமணியம் சமூக விரோதிகளால் தாக்கப்பட்டது குறித்து திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்கள் மாண்புமிகு மக்கள் நலவாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். சுருக்கமாகப் பேச வேண்டும்.

***திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவாவர்களே, 20-3-1997 வியாழக்கிழமை காலை 7 மணி அளவில் முன்னாள் மாவட்டக் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவராக இருந்தவரும், 35 ஆண்டுகள் பொது வாழ்விலே இருந்தவரும், பிரம்மதேசத்தினுடைய ஊராட்சி மன்றத் தலைவராக இருந்து கொண்டிருக்கக்கூடிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் அராஜகமாக அநியாயமாகத் தாக்கப்பட்டுள்ளார். குடிநீர் பைப்பில் துளை போட்டு, சைக்கிள் டியூபின் மூலமாகத் தன்னுடைய சொந்தத் தேவைக்காக, ஒருவர் தன்னுடைய டீக் கடைக்கும், இட்லிக் கடைக்கும் தண்ணீர் எடுப்பதை நியாயம் இல்லை என்று எடுத்துக் கூறிய காரணத்திற்காக அவர் தாக்கப்பட்டுள்ளார். அவருக்கு உறுதுணையாக, அந்தச் செம்புளிச்சான்பாளையம் கிளையினுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் முத்துசாமி அவர்களும், அவருடைய மருமகன் முருகன் அவர்களும், அதேபோல துணைத் தலைவர் ராஜா கவுண்டர் ஆகியோரும், குடிநீர் பைப்புக்குச் செல்லக்கூடிய பைப்பிலே நேரடியாகத் துளை போடக்கூடாது; ஆகவே 20 அடிக்கு அப்புறமாக ஒரு பைப் அமைத்து, எல்லோரும் பிடித்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்கின்றோம்; ஆகவே, நீங்கள் நேரடியாக பைப்பில் துளை போட்டு சைக்கிள் டியூப்பில் தண்ணீர் பிடிக்கக் கூடாது என்று சமாதானமாகக் கூறிய போது அதற்கு, "யார் வந்து இங்கே சொன்னாலும் கொலைதான் நடக்கும், ஜாக்கிரதை" என்று அவர்களை விரட்டியடித்துவிட்டனர். மறுநாள் 20-3-1997 வியாழக்கிழமை காலை 7 மணி அளவில் ஊராட்சி மன்றத் தலைவர் அந்த வழியாகச் சென்ற நேரத்தில், அங்கேயிருக்கக்கூடிய சுசாப்பு முனியன் என்ற அந்த டீக்கடைக்காரரும், அவருடைய மருமகன் பெரியசாமியும், அவர்களைச் சார்ந்த குடும்பத்தாரும் வேகமாக வந்து

அரிவாளால் தலையிலே 2 வெட்டுக்கள் வெட்டியும், கைகளிலே பல வெட்டுக்கள் வெட்டியும் அதனால் அவரது கண்டு விரல் துண்டிக்கப்படக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டு அவர் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த நிலையில் 22-ஆம் தேதி நான் ஈரோடு அரசு மருத்துவமனைக்குச் சென்று பார்த்த நேரத்தில் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் அத்தனைபேரும், — பெண்களும், சர்வ கட்சியைச் சார்ந்த நண்பர்கள் அத்தனைபேரும் கோவென்று கதறி அழுத சூழ்நிலையைப் பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்த நேரத்தில், எங்களுக்கு எதிர்காலத்திலேயும் உயிருக்கு ஆபத்து இருக்கின்றது; இதோடு மாத்திரம் அல்ல; இந்தச் சமூக விரோதிகள், அரசியல் கட்சிகளினுடைய தூண்டுதல்பேரிலே எங்களை என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். ஆகவே இந்த எஸ்.எஸ். சுப்பிரமணியத்தினுடைய குடும்பத்திற்கு மாத்திரமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கக்கூடிய குடும்பத்திற்கும் மற்ற, ஏனைய பொது மக்களுக்கும் பாதுகாப்பு கொடுப்பதற்கு நீங்கள் இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று எங்களுடைய பாதுகாப்பை வலுப்படுத்திக் கொடுக்க வேண்டும்; காவல் துறை நல்லமுறையில் செயல்படுவதற்கு ஏதுவாக இருக்க வேண்டும்; அங்கே துணைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றக்கூடிய திரு. சின்னசாமி அவர்கள் தீவிரமாகப் பணியாற்றினால் கூட மேலேயிருக்கக்கூடிய காவல்துறை நிலையில் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் ஒரு நியாயமான தீர்ப்பை அரசியல்வாதிகளுக்கு—ஊராட்சி மன்றத் தலைவர்களாக இருந்தாலும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும், பொதுவாழ்விலே ஈடுபடக்கூடியவர்கள் யாராக இருந்தாலும்—அவர்களுக்கு இப்படிப்பட்ட சூழ்நிலை வராத நிலையை எதிர்காலத்திலே இந்த அரசு செய்ய வேண்டும், செய்யுமா? செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இதனை அரசின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கின்றேன். மேலும் எஸ்.எஸ். சுப்பிரமணியம் அவர்கள் அந்தப் பகுதியிலே ஒரு செல்வாக்கு மிகுந்த, பொதுமக்களாலே விரும்ப...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுதான் சுருக்கமாகப் பேசுவதா? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** முடித்து விடுகிறேன். ஆகவே, அவருக்கு நல்லமுறையிலே பாதுகாப்பு கொடுப்பதற்கு, அந்தப் பகுதி மக்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டி விரும்பிக்கேட்டு உரையை நிறைவு செய்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்கள் கொடுத்த இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பின்மீது பெரியார் மாவட்டத்திலிருந்து காவல் துறையின் மூலமாக தகவல் கேட்கப்பட்டது. அவர்கள் தந்த அந்தத் தகவலின் அடிப்படையிலே சிலவற்றை இந்தப் பேரவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம் செம்புளிச்சான்பாளையத்திலுள்ள பிரம்மதேசம் ஊராட்சிமன்றத் தலைவர் திரு. எஸ்.எஸ். சுப்பிரமணியம் என்பவர், அதே ஊரைச் சார்ந்த திரு. முனியன் என்பவருடைய தேநீர் கடைக்கு எதிரேயிருந்த ஊராட்சி குடிநீர்க் குழாயை அப்புறப்படுத்தி, வேறு இடத்திற்கு மாற்றியதன் காரணமாக இருவருக்கும் விரோதம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக, கடந்த 20-3-1997 அன்று காலை 7.15 மணிக்கு திரு. முனியனின் மருமகன் பெரியசாமி என்பவர் ஊராட்சிமன்றத் தலைவர் திரு. எஸ்.எஸ். சுப்பிரமணியத்தை அரிவாளால், தலை, கை ஆகிய இடங்களிலே வெட்டி இரத்தக் காயம் ஏற்படுத்தியுள்ளார். திரு. சுப்பிரமணியம் ஈரோடு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்நோயாளியாக இன்னும் சிகிச்சை பெற்று வருகிறார். ஏதும் ஆபத்து இல்லையெனவும், உடல்நிலை தேறிவருவதாகவும், ஓரிரு நாட்களில் சிகிச்சை முடித்து வீடு திரும்பவுள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக அந்தியூர் காவல் நிலைய குற்ற எண் 172/97-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 307-ன்கீழ் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டுள்ள பெரியசாமி 1-4-1997 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற அடைப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அங்கே, மேற்கொண்டு எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாவண்ணம் 20-3-1997 முதல் தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு, மேலும் நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் அங்கே தமிழ் மாநில காங்கிரஸ்காரர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கும் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது

என்று இங்கே குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படாமல் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து, இந்த அளவிலே முடித்துக் கொள்கின்றேன். வணக்கம்.

## 3. தகவல் கோரல்

### பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி நீக்கிவைக்கப்பட்டிருப்பதை இரத்து செய்யக் கோரிக்கை— பேரவைத் தலைவரின் தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 10.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்றக் கட்சியினுடைய துணைத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சட்டமன்றத்திலே கலந்துகொள்ள முடியாத விதத்திலே தீர்ப்பளித்து ஏறக்குறைய ஒரு மாதம் ஆகப்போகிறது. போனமாதம் முடிந்து, அடுத்த மாதம் நடக்கிறது. இது நீண்ட கூட்டத்தொடர், மீதம் இருக்கின்ற 20 நாட்களிலாவது அவர் கலந்துகொண்டு இங்கே அவருடைய சட்டமன்றக் கடமையை ஆற்றக்கூடிய விதத்திலே தாங்களும், மாண்புமிகு அவை முன்னவரும் மீண்டும் இந்த அவையிலே தாங்கள் அறிவித்த தீர்ப்பை மறுபரிசிலனை செய்து அவருக்கு ஒரு வாய்ப்பு தந்து, சட்டமன்றத்திற்கு வந்து ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்ற நீங்கள் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தங்களை மீண்டும் வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பல தடவை இந்த அவையிலே எழுப்பப்பெற்று, அதிகமான நேரத்தை நாம் செலவழித்திருக்கின்றோம். அவை பெரிதா அல்லது தனிப்பட்ட நபர் பெரியவரா என்ற கேள்விக்கு, நாடு இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருப்பது அவைதான் பெரியது. அவையினுடைய மரியாதை, கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு கட்டத்திலே நானே உங்களிடத்தில் உடனடியாக மன்னிப்பு கேட்டிருக்கிறேன். வருத்தம் தெரிவித்திருக்கிறேன். அது எனக்கு ஒன்றும் குறைவல்ல. அவையினுடைய கண்ணியத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக, உடனடியாக நானே



மன்னிப்பு கேட்டிருக்கிறேன். ஆனால், மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்களை நான் கேட்டுக்கொள்வது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் இங்கே வந்து வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளட்டும், அது அவருடைய கௌரவத்தை உயர்த்தும். அதை விட்டுவிட்டு, திரும்பத் திரும்ப இதைப் பேசிக்கொண்டிருப்பதால் என்ன பிரயோஜனம் என்று தெரியவில்லை. அவர் பேரவைத் தலைவரிடம் சொல்லட்டும். அவைக்கு வரட்டும். அவரிடம் மன்னிப்பு, இல்லை வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளட்டும். அதற்குப் பிறகு, பேரவைத் தலைவர் அதை முடிவு செய்யட்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பாவம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அடிக்கடி இதை கேட்கக்கூடிய கட்டாய நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குத் தெரியும். எனவே, தயவுசெய்து, நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசை மிகவும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அவர் மிகவும் நல்லவர், அவரைப் பற்றி எனக்குப் பிரச்சினையில்லை. ஆகையினால், தயவுசெய்து அவையிலே வந்து திரு. தாமரைக்கனி மாண்புமிகு தலைவர் அவர்களைச் சந்திக்கட்டும்; இங்கே வரட்டும்; வருத்தம் தெரிவிக்கட்டும். பிறகு, மாண்புமிகு தலைவர் அவர்கள் முடிவு செய்வார்கள். அவர் மிகுந்த இரக்க குணம் படைத்தவர், பண்புள்ளவர். ஆகையினால் அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து. அதற்கு மேல் அவைத் தலைவர் அவர்களுடைய முடிவு. அதிலே நான் தலையிட விரும்பவில்லை. அப்படிச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10.40

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. திருநாவுக்கரசு, நான் பேசப் போகிறேன். நீங்கள்தான் பேசிவிட்டீர்களே?

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி, திரு. திருநாவுக்கரசு பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி உண்டு. 'பிச்சை எடுக்குமாம் பெருமாள், அதையும் கெடுக்குமாம் அனுமார்' என்று சொல்வார்கள். அந்த மாதிரி, நான் உங்களிடத்திலே வேண்டுகோள் வைத்தால், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் பரிவுடன்

பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டால், அண்ணன் திரு. லத்தீப் அவர்கள் வேகமாக எழுந்தவுடனே. அவர் எனக்கு ஆதரவாகத்தான் குரல் கொடுக்கப் போகிறார் என்று நான் நினைத்துக்கொண்டேன். அவர் எழுந்து, வேண்டாம் என்பதை இவ்வளவு தூரம் வாதாட வேண்டியதில்லை. நான் கேட்டுக்கொண்டது, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களிடத்திலேயும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடத்திலேயும்தானே தவிர, அண்ணன் திரு. லத்தீப் அவர்களிடத்திலே கிடையாது. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி உதவி செய்யவில்லை என்றாலும், தயவு செய்து தோழமைக் கட்சிகள் அல்லது மற்ற எதிர்க்கட்சிகள் உபத்திரவம் செய்யாதீர்கள். நியாயமாகப் பார்த்தால், ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய கடமையை ஆற்ற நீங்களும் சேர்ந்து என்னோடு குரல் கொடுக்க வேண்டும். எனவே, அதை மீண்டும், மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஏற்கெனவே பல முறை இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். பேரவைத் தலைவருடைய தீர்ப்பு உறுதியானதும் அல்ல, இறுதியானதும் அல்ல. நான் தீர்ப்பு சொன்ன அதே தினத்தில், பெரும்பான்மை கட்சியின் தலைவர் என்ற முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தண்டனையைப் பாதியாகக் குறைத்தார்கள். அடுத்த நாள், மன்னிப்பு என்ற வார்த்தையை விட்டு விட்டு, திரு. தாமரைக்கனி கூட வருத்தம் தெரிவிக்க வேண்டியதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தாலே போதும், தண்டனையைக் குறைக்கலாம் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, இந்தத் தகவலை அவருக்கு அவையிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். திரு. தாமரைக்கனி இந்தப் பேரவை வளாகத்திற்குள் இந்தக் கூட்டத்தொடர் முடியும் வரை வரக்கூடாது என்பது என்னுடைய உத்தரவு. ஆனால், இரண்டு நாட்களுக்கு முன்னாலே, அவர் லாபியிலே உட்கார்ந்திருந்தார். அதுமட்டுமல்லாமல், என்னை அறையிலே வந்து பார்த்தார். அவரிடம், என்ன விஷயம் என்று கேட்டேன். அவர் உங்களைப் பார்த்து நாள் ஆகிவிட்டது. உங்களைப் பார்க்க வந்தேன் என்று சொன்னார். அந்த நேரத்திலேகூட, ஏதோ நடந்துவிட்டது. வருத்தம் தெரிவிக்கிறேன் என்று வாய்மொழியாகச் சொல்லியிருந்தால்கூட, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம். இப்படி அவர் சொன்னார் என்று சொல்லமுடியும். அதை விட்டுவிட்டு, அன்று சிறிது நேரம் என்னிடம் பேசிவிட்டு, ஏதோ அவருக்கு உரிமை இருப்பதைப் போல, 'நான் இன்று சம்பளம் வாங்க வேண்டியிருந்ததனால் இங்கே வந்தேன்' என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். இதற்குப் பிறகு, பேரவைத் தலைவர் என்ன செய்ய முடியும் என்பதை மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன் மினிட், பாயின்ட் ஆப் ஆர்டர்...

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மீது ஒரு மாபெரும், உண்மைக்கு மாறான ஒரு ஊழல் குற்றச்சாட்டையே சொன்னார். அந்தக் குற்றச்சாட்டை விசாரித்து, அதிலே உண்மையில்லை, அது வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்டது என்று அவருடைய விளக்கத்தைக் கேட்டபிறகு, ஆளுங்கட்சியின் தரப்பில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்து, இறுதியாக நீங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். நீங்கள் வழங்கிய தீர்ப்பை மீண்டும், மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லுவதே இந்த அவையினுடைய மரபை, கண்ணியத்தை, காப்பாற்றக்கூடியதாக இருக்காது. ஒரு முறை தீர்ப்பு வழங்கிவிட்டால், அதுதான் இறுதியானது. நீங்கள்கூட இங்கே சொல்கிறபோது அது இறுதியானதும் அல்ல, முடிவானதும் அல்ல என்று சொன்னீர்கள். ஆனால், உங்களுடைய தீர்ப்புக்குக் கட்டுப்பட்டுத்தான் இந்த அவை செயல்பட வேண்டும். ஆகவே, உங்களுடைய தீர்ப்புதான் இறுதியான தீர்ப்பு. அப்படி ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. தீர்ப்பை வழங்கிய நேரத்திலேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு, அந்தக் கட்சியின் சார்பில், தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டபோது, இப்படி உண்மைக்கு மாறாகச் சொன்ன குற்றச்சாட்டிற்கு நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன், மன்னிப்பு கோருகிறேன் என்று ஏதாவது ஒரு வருத்தத்தைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைச் சந்தித்து, திரு. தாமரைக்கனி எழுதிக்கொடுத்துவிட்டால், அதற்குப் பின்னாலே நீங்கள் தண்டனையைக் குறைப்பது பற்றிப்

பரிசீலியுங்கள். எங்களுக்கு ஆட்சேபணையில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே. இதற்குப் பின்னாலேயும் தொடர்ந்து இப்படி அவையின் நேரத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் செய்திக்காக எழுப்புகிறார் போலும் என்று நாம் உணர வேண்டியிருக்கிறது. எங்களுடைய மனசாட்சிப்படி, எங்களுடைய உறுத்தல் அதுதான். ஆகவே அவையின் நேரத்தை இப்படி வீணாக்கக் கூடாது

*முற்பகல் 10-45*

இன்னொன்று, இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதாவது, ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினருக்குச் சாதகமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்வதேகூட இந்த அவையில் உள்ள உறுப்பினர்களின் உரிமையைப் பறிப்பதாகும். ஆகவே அப்படியெல்லாம் கேட்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் இப்படியெல்லாம் பார்த்ததில்லை. அவர்கள் இவ்வளவு நேரம் பேசி இருக்க முடியாது. வெளியே தூக்கிக் கொண்டு போய் விட்டிருப்பார்கள். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவெனில், ஓர் உறுப்பினருக்கு ஒரு தீர்ப்பு வழங்கிய பிறகு. அதாவது இந்த அவை வளாகத்திலுள்ளே வரக்கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு, ஓர் உறுப்பினர். அவையின் லாபியிலே வந்து உட்காருவதும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை அவர்களுடைய அறையிலே வந்து சந்திப்பதும் போன்ற செயல்களை நீங்கள் அனுமதித்ததே மிகப் பெரிய தவறான நடைமுறையாக வந்துவிடும். ஏனென்றால், எதிர்காலத்தில், இப்படி தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு, சம்பந்தப்பட்ட அந்த உறுப்பினர்களும் இதையே கையாண்டால், உங்களுடைய தீர்ப்புக்குக் கட்டுப்படாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால், இந்த அவையை நடத்த இயலாது. ஆகவே, இப்படிப்பட்ட தீர்ப்புக்கு உட்பட்ட ஓர் உறுப்பினர் அவையின் லாபியிலே வந்து உட்கார்வதும், பேரவைத் தலைவர் அவர்களை அவர்களுடைய அறையிலே சந்திப்பதும் மிகப் பெரிய தவறான செயல். இதன்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இங்கே பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு பதிலளிக்கும் வகையில். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது "பிச்சை எடுக்குமாம் பெருமாள், அதையும் கெடுக்குமாம் அனுமார்" என்று சொன்னார். இதிகாசத்தில் அனுமார் ஒரு நல்ல தூதுவர். அந்த அனுமாரை அவமதிக்க வேண்டாம் என்று அன்போடு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த பிரச்சினைமீது அமைச்சர் பெருமக்கள் இருவரும் பேசிவிட்டார்கள். (குறுக்கீடு) திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள், " அனுமார் ஒரு நல்ல படைப்பு, அவரை அவமதிக்க வேண்டாம்" என்று சொன்னதன் காரணமாக, திரு. திருநாவுக்கரசு அவர்கள் என்னைக் குறிப்பிட்டுப் பேசியதால், அனுமார் ஒரு நல்ல படைப்பு. அவரை லத்தீப்போடு நீங்கள் ஒப்பிடுகிறீர்களே என்ற பொருள் வந்துவிடக் கூடாது (சிரிப்பு) எனவே, நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், அனுமார் ஒரு நல்ல படைப்பு என்பதில் சந்தேகம் ஒன்றுமில்லை, நானும் நல்ல படைப்புதான் என்று கருதிக் கொண்டிருக்கிறேன் (சிரிப்பு) எனவே, தயவுசெய்து, அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திரு. திருநாவுக்கரசு அவர்கள் வருத்தப்படக்கூடாது. நான் தடையாக எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. எடை போட்டுத்தான் பேசினேனே தவிர, தடையாக நான் பேசவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு discretionary powers இருக்கிறது. I do agree that the Speaker has got complete discretion. If the Speaker so desires, he can use his discretion and get this punishment rescinded. எனவே, முழுமையாக இல்லாவிட்டாலும், கொஞ்சம் அந்தக் காலத்தைக் குறையுங்கள் என்று சொல்கிறேன். தங்களுக்குக் குறைப்பதற்கு உரிமையுண்டு. குறைப்பதாக இருந்தால் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் நாங்கள் விரும்புவது என்னவென்றால், அவர் மன்னிப்புக் கேட்டுக் கொள்வது அவருக்கு நல்லது. அதுதான் நாங்கள் விரும்புவது. எனவே, இதைப்பற்றி திரு. திருநாவுக்கரசு அவர்கள் சிந்தித்து, அவரை மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வைப்பது அவருடைய கட்சிக்கும் நல்லது. திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் நல்லது. அவரது பேச்சைக் கேட்காத

உறுப்பினர் ஒருவர் கட்சியிலே இருக்கிறார் என்ற நிலையெல்லாம் வேண்டாம். எனவே, திரு. திருநாவுக்கரசு அவர்களை நான் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து தாமரைக்கனி அவர்கள் தலைவர் அவர்களைச் சந்தித்து இங்கே வந்து மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்துகின்றேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்காக இந்த அவையினுடைய நேரம் இவ்வளவு செலவானதற்காக நான் வருத்தம் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன். உள்ளபடியே இந்தப் பிரச்சினையில் நடைபெறக்கூடாத ஒரு காரியம் இந்த அவையிலே நடைபெற்று, இப்படிப்பட்ட காரியங்கள் மறுபடியும் இந்த அவையில் யாரும் தொடர்வதற்கு வாய்ப்பு இருக்கக் கூடாது என்ற முறையில் விதிமுறைகளைக் காப்பாற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். இதைத் தண்டனை என்று சொல்வதைவிட, சட்டமன்றத்தைக் காப்பாற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று சொல்வதே பொருத்தமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, சட்டமன்ற உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையை மனமார ஏற்றுக்கொண்டால், எடுத்த நடவடிக்கையை மறுபடியும் மாற்றவேண்டுமென்ற நிலை ஏற்படவேண்டுமானால், செய்த தவறு இனி தொடராது என்ற உறுதி தாப்பட வேண்டும். அந்த உறுதியைத் தருவதுதான், வருத்தம் தெரிவிப்பது அல்லது மன்னிப்புக் கேட்பது. எனவே அந்த நிலை ஏற்படாத வரையில் இதை மறுபரிசீலனை செய்ய இந்த அவை தயாராக இல்லை என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) அவசியமும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தமாக நீக்கி வைத்து இந்த அவைக்கு வரக்கூடாது என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முடிவை பரிசீலனை செய்ய, அவைத் தலைவர் இடத்தில் நேரிடையாக முறையிட்டு, அந்த முறையீடு நியாயமான முறையில் செய்யப்படுமானால், அது இந்த அவைக்கு தெரிவிக்கப்பட்டு, அதற்குப் பின்னர்தான் முடிவு எடுக்க வேண்டுமே தவிர, அவைத் தலைவர் தந்த முடிவாக இருந்தாலும். அவையினாலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட்ட முடிவாகும் என்ற முறையில். இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பேசுவது, முறை காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக முறையைக் காப்பாற்ற மாட்டோம், காப்பாற்ற ஒத்துழைக்க மாட்டோம் என்று சொல்வதற்கு அடிப்படையாக அமைகிற காரணத்தால், இப்படிப்பட்ட பிரச்சினைக்காக இந்த அவையினுடைய நேரத்தை எடுத்துக்கொள்ளாமல், இனி யாரும்



இந்தப் பிரச்சினையை அவையில் எழுப்பக்கூடாது என்று தாங்கள் அறிவிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முன்னவர் அவர்கள் ஒரு நியாயமான கருத்தை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 'இதை நீங்கள் எப்படி அனுமதித்தீர்கள்' என்றுகூடக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் ஒன்றை மறந்துவிடக்கூடாது. திரு. தாமரைக்கனி அவர்கள் என்னுடைய அறைக்கு வந்து உட்கார்ந்திருப்பதாக எனக்குத் தகவல் வந்தவுடனே, 'அவர் வருத்தம் தெரிவிக்க வந்திருக்கிறார்' என்றுதான் கருதினேன். ஆனால் வழக்கம்போல் அவர் என்னிடம் குசலம் விசாரித்துவிட்டு 'போய் வருகிறேன்' என்று சொன்னார். அதற்குப் பிறகு நீண்ட நேரம் லாபியில் உட்கார்ந்திருந்தார். இதைக்கூட நான் அவையிலே அறிவித்து அதற்கான நடவடிக்கை எடுத்திருக்க முடியும். நான் பலமுறை சொல்வதைப்போல, என்னைப் பொறுத்தவரையில் நான் சாமானியன், இந்த இருக்கைதான் பெரிது. ஆகவே மனிதாபிமான அடிப்படையிலே இப்படிப்பட்ட பிரச்சினைகளை — ஏற்கெனவே தண்டனை அதிகமென்று நம்முடைய உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் — பெரிதுபடுத்த வேண்டாமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மட்டும் இந்தத் தகவலைச் சொன்னேன். இந்தத் தகவல் நான் இங்கே சொல்வதற்கு முன்புவரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு தெரிந்திருக்குமோ, தெரியாதோ, எனக்குத் தெரியவில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் வருத்தம் தெரிவிப்பதைப் போலவே பேசிக்கொண்டிருக்கிறார்கள். திரு. தாமரைக்கனியினுடைய தரப்பிற்கு ஒரு வார்த்தை, வருத்தமென்று சொல்வதற்கு என்ன கஷ்டம் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகவே நிச்சயமாக அப்படி அவர் செய்யாவிட்டால், இதிலே நான் தலையிட வேறு ஒன்றும் இல்லை என்பதைச் சொல்லி முடிக்கின்றேன். (கூச்சல்-குழப்பம்)

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(குறுக்கீடுகள்) ஒரு ஸ்பீக்கர்தான், நிறைய ஸ்பீக்கர்கள் ஆகிவிடாதீர்கள். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தீர்ப்புகள் திருத்தப்படக் கூடியவைதான். நான் முதலிலே சொன்னமாதிரி, நீங்கள் இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய அறை வரை, லாபி வரை நீங்கள் அவரை அனுமதித்தது உங்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. எப்படி பெருந்தன்மையோடு அறை வரை அனுமதித்தீர்களோ அவை வரை வருவதற்கு—அறை வரை என்பதை அவை வரை—நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு முறை தி.மு.க. உறுப்பினர்கள் மூன்று பேர் வெளியேற்றப்பட்டதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தீர்மானத்திலே பேசும்போது சொன்னார்கள். "நாங்கள் அந்தக் கூட்டத் தொடர் முழுவதுமே கலந்துகொள்ளாமல் புறக்கணித்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். நாங்கள் அப்படி புறக்கணிக்கவில்லை. எங்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்காக, ஒரு உறுப்பினர் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கப்பட்டிருந்தாலும்கூட, மீதமிருக்கிற நாங்கள் மூன்று பேர், ஜனநாயக ரீதியாகச் செயல்பட வேண்டுமென்பதற்காக, தொடர்ச்சியாக வந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதையும்கூட நீங்கள் ஒரு அடிப்படையாக எடுத்துக்கொண்டு, மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன். அப்படி என்னுடைய கோரிக்கை ஏற்கப்படாத தருணத்தில், வேறு வழியே இல்லை என்கின்ற நிலையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஒரு சட்டமன்ற உறுப்பினர், தன்னுடைய ஜனநாயகக் கடமையை முழுமையாக ஆற்ற முடியாமல்—2 மாதம் என்பது மிகமிக அதிகமானது. எனவே இதை நீங்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பிரச்சினைக்குக் கூட போகவில்லை, தண்டனை கொடுத்து விட்டீர்கள். தண்டனை கொடுத்து ஒரு மாதம் ஆகப்போகிறது. ஆகவே நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, தண்டனை என்று எடுத்துக்கொண்டால் அது ஒரு நாள் என்றாலும் ஒன்றுதான்; மூன்றுமாதம் என்றாலும் ஒன்றுதான். ஆகவே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. ஆகவே என்னுடைய கோரிக்கை ஏற்கப்படுமா? ஏற்கப்படவில்லையென்றால் ஏற்கப்பட வேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்தி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் வெளிநடப்புச் செய்கிறேன்.



*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தனிப்பட்ட முறையில், தன்னிடத்திலே வந்து தெரிவிக்கக்கூடிய கருத்தின் அடிப்படையில், அந்த ஆலோசனையை இந்த அவைக்கு அவர் தெரிவிக்கலாமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் ஒரு கட்சியின் சார்பாக எழுந்திருந்து, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு. ஜனநாயக அடிப்படையிலே அமைந்த சட்டமன்ற நேரத்தையே, இந்தவொரு பிரச்சினையில், வேண்டுமென்று மேலும் மேலும் எடுத்துக் கொள்வது என்பது, சட்டமன்ற மரபுக்கு மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் உரிய மரியாதையைத் தரவில்லையோ என்ற சந்தேகத்தை எனக்கு ஏற்படுத்துகின்றது. இந்தப் பிரச்சினை திட்டவட்டமாகத் தெரிந்த ஒன்று. மேலும் இந்தப் பிரச்சினையை இங்கே எடுத்துச் சொல்வது என்பது, இந்த அவையினுடைய பணியைத் திசை திருப்புகின்ற முறையிலேயும், தங்களுடைய கட்சிப் பிரச்சினையை இந்த அவையிலே எடுத்து வைத்துக் கொண்டு, ஒரு பிரச்சாரம் செய்கின்ற முறையிலேயும் இந்த அவையைப் பயன்படுத்துவதாகும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இந்த அவையில் இந்தப் பிரச்சினை குறித்து யாரும் இனிமேல் எழுப்பக் கூடாது என்பதை இந்த அவையினுடைய கட்டளையாகத் தெரிவிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. திருநாவுக்கரசு, நீங்கள் வெளிநடப்புச் செய்யப் போகிறீர்கள், உங்களுக்கு இதிலே பதில் என்ன சொல்ல முடியும்? (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும். திரு. திருநாவுக்கரசு, பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எனக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுக்கிறீர்கள். ஆனால், மைக் கொடுக்கப்படவில்லை....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியின் பேரில்தான் இயங்க வேண்டுமே தவிர, உறுப்பினர் அவர்கள், மைக் கொடுப்பவர்களைப் பார்த்துக் கேட்கக் கூடாது.

[1997 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்கு மைக் கொடுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போகின்ற போக்கைப் பார்த்தால், மாண்புமிகு அமைச்சர் வீரபாண்டியார் அவர்கள் ஒரு சட்ட வல்லுநராகவே ஆகிவிடுவார்கள்...

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றம் கடந்த ஐந்து ஆண்டுகாலமாக எப்படி நடந்தது என்பது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். இவ்வளவு நேரம் இங்கே பேசிக் கொண்டிருக்க முடியாது. காவலர்கள் மூலமாக வெளியே அனுப்பப்பட்டிருப்பார்கள். ஆனால், இந்தப் பெருந்தன்மையைத் தவறாக இந்த அவையிலே பயன்படுத்திக்கொள்ளக் கூடாது என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆறாவது முறையாகச் சட்டமன்ற உறுப்பினராகி இருக்கிறேன். இந்தச் சட்டமன்றத்தை நான் மிகவும் மதிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் மிகவும் மதிக்கிறேன். சட்டமன்ற மரபுகள் எனக்கு நன்றாகத் தெரியும். மரபுகளுக்குக் கட்டுப்பட்டே எப்பொழுதும் நடப்பவன் நான். இருந்தாலும், இது என்னுடைய ஜனநாயகக் கடமை. என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர் பாதிக்கப்பட்டிருப்பது பற்றிப் பேச வேண்டியது என்னுடைய கடமை. எனவே, என்னுடைய கடமையைத்தான் நான் செய்திருக்கிறேன். எனவே, என்னுடைய கோரிக்கை ஏற்கப்படாததை வற்புறுத்தி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்கள் வெளிநடப்புச் செய்கின்றோம்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களுடைய பிரச்சினையைப் பற்றி இனிமேல் யாரும் எழுப்பக்கூடாது என்று உறுதியாகக் கூறுகின்றேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு ஒரு கருத்தை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திருநாவுக்கரசு அவர்கள் ஒவ்வொரு முறையும் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு அனுமதி கேட்கின்ற நேரத்தில், ஒரு வேளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைப்படி, திருநாவுக்கரசு



1997 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

அவர்களே, வருத்தம் தெரிவிப்பார்கள் என்று கருதித்தான் நான் அனுமதி கொடுக்கின்றேன். அவர் என்ன பேசப் போகிறார் என்பதை நான் முதலிலே கேட்கக் கூடாது. அது என்னுடைய உரிமை கிடையாது. ஆகவே, இனிமேல் இந்தப் பிரச்சினையைப் பற்றி யாரும் கிளப்பக்கூடாது என்று உறுதியாகச் சொல்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

**(அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு செயல் திட்டங்கள்**

**(ஆ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு**

**(இ) கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 59—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு**

---

### (அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு செயல் திட்டங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு செயல் திட்டங்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.8, 28,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *1825*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வேலூர் கூட்டுறவுப் பால் பண்ணையில் தேவையின்றி வாங்கி கிடப்பில் போட்டு வைத்துள்ள பொருட்களை விற்பனை செய்து, அதன் நிதி ஆதாரத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,28,42,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1821, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,28,42,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1823, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வேலையிழந்த மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்களை மீண்டும் வேலையில் அமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,28,42,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1805, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நிலமற்ற சிறு ஏழை விவசாயிகளுக்கு கறவை மாடு, எருமைகள் வாங்குவதற்கும், பராமரிப்பதற்கும் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,28,42,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1802, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'திருவள்ளுவர் மாவட்டம், செந்துறையில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,28,42,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1839, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்ட கூட்டுறவு பால் பண்ணையில் காய்ச்சிய பால் விற்பனை நிலையங்களை, மாவட்டத்தில் உள்ள மற்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,28,42,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2854, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில், அதிக அளவில் பால் உற்பத்தி செய்யப்படுவதால், பெண்ணாகரத்தில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,28,42,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1830, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தென்னாற்காடு—வள்ளலார் மாவட்டம், சேத்தியாத்தோப்பில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம், புதுப்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,28,42,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1836, திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுராந்தகத்தில் உள்ள பால் பதனிடும் தொழிற்சாலைக்குத் தேவையான பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,28,42,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1812, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னையில் தானியங்கி பால் நிலையங்களை அதிக அளவில் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,28,42,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும், பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



**மாண்புமிகு திரு. . க. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வழங்கு செயல் திட்டங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@, நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 123,78,80,000/-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 2223, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் சிக்கராயபுரத்தில் தொடங்கிய ஆடு வளர்ப்புத் திட்டத்தை, விரிவாக, செம்மையாக செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,78,80,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2225, திரு. ஜி. பழனிசாமி.

---

@ 429 முதல் 451 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறே:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 123,78,80,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2229, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருப்பூர் பொங்குபாளையம் ஊராட்சிப் பகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 123,78,80,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 291, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெருந்துறை, ஊத்துக்குளி வட்டாரங்களில் வறட்சியால் பாதித்துள்ள கால்நடைகளுக்குத் தீவனம் வழங்குவது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 123,78,80,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**"மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2195, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மன்னார்குடி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க மண்ணை காளவாய்க்கரையில், ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 123,78,80,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2201, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளுவர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், வீராக்கண் கிராமத்தில் உள்ள பகுதிநேர கால்நடை மருத்துவ நிலையத்தை மருந்தகமாக மாற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 123,78,80,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2210, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் என்ற ஊரிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு, ஒரு சொந்தக் கட்டிடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 123,78,80,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2894, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பி. அக்ரகாரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 123,78,80,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2239, திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேளாங்கண்ணி, சிக்கல் போன்ற கிராமங்களில், கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தமாகக் கட்டிடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,78,80,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2231, திரு. அ.வ. அப்துல் நாசர்

**திரு. அ.வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புவனகிரி தொகுதி, கீழமணக்குடியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 123,78,80,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2237, திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், சிவலோகம் அரசநாடு பகுதியில், புதிய கால்நடை மருந்தகம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 123,78,80,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2216, திரு. பி. வெங்கடசாமி.

THIRU B. VENKATASAMY: Hon. Speaker Sir, ' to discuss the need to start Veterinary-College at Hosur Cattle Farm at Hosur, Dharmapuri District.



I move, "that the allocation of Rs.123,78,80,000/- under Demand No. 22 Animal Husbandry, be reduced by Rs. 100/-"

## (இ) கோரிக்கை எண் 44— காட்டுவளத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை. மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளத் துறை பற்றிய 44ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ. 67,84,81,000-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2683, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள ஜமுனாமரத்தூர் மலையில் உள்ள வனத்துறை மேல்நிலைப் பள்ளியைக் கல்வித் துறைக்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,84,81,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2678, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,84,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2677, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி, விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காட்டுவளத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,84,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2671, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி, விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காட்டுவளத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,84,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2705, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், ஏற்காடு வனப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கி செல்ல, வனத்துறை மூலம் 'ஓய்வு இல்லம்' கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காட்டுவளத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,84,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2672, திரு. ஜி. நிஜாமுதீன்

***திரு. ஜி. நிஜாமுதீன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேதாரண்யம் கோடியக்கரை கடற்கரைப் பகுதிகளில் காடு வளர்ந்து, கூடுதல் மழை பொழியச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"காட்டுவளத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,84,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2681, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், கிள்ளை மற்றும் பிச்சாவரம் காப்புக் காடுகளில் உள்ள நீர் நிலைகளின் உரிமையை வனத் துறையிலிருந்து விடுவித்து, மீண்டும் வருவாய்த் துறைக்கு மாற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காட்டுவளத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,84,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2685, திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குமரி மாவட்டத்தில் அரசு காடுகள் சம்பந்தமாக நீதிமன்றங்களில் பதியப்பட்டுள்ள வழக்குகளை முறையாக நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காட்டுவளத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,84,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (ஈ) கோரிக்கை எண் 59-காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண் 59 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ.76,81,91,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2783, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காட்டுவளத்தைக் காக்க கூடுதலாக வனக் காவலர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,81,91,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2786, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி, விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ரூ. 76,81,91,000 -ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2787, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி, விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ .76,81,91,000/-ல் ரூ.100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2781, திரு. நா. பெரியசாமி.

*** திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி, விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 76,81,91,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2782, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டத்தில், அரசு முதலீட்டில் பெரிய அளவில் சந்தன ஆயில் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,81,91,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும், பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. காலநடை வளர்ப்பு, காட்டு வளத்துறை மற்றும் காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன அவற்றில் தமிழிலே உள்ள கொள்கை விளக்க குறிப்புகளை@ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், இறுதியில் என்னுடைய பதிலுரையை நான் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் 14 பேர் இங்கு பேசவிருக்கிறார்கள். அதை மனதிலே கொண்டு ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய கருத்தை மிகச் சுருக்கமாக 7

---

@ 453 முதல் 527 வரையிலான பக்கங்களில் இணைப்பு 2 மற்றும் 3 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

நிமிடங்களுக்குள்ளே சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விவாதத்தைத் துவக்கிவைக்குமாறு திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களை அழைக்கிறேன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை, வனத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய 3 துறைகளினுடைய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்தமைக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதேபோல நாளை பாராளுமன்றத்தில் நடைபெறவிருக்கக்கூடிய நம்பிக்கை கோரும் தீர்மானத்தில் ஐக்கிய முன்னணி கட்சிக்கு வெற்றி உறுதியாகக் கிடைக்கும் அளவுக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கும் அன்புத் தலைவர் திரு. மூப்பனார் அவர்களுடைய முயற்சியும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய முயற்சியும் வெற்றிபெற இறைவனை வேண்டி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

குறிப்பாக கால்நடை வளர்ப்பு என்பது கிராமங்களில் நடைபெறுகிற ஒன்று. 60 சதவிகிதத்திலிருந்து 70 சதவிகிதம் வரை உள்ள மக்கள் அனைவரும் கிராமப் பகுதியிலே அவர்களுடைய அன்றாட தொழிலான விவசாயத்தையொட்டி வாழ்க்கையை நடத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கடந்த காலங்களில் எல்லாம் ஏராளமான கால்நடைகள் இருந்தன. அது நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. கால்நடைகளை வளர்ப்பதற்குத் தேவையான கால்நடைத் தீவனங்களின் விலையேற்றத்தின் காரணமாகவும், அவைகளுக்கு வரக்கூடிய நோய்களைத் தடுக்க முடியாத சூழ்நிலையின் காரணமாகவும், அறிவியல், தொழில் நுட்பம் முழுமையாக இல்லாத காரணத்தாலும், முழுமையாகக் கிடைக்காத காரணத்தாலும் அன்றிருந்த அளவில் யாரும் கால்நடைகளை வளர்ப்பதில்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, இன்று மேலைநாடுகளுடைய முர்ரா ஜெர்சி, ப்ரிசியன் போன்ற அயலினக் கால்நடைகளின் விந்துகளைக் கொண்டு சிறப்பாக கால்நடைகளைப் பெருக்க வேண்டுமென்று செயல்பட்டாலும்கூட அதைச் செய்யக்கூடிய அளவுக்கு, அதை வளர்ப்பவர்களுக்கு அதிக ஆதாயம் கிடைக்காத காரணத்தாலே நமது எண்ணங்கள் முழுமையாக நிறைவேறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2,126 கால்நடை கிளை மருத்துவ நிலையங்கள் மற்றும் 893 கால்நடை மருத்துவமனைகள்



இருப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். 2,126 கால்நடை கிளை மருத்துவமனைகளில் 600 கிளை மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லாத நிலையும், 893 கால்நடை மருந்தகங்களில் 200-க்கும் மேற்பட்ட மருந்தகங்களில் மருத்துவர்கள் இல்லாத நிலையும் இருக்கிறது. எதிர்காலத்தில் 2,126 கிளை மருத்துவமனைகள் என்பதை 4,000 கால்நடை கிளை மருத்துவமனைகள் என்ற அளவில் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது அரசு ஒரு கமிட்டியை அமைத்து 5,000 விவசாயக் குடும்பங்களுக்கு ஒரு கிளை மருத்துவ நிலையம் கட்டாயமாக இருக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஷிப்ட் முறையில் வேண்டுமானாலும் நீங்கள் அவற்றைச் செயல்படுத்தலாம். கால்நடை மருத்துவர்களோ அல்லது ஆய்வாளர்களோ காலை 7 மணியிலிருந்து 10 மணி வரையிலும், மாலையில் 3 மணியிலிருந்து 6 மணி வரையிலும் என்று முறை வைத்துக்கொண்டு செயல்படுத்தலாம். அதுபோன்ற கிளை நிலையங்கள் அமைப்பதற்கு கிராமப் பகுதிகளிலே இலவசமாக வீடுகள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே அதுபோன்ற கிளை நிலையங்களை அதிகமாக ஏற்படுத்துவதற்கு, மருந்தகங்களை அதிகமாக ஏற்படுத்துவதற்கு, மருத்துவமனைகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் எதிர்காலத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும். 20 மருத்துவமனைகளுக்கு 1½ கோடி ரூபாய் செலவு செய்ததாகக் கூறியிருக்கிறீர்கள். அது போதாது. இன்னும் எதிர்காலத்தில் வேகமாக, தேவையான அளவுக்கு அதிகமாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடைத் தீவனம், பசுந்தீவனம் எல்லாம் சொல்வதற்கு சுலபம். ஆனால் செய்வது கடினம்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற நிலையிலே உழுதுகொண்டு இருக்கக்கூடியவர்கள் உழுது கொண்டே இருக்க வேண்டியதுதான். மற்றவர்கள் எல்லாம் முன்னேறிச் செல்லக்கூடிய நிலையிலே இவர்கள் எல்லாம் பின்னாலே செல்லக்கூடிய நிலையை மாற்றுவதற்கு கால்நடைகள் ஒவ்வொரு பகுதியிலும் பெருக்கப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டும்.

அதுபோல, 383 ஒன்றியங்களில் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். அவைகள் முழுமையாகப்

பயன்படுத்தப்படுவதில்லை, அதிகாரிகள் முழுமையாக செயல்படுவதில்லை என்பதை அன்போடு நான் கூறிக்கொள்கிறேன்.

ஒவ்வொரு நாய்க்கும் தடுப்பூசி போடப்படுவதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை எனக்குத் தெரிந்த வரையிலும் நான் எங்கேயும் பார்க்கவில்லை. எனவே அரசு எதிர்காலத்தில் ஒவ்வொரு நாய்க்கும் தடுப்பு ஊசி போடக்கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தடுப்பு நாய்க்கு அல்ல, நாய்க்கு தடுப்பு ஊசி.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மன்னித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாய்க்கும் தடுப்பு ஊசி போடுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

அடுத்து, வனத் துறை மூலம் காடுகளை வளர்த்தால்தான் எதிர்காலத்திலே மழை கிடைக்கும், சுற்றுப்புறச் சூழல் சிறப்பாக இருக்கும், நல்ல காற்றோட்டம் கிடைக்கும் என்ற ஒரு நிலையை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். 22,699 சதுர கிலோ மீட்டர் இருந்த வனப் பகுதி 7,000 சதுர கிலோ மீட்டர் அளவுக்குக் குறைந்து தற்போது 18,000 சதுர கிலோ மீட்டர் அளவுக்கு இருப்பதாகக் கூறி இருக்கின்றீர்கள். எனவே, எதிர்காலத்திலே இரண்டு மரங்களை வெட்டினால் அதற்குப் பதிலாக 5 மரங்களை நடுகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். 'மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்' என்று விளம்பரம் செய்தாலும், இன்றைக்கு எந்த அளவுக்குக் காடுகள் அழிந்து வருகின்றதோ அந்த அளவுக்கு மரங்கள் முழுமையாக நடப்படுவதில்லை என்பதைக் கருத்தில்கொண்டு, எதிர்காலத்திலே காட்டு வளத்தைப் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மூன்றில் ஒரு பகுதி நிலத்தில் காட்டுவளம் நிறைந்து இருந்தால்தான் எதிர்காலத்திலே சுற்றுப்புறச் சூழலும், நல்ல காற்றோட்டமும் கிடைத்து மக்களுடைய வாழ்வும் சிறப்பாக அமைவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து, கடந்த கால அரசு ஒரு கிலோ சந்தனக் கட்டையை 260 ரூபாய்க்கு விற்று 13¼ கோடி ரூபாயை ஈட்டியிருக்கையில் இந்த அரசு வந்தவுடன் ஒரு கிலோ 500 ரூபாய் என்ற அளவுக்கு விற்று 46¼ கோடி ரூபாயை ஈட்டியது உண்மையிலே பாராட்டக் கூடியதாகும்.



அடுத்து, வனத் துறையிலே ஆட்களை நியமித்தது போன்று கால்நடைத் துறைக்கும் தேவையான ஆய்வாளர்களை நியமிக்க வேண்டும். பணி கிடைக்காமல் இருக்கின்ற மருத்துவர்களுக்கு வேலை வாய்ப்பை அளித்து—700 பேர்களுக்கு மேல் வேலை இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றும் வகையில்—நிறைய கால்நடை மருத்துவமனைகளை ஏற்படுத்தி ஆவன செய்ய வேண்டும். அப்படி நியமிக்கப்படும் மருத்துவர்களுக்கு எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்களுக்குக் கொடுப்பதுபோல் சம்பளத்தைக் கொடுப்பதற்கும், வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பால்வளத் துறையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய கிராமச் சங்கங்கள், மாவட்ட அளவில் இருக்கக்கூடிய ஒன்றியங்கள், மாநில அளவில் இருக்கக்கூடிய தேசிய பால்வள கூட்டுறவு இணையம் என்று 3 அடுக்குகளிலே இருக்கக்கூடிய நிலையில் குஜராத் மாநிலத்தைப் பின்பற்றி நாமும் இந்தச் சங்கங்களைப் போல் அமைத்து இருக்கிறோம் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் 3 நிமிடங்களில் உரையை முடித்து விடுகிறேன். 3 மானியக் கோரிக்கைகளில் பேசிக் கொண்டிருக்கிறேன். பால்வளத் துறையைப் பற்றி பேசி முடித்துக் கொள்கிறேன். குஜராத் மாநிலத்திலே நாள் ஒன்றுக்கு 27 லட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து, ஒரு சொட்டு பால்கூட கீழே சிந்தாமல், எந்தவித துர்நாற்றமும் இல்லாமல் சிறப்பாகச் செயல்படுத்துவதை பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்கள் என்ற முறையிலே நானும், திருவாளர்கள் ராமலிங்கம், பெர்னார்ட், மாரிமுத்து மற்றும் சில உறுப்பினர்களும் சென்று பார்த்து அங்கு டாக்டர் குரியன் அவர்களிடத்திலே விவாதித்தபோது அங்கே வருடத்திற்கு 42 கோடி ரூபாய் இலாபம் கிடைக்கின்ற நிலையிலே, அதில் 2 இலட்சம் ரூபாயை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற தொகையை பால் உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்து விடுவதாக நாங்கள் அறிந்தோம். ஆனால் இங்கே இருக்கக்கூடிய நிலை, பால்வள ஒன்றியங்களில் இழப்பு 50 கோடி ரூபாய், இணையத்திலே இழப்பு 34 கோடி ரூபாய், மொத்தம் 84 கோடி ரூபாய் நஷ்டம் என்பதை எதிர்காலத்திலே மாற்றுகின்ற வகையில் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளை ஊக்குவிக்கின்ற அளவில், பாலுக்கு அதிக விலை கொடுப்பதாகக் கொள்கை அளவில் கூறியிருந்தாலும்கூட, இங்கே

இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களையும், மாண்புமிகு அமைச்சரையும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு பாட்டில் மினரல் வாட்டருக்கு விலை 15 ரூபாய் : ஆனால் மாட்டுப் பாலினுடைய விலை ஒரு லிட்டருக்கு 6 ரூபாய் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே எதிர்காலத்திலே, வாங்கும் திறன் அதிகரித்து இருக்கும் நிலையில், நுகர்வோரையும், உற்பத்தியாளர்களையும் அழைத்துப் பேசி பாலுக்கு அதிக விலை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். எந்த அளவுக்கு வேண்டுமானாலும் பால் உற்பத்தி செய்வதற்கு விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள் என்பதைக் கருத்தில்கொண்டு பாலுக்கு அதிக விலை கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எதிர்காலத்திலே ஊழலற்ற நிர்வாகத்தை நாம் கொடுத்தோம் என்றால் இங்கேயும் குஜராத்தைப்போல இலாபம் ஈட்டக்கூடிய அளவுக்கு செயல்படுத்த முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பால்வளத் துறை துணைப் பதிவாளர்கள், எந்தவித முயற்சியும் எடுக்காமல் இருக்கிறார்கள். பால் கிடைக்கக்கூடிய இடங்களில் புதிதாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதற்கு அவர்கள் எந்தவித முயற்சியும் எடுக்காமல் இருக்கிறார்கள். இவர்கள் சரி என்று முயற்சிப்பார்கள் என்று சொன்னால் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிப்பதற்கு நிறைய இடங்களில் தயாராக இருக்கிறார்கள். பால் கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள் பலமுறை கேட்டாலும்கூட இவை அமைக்கப்படுவதில்லை. எங்கள் பகுதியிலேயும், இன்னும் பல பகுதிகளிலும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டும்கூட, 5 மாதங்கள் முடிந்தும் இன்னும் அவை ஆரம்பிக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றி, அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய துணைப் பதிவாளர்கள் உடனடியாக முயற்சியை எடுத்து தேவையான அளவுக்கு பால் கிடைக்கக்கூடிய பகுதிகளிலே பால் உற்பத்தியாளர் சங்கங்களை உடனே ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஐயம்பாளையம், வேலம்பாளையம், வைரமங்கலம், சித்தார் போன்ற பகுதிகளிலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் சிறப்பான முறையிலே செயல்பட்டு, நல்லமுறையில் இயங்கி வரக்கூடிய அந்தச் சங்கங்களுக்கு புதிதாக ஐ.ஆர்.டி.பி. மூலம், ஊரக முகமை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கட்டிடங்கள் கட்டித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11-15

அதே போல, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த கூட்டத் தொடரிலே பேசுகின்றபோது யானையின் மூலமாக அல்லது வேறு வகையில் விவசாயப் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களைத் தடுப்பதற்கும், மற்றபடி அங்கே பயிர்களைக் காப்பதற்கு ஷிப்ட் முறையை ஏற்படுத்தி மின்வேலி அமைக்கப்படுவதாவும் கூறினார்கள். ஆனால், இது அமைக்கப்படவில்லை. பயிர்ச்சேதங்கள் நிறைய ஏற்பட்டிருக்கின்றன. எனவே, அதற்கு நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், பால் உற்பத்தியாளர்களுக்கு நிறைய விலை கொடுக்க வேண்டுமென்றும், ஷிப்ட் முறையை ஏற்படுத்தி நிறைய பகுதிகளில் கால்நடை கிளை நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும், நிர்வாகத்தினைச் செம்மையாகச் செயல்படுத்த வேண்டுமென்றும் அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மூன்று மானியக் கோரிக்கைகளையும் ஒரே நேரத்தில் வைப்பதால் பேசுவதற்கு அதிகமான வாய்ப்பு கிடைக்காமல் எந்தக் கொள்கையைப் பற்றியும் சிறப்பாகப் பேசுவதற்கு இயலாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே, எதிர்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசி தீர்மானித்த பிறகுதான் வருகிறது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆபத்து ஈட்டுப்படி என்பதனைக் கால்நடைத் துறையிலே பணியாற்றக்கூடிய அத்தனை பேருக்கும், கால்நடை மருத்துவர், கால்நடை ஆய்வாளர் என்ற வித்தியாசம் பாராமல், அனைவருக்கும், கிடைக்கக்கூடிய அளவிற்கு எதிர்காலத்திலே செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்போது மருந்து விலைகள் எல்லாம் அதிகமாகி விட்டன. அன்றைக்கு பத்தாயிரம், இருபதாயிரம், ஐம்பதாயிரம் என்று ஒதுக்கப்பட்டவைகளுக்கெல்லாம், அதாவது முன்பு ஒதுக்கியவற்றிற்கு இரண்டு மடங்கு அதிகமாக நிதி ஒதுக்கீட்டினை இப்போது செய்தால்தான் தேவையானவர்களுக்கெல்லாம் மருந்துகள் போன்றவைகள் கிடைக்கும் என்பதனை அன்போடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். .... (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வளம், கால்நடை வளம் மற்றும் காட்டு வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் கிட்டத்தட்ட 60 விழுக்காடு அளவிற்கு அங்கு வாழுகின்ற மக்கள் வேளாண் தொழிலையும், அது போல கால்நடைகளையும் நம்பி வாழ்கின்றார்கள். நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்ட நேரத்திலே கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தியிருக்கின்ற அதே வேளையில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தியிருக்கின்றார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலே, மாடுகளுக்குத் தீவனம் வழங்குகின்ற மூன்று ஆலைகளில் பெல்லட், மேஷ் என்ற தீவனங்கள் உற்பத்தி செய்து, ஒன்றியத்தின் மூலமாக பல்வேறு கிராமப்புற கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றது. என்று உள்ளது. அதற்கு வரி விலக்கும் அளிக்கப்பட்டிருக்கின்றது என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது, அதை நான் வரவேற்கின்றேன். விவசாயப் பெருங்குடி மக்கள், ஏழை, எளிய மக்கள், பால் உற்பத்தியினை நம்பி, உப தொழிலாகக் கருதி அதில் ஈடுபடுகின்ற காரணத்தினால், இந்தத் தீவனங்களுக்கு மானியம் கொடுத்து உதவ வேண்டும் என்று நான் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 'தாட்கோ' வின் மூலமாக ஆதிதிராவிட மக்களுக்கும், மலைவாழ் பழங்குடியினருக்கும் கடன் உதவி வழங்குகின்றபோது நீங்கள் மானியம் அளிக்கின்றீர்கள். எனவே, அது போல கிராமப்புறத்திலுள்ள பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு, பால் அளிக்கின்ற அந்த அங்கத்தினர்களுக்கும் மானியத்தினைக் கொடுப்பதற்கு தாங்கள் அனுமதி வழங்கவேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது போல, வைட்டமின்-ஏ குறைவினால் கண் பார்வை குறைவு ஏற்படுகின்ற காரணத்தினால், மத்திய அரசினுடைய உதவியைக் கொண்டு சென்னையிலுள்ள இணையத்தின் மூலமாக, வைட்டமின்-ஏ-வை பாலிலே கலந்து கொடுக்கின்ற நிகழ்ச்சியினை இன்றைக்கு உருவாக்குவதாகவும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நான் வரவேற்க விரும்புகிறேன்.



அது போல 18 வாரம், 12 வாரம், 9 வாரம், 7 வாரம் என்று இப்படியெல்லாம் அங்கத்தினர்களுக்கு பணம் பட்டுவாடா பண்ணப்படாமல் நிலுவையில் இருக்கிறது. ஆகவே, இலாபகரமாக இயங்குகின்ற சங்கங்கள், தங்களுடைய சங்கங்களிலே இருக்கின்ற பணத்தை 4 வாரம், 3 வாரத்திற்குள் என்று கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், இழப்பிலே நடைபெறுகின்ற சங்கங்களின் மூலமாக 7 வாரம், 8 வாரம் கழித்தும் பணத்தினை பட்டுவாடா செய்ய முடியாத சூழ்நிலையெல்லாம் இருப்பதை மனதிலே கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள், அதாவது இரண்டு வாரம், மூன்று வாரம் என்கிற காலத்திற்குள் பணத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அது போல கால்நடையைப் பொறுத்தவரையில், இதுவும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உப தொழிலாக இருக்கின்றபடியால், ஆடு வளர்ப்பது, மாடு வளர்ப்பது போன்றவை இன்னும் அதிகமாக ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

உலக வங்கி நிதியுதவியுடன் ஜெர்சி, ப்ரிசியன், முர்ரா போன்ற உயர் ரகக் காளைகளின் விந்தினைப் பயன்படுத்தி இனவிருத்தி செய்கின்ற உயர்வகை கிடாரிக் கன்றுகளுக்கு நீங்கள் மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு கிடாரிக் கன்றினை 6 மாதத்திலிருந்து 18 மாதம் வரை வளர்ப்பதற்கு, ஏழை விவசாயிகளுக்கு உதவும் வகையில், தீவனத்தை வழங்கியோ அல்லது பணத்தை வழங்கியோ மானியம் கொடுப்பீர்களானால், 18-வது மாதத்தில் அந்தக் கன்று பருவம் அடைவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, மானியம் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சென்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், உலக வங்கி நிதியுதவியுடன் செயற்கை கருவூட்டலுக்கு ஊசிபோட 12 ரூபாய் என்று வசூலிக்கப்படுவதைக் குறைக்கின்ற வகையில், அதற்கு 5 ரூபாய் மானியம் அளிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால், அது நடைமுறையில் வரவில்லை. ஆகவே, உலக வங்கியின் நிதியுதவியுடன் நடைபெறுகின்ற செயற்கை கருவூட்டல் திட்டத்தில் மானியம் வழங்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும். நானும். சினை மாடுகளுக்கு இலவசமாக ஊசி போடுவதாக வாக்களித்திருந்தோம் என்றும், ஆனால் அது நடைமுறையில் இல்லை என்றும் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல இடங்களிலும், பொதுக் கூட்டங்களிலும், மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, இலவசமாக சினை ஊசி போடுவதற்கான அறிவிப்பைச் சட்டமன்றத்திலே தெரிவித்தார்கள். ஆனால், உலக வங்கித் திட்டத்தின் கீழே இந்த இலவச ஊசி போடும் திட்டம் நடைபெறுவதால், உலக வங்கி அதிகாரிகளோடு பலமுறை நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியும். அவர்கள் அதை ஒத்துக் கொள்ளவில்லை என்ற காரணத்தால் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. தா. உதயசூரியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. நான் சொல்ல விரும்புவதெல்லாம், உயர்வகை மாடுகளுக்கு இரண்டு அல்லது மூன்று முறை கருத்தரிப்பு ஊசிபோட்டால்தான் கரு உருவாகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கைக்கும், உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினருக்கும் இடையே உறுப்பினர்கள் வரக்கூடாது. உறுப்பினர்கள் அவரவர்களுக்குரிய இடங்களில் போய் உட்காருங்கள். திரு. தா. உதயசூரியன். தொடர்ந்து பேசலாம்.

**திரு. தா. உதயசூரிய :** துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கி அதிகாரிகள் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னாலும், கருணையே வடிவான நம்முடைய முதல்வர் அவர்கள் நமது அரசாங்கத்தின் மூலம் செயற்கை கருவூட்டலுக்கு ஊசிபோட 12 ரூபாய் என்பதை ஓரளவு குறைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கோடி, ஜெர்சி, ப்ரிசியன் போன்ற மாடுகளுக்கு மூன்று அல்லது நான்கு முறை கருப்பையைச் சுத்தம் செய்துவிட்டு, கருவூட்டுதல் நிகழ்ச்சி ஏற்படுத்துகிறபோது, மூன்று அல்லது நான்கு முறை ஊசி போட



வேண்டும். அப்படிப் போடும்போது. ஏழையெளியவர்களுக்கு இது மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆகவே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, மறுபரிசீலனை செய்து நல்ல முடிவை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேபோல, மாடுகளுக்குக் கோமாரி நோய் வருகிறது. முதலிலே மாட்டினுடைய காலிலே இது வருகிறது. அதற்குப் பிறகு மாட்டினுடைய நாக்கு அதிகமாக இந்த நோயினால் பாதிக்கப்படுகிறது. நான்கைந்து நாட்களுக்கு மாடுகள் தீவனமே எடுத்துக்கொள்வது கிடையாது. காலிலே ஏற்படுகின்ற புண்களை ஆற்றுவதற்காகப் பொட்டாசியம் பர்மாங்கனேட்டைச் சுடுதண்ணீரில் போட்டு மாடுகளின் கால்களைக் கழுவ வேண்டும். அதற்குப் பின் ஆயின்ட்மென்ட் தடவ வேண்டும். அதேபோல. நாக்குக்கு கிளிசரின் போட்டுத் தடவ வேண்டும். நாக்குத் தோலே கழன்று விழுந்துவிடும். இந்நோயின் பாதிப்பிலிருந்து கால்நடைகளைக் காக்க ஊசிமருந்தின் விலையில் 50 சதவீத மானியம் அளிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஊசி மருந்தின் விலையை இன்னும் கொஞ்சம் குறைத்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், கோமாரி நோய் தாக்கிவிட்டால், பால் கறக்கின்ற மாடுகள் சரியாகப் பால் கறக்காது, அளவு குறைந்துவிடும். மாட்டினுடைய உடல் கெட்டு விடுகின்ற காரணத்தால், நீங்கள் இதற்கு உதவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பசுந்தீவனத்தை பல்வேறு முறையில் பெருக்கின்ற நம்முடைய மாநிலத்தில் குதிரை மசால், கிளிகராஸ், கோ-1, இப்படிப்பட்ட புல் விதைகளை இலவசமாகக் கொடுக்கின்றபோது ஸ்டைலோன் என்கிற விதைகளை வறட்சிப் பகுதிகளுக்கு நீங்கள் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து. திரு. எஸ்.எஸ். முகம்மது இஸமாயில்.

*முற்பகல் 11-25*

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். பால் வழங்குதலும், கால்நடை வளர்ப்பு,

காட்டு வளத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் கூறி எனது கருத்துகளை இங்கே எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

தமிழகத்தில் கரூர்-தீரன் சின்னமலை மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதியான என்னுடைய தொகுதியில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே கறவை மாடுகளை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் மூலமாகவும் வழங்குகிறார்கள் : அதைக் குறைந்த அளவிலே வழங்குகிறார்கள். ஐ.ஆர்.டி.பி. போன்ற கடன் உதவித் திட்டங்களின் மூலம் வழங்கப்படுகின்ற கடன் உதவிகள் நேரடியாக அங்கே குறிப்பிட்ட விவசாயிகளுக்குக் கிடைக்காமல் காலதாமதம் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆகவே அவற்றைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்குவதற்கு —என்னுடைய தொகுதியிலே அரவக்குறிச்சி, சின்னதாராபுரம், பரமத்தி, தென்னிலை போன்ற பகுதிகளில் வாழ்கின்ற விவசாயிகளுக்கு — அந்தக் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதற்கு நீங்கள் ஆவன செய்து தர வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருந்தகங்கள் இன்றையதினம் தமிழகத்திலே நடை பெற்றுக் கொண்டிருந்தாலும், என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மருந்தகங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 30 ஆயிரம் ரூபாய வழங்கப்பட்டு வருகின்றது. வழங்கப்படுகின்ற அந்தத் தொகை ரூ.30 ஆயிரத்தைக் கூடுதலாக்கித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று கிராமப்பகுதிகளில் நடமாடும் கால்நடை மருந்தகங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது : அதையும் கூடுதலாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் அதிகமான கிராமங்கள் உள்ளன. அங்கு செல்வதற்கு ஒரு ஜீப்பு வழங்கி இருக்கின்றார்கள். 586 கிராமங்களை உள்ளடக்கிய என்னுடைய தொகுதிக்கு மேலும் சில ஜீப்புகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குகின்ற அடிப்படையிலே, அங்கு கூடுதலான



டாக்டர்களை நியமிக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய தொகுதி விவசாயத் துறையில் வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியிலே செம்மறி ஆட்டுப் பண்ணை அமைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஏராளமான செம்மறி ஆடுகளும் வளர்ந்து கொண்டு இருக்கின்றன. எனவே அந்தப் பகுதியிலே ஒரு செம்மறி ஆட்டுப் பண்ணையைத் தொடங்கினால் அந்தப் பகுதி மக்களுக்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அரசு திட்டம், டென்மார்க் நிதி உதவியோடு வழங்கப்படுகின்ற அந்தத் திட்டத்திலே 20 ஆடுகளும், கடாவும் வழங்குகின்ற திட்டத்தை ஊக்குவிக்கின்ற வகையிலே, என்னுடைய தொகுதிக்கு நீங்கள் சில திட்டங்களைப் பகிர்ந்து அளித்துக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கால்நடைகள், கோழிப் பண்ணைகள் வழங்குகின்ற திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு இருக்கின்ற செய்தியினைக் குறிப்பேட்டின் மூலம் கண்டேன். ஆகவே, அந்தத் திட்டத்தை எங்கள் தொகுதியான அரவக்குறிச்சி, சின்ன தாராபுரம், பரமத்தி ஆகிய இடங்களுக்கு அளித்து, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக கோழிப் பண்ணைகளை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பின்தங்கிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு அரசால் மானிய உதவியோடு வழங்கப்படுகின்ற திட்டங்களை என்னுடைய தொகுதிக்கும் வழங்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய நாகை தொகுதியில், சிக்கல் ஊராட்சி மன்றத்தில் கால்நடைப் பண்ணை ஒன்றை நீங்கள் திறந்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே சில இடங்களில் கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கையை ஒரு எடுத்து வைத்து இருக்கிறேன். அதனை பரிசீலனை செய்து சில கிராமங்களுக்கு அதனை நீங்கள் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து தமிழகத்திலே மலைப் பகுதிகளான நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், சேலம் மாவட்டத்தில் ஏற்காடு, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் மரம் வெட்டுவதில் சிலர் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். காபி, டீ, பயிரிடக்கூடிய அந்தப் பகுதிகளிலே நிழல் தரும் மரங்களான சில்வர் ஓக், சவுக்கு போன்ற மரங்களைப் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் சில்வர் ஓக் மரத்தை அப்புறப்படுத்துவதற்காக மனு செய்கின்ற நேரத்திலே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்கு அனுமதி அளிப்பதில் தாமதம், மெத்தனம் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். கடந்த கால அரசில் ஒரு மர வியாபாரிக்கும், அமைச்சருக்கும் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக இந்தத் திட்டத்தை அவர்கள் கிடப்பிலே போட்டு இருப்பதால் அந்தப் பகுதியினுடைய மக்கள் இன்றையதினம் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். சாதாரண மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தோட்ட அதிபர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற செய்தியினை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சாதாரணமாக அங்கே விலையுயர்ந்த ஈட்டி, தேக்கு போன்ற மரங்கள் நல்ல முறையிலே விளைந்து கொண்டு இருந்தாலும், அவற்றை ஷெட்டியூல்டு மரம் என்ற முறையிலே சந்தன மரத்தோடு சேர்த்து ஷெட்டியூல்டு டைப்பிலே போட்டு இருக்கிறார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் உணர்ந்து, ஷெட்டியூல்டு என்ற திட்டத்தில் இருக்கிற அந்த சில்வர் ஓக் மரத்தை, சாதாரண மரமாக, காட்டு மரங்களில் ஒன்றாக, விவசாயிகள் நிழலுக்காக, அபிவிருத்திக்காகப் பயன்படுத்தக்கூடிய மரமாக நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். சாதாரணமாக சிறு விவசாயிகள், சிறு வியாபாரிகள், மலைவாழ் மக்கள், கால் ஏக்கர், அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்று வைத்துக் கொண்டு இருப்பவர்கள், காப்பித் தோட்டத் தொழிலை நம்பியிருக்கின்றவர்கள், காப்பி பயிரை பயிரிடமுடியாமல், மலைக் குன்றுகளில், மலைச் சரிவுகளில் இருக்கின்ற இடங்களில் அவர்கள் சில்வர் ஓக் மரங்களைப் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மூன்று வருடங்கள், 5 வருடங்கள் கழித்து, பயிராக வருகிறபோது, அதை வெட்டி அப்புறப்படுத்தி, அதிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தில் குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த நேரத்தில் அவர்கள் மரம் வெட்டுவதற்குப் பெர்மிட்



கிடைக்காமல் சிரமத்திற்கும், சிக்கலுக்கும் ஆளாகிறார்கள். பெர்மிட் பெறுவதற்கு முறையாக விண்ணப்பம் செய்தாலும்கூட, பெர்மிட் கிடைப்பதில்லை. விண்ணப்பம் செய்து ஆறு மாத காலம், ஒரு வருட காலம் ஆகியும் பெர்மிட் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். இதனால் திருட்டுத்தனமாக மரங்கள் அப்புறப்படுத்தப்படுகிற காரணத்தால், வனத் துறை அதிகாரிகளும், வருவாய்த் துறை அதிகாரிகளும் லஞ்சம் பெற்றுக்கொண்டு, இதுபோன்று செய்கின்ற காரணத்தால், அரசுக்குக் கிடைக்கின்ற வருவாய் கிடைக்காமல் போய்விடுகிறது.

முற்பகல் 11-30

சாதாரணமாக காப்பித் தோட்ட அதிபர்கள் ஒரு மரத்தை வெட்ட வேண்டுமென்றால், ஒரு மரத்திற்கு 100 ரூபாய் முன் பணம் கட்ட வேண்டும். முன் பணம் கட்டுவதோடு மட்டுமல்லாமல், இரண்டு சவுக்கு மரங்களை அங்கே பயிரிட்ட பிறகுதான், மரம் வெட்டுவதற்குரிய அனுமதி வழங்கப்படுகிறது. அந்த அடிப்படையில் நல்ல திட்டங்களை தமிழக அரசு அமல்படுத்தி, வனத் துறை மூலமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. கடந்த கால அரசு சில்வர் ஓக் மரத்தை ஷெட்டியூல்டு மரமாக அறிவித்ததன் காரணமாக, மரத்தை வெட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் ஏராளமான வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயத்தை நம்பியிருக்கின்றவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காட்டு மரங்கள் விழுந்து ஓராண்டு காலம் ஆகிறது. அதை அப்புறப்படுத்துவதற்கு பெர்மிட் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஓராண்டு ஆகியும், இன்னும் அந்த மரங்களை அப்புறப்படுத்த முடியவில்லை. சாதாரணமாக, சில்வர் ஓக் மரத்தை, ஷெட்டியூல்டு மரம் என்று கூறிவிட்ட காரணத்தால், சாதாரண மக்கள்கூட அதை உபயோகப்படுத்த முடியாமல், பெர்மிட் கிடைக்காமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனால் அரசுக்கு வருமான இழப்பு ஏற்படுகிறது. இரவு நேரங்களில் திருட்டுத்தனமாகக் கொள்ளையடித்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து இந்தப் பிரச்சினை குறித்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆட்சியில், 1996, மே மாதத்தில் இரண்டு நாள் கோடை விழா நடைபெற்றது. அப்போது மட்டும் ஏறத்தாழ 200, 300 பெர்மிட்டுகளை

ஒரே நேரத்தில் வழங்கியிருக்கிறார்கள். பணத்தை அடித்துச் சென்றிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம், விழுந்த மரங்களைக்கூட அப்புறப்படுத்தமுடியாமல், பெரிய தோட்ட அதிபர்கள் எல்லாம் கோர்ட்டுக்குச் சென்று, ஸ்டே வாங்கி, அனுமதி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக வருகை தந்து, பார்வையிட்டு, இது குறித்து மறுபரிசீலனை செய்து ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும்.

ஒரு பெர்மிட்தாரர் விண்ணப்பிக்கும்போது, மனுநீதி நாளில் விண்ணப்பிக்கப்படும் மனுக்கள் போல, அந்த அடிப்படையில், விண்ணப்பித்த நாளிலிருந்து 15 நாள், 1 மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குள் உரிய பெர்மிட், உரிய நிலச் சொந்தக்காரருக்கு கிடைக்கக்கூடிய முறையிலே நீங்கள் ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன. சேலம், ஏற்காட்டில் 24,000 ஏக்கர் நிலப்பரப்பில் காப்பி பயிரிடப்படுகிறது. மலைவாழ் மக்கள் கிட்டத்தட்ட 5,000 ஏக்கர் நிலப்பரப்பில் காப்பி பயிர் செய்கிறார்கள். 1/2 ஏக்கர், 1 ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று வைத்திருப்பவர்கள் 5,000 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். ஒரு ஏக்கரில் 200 சில்வர் ஓக் மரங்களை நட்டுப் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நானும் ஒரு சிறு வியாபாரி என்ற முறையில், தோட்டச் சொந்தக்காரர் என்ற முறையில் இங்கே இதை எடுத்துச் சொல்லக் கடமைபபட்டிருக்கிறேன். ஆகவே இதை அருள்கூர்ந்து, பரிசீலனை செய்து உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு மரத்தை வெட்டுவதற்கு 100 ரூபாய் அரசாங்கத்திற்கு கட்டணம் கட்டுகிறபோது, ஏறத்தாழ 1 1/2 இலட்சம் மரங்களை வெட்டுவதற்கு பெர்மிட் கொடுத்தால், அரசுக்கு 1 1/2 கோடி ரூபாய் வருமானம் வரும் என்கிற காரணத்தால், தயவு செய்து இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெர்மிட் கொடுக்காததால், வ்விவசாயிகள், தோட்டக் கூலித் தொழிலாளிகள்—ஆண்கள், தோட்டத்திலே வேலை செய்தால் நாள் ஒன்றுக்கு 40 ரூபாய், 50 ரூபாய் கூலி கிடைக்கும்—வேலையில்லாமல் மிகவும் சிரமத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். ஆகவே இதைப் பரிசீலனை செய்து, நீங்கள் உடனடியாக பெர்மிட் கொடுக்க வேண்டுமாய் கேட்டுகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே வனக் காவலர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். நீங்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.350/- ஊதியம் என்று தினக்கூலி அடிப்படையில்



வனக் காவலர்களை நியமனம் செய்திருக்கிறீர்கள். வாட்சர்களை நியமனம் செய்திருக்கிறீர்கள். இது போதாது. இன்னும் கூடுதலாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு, தயவு செய்து, வேலைவாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கவிருப்பதாகச் சொல்லி இருக்கின்றீர்கள். அந்த அடிப்படையில், வன இலாக்கா ஆய்வாளர், வன இலாக்கா அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்களுடன் சட்டமன்ற உறுப்பினர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு, உயர்மட்டக்குழு அமைக்க ஏற்பாடுகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்காடு ஏரியின் மத்தியிலே இருக்கின்ற தீவிலே மிருகக்காட்சி சாலை ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலையினுடைய அடிவாரத்திலே, குருப்பபட்டி என்ற இடத்திலே மிருகக்காட்சி சாலை ஒன்று அமைத்தால், சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு வசதியாக இருக்கும். வனத்துறை மூலமாக ஓய்வு இல்லம் ஒன்று கட்டப்பட வேண்டும். ஓய்வு இல்லம் இப்போது 20 கிலோ மீட்டர் அப்பாலுள்ள காவிரி விங் என்ற பகுதியில் இருக்கின்றது. நகரப் பகுதியில் 3 ஏக்கர் நிலம் ஊராட்சிக்குக் கொடுத்திருக்கிறோம். அந்த இடத்தில் நகர மையப் பகுதியில் அதைக் கட்டிக்கொடுத்தால் வசதியாக இருக்கும்.

இந்தப் பகுதியிலே இருக்கின்றவர்கள் ஏழை எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள். ஏழைகளின் கோடை என்று சொல்லக் கூடிய ஏற்காட்டில் நீங்கள் இவைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மரத்தை விவசாய விளைபொருளாக அறிவித்து, ஷெட்டியூல்டு மரம் என்று இருப்பதை ரத்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

மரம் வெட்டுவதற்கு உரிய முழு அனுமதியை நீங்கள் வழங்குவதற்கு ஒரு குழுவை அமைத்து, இரண்டு மாத காலம் அல்லது 3 மாத காலத்திலே அந்த பெர்மிட் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்றும் . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். அடுத்து திரு. ஜி. எல். வெங்கடாசலம். (குறுக்கீடு)

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் :** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்காடு சட்டமன்ற உறுப்பினரா அல்லது அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி, அரவக்குறிச்சி ; தோட்டம் ஏற்காட்டில் இருக்கிறது.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் :** அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், சேலம் மாவட்டத்திலே நான் வாழ்கின்ற பகுதியிலே வியாபாரம் செய்து, நானும் ஒரு விவசாயியாக இருக்கின்ற காரணத்தால், விவசாயிகளினுடைய சார்பாகவும், தோட்டத் தொழில் அதிபர்கள் சார்பாகவும், சிறு வியாபாரிகள் சார்பாகவும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன் என்று கூறி நன்றி கூறி முடித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ஜி.எல். வெங்கடாசலம்.

***திரு. ஜி.எல். வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. காட்டு வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத் துறை போன்ற மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு காட்டு வளம் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும் என்றுதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய பிறந்த நாள் செய்தியிலே, ஒவ்வொருவரும் மரங்களை வளர்க்க வேண்டும் என்று சொல்லி தன்னுடைய உடன்பிறப்புகளுக்கு ஆணையிட்டார். அதேபோன்று எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் அரூர் பகுதியைச் சார்ந்த சித்தேரி மலையிலும், ஒகேனக்கல்லைச் சார்ந்த காடுகளிலும் சந்தன மரங்கள் கடந்த காலத்தில்



அதிகமாக இருந்தன. ஆனால், கடந்த கால ஆட்சியிலே அவைகள் கடத்தப்பட்டன. கடத்துகின்ற நேரத்திலே அவர்கள் தங்களுடைய நவீன சக்தி வாய்ந்த ஆயுதங்களையும், துப்பாக்கிகளையும் பயன்படுத்தி சந்தனக் கடத்தலிலே ஈடுபட்டார்கள். அவர்களைப் பிடிப்பது என்பது நம்முடைய அதிகாரிகளுக்கு மிகவும் கடினமான செயலாக இருந்தது. ஆகையால் அந்த வனத் துறை அதிகாரிகளுக்கு ஒரு தனிப் படையை, சிறப்புப் படையை அளித்து அதன் மூலமாக நவீன கருவிகளை அவர்களுக்கு வழங்கி, அந்தக் கடத்தல்களை இன்றைக்குத் தடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலே அரூர் வட்டத்தில் சித்தேரி மலையில் அதிகமான சந்தன மரங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் மண் வளமும், சூழ்நிலையும் சந்தன மரங்கள் அதிகமாக வளருவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கின்றது. ஆகையினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தனி திட்டத்தைத் தயாரித்து அந்தப் பகுதியிலே சந்தனக் காடுகளை வளர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி, பல மாநில மக்களும் அங்கே வந்து பார்த்துச் செல்லக்கூடிய வகையில், ஒரு சுற்றுலாத் தலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே ஒரு முதலைப் பண்ணைகூட இருக்கின்றது. ஆனால் வறட்சி காரணமாகவும் சில நேரங்களில் அங்கே இருக்கின்ற அந்த முதலைகள் இடமின்மை காரணமாகவும் வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. ஆகையினால் அங்கே ஒரு நல்ல மிருகக் காட்சிசாலை அமைத்து அங்கு வருகின்ற பயணிகள் அனைவரும், வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அனைவரும் கண்டு களித்திட ஏற்பாடு செய்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஒகேனக்கல்லிலிருந்து தேன்கனிக்கோட்டை, தளி போன்ற பகுதிகள் வரை மிகவும் அடர்த்தியான காடுகள் இருக்கின்றன. அந்த அடர்த்தியான காடுகளை தேசியப் பூங்காவாக மாற்ற வேண்டுமாய் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சேலம், அரூர், நாச்சியம்பட்டி, திருப்பத்தூர் போன்ற ஊர்களில் ஆயிரக்கணக்கான சந்தன மரக்கட்டைகள் கோடிக் கணக்கில் மதிப்புள்ளவையாக இருக்கின்றன. அவைகள்மீது வழக்குகள் நிலுவையில்

உள்ள காரணத்தினால், அவைகள் அப்படியே இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகையினால் வழக்குகளை விரைவாக முடித்து, அந்த சந்தன மரங்களை விற்று நமக்கு இலாபம் வரக்கூடிய வகையிலே செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கடத்தல்காரர்களிடமிருந்து பிடிக்கப்படுகின்ற கார், மோட்டார் பைக், லாரி போன்றவைகள் எல்லாம் பல வருடங்களாக அப்படியே கிடக்கின்றன. அதனால் அவை துருப்பு பிடித்து எந்தவித இலாபமும் இல்லாமல், அவற்றை ஏலம் விடுகின்றபோது மிகவும் குறைவான தொகையே அரசுக்குக் கிடைக்கின்றது. ஆகையால் அந்த வழக்குகளை உடனடியாக முடித்து விரைவாக ஏலம் விடுவதற்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தர்மபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிபட்டி வனச் சரகம் தற்போது சேலம் வனக் கோட்டத்தில் அமைந்து இருக்கிறது. சேலம் வனக் கோட்டத்தில் அமைந்து இருக்கும் பாப்பிரெட்டிபட்டி வனச் சரகத்தை தர்மபுரி வனக் கோட்டத்தில் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

மொரப்பூர் வன அலுவலகம் தற்போது அரூரில் அமைந்து உள்ளது. அதைத் தலைமையிடமாகக் கொண்டு மொரப்பூரில் செயல்பட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். தர்மபுரி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், பாப்பிரெட்டிபட்டிக்கான வனச் சரக அலுவலகம் சேலம் வனக் கோட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதை பாப்பிரெட்டிபட்டிக்கு மாற்றவேண்டும். மேலும் எங்கள் தொகுதியான பாலக்கோட்டில் இருக்கின்ற திம்லாமேடு, சொக்கன்கொட்டாய், சிங்காடு போன்ற பகுதிகளிலும் வனத் துறைக்குச் சொந்தமான ஏராளமான நிலங்கள் இருந்தாலும்கூட, பல ஆண்டுகளாகத் தனியார்தான் அதில் கிணறுகள் வெட்டி, விவசாயம் செய்து பயிர் செய்து வருகிறார்கள். அதைப்போன்று காவேரிப்பட்டினத்தைச் சேர்ந்த மதகேரி, மார்வாடி, சின்னவரட்டம்பட்டி, பால்வகுத்த பள்ளி போன்ற பகுதிகளிலும் பல ஆண்டுகளாக விவசாயிகள் கிணறு வெட்டி விவசாயம் செய்துகொண்டு, வீடு கட்டி வசித்தும்



வருகின்றனர். இந்த நிலங்கள் வனத் துறைக்குச் சொந்தமானவை என்று ஏட்டளவில்தான் உள்ளது. பல ஆண்டுகளாகத் வேறு வசதியற்ற விவசாயிகள்தான் விவசாயம் செய்து வருகின்றனர். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை நேரில் பார்வையிட்டோ அல்லது ஒரு குழுவை நியமித்துப் பார்வையிட்டோ, அந்த வசதி வாய்ப்பற்ற விவசாயிகளின் கனவை நனவாக்கும் பொருட்டு அவர்களுக்கு அங்கே பட்டா வழங்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பால் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் அது நன்றாகச் செயல்படுவதற்கு ஆதாரமாக இருப்பது கிராமங்களில் இருக்கின்ற கிராம பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள்தான். அவைகள் நன்றாக வளர்ச்சியடைந்தால்தான் பால் வளர்ச்சித் துறையில் மேலும் வளம் காணமுடியும். அந்த வகையில் பால் உற்பத்தியாளர்களுக்குக் கடன் வழங்குகிறபோது, ஒரு பசுவுக்கு ரூ. 6,000 தான் வழங்கப்படுகிறது. இன்றைக்கு உயர்தர பசுக்கள் 10,000 அல்லது 15,000 ரூபாய் அளவில் விற்கப்படுகின்றன. வருகின்ற காலத்தில் ஒரு பசுவுக்குக் குறைந்தபட்சம் ரூ.10,000 அளவில் கடன் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மலட்டுத் தன்மையுடைய பசுக்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அதைப் போக்கி பால் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் வகையில் கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் மலட்டுத் தன்மையை நீக்க 21 நாட்கள் பசுக்களுக்கு மருத்துவம் செய்ததில், 22 ஆம் நாள் பால் கறக்கிற முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த அளவில் அந்தத் திட்டத்தை விரிவு படுத்த, பல மையங்களுக்கும் அதைப் பரவலாக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஆந்திர மாநிலத்தில் குண்டூர் அருகே தேசிய பால் அபிவிருத்தி நிறுவனத்தின் சார்பாக, எருமை மாடு இன விருத்தி மையம் இப்போது செயல்படுகிறது. அதை பாட்னாவுக்கோ பஞ்சாபுக்கோ மாற்றுவதாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது. நமது அரசாங்கம் முயற்சி செய்து அதை தர்மபுரி மாவட்டத்திற்குக் கொண்டு வர ஏற்பாடு செய்து, மத்தகிரி பண்ணையில் அதை இணைத்தால், இங்கே அந்த எருமை மாடு இன விருத்தி மையம் நன்றாகச் செயல்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே அதை மாற்றித் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரியில் உள்ள அவ்வையார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 4,000 மாணவிகள் படிக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான இடவசதி இல்லை. பள்ளிக்குப் பக்கத்தில் வனத் துறைக்குச் சொந்தமான இடமும், பயணியர் விடுதியும் உள்ளன. அந்தப் பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தை அளித்தால் அந்தப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டிக்கொள்ள வசதி ஏற்படும். அந்த வகையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். சித்தேரி மலைப் பகுதியில் சுமார் 40 கிராமங்கள் இருக்கின்றன. அங்கே சாலை வசதி கிடையாது. காரணம் அது வனத் துறைக்குச் சொந்தமான இடம். ஆகவே அங்கே அலுவலகத்தினர் தாங்களாகவே அந்தப் பாதை வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும், இல்லையென்றால் பாதை வசதி செய்துள்ள உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அனுமதி தரவேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. டி. மணி.

***திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வள மானியக் கோரிக்கையில் சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். தற்போது மாநிலம் பூராவும் மக்கள் தேவைக்கேற்ப பால் உற்பத்திக்கு இன்னும் சரியான ஏற்பாடு செய்யப்படவில்லை. ஏற்கெனவே இதற்காக நீண்டகாலத் திட்டம் ஒன்று எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னாலே போட்டும், மாநிலம் பூராவும் இருக்கின்ற மக்களுடைய தேவைக்கேற்ப பால் உற்பத்தி செய்ய முடியும் என்ற தொலை நோக்குத் திட்டம் போட்டும், பால் உற்பத்தியில் சரியான ஏற்பாடுகள் இல்லை. அதற்குத் தொலைநோக்கோடு திட்டத்தை ஏற்பாடு செய்யவேண்டும். பால் மாடுகள் வைத்து இருப்பவர்களுக்கு மானிய விலையில் மாட்டுத் தீவனங்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்து, மாதவரம் பால்பண்ணையில் வினியோக முறையில் முறைகேடுகள் உள்ளதாகத் தெரிகிறது. பால் ஏற்றிச் செல்லுகின்ற லாரிகள் ஒழுகி, பால் வீணாகின்ற நிலையில் இருந்ததை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். இதை எப்படிச் சரிகட்டுகிறார்கள் என்பது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. அந்த டேங்கர் லாரிகளை ஒழுங்கான முறையில் நாம் பராமரிக்க வேண்டும். மாதவரம் பால்பண்ணை பராமரிப்புப் பணிகூட சரியாக இல்லை என்பது என்னுடைய கருத்து. ஏற்கெனவே நாம் அங்கு



சென்று பார்த்திருக்கின்றோம். அதை இன்னும் சிறந்த முறையிலே, தோற்றத்தில் நல்ல முறையிலே இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்றால், நாங்கள் அங்கு குழுவாகச் சென்றிருக்கும்போது நம்மோடு வந்திருந்த சில உறுப்பினர்களே 'இந்தப் பாலை நாம் எப்படிச் சாப்பிடுவது?' என்ற ஒரு கேள்விக்குறியை அங்கு எழுப்பினார்கள். எனவே, அந்தப் பால்பண்ணையை நல்ல முறையில் பராமரித்து இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அதேபோன்று அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளிகளுடைய பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே நீண்டகாலம் பணியாற்றிய அந்த மாதவரம் பால் பண்ணையின் தொழிலாளர்களுடைய பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல உள்ளத்தோடு, கருணை கூர்ந்து கவனித்து அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, இன்னும் சிலபேர் வெளியில் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்கும் வேலை கொடுக்கப்பட வேண்டும். மற்ற தொழிலாளர்களுக்கு எந்த அடிப்படையிலே சம்பளம், பஞ்சப்படி ஆகியவைகளெல்லாம் வழங்கப்படுகின்றதோ, அந்த வகையில் அந்தத் தொழிலாளர்களுக்கும் வழங்கி, அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். நீண்டகாலம் சர்வீசிலே இருந்தவர்களுக்கு, அவர்களுடைய கிராஜுவட்டியாவது கிடைப்பதற்கான குறைந்த பட்ச ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆவின் டாங்கர்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது தனியார் டாங்கர்களை நாம் பயன்படுத்துகின்றோம். அதனால், மேலும் தவறுகளை உருவாக்கக் கூடிய சூழ்நிலை அங்கே உருவாகி இருக்கின்றது. அதைக் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, சோளிங்கநல்லூர் பால் பண்ணையை, தேசிய பால்வள வாரியத்தோடு சேர்க்கக் கூடாது என்பது என்னுடைய கருத்தாகும்.

அதேபோல, 10 வருடங்களாக வேலை செய்யும் சி.எல்.ஆர். தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும். குறைந்தபட்ச சம்பளம் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும். பால் கொள்முதல் மற்றும் விநியோகத்தில் 'கான்டிராக்ட்' முறையை அகற்ற வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் தேவைக்கேற்ப பால் உற்பத்தியாவதில்லை. மார்த்தாண்டத்தில் இருக்கின்ற பால் குளிரூட்டும் நிலையம செயலற்றுப் போய் இருக்கின்றது. அதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கறவை மாடுகளுக்குக் கடன் கொடுப்பதை, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகச் செயல்படுத்த வேண்டும். பணியாளர்களுக்கு விலை வாசி உயர்வுக்கேற்ப பஞ்சப்படி வழங்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலே பாலினுடைய விலை ரூ.5.17. ஏற்கெனவே அரசாங்கம் சமீபத்தில் ஒரு ரூபாய் உயர்த்தியிருந்தாலும், அந்தக் காசைக்கூட முழுமையாகக் கொடுக்கவில்லை. 88 காசுகள்தான் கொடுக்கின்றார்கள். அதை மாற்ற வேண்டும்.

அதேபோல மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற பல பகுதிகளிலே தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றபோது ஒரு மாதத்திலே 18 நாட்கள்தான் வேலைவாய்ப்பு தருகின்றார்கள். இரண்டு வருடங்கள் அல்லது மூன்று வருடங்கள் வேலை செய்தாலும் அந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்கப்படாத தன்மை இருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, வனத் துறை சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது எல்லோராலும் அங்கீகரிக்கப்படுகின்ற ஒரு முக்கியமான உண்மை. ஏனென்றால், காடுகள் பாதுகாக்கப்பட்டால் மட்டும்தான் நம்முடைய நாட்டுக்குத் தேவையான மழை கிடைக்கும் என்பதும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு உண்மை. ஆனால் இன்றைய நிலையை நாம் பார்க்கின்றபோது, வனங்கள் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்படுகின்றது என்பதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நாம் உணர்கிறோம். சமீபத்திலேகூட இங்கே விவாதிக்கப்பட்ட சந்தன மரக்கட்டைகளை எடுத்துக்கொண்டால், அவைகளெல்லாம் தேக்கி வைக்கப்படுகின்ற நிலை மாற்றப்பட வேண்டும். நம்முடைய கைகளிலே வருகின்ற மரங்களை, அது வழக்குகளிலே ஈடுபட்டு வந்தாலும் சரி அல்லது அரசாங்கத்தால் வெட்டப்பட்ட மரங்களானாலும் சரி, அவற்றை உரிய காலத்திலே விற்பனை செய்திருந்தால் இந்த இழப்புகளுக்கு ஏதுவாக அமையாது. ஆக அந்த அடிப்படையிலே, சந்தன மரங்களானாலும் சரி, வேறு தேக்கு, ஈட்டி போன்ற மரங்களானாலும் சரி, மர மண்டிகளிலே இருக்கின்ற மரங்களை நாம் இப்போது பார்ப்போமேயானால் பலகோடி ரூபாய்க்கான மரங்கள் இருக்கின்றன.



அந்த மரங்களையெல்லாம் விரைவாக விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல, காட்டு வளத்துறையிலே இன்னும் மஸ்தூர் தொழிலாளர்கள் என்று ஒரு பிரிவினரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். போதுமான சம்பளம் அவர்களுக்குக் கொடுப்பதில்லை. அவர்களை எந்த முறையிலே நிரந்தரம் ஆக்குவது, சம்பளம் உயர்த்திக் கொடுப்பது, பஞ்சப்படியைக் கொடுப்பது என்பதை எல்லாம் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வனத் துறையிலே மரம் காணாமல் போய்விட்டது என்று சொன்னால், சாராயம் காய்ச்சுவதற்கு எந்த அளவிற்கு நம்முடைய காவல் துறையிலே இருக்கிறவர்களுக்குச் சம்பந்தம் இருக்கிறதோ, அதேமாதிரி வனத் துறையிலே மரம் போய்விட்டது என்றால், வனத் துறை அதிகாரிகளுக்கோ, ஊழியர்களுக்கோ தெரியாமல் போவதில்லை. வனத் துறை ஊழியர்களின் உதவி இல்லாமல் போவதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் நீண்ட பல்வேறு விவரங்களை நான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அவர்களும் உரிய நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட இன்னும் அவைகள் பாதுகாக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், வேறு விதமான மரங்களை நடுவதற்குப் பதிலாக, அயல்நாட்டு உதவி கிடைத்தாலும் சரி அல்லது நம்முடைய நிதியைக் கொண்டே, சிறப்பாக நாம் பயிரிடுவதற்கு லாயக்கான மரம் என்று பார்க்கின்றபோது, 'மாஞ்சியம்' என்று சொல்கின்ற தேக்கு மரத்திற்கு ஈடாக ஒரு வகையான மரம் கிடைக்கின்றது. இந்த மாஞ்சியம் விரைவாக வளர்ந்து வருகிற, அதிக விலை கிடைக்கிற மரமாகும். ஆகவே, அந்த அடிப்படையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அதைப்போல வனத் துறைக்குச் சொந்தமான, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, அந்த மண்டிகளில் இருக்கிற, செக் போஸ்ட்களில் இருக்கிற மரங்களை எல்லாம் அவசரமாக விற்பனை செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வனப் பகுதிகளில் உள்ளே விழுந்து கிடக்கிற மரங்களைத் தனியாருக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒப்படைக்காமல், நம்முடைய வனத் துறை அதிகாரிகளைக் கொண்டே எடுத்து விற்பனை செய்வதன் மூலமாகத் தான் நம்முடைய நாட்டில் கோடிக்கணக்கான ரூபாய் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலே காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் தற்போது நடந்தது பற்றி சில விவரங்களைச் சொல்கிறேன். சுருளோடுவீட்டிலும், அடையாமடை பகுதியிலும், வேளிமலை பகுதியிலும் 50 சுற்றிலிருந்து 232 சுற்று வரை இருக்கக்கூடிய தேக்கு மரங்கள், பிரம்மாண்டமான தேக்கு மரங்களை, நூற்றுக்கு அதிகமான தேக்கு மரங்களை வெட்டியெடுத்து திருடிச் சென்றிருக்கிறார்கள். அதனுடைய அடிப்பகுதியைத் தோண்டிப் பார்க்கிறபோது எந்த அளவுக்கு அது பிரம்மாண்டமான மரம் என்பதைக் கண்டறிந்து இருக்கிறார்கள். யார் செய்தார்கள், எப்போது செய்தார்கள்? அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மருதம்பாறை ரேஞ்சில். அரசாங்கத்தினுடைய தேக்கு கூப்புகளில் திருட்டு நடந்தது. தற்போது நடைபெறுகிறதா என்று கேட்டால் அது குறைந்து இருக்கிறது என்பது வரவேற்கத்தக்க விஷயம். கடந்த காலத்தில், முந்தைய ஆட்சிக் காலத்தில், அந்தத் தேக்கு மரங்களுடைய திருட்டு என்பது, நாம் வைத்த மரங்களுடைய திருட்டு என்பது எந்த அளவுக்கு முற்றிப் போய் இருந்தது என்பதற்கு ஆதாரமாக, நம்முடைய ஹிந்து, எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளில் படங்களையும் விவரங்களையும் தந்திருந்தார்கள். அந்த அடிப்படையில் வனத்தைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்கிறபோது, குறிப்பாக களியல் சரகம் பகுதியில் ஒரு ஜீப் தேவைப்படுகிறது. ஏனென்று சொன்னால் அது மலைப்பாங்கான பகுதி. நடந்து போய், பஸ்ஸிலே போய், வேறுவிதமாகப் போய் வர முடியாது. நம்முடைய வனத் துறை அதிகாரிகள் போய் வர வேண்டுமென்றால் ஜீப் இல்லாமல் போக முடியாது. எனவே, ஜீப் வேண்டும். அதைப்போல அவர்களுக்கு உதவிகரமாக ஆயுதப் படை போலீஸ், எந்த அளவுக்கு இந்தத் துறை மூலம் சப்ளை செய்ய முடியுமோ செய்து, போலீஸ் கூட அவர்களுக்கு உதவியாக இருந்தால் தான், இந்த மரத் திருட்டைப் போக்க முடியும்.

இன்னொன்று, வெள்ளெருக்குகாணி. ஏற்கெனவே ஒரு வழக்கு இருந்தது. அதிலே நாம் மீண்டிருக்கிறோம். இன்னும் அதற்குள்ளே சில சிக்கல்கள் உள்ளன. ஏற்கெனவே அது சுமார் 200 ஏக்கர் நிலம். அதிலே



கோடிக்கணக்கான ஈட்டி, தேக்கு போன்ற மரங்கள் உள்ளன. இவைகளைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தத் துறைக்கு மிகப் பெரிய வருவாயை ஈட்டித் தருவது ரப்பர் தோட்டக் கழகம். இந்த ரப்பர் தோட்டம் என்பது 12 ஆயிரம் ஏக்கரில் இருக்கிறது. ஏறத்தாழ 2,300-க்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். 300-க்கும் அதிகமான ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். பல கோடி ரூபாய் இலாபத்தை வருடந்தோறும் ஈட்டித்தர வேண்டிய அந்த ரப்பர் கழகம் இன்றைக்கு நட்டத்தில் போகிற ஒரு சிக்கலான நிலைக்கு போய்ச் சேர்ந்திருக்கிறது. குறிப்பாக 1996-97-ஆம் ஆண்டில், கடந்த ஆண்டைவிட அதனுடைய இழப்பு எவ்வளவு என்றால், 250 டன்கள் ரப்பர் குறைவாக உற்பத்தியாகி இருக்கிறது. காரணம் என்னவென்று கேட்டால், சரியாக பராமரிப்புச் செய்வதற்குத் தேவையான ஆட்களைப் போடுவதில்லை. அதன் காரணமாக ஏனோ தானோ என்ற போக்கு இருக்கிறது. அங்கே இருக்கிற எம்.டி.யைப் பொறுத்தவரையில் போக்குவரத்து டி.ஏ.க்கு மட்டும் ஒரு மாதத்தில் 50 ஆயிரத்திற்கு மேலே எடுக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. அப்படியானால் எப்படி இந்த நிர்வாகத்தை இலாபகரமாக நடத்த முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல ரப்பரை காலத்தில் விற்பனை செய்ய வேண்டும். 3 மாதங்களுக்கு முன்னால் ஒரு கிலோ ரப்பர் விலை என்பது 45 ரூபாய், 50 ரூபாய். அப்போது கையிலே வைத்துக் கொண்டிருந்தார்கள். இன்று அதனுடைய விலை 35 ரூபாய்க்குக் குறைந்து விட்டது. இதற்குப் பொறுப்பாளி யார்? இதனால் எத்தனை கோடி ரூபாய் நம்முடைய அரசுக்கு நட்டம் ஏற்படுகிறது? ஆகவே அந்தந்த கால கட்டங்களில் உற்பத்தி செய்கிற ரப்பரை, அன்றைக்கு என்ன விலை இருக்கிறதோ, அந்த விலையில் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கான்ட்ராக்ட் முறையில் ஊழியர்களை வைப்பது—காட்டு வேலைத் தொழிலாளர்களை கான்ட்ராக்ட் முறையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே என்ன வேடிக்கை என்றால் அங்கே உரம் போடுகிறார்கள் என்றால் அந்த உரத்தில் பாதி கூட மண்ணிலே போய்ச் சேருவதில்லை. அதைப்போல நிரந்தரத் தொழிலாளிகளையும் கான்ட்ராக்டாக மாற்றிக் கொள்கிறார்கள் அப்படியொரு முறைகேடான செயல் அதிலே நடைபெற்று வருகிறது. அங்கே வேலை செய்கிற தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பல்வேறுவிதமான கஷ்ட

நஷ்டங்கள் அவர்களுக்கு இருந்து வருகின்றன. குறிப்பாக தொழிலாளர் நலச் சட்டம் இன்னும் அங்கே சரிவர அமல்நடத்தப்படவில்லை. காலா காலத்தில் அவர்களுக்கு வைத்திய உதவி (மணியடிக்கப்பெற்றது) எல்லா கோட்டங்களிலும் சரிவாச் சென்றடைவதில்லை. காரணம் கேட்டால், ஞாயிறுக்கிழமை எங்களுக்கு ஓய்வு வேண்டும் என்று அங்குள்ள டாக்டர் சொல்கிறார்கள்.

முற்பகல் 11-55

ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு ஆம்புலன்ஸ் வேண்டும். மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டியவர்கள் ஆம்புலன்ஸ் இல்லையென்றால் செல்ல முடியாது. ஏற்கெனவே ஒரு தொழிலாளியுடைய மகனை, பள்ளி மாணவனை பாம்பு கடித்துவிட்டது. அங்கே போய்க் கேட்டால் ஆம்புலன்ஸ் இல்லை, வைத்தியர்கள் இல்லை என்று கூறியதால், அவனைக் கொண்டு செல்வதற்கு வழியில்லை. அந்தத் தாய், தகப்பன் முன்னால் அவன் உயிர் துறந்த காட்சி அங்கே ஏற்பட்டு இருக்கிறது. எனவே நான் மிகப் பணிவோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருவது என்னவென்றால் எல்லாக் கோட்டங்களிலும் ஆம்புலன்ஸ் தருவதற்கு ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

அதேபோன்று மருத்துவமனைகளில் போதிய மருந்தில்லை என்ற புகார் ஒட்டு மொத்தமாக இருக்கிறது. தொழிலாளர்களுடைய முழுமையான ஒத்துழைப்பைக் கொண்டுதான் நம்முடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும். அந்தவகையில் மருந்து வாங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

32 வனத்துறை ஊழியர்களுக்குக் கொஞ்சக் காலமாகக் கிடைக்க வேண்டிய பாக்கியைக் கொடுக்கவில்லை. ஒரு நபருக்குக் குறைந்த பட்சம் 50 ஆயிரம் ரூபாய் வரும். இதற்கிடையில் நடந்த பேரம் என்னவென்று சொன்னால் வனத் துறையினுடைய *மேலதிகாரிகள் இதைப் பெற்றுத் தருவதற்கு கமிஷன் வேண்டும் என்று சொல்கின்ற நிலை அங்கே உருவாகியிருக்கின்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சரை நான் கேட்டுக்கொள்வது, என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதை எடுத்து முடிக்கின்ற காலத்தில் ஊழியர்களுக்கு அந்தப் பணம் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



(மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இந்தவகையில் வனத்துறை சம்பந்தமான வளத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், ரப்பர் தோட்டத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், கிராம்புத் தோட்டத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ.ஜி. சுகவனம்.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக நமது முதலமைச்சர் அவர்கள் 4-வது முறையாகத் தமிழகத்திலேயே முதலவராகப் பொறுப்பேற்று, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறுகின்ற வகையில் மாத்திரம் இல்லாமல் தமிழகத்தின் குக்கிராமங்களில் வாழும் மக்களின் செல்வங்களான கால்நடைகள் பற்றி படித்த இளைஞர்கள், வேலையில்லாத இளைஞர்கள் பயன்பெறுகின்ற வகையில் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள இரண்டாவது நிதிநிலை அறிக்கையில் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் மற்றும் வளம் நிறைந்த வனம் குறித்து இந்த சுகவனம் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தலைவர் ஆட்சியில் தமிழகத்தில் வளம் செம்மையாகவே உள்ளது என்பதை நாடு அறியும், நாட்டு மக்கள் அறிவார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்கள் கண்ட கனவு இராம ராஜ்யம். அந்த இராம ராஜ்யம் மலர கிராம ராஜ்யம் சிறக்க வேண்டும். கிராம ராஜ்யம் சிறக்க கிராமப் பொருளாதாரம் வளர வேண்டும். கிராமப் பொருளாதார அடிப்படையில், கிராமத்தில் வாழ்கிற மக்களின் சொத்துக்கள், கால்நடை, பால்வளம் மற்றும் வனத் துறையாகும். இந்தத் துறைகள் சிறந்து விளங்க பல நல்ல திட்டங்களை அறிவித்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நம் ஐயாவின் சீடர் மட்டுமல்ல அண்ணாவின் தம்பி மட்டுமல்ல ; தேசப்பிதா மகாத்மா காந்தி போன்று சிறந்த தேசப் பக்தராக விளங்குகிறார் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக நுண்ணிய பால் பண்ணைகளை அமைக்கும் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பணிபுரியும் ஊழியர்கள் 100 கிராம பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தைத் தத்து எடுத்து, அந்தச சங்கம் ஒவ்வொன்றிலுமிருந்தும் 5 உறுப்பினர்களைத் தேர்வு செய்து, தலா ஒரு

நுண்ணிய பால் பண்ணை வீதம் மாவட்டத்தில் மொத்தம் 500 பால் பண்ணைகள் அமைக்கும் திட்டத்தை வரவேற்கிறேன். அதேவேளையில், இந்தத் திட்டத்தில் பங்குபெறும் உறுப்பினர்க்ள் வங்கியிலே தங்கள் பங்காக ரூ. 20 ஆயிரம் செலுத்தியபின், வங்கி 60 ஆயிரம் ரூபாய் கடனாகக் கொடுப்பதாக அறிகிறேன். இந்தத் திட்டம் முழுக்க முழுக்க மகளிருக்காகவே ஏற்படுத்தப்பட்டதால், உறுப்பினர்கள் வங்கியில் செலுத்தக்கூடிய அந்த 20 ஆயிரம் ரூபாய் தொகையைக் குறைத்து 10 ஆயிரம் ரூபாயாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பின்தங்கிய வகுப்பு மற்றும் சிறுபான்மை பொருளாதாரக் கழகம் மூலமாகத் தருமபுரி மாவட்டத்தில் 10 சிறிய பால்பண்ணை அமைக்க இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் பங்குபெறும் பணியாளர்கள் தங்கள் பரிசாகச் செலுத்த வேண்டிய ரூ.7,500-ஐ ரூ.5,000-ஆகக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தர்மபுரி மாவட்டத்திலே உள்ள 545 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக நாள் ஒன்றுக்கு 1 லட்சத்து 6 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, கிருஷ்ணகிரி பால் பண்ணைக்குக் கொண்டு வரப்படுகிறது. 50 ஆயிரம் லிட்டர் திறன் கொண்ட பால் உற்பத்தி நிலையம் தர்மபுரியிலேயும், 10 ஆயிரம் லிட்டர் பால் திறன் கொண்ட குளிரூட்டும் நிலையம் தேன்கனிக்கோட்டையிலேயும் உள்ளது. எதிர்கால நன்மையைக் கருத்தில் கொண்டு, என்னுடைய பர்கூர் தொகுதியிலே மத்தூர் பகுதியிலே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அதேபோல் பர்கூரிலே உள்ள கால்நடை மருத்துவமனை பெருமருத்துவமனையாக உயர்த்தப்பட்டு, ஒரு உதவி இயக்குநர் பதவியிலே அமர்த்தப்பட்டுள்ளார். அந்த மருத்துவமனைக்கு வரும் ஏராளமான கால்நடைகளுக்கு அவர் ஒருவரே பெரும் சிரமத்திற்கு இடையே பணியாற்றவேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே, மற்ற பொது மருத்துவமனைகளிலே உள்ளதைப் போல, அங்கும் கூடுதலாக மருத்துவர் ஒருவரை நியமித்து, மருத்துவப் பணியினைச் செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.



(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதேபோல் என்னுடைய பர்கூர் தொகுதியிலே சாமல்பட்டியிலும் ஆந்திர பார்டராக இருக்கக்கூடிய குருநாயனபள்ளியிலேயும், இரண்டு கால்நடை மருத்துவமனைகள் அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மருத்துவமனைகளில் மருத்துவர்களாக வேலை செய்கின்ற டாக்டர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று அங்குள்ள கால்நடைகளுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும் என்று சொன்னால், அவர்கள் விரைவில் செல்வதற்குண்டான வகையில் வாகனங்கள் அளிக்கப்படாத நிலை இருக்கிறது. எனவே, உடனடியாக அந்த மருத்துவர்களுக்கு இரண்டு சக்கர வாகனங்களைக் கொடுத்து உதவி செய்திட வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை ஆய்வாளர்கள் கடந்த 26 ஆண்டுகளாகப் பதவி உயர்வு பெறாமல் இருக்கிறார்கள். தாய் உள்ளம்கொண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே அவர்களுக்கும் உதவி அளித்திட வேண்டுமாய் பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பால் பெருக்குத் துறையில் வல்லுநர்களை உருவாக்கக்கூடிய அளவிலே தென்னகத்திலே எங்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளே கிடையாது. ஹரியானா மாநிலத்தில் மாத்திரம் கர்னால் என்ற இடத்திலே தேசிய பால் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பிலே, பி.டெக்., எம்.டெக்., மற்றும் பி.எச்.டி. போன்ற படிப்புகளைச் சொல்லித் தருகின்ற கல்லூரி இருக்கிறது. அதுபோன்ற கல்லூரியை நம்முடைய தமிழ்நாட்டிலே அமைத்து, குறிப்பாக என்னுடைய பர்கூர் தொகுதியிலே அமைத்துத் தரவேண்டும் என்றும், இன்ஸ்டிடியூட் ஆப் டயரி டெக்னாலஜியை ஆரம்பித்துத் தரவேண்டும் என்றும் இந்த நேரத்திலே மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சுதந்திரம் அடைந்ததிலிருந்து இன்று வரை, தமிழ்நாட்டிற்கு என்று அதிக பால் கொடுக்கக்கூடிய புதிய பசு இனம் உருவாக்கப்படவில்லை. அண்டை மாநிலமான கேரளாவில் சுனிந்திரி என்று சொல்லக்கூடிய ஒரு பசு இனம் புதியதாக உருவாக்கப்பட்டு பால் உற்பத்தி மற்றும் இறைச்சிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, நீண்ட தொலைநோக்குத் திட்டமாக புதிய பசு இனத்தை உருவாக்க முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கருமாற்றம் செய்யக்கூடிய புதிய கண்டுபிடிப்புகளான 'எம்பிரியோ தெரபி' போன்ற

கருமாற்றம் மற்றும் வசதிகளைச் செய்யக்கூடிய வகையில்—புதிய திட்டங்களைத் தீட்டி, புதிய பசு இனத்தை உருவாக்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய கிருஷ்ணகிரியிலே இருக்கக்கூடிய பால் ஒன்றியத்தைச் சேர்ந்த டாக்டர் சுப்ரமணி என்பவர், இதுபோன்ற முயற்சிகளிலே ஈடுபட்டு, சோதனைக் குழாய் மூலமாகக் கருமாற்றம் செய்வதற்கான கருவிகளைக் கிராமப்புறங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான முயற்சியிலே ஈடுபட்டு செயல்பட்டதற்காக, மத்திய அரசாங்கம் அவருக்கு விஜயரத்னா விருதை அளித்திருக்கிறது. எனவே, இதுபோன்றவர்களைப் பயன்படுத்தி, நாம் பால் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் இன்சூரன்ஸ் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும் என்றும், அதற்கான பிரிமியத் தொகையை இணையமும் ஒன்றியமும் மற்றும் கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமும் சமவிகிதத்தில் ஈடு செய்திடவேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தமிழகத்தில் உள்ள அனைத்து பால் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் பொது இன்சூரன்ஸ் திட்டம் என்று சொல்லக்கூடிய ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பரேசன் ஆப் இந்தியா மெடி க்ளெயிம், இன்சூரன்ஸ் காப்பீட்டுத் தொகையை வழங்கவேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஜனநாயகத்தைப் பற்றி பேசிவிட்டு, ஜனநாயகத்தைப் பற்றிக் கேட்கின்றவர்கள்—நாங்கள் வெளியேறுகிறோம் என்று சொல்லிவிட்டு, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்தவர்கள், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினர் வெளியே போய் இருக்கிறார்கள். அந்தக் காலத்திலே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு முழுவதும் தலைவராக நியமிக்கப்பட்டவர்கள் எல்லாம் பல கோடி ரூபாய்களைக் கொள்ளை அடித்துக்கொண்டு சென்று விட்டார்கள். இந்த அவையிலே உறுப்பினராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய ஞானசேகரன் அவர்கள் தலைமையிலுள்ள குழு 4, 5 மாதங்களுக்கு முன்பாக கிருஷ்ணகிரிக்கு வந்து, அங்கே இருக்கக்கூடிய பால் நிலையத்திலே பல கோடி ரூபாய்கள் கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கிறது



என்று அவர்கள் இங்கே அறிக்கையாக வெளியிட்டு இருக்கிறார்கள். அதேபோல் மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப. தங்கவேலன் அவர்கள் சென்ற போது நான் அந்தக் குழுவிலே இருக்கிற காரணத்தால்—பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைக் கடந்த காலத்தில் பால் உற்பத்தியாளர் சங்கம் மூலமாகக் கொள்ளை அடித்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. எனவே, நம்முடைய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, உரிய விசாரணைக் கமிஷன் வைத்து, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே தயாரிக்கப்படும் வெண்ணெய், நெய் போன்றவைகள் எல்லாம் வெளி மாநிலத்திலே ஹோல்சேலிலே கொடுக்கிறபோது, *80* ரூபாயிலிருந்து *88* ரூபாய்க்குக் கொடுக்கப்படுகிறது.

ஆனால் அதே நம்முடைய தமிழ்நாட்டில் ரூ.*110*-க்குத்தான் விற்கப்படுகிறது. விளைகின்ற இடத்தில் ரூ.*110*. ஆனால் வெளிமாநிலத்திற்குப் போகும்போது ரூ.*88*. தயவுகூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள திருவிழாக்காலங்களிலாவது, பண்டிகைக் காலங்களிலாவது ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற வகையிலே நெய், வெண்ணெய் போன்றவைகளைக் குறைந்த விலையில் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் *12-05*

அதேபோல கடந்த ஆட்சியாளர்கள், நான் முன்பு சொன்னதைப் போல ஜனநாயகத்தைக் காப்பாற்றுபவர்கள், பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனக்கட்டைகள், மரங்களை எல்லாம் வெட்டி, இன்றைக்கு அந்தக் காடே இல்லாத அளவிற்கு மாற்றிவிட்டார்கள். அதில் எல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், எங்களுடைய அன்புத் தலைவர் அவர்கள், தன்னுடைய பிறந்த நாள் விழாவிலே மரங்களை வளர்க்க வேண்டுமென்று சொல்லி, கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக நாங்கள் மரங்களை எல்லாம் நட்டு,

வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அதையே நம்முடைய அரசாங்கம் இன்றையதினம் ஒரு ஆணையாக பிறப்பித்து, தமிழ்நாடு முழுவதும் அரசாங்கத்தினுடைய சார்பிலே இந்த மரங்களை நட்டு, சுற்றுப்புறச் சூழலையும் மற்றும் வனத்தையும் பாதுகாக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மேட்டுப் பாளையத்திலே இருக்கக் கூடிய வனக் கல்லூரியிலே படிக்கின்ற, படித்து முடித்திருக்கின்ற மாணவர்கள் கிட்டத்தட்ட 145 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை தருகின்ற வகையிலே நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த இனிய நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, 'டான்டீ' ஊழியர்களுடைய பிரச்சினைகள். இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே உத்தரவு பிறப்பித்து, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரிந்துவரும் முன்னாள் சின்கோனாத் துறையைச் சார்ந்த சுமார் 100 ஊழியர்கள் வனத் துறைக்குத் தற்போது மாற்றப்பட்டுள்ளார்கள். அதற்குப் பதிலாக 'டான்டீ' நிர்வாகத் துறையிலே உள்ள ஊழியர்களை டெபுடேஷன் முறையிலே டான்டீயில் அமர்த்தப் போவதாகத் தெரிய வருகிறது. அவ்வாறு செய்தால், டான்டீயில் 20 ஆண்டுகாலமாகப் பணிபுரிந்து வரும் டான்டீ ஊழியர்களுக்குப் பதவி உயர்வு குறைந்து பாதிக்கப்படுவார்கள். எனவே டான்டீ ஊழியர்களுக்கு முதலில் பதவி உயர்வு கொடுத்து, டான்டீ ஊழியர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தற்சமயம் மூங்கில் மரம் வெட்டுவது தமிழ்நாடு அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த மூங்கில் மரம் வெட்டுவது நிறுத்தப் பட்டிருக்கின்ற காரணத்தினாலே இந்த மூங்கில் மரங்கள் எல்லாம் ஒன்றோடோன்று உராய்ந்து, இன்றைக்கு அந்தக் காடுகளில் தீ விபத்து ஏற்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது. இதை மனதில் கொண்டு, தயவு கூர்ந்து நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் நம்முடைய முதலமைச்சரிடத்திலே கலந்து பேசி, இந்த மூங்கில் மரங்களை வெட்டுவதற்குண்டான பணியைப் பொறுத்து. நாட்டைக் காப்பாற்றவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பைக் கொடுத்த, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் நன்றிகூறி, விடைபெற்றுக் கொள்கிறேன், நன்றி வணக்கம்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் வை. இராமசாமி):** திரு. ச. இராஜரெட்டி.

**THIRU S. RAJAREDDY :** Mr. Chairman, on behalf of the Community Party of India, I would like to express my views on Dairy Development and Forest Department. Development of Dairy is done through a network of Milk Co-operative Societies. Milk is procured from producers and the rate is fixed for individual producers on the basis of the quality of the milk supplied by them. Due to increase in cost of production, procurement price of milk should be increased. Cattle feed is becoming costlier and it should also be supplied through Co-operative Societies. Increasing number of milk producers should be enrolled in milk societies. Milch animals should be given to economically weaker sections at subsidised rates. There is increasing demand for Veterinary Health Centres from the Hon'ble Members of the House. To meet this demand, more mobile veterinary units should be made to run. There are cattle farms in Orathanadu, Eahankottai, Pudukkottai, Korukkai, Udhagamandalam, Thirunelveli, Hosur and Chettinadu. More funds should be allotted to these farms so that they can develop. High milk yielding varieties should be identified and supplied to the producers at concessional rates. In Eahankottai, the Farm Director has recommended the regularisation of 923 workers who have been working for the last 20 years. Inspite of the recommendations made by the Director, the Government has not accepted the demand. I request that these 923 workers should be made permanent.

In the Madurai District Co-operative Milk Producers Union, in 1987,70 employees were recruited through employment exchanges and they have been working temporarily and they have not been made permanent for the last 16 years. According to the Labour Act, 1981, if an employee has worked 480 days in two years, then he should be made permanent.

*பிற்பகல் 12-10*

It is accepted by all with concern that forest cover has been declining to 17 per cent of land areas. To maintain co-balance, atleast one-third of land area should be covered by forests.

Otherwise, there would be imbalance and waterresources would be degraded.

It is gladdening to note that the Government has accepted in principle the involvement of people living in hill areas and the tribals in developing forests. Without the involvement of these people forests cannot be developed. The forest-staff should be people friendly and the suspicion of forest staff should be gradually dispelled.

Collusion of forest staff with the timber smugglers is one of the reasons for the destruction of forests. Government should be more vigilant and take timely punitive action against the culprits. In districts like Thanjavur, timber like teak and silver oak have been kept unsold for the last 25 years. These timber logs should be sold or disposed of immediately, as this gives scope for malpractices.

Government should fix remunerative prices for tea so that tea-growers can be benefited.

In the Nilgiris, land owners who are growing silver oak and teak have to get the permission of the District Collector to cut them. This should be abolished. In the Nilgiris district, there is a Committee under the Chairmanship of the District Collector. This Committee has to give permission to build even a hut. This Committee should be abolished because it is causing harassment to the people.

The previous Government have planted seedlings; but they are not looked after properly. This has resulted in huge loss of money.

5,000 employees in the Social Forestry Scheme have been working for the last 20 years in the department. A few thousand employees have been deputed to the Rural Development Wing. These 5,000 employees were not regularised so far. They should be made permanent.

According to the Fifth Pay Commission Report, it has recommended that Rs. 1,200 should to be basic pay for Forest Guards and Rs. 975 for Forest Watchers with retrospective effect from



1-6-1988. Government should implement this recommendation of the Fifth Pay Commission. Similarly, Forest Guards should be promoted every 10 years.

In my Constituency, Forest Check-Posts have been collecting collection fees for the last seven years. But collection of fees was stopped only in two areas last year. Collection of fees is taking place in Betlamangalam forest Check-Post and Javalagiri forest Check-Post. Bacause this is a forest area and the development has become very slow, collection of fees in the above places should be stopped immediately.

Huge amounts are spent to arrest sandalwood smuggler Veerappan. If he is ready to surrender, general amnesty should be given to sandalwood smuggler Veerappan. Thank you.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் வை. இராமசாமி):** திரு. அ. சுடலைமுத்து.

**திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதிகாலைப் பொழுதிலே ரோஜாப் பூக்களாகப் பூத்து இருக்கும் அமைச்சர் பெருமக்களே, நீலநிற வானில் நட்சத்திரங்களைப் போல ஜொலிக்கின்ற என்னுடனே இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களே, தமிழகத்தில் 4 வது முறையாக உதித்துள்ள, 74 வயதுள்ள 60 வருட பொது வாழ்வில் மதிக்கத்தக்க அந்த இளஞ்சூரியன் மிகச் சிறந்த முறையில் தந்த 9-வது நிதிநிலை அறிக்கை தமிழகத்தில் வாழ்கின்ற ஏழையெளிய அனைத்து மத மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், சீர்மரபினர் மற்றும் அரசு அதிகாரிகள். என அனைவராலும் பாராட்டப்படும் வகையில் அமைந்துள்ளது. எனவே இத்தகைய நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி நானும் எனது போடி தொகுதி மக்கள் சார்பாக வணங்குகின்றேன். வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் வனத் துறை அதிகாரிகளுக்கும் நான் என் பகுதியில் இருக்கின்ற ஒரு முக்கியமான கோரிக்கையை வைக்கின்றேன். இதைப் பணிவோடு அவர்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

போடிநாயக்கனூர் தொகுதியில், முன்னொரு காலத்தில் பயங்கர வன விலங்குகள் இருந்த பகுதியில், நாட்டுக்கு முக்கியமான, தேவையான இலவம் பஞ்சு உற்பத்தி செய்து, இலவம் பஞ்சினை நாட்டிற்கு

அர்ப்பணிக்கின்றோம். ஆனால் போடி தொகுதி கேரள மாநில எல்லையில் உள்ளதால் அடிக்கடி மழை பெய்வதால் இயற்கை காரணமாக அடிக்கடி மரங்கள் பாதிக்கப்படுகின்றன. கடந்த 1978-ஆம் ஆண்டு ஒரு ஏக்கருக்கு விதிக்கப்பட்ட குத்தகைத் தொகை 25 ரூபாய்தான். ஆனால் 1997-ஆம் ஆண்டு ஒரு ஆண்டுக்கு ஏக்கருக்கு விதிக்கபபட்ட குத்தகைத் தொகை ரூ. 650. வித்தியாசம் 625 ரூபாய். ஆனால் இந்த குத்தகைத் தொகை வருமானத்திற்கும் செலவிற்கும் கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லாமல் மிகவும் மோசமாக இலவம் பஞ்சு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அத்துடன் கடந்த 1978-ஆம் ஆண்டிலிருந்து இலவம் காய்கள் விலை வித்தியாசமும் ஒன்றும் பெரிதாக இல்லை. ஆனால் காய் அறுப்பதற்கும், எடுப்பதற்கும், மலைப் பகுதியிலிருந்து கீழே கொண்டுவருவதற்கும் ரோடுகள் மிகவும் மோசமாக இருப்பதாலும் இந்திய நிலவரப்படி ஒரு ஹெக்டேருக்குக் கிடைக்கும் இலவம் காய்க்கு மொத்தச் செலவு 5,520 ரூபாய். இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே வனத் துறை குத்தகைத் தொகையினை முழுவதுமாக ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன்னால் இருந்த அரசு, சட்டமன்ற உறுப்பினர்கள், விவசாயிகள் பல முறை எடுத்துக்கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே இந்த அரசாவது குத்தகைத் தொகையை 1978-ஆம் ஆண்டு உள்ளது போல் குறைக்குமாறு போடித் தொகுதி இலவம் பஞ்சு விவசாய மக்கள் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் இந்த இலவம் பஞ்சினால் மத்திய அரசின் இரயில்வே துறைக்கு வருமானம் அதிகமாக உள்ளது. இதற்காகத்தான் மத்திய அரசு மதுரையிலிருந்து போடிக்கு சுமைதாங்கி புகைவண்டி விட்டது என்ற வரலாறு கூட போடிக்கு உண்டு. எனவே போடித் தொகுதி மக்கள், ஏழை எளிய விவசாயிகள், இதை நம்பியே வாழ்க்கை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் போடித் தொகுதியில் உள்ள மாமரம், தென்னை மரம், வாழை போன்ற வருமானம் உள்ள மர வகைகள் மழை இல்லாத காரணத்தால் பாதிக்கப்பட்டு தற்போது போடி தொகுதியில் வறட்சியாக இருக்கிறது. போடிநாயக்கனூர் மக்களைப் பொறுத்தமட்டில் விவசாயத்தை நம்பித்தான் பிழைப்பு நடத்துகிறார்கள். இங்கே தொழிற்சாலைகளோ ஆலைக் கூடங்களோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலை நீடித்தால் போடிநாயக்கனூர் தொகுதி மக்கள் பசி, பஞ்சத்தால், பிழைப்பு



தேடி வெளியூர் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும். எனவே அரசு போர்க்கால நடவடிக்கை எடுத்து, எனது தொகுதியைப் பார்வையிட்டு வறட்சிப் பகுதியாக அறிவித்து அத்துடன் மேலே குறிப்பிட்ட தொகையை பெரிதாக எண்ணாமல் ரத்து செய்யுமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

என் தொகுதியைப் பொறுத்தவரையில் என் தொகுதி கேரள மாநிலத்தோடு ஒட்டியுள்ளதால் மழைத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கான எந்தவிதமான அணையும் இல்லை. இதைப்பற்றி பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர், உயர்திரு மறைந்த கம்பம் நடராசன் அவர்கள் எம்.பி.யாக இருந்தபோது ஏற்கெனவே பாராளுமன்றத்தில் உரையாற்றியிருக்கிறார்கள். அதற்கு இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. இப்போதுள்ள நல்ல அரசு, நீர்த் தேக்கத்திற்கு பொதுப் பணித் துறையின் மூலம் ஏற்பாடு செய்தால் என் தொகுதியிலுள்ள மக்களும், விவசாயிகளும் மனமகிழ்ச்சியோடு இருப்பார்கள்.

மேலும் நம்முடைய முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் நம் தமிழ்நாட்டுக்கு அறிவித்த போடி 18-ஆம் கால்வாய் திட்டத்தை இதற்கு முன்பு இருந்த அரசுகள் அதற்கான திட்டங்களைக்கூட இதுவரை யோசித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் உணவு உற்பத்தி என்பது உறுதியாகவும், அதிகமாகவும் இருக்கும் என்பதை என்னுடைய இனிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

18-ஆம் கால்வாய் திட்டம் அன்றைய நிலவரப்படி 1991-ஆம் ஆண்டு அரசாணை எண் 1238/91/டி2/92-ன் படி இந்தத் திட்டத்தின் மதிப்பீட்டு தொகை 13 கோடியே 69 இலட்சம் ரூபாய் என்று இதற்கு முன்பு இருந்த அரசுக்குச் சமர்ப்பித்து அதற்கு இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே எனது தொகுதி மக்களுக்காக இந்தத் திட்டத்தினை மாண்புமிகு அன்பிற்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதற்குரிய பணியைத் துவக்கிட ஆணையிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 18-ஆம் கால்வாய் திட்டத்தின் தூரம் 39 கிலோ மீட்டர். மேலக்கூடலூர்-உப்புக் கோட்டை மற்றும் தொப்புசேரி வரை உள்ள தூரம் 39 கிலோ மீட்டர். இதனால் பயன்பெறும் குளங்கள் 40, இதனால் பயன்பெறும் கிராமங்கள் 30, இதனால் பயன்பெறும் தொகுதிகள்,

போடித் தொகுதி, கம்பம் தொகுதி, தேனி தொகுதி. இதனால் 4 ஆயிரம் முதல் 6 ஆயிரம் ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறும். எனவே, இதன்மூலம் வருடத்திற்கு 4 ஆயிரம் முதல் 6 ஆயிரம் டன் உணவு உற்பத்தி பெருக வாய்ப்பு இருக்கிறது (மணியடிக்கப்பெற்றது)

15 ஆண்டுகளுக்கு முன்பு 30 அடியிலிருந்து 40 அடி வரை கிணற்றுத் தண்ணீர் கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால் தற்போது தண்ணீர் 150 அடிக்குக் கீழேதான் கிடைக்கிறது. 18-ஆம் கால்வாய் திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் குளங்களில் நீர் இருப்பதன் மூலம் கிணற்றில் நீர் எளிதாகக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. இதனால் விவசாயத்திற்கும் கிராம மக்களுக்கும் குடிநீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. நாங்கள் கேட்பது மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து வரும் அளவுக்கு அதிகமான நீரை தேக்கி வைப்பதுதான 18-ஆம் கால்வாய் திட்டம் என்பது அதுதான். அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். இந்த நல்ல திட்டத்திற்காக போடி தொகுதி மக்கள 20 ஆண்டு காலமாக போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே. டாக்டர் கலைஞர் அவர்கள் தங்களுடைய பொற்கரங்களால் இந்தத் திட்டத்தினைத் துவக்கி வைத்துத் தருமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன. நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் வை. இராமசாமி) :** அடுத்து திரு. எல். சந்தானம்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

***திரு. எல். சந்தானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளம் என்பது விவசாயத்திலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற, மக்களுக்கு ஒரு துணை வருவாயைக் கொடுக்கின்ற ஒரு திட்டமாக, சிறப்பு மிகுந்த திட்டமாக அரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் மூலம் இன்றைக்குப் பால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற தொகை மிகக் குறைவாக இருந்தாலும்கூட அதை வாங்கி உபயோகிப்பவர்களுடைய நலனைக் கருதி, விலையைக் கூட்டவும் கூடாது என்கின்ற ஒரு நிலையும் இருக்கிறது. எனவே, அந்தப் பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறுகின்ற அளவிற்கு அவர்களுக்கு மாட்டுத் தீவனம் வழங்குகின்ற நிலையிலே அரசு அதை இனாமாக வழங்கி, பால் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12-25*

இன்றைக்குத் தூய்மைப்படுத்தப்பட்ட தண்ணீர் என்று சொல்லி, பிஸ்லேரி வாட்டர் என்று அதைப் பாட்டில்களிலே அடைத்து ஏறக்குறைய ஒரு லிட்டர் தண்ணீரை 10 ரூபாய்க்கு விற்கின்ற நிலை இருக்கிறது. ஆனால். பாலினுடைய விலை ரூ. 7.50 ஆகத்தான் இருக்கிறது என்று சொன்னால். அந்தத் தண்ணீரை விற்கின்ற தனியார்களுக்கு இருக்கின்ற உரிமத்தையெல்லாம் ரத்து செய்து, அதையெல்லாம் நமது பால் வளத்-துறையின் மூலமாக அந்தத் தண்ணீர் விநியோகத்தைச் செய்வதன் மூலமாக எத்தனையோ படித்தவர்களுக்கு வேலையும் கிடைக்கும்: அதன் மூலமாக அரசுக்கு ஒரு வருவாய் ஈட்டுகின்ற நிலையும் ஏற்படும். அப்படி அந்த வருவாயின் மூலமாக இந்தப் பால் உற்பத்தியாளர்களுக்கெல்லாம் ஓரளவிற்கு நன்மை செய்கின்ற நிலை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மதுரை பால் பண்ணையை பொறுத்த அளவிலே, இன்றைக்கு மாதவரம் பால் பண்ணைக்கு அடுத்தபடியாக உருவாக்கப்பட்ட பண்ணை, 1967-லேயே மதுரை பால் பண்ணை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற கணக்குகள் பிரகாரம் மதுரை மாவட்டம் மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் பால் உற்பத்தியிலே பின்தங்கிய நிலையிலே இருக்கிறது. வடாற்காடு, வள்ளலார் போன்ற மாவட்டங்களிலெல்லாம் மிக அதிகமாகப் பால் உற்பத்தி இருப்பதாகவும், மதுரையிலே குறைவாக இருப்பதாகவும் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம், இந்த அரசு மானியம் மூலமாக விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்று வழங்கப்படுகின்ற கடன்கள் எல்லாம் கடந்த காலங்களிலே முறையாக உரியவர்களுக்கு வழங்கப்படவில்லை. அவைகளையெல்லாம் போலியாக, மாடு என்று ஒன்றைக் கொண்டு வந்து காட்டிவிட்டு, மறுநாளே, அது இல்லாமல் போகின்ற நிலை. அடுத்தவருடைய மாட்டைக் கொண்டு வந்து அந்த உரிய அதிகாரிகள் வரும்போது அதைக் காட்டி, இதுதான் வாங்கப்பட்ட மாடு என்று சொல்லிவிட்டு அது மறுநாளே மற்றவர்கள் கைக்குப் போகின்ற நிலையிருந்த காரணத்தினால்தான் அரசாங்கம் நிறைய திட்டங்களைத் தீட்டிக் கடன்களை வழங்கினாலும்கூட அது சீராக, செம்மையாகச் செயல்படவில்லை.

கடந்த நிதிநிலை அறிக்கையிலே கூட, மதுரை பால் திட்டம் பல கோடி ரூபாய் நஷ்டத்தில் இருக்கிறது என்பதைக் கணக்குக் காட்டினார்கள். ஆனால் இந்தத் தடவை அந்த நஷ்டங்களெல்லாம் ஈடு செய்யப்பட்டிருக்கிறதா என்கின்ற கணக்குக் குறிப்பிடப்படவில்லை. எனவே, அப்படிப்பட்ட பால் பண்ணைகளையெல்லாம் சிறப்போடு நடத்துவதற்கு அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கால்நடையைப் பொறுத்த அளவிலே, விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற நிலையிலே உறுதுணையாக இருக்கின்ற கால்நடைகளுக்கு இன்றைக்கு நமது அரசு பல மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்திருந்தாலும்கூட இன்னும் கிராமப்புறங்களிலே கால்நடை மருத்துவமனைகள் அதிகப்படியாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் உண்மை. இன்றைக்கு நமது அமைச்சர்கூட கால்நடைத் துறையிலே பல மருத்துவர்களை இந்த ஆண்டு புதிதாக நியமித்திருக்கிறோம் என்று சொன்னாலும்கூட, இன்னும் இருக்கின்ற கால்நடை மருத்துவமனைகளிலே உரிய மருத்துவர்கள் அமர்த்தப்படவில்லை என்கின்ற நிலையும் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலேகூட வாவிடமருதூர் என்கின்ற ஒரு செயற்கைக் கருவூட்டு நிலையத்திலே 2,3 ஆண்டுகளாகவே மருத்துவர் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு, மாவட்டப் பரவலாக்கும் திட்டத்திலே கட்டிடங்கள்கூட இந்த ஆண்டு கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அமைச்சரவர்கள் அதற்கு உரிய மருத்துவர்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று சொல்லி நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற அளவிலே செம்மறியாடுகள் மற்றும் ஆடுகள் மானியக் கடன்களிலே வழங்கப்பட்டது என்று சொன்னால் அதெல்லாம் கடந்த காலங்களிலே பினாமியாக அன்றைக்கு இருந்த கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டு, அவைகளெல்லாம் உரிய நிலையிலே இல்லை. எந்த வங்கியைப் பார்த்தாலும், கடன் கொடுத்தவர்களில் அந்தக் கடனாளிகள் இருக்கிறார்களா என்று கண்டு கொள்ள முடியாத அளவிற்குக்கூட நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. அதையும் இந்த அரசு கவனத்திற்கொண்டு, அந்தப் பினாமியாகக் கடன்களைப் பெற்று அரசை ஏமாற்றியவர்கள்மீது உரிய நடவடிக்கைகள் எடுத்து, அந்தக் கடன்களை வசூலிக்காததால்தான் இன்றைக்கு நாம் கடன் என்று செல்லுகின்ற நேரத்திலே அன்றைக்குப் பழையவர்கள் செய்த அந்தத் தவறுகளுக்காக நமக்குரிய கடன்களை வழங்க அரசு



வங்கிகள் மறுக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நாம் நலத் திட்டங்கள் மூலமாகக் கொடுக்கின்ற கடன்களை வங்கிகளிலே பெறப் போகின்ற காலங்களில், கடந்த காலங்களில் கொடுக்கப்பட்ட கடன்கள் எல்லாம் அப்படியே நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு மீண்டும் கடன்கள் வழங்க முடியாது என்று மறுக்கப்படுகின்ற நிலையிலே, நாம் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையிருக்கின்ற காரணத்தினால் அவைகளையெல்லாம் உரிய நடவடிக்கை எடுத்து, அவைகளை மீண்டும் வங்கிகளுக்குப் பெற்றுத் தருகின்ற நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும்.

பிற்பகல் 12-30

வனத் துறையைப் பொறுத்தளவிலே இன்றைக்கு நமது வனத் துறை சந்தன மர ஏலத்தின் மூலமாக பல கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டி வந்திருக்கிறது. இருந்தாலும்கூட நேற்றுகூட, பத்திரிகையிலே செய்திகளைப் பார்க்கின்றபோது, ஏறக்குறைய, ஒரு கண்டசா கார் மூலமாக 200 கிலோ அளவிற்கு சந்தனக் கட்டைகள் கடத்தப்படுவதாகவும், இன்னொரு மாருதி காரின் மூலமாக 210 கிலோ அளவிற்கு சந்தனக் கட்டைகள் கடத்தப்படுவதாகவும், செய்திகள் வந்திருக்கின்றன. நமது அரசு இதிலே விழிப்பாக இருக்க வேண்டும். இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் கோடிட்டு காட்டினார்கள் (மணியடிக்கப்பெற்றது) வனத் துறை அதிகாரிகள் இன்னும் சரியான நிலைக்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எல். சந்தானம்:** கடந்த காலங்களிலே நடந்தது போலத்தான் வனத் துறை அதிகாரிகள் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் இப்படிப்பட்ட சந்தன மரங்கள் இன்றைக்கும் கடத்தப்படுகின்ற நிலை. எனவே, அதை அரசு கவனத்தில் கொண்டு அவைகளையெல்லாம் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எங்களது தொகுதியிலே சிறுமலைப்பகுதி என்று ஒன்று இருக்கிறது. அந்தப் பகுதி கொடைக்கானலைக் காட்டிலும் சிறப்பான சீதோஷ்ண நிலையைக் கொண்ட பகுதி. அங்கு ஏறத்தாழ, கடந்த ஆட்சிக் காலத்திலே 500 ஏக்கர் நிலம், ஹார்ட்டி கல்சர் பண்ணை என்று, தோட்டக் கலைத் தொழில் பண்ணை என்று எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், அது முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்று சொன்னால், இல்லை. ஏறக்குறைய 25 ஏக்கர் நிலத்தை அவர்கள் ஒழுங்குபடுத்தியிருக்கிறார்கள். ஏறத்தாழ 500 ஏக்கர் மிக நல்ல இடம், சமமான இடம். அரசுப் பண்ணை அமைப்பதற்கு சிறப்பான, சீரான இடம். அந்த இடத்திலே அரசுப் பண்ணை முழுமையாக ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்குரிய சாலைகளைப் போட்டுத்தர வேண்டும். இந்த வனத் துறையைப் பொறுத்தமட்டிலே சில இடங்களிலே நமது பகுதியிலே இருக்கின்ற சாதாரண நிலத்தைக் கூட வனத் துறைப் பகுதி என்று ஆக்கி வைத்திருக்கின்ற காரணத்தினால், அந்த இடங்களிலே, இருக்கின்ற மக்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக வீடுகளை அமைத்திருக்கின்றார்கள். என்னுடைய தொகுதியிலேகூட ஒரு இடத்திலே நமது பி.டபிள்யு.டி கால்வாய், திருமங்கலம் பிரதானக் கால்வாய் செல்கிறது. அதற்குக் கீழே ஹைவேஸ் ரோடு செல்கிறது. இரண்டு அரசால் செயல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு இடையே ஒரு இடம் இருக்கிறது. அந்த இடத்திலே ஏறக்குறைய 500 வீடுகளுக்கு மேலாக குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 20 ஆண்டுகளாக குடியிருந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நம்ம ஊர்க்காரர். எனவே நான் சொல்லி நீங்களே கேட்கவில்லையென்றால், யார் கேட்பார்கள்? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எல். சந்தானம் :** இப்படி ஓர் இடத்தில் மட்டுமல்ல, தமிழகத்தினுடைய பல பகுதிகளில், வனத் துறை நிலம் என்பதற்காக வீடு வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு பட்டாக்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன. அதை மத்திய அரசுக்குக் கூட எழுதி, நமது அரசு தனியான உரிமையைப் பெற்று, அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்குவதன் மூலம், அவர்களுக்கு அரசு மானியத்திலே வழங்கப்படுகின்ற கடன், இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தின் மூலமாக பெறுகின்ற கடன்கள் எல்லாம் போய்ச் சேரும் என்கிற காரணத்தினால், அதை அவர்களுக்குச் செய்துதர வேண்டுமென்று சொல்லி, மேலும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேலும் எல்லாம் கிடையாது. அடுத்து, திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்தை வளப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், கால்நடைத் துறையைச் 



சீரமைக்க வேண்டும் என்பதற்காகவும் முனைப்போடு செயல்பட்டு வரும், எங்களது மரியாதைக்குரிய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கும் வனம் மற்றும் கால்நடைத் துறை மானியக் கோரிக்கைமீது சில கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நமது அரசு பொறுப்பேற்ற பிறகு ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஏறத்தாழ 424 கோடி ரூபாய் அளவில் இங்கே மிகப் பெரிய அளவில் வனத்தை வளப்படுத்துவதற்காக ஒரு நிதி ஒதுக்கி வழங்கியமைக்காக நமது முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும், வனத் துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த 424 கோடி ரூபாயில், இப்படிச் செலவழிக்கப்படக்கூடிய அந்த மிகப்பெரிய திட்டத்தில் என்னுடைய உள்ளாட்சி வன உயிரினப் பகுதிக்கு, என்னுடைய வால்பாறை தொகுதியில் அதிக அளவில் மரக் கன்றுகளை நடுவதற்கும், வனத்தை வளப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

அதேபோல, இன்றைக்கு இங்கே பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள், ஏற்காடு, ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை போன்ற பகுதிகளிலேயுள்ள சில்வர் ஓக், யூகலிப்டஸ் போன்ற மரங்களை வெட்டாத காரணத்தினால் தேயிலைத் தொழிலில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். எஸ்டேட்களிலே வசிக்கக்கூடிய மக்களுக்கு, மற்றும் அங்கே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய வீடுகளில் அடுப்புகளில் எரிப்பதற்கு விறகுகளை எஸ்டேட் நிர்வாகம்தான் வழங்கி வந்தது. ஆனால், நம்முடைய அரசு பொறுப்பு ஏற்று, அந்த மரங்களை வெட்டுவதில் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற காரணத்தினால், இன்றைக்கு மாவட்ட வனக் குழுவினரால் எந்தவிதமான மரங்களையும் வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அந்தக் காரணத்தினால், தேயிலைத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான விறகுகளுக்காக சில்வர் ஓக், யூகலிப்டஸ் போன்ற மரங்கள் வெட்டப்படாத காரணத்தால், அதிக அளவில் எஸ்டேட் நிர்வாகத்தினர் வெளியில் வாங்குகிறார்கள். அதைப்போல அங்கு இருக்கக்கூடிய மக்கள் வீட்டு அடுப்புகளுக்கு வேண்டிய விறகுகளுக்காக வனப் பகுதிகளுக்குச் சென்றால், அவர்களைப் பிடித்து 100 ரூபாய், 200 ரூபாய் என்று அபராதம்

விதிக்கிறார்கள். ஆகவே, வீடுகளில், அடுப்புகளில் எரிப்பதற்காக, விறகிற்காக மக்கள் மிகுந்த சிரமப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதையெல்லாம் கவனத்திலே கொண்டு, நீங்கள் சில்வர் ஓக் மரங்களையும் ஈக்ராண்டிஸ் போன்ற மரங்களையும் உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பின்படி வெட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, இன்றைக்கு நம்முடைய ஆட்சி ஏற்பட்ட பிறகு, சந்தனக் கடத்தல் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பெருமுயற்சியால் பெரும் அளவு கட்டுப்படுத்தப்பட்டுவிட்டபோதிலும், 1992-ஆம் ஆண்டு முந்தைய அரசாங்கம் கொண்டு வந்த, காம்பவுண்ட் செய்யக்கூடிய முறையின் காரணத்தினால், குற்றச்சாட்டை ஒத்துக்கொள்ளக்கூடியவர்கள், ஒருபுறத்தில் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் என்று அவர்கள் நிரூபணம் ஆகின்றபோது, ஓராண்டிற்குக் குறையாமல் சிறைத் தண்டனை வழங்க வேண்டும் என்றும், இன்னொரு புறத்தில் அந்த வழக்குகளை, அரசு அதிகாரிகளே, அதாவது வனத் துறை அதிகாரிகளே காம்பவுண்ட் செய்யலாம் என்றும் இருக்கிற காரணத்தாலே, அதிலே பெரும் அளவில் தவறுகள் ஏற்பட்டு, Habitual offender உருவாகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, அந்த அரசாணையை இரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு ஏராளமான வழக்குகள், ஆயிரக்கணக்கான வழக்குகள் நீதிமன்றங்களிலே நிலுவையிலே இருக்கின்றன. அந்த வழக்குகளில், நடைமுறையில் சாட்சிகளை அழைத்து வந்து, நீதிமன்றத்தில் குற்றவாளிகள் என்று அவர்களை ஆஜர்படுத்த வேண்டிய காரணத்தினால், ஆயிரக்கணக்கான வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற நிலைமையை மாற்றுவதற்கு நீங்கள், அதிலேயுள்ள சிறு வழக்குகளை அரசே திரும்பப் பெற்றுக்கொண்டு, மிகப்பெரிய வழக்குகளை, அதிக அளவிலே உள்ள, வாகனங்களில் கடத்தப்படுகின்ற வழக்குகள் போன்றவற்றை மாத்திரம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்: மற்ற வழக்குகளைத் திரும்பப் பெறவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்குக் காவல் துறையினரைக்காட்டிலும், மிகக் கடுமையான இடங்களில், அடர்ந்த மலைப் பகுதிகளில் பணியாற்றக்கூடிய வனத்



துறை ஊழியர்களுக்கு, காவல் துறையினரைப் போல் சலுகை விலையில் ரேஷன் பொருட்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அடிப்படைச் சம்பளத்தைப் பொறுத்தவரையிலே வனத் துறையிலே பணியாற்றக்கூடிய வனஊழியர்களுக்கும், வாட்சர்களுக்கும் சம்பளத்திலே வித்தியாசம் இருக்கிறது. அவர்களுக்கு அலுவலக உதவியாளர்களுக்கு வழங்கக்கூடிய அந்த அடிப்படைச் சம்பளம்தான் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் வனத் துறை ஊழியர்களுக்கு உள்ள இந்த அடிப்படை ஊதியத்தை காவலர்களுக்கு வழங்கப்படுவதைப்போல அன்போடு, வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

1990-ஆம் ஆண்டு வால்பாறையிலே உள்ள சின்கோனா பிரிவைத் தேயிலைத் தோட்ட வளர்ச்சிக் கழகம் எடுத்துக்கொண்டு, அங்கு ஏறத்தாழ ஆயிரம் நிரந்தரத் தொழிலாளர்கள் பணியாற்றுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு உத்தரவிட்ட காரணத்தால், இன்றைக்கு அந்தப் பகுதியிலே அதிக அளவில் தேயிலை உற்பத்தியாகின்றது. கடந்த மாதம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அங்கே வருகை தந்து, மிகப்பெரிய தேயிலைத் தொழிற்சாலையைத் திறந்துவைத்தார்கள். அதற்காக வால்பாறைத் தொகுதி மக்களின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மீதம் இருக்கக்கூடிய 2500 ஹெக்டேர் நிலத்திலும் தேயிலைப் பயிர் செய்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும், இன்னும் அதிக அளவிலே அங்கே இருக்கக்கூடிய தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலைத் தோட்ட வளர்ச்சிக் கழகத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுடைய வீடுகள் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. அதற்காக அதிக நிதியொதுக்கீடு செய்து, தோட்டத் தொழிலாளர்களுக்குச் சட்டப்படி வழங்க வேண்டிய சலுகைகளை, அரசு ஒரு முன்மாதிரியாக இருந்து, மற்ற நிறுவனங்களுக்கு வழிகாட்டுவது போல், அந்தச் சலுகைகள் அனைத்தையும் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் தேயிலைத் தோட்ட வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வால்பாறையிலே ஒரு கல்லூரியும், அதேபோல ஊட்டியிலே ஒரு பாலிடெக்னிக்கும் கொண்டுவரப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். வால்பாறைப் பகுதி ஆதிதிராவிட மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய பகுதியாகும். அந்த மலைப்பகுதியில் கல்லூரி இல்லை. ஆகவே, தேயிலைத் தோட்ட வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வால்பாறையில் கலைக் கல்லூரியைத் தொடங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தனியார் இடங்களிலே சந்தன மரம், ஈட்டி மரம், தேக்கு மரம் போன்ற மரங்களை வளர்ப்பதற்குக்கூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். எந்த அளவிற்கு நாம் மரங்களை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோமோ அதே போல் அந்த மரங்களை வெட்டுவதற்கும், நாம் அதற்கான விதிமுறைகளை நல்ல முறையிலே வகுத்துக் கொடுத்து, அவர்களுக்கு எளிய முறையிலே அனுமதியைப் பெற்றுத் தந்தால், தனியார்கள் எஸ்டேட் பகுதிகளிலே மரங்களை வளர்ப்பதற்கு முன்வருவார்கள். ஆகவே, அது பற்றி மாவட்ட வனக் குழுவிற்கு நல்லமுறையிலே உத்தரவிட்டு, அதற்கான வழிமுறைகளைக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அதைப்போல, கால்நடைப் பராமரிப்புத் துறையில் கடந்த பத்து வருட காலமாக மருந்துகளின் விலை மிக அதிகமாக உயர்ந்துவிட்ட போதிலும், பத்து வருடங்களுக்கு முன்பு என்ன தொகை கொடுக்கப்பட்டதோ அந்த தொகைதான் இப்பொழுதும் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்த நிலைகளை மாற்றி அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வி.பி. சிங்காரவேலு :** அதுபோல, மேட்டுப்பாளையத்தில் இருக்கக்கூடிய வனக் கல்லூரியில் படித்த மாணவர்களை நேரடியாக நியமனம் செய்யாத நிலையிருக்கிறது. 145 பேர் அப்படி இருப்பதாகச் சொல்கிறார்கள். மற்ற மாநிலங்களான கேரளா, ஜம்மு காஷ்மீர் போன்ற



இடங்களில் இருப்பதைப்போல, வனக் கல்லூரியில் வனவியல் படித்தவர்களுக்கு நேரடியாக நியமனங்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கால்நடை ஆய்வாளர்களாக நீண்டகாலமாகப் பணிபுரிபவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மருத்துவர்களுக்குச் சமமான சம்பளத்தை கால்நடை மருத்துவர்களுக்கும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**MR. SPEAKER :** Thiru B. Venkatasamy. You must finish your speech in 7 minutes. Please don't make me ring the bell.

**THIRU B. VENKATASAMY :** Hon. Speaker Sir, I thank you for giving me this opportunity to speak on the demands for grants relating to Animal Husbandry, Forest Department and Dairy Development, in support of my cut motions already given.

Sir, animal wealth is the most important wealth for the agriculturists. About 70 per cent of the people are living in the villages. Besides agricultural purposes, animals are used for transport of goods in the villages and animals are much useful to the people in the rural areas. So, you must take a lot of interest to see that the rural economy is improved by developing the Animal Husbandry Department. For example milch animals, poultry, etc., are the subsidiary things, which can augment the income of the rural population. So, the Government must see that the exotic breed of animals like Jersey and Friesian is introduced in every house. Tamil Nadu is ideally suitable for producing more milk, especially in areas where the climate is good, in places like Hosur, Dharmapuri and Ooty. In these places we can produce the best animals, which give more milk. You must see that everyone must has a cow and it must give at least 15 litres of milk which will be useful and at the same time he can have more income.

Sir, fodder cost is more than the cost of the milk. So, both the purchaser and the producer are suffering. How are we going to satisfy both of them? We can improve the quality of milk by producing more milk with less concentrates. Then only we can satisfy both the consumer and

the producer. I request the Hon. Minister to see that the exotic breeding of animals is introduced so that the economy will improve and at the same time we can also improve the quality of milk and increase the income of the rural people.

Sir, Sheep Farm is also important for mutton purposes and it is being used for producing wool. In drought prone areas like Dharmapuri, Salem and Ramanathapuram, lot of waste lands are there and we can rear sheep in these areas. I came to know that you have introduced good varieties of sheep which will be given to the people.

Sir, you have introduced a number of fodder plants. For example there is subabull. It is one of the most important nutritious fodders. By using subabull we get more milk. Rabbit development programme is there. Dog breeding stations are there. Horse Breeding also should be introduced in places where it is possible. In Hosur there are horses. I request the Hon. Minister to take interest in this regard. Sir, race-horses can also be produced so that we can have lot of income

*பிற்பகல் 12-45*

I came to know that Key Village Centres are not supplied with sufficient medicines. I request you to see that medicines are supplied properly to these Centres. In Hosur Taluk, I came to know that Doctors have not been posted to some of the posts and I request that these posts should be filled up immediately. In Hosur, a Live Stock farm was started 150 years ago by the Britishers exclusively for horses. But, now you are introducing new varieties of live stock there. I also request the Hon. Minister to see that adequate infrastructural facilities are created there so as to start a Veterinary College. At present a number of Veterinary College students are coming to Hosur for their training.

Regarding Dairy, I want to stress that after the green revolution, white revolution is more important. As I have already told, you must see that new exotic breeds of animals are introduced. Even buffaloes could be introduced. At present, the price of cow milk is Rs.6.46 per litre and buffaloe milk is Rs.8.50 to Rs.10.00. When comparing with the cost of



maintaining these animals, these rates are not sufficient. So, we must see that these rates of milk are also increased. If it is not possible, atleast you must see that both things, i.e. income and expenditure are equal.

Integrated Development Project with financial assistance from the Government of India has been sanctioned at Rs.336.6 lakhs with 100% grant. With this aid, 455 Milk Producers Societies have been started and it is very useful. It has been done properly.

Regarding forest, it is a main source which maintains environmental stability and ecological balance, not only in India, but also in the entire world. Now, 17.55% area is under forest. I am very happy to note that Hon. Minister has planned to bring one third of the total area under forests by planting more number of trees. It is a welcome feature sir. The Government have also increased the price of wood like wattle wood etc. By this, the Government would get a lot of revenue.

I am happy to note that we are able to get Rs.499.20 crores for implementing the Tamil Nadu Afforestation Project from the Overseas Economic Co-operation Fund of Japan. It is really an appreciable measure. You must see that this money is utilised properly. You must also see that afforestation is made in many places wherever possible.

Regarding cutting of woods-some of my friends have already referred to the cutting of trees at Ooty. (The gong was sounded)

**Mr. SPEAKER :** You are only reading your speech. Why do you want to take so long? Please finish early.

**THIRU B. VENKATASAMY :** Regarding the sandal wood storage, there is some negligence and it should be rectified. Another point is, you are seizing the vehicles which transport sandal wood illegally and these vehicles are simply kept idle for so many years. As such, I request you to see that these vehicles are disposed off atleast within three months. It seems that at present Rangers could not get their promotion even after 20 years. You must see that the promotions are given to Rangers within ten years. Regarding public pardon asked by Mr. Veerappan, I want to stress my ideas. Valmiki who was....

**Mr. SPEAKER:** That is enough.

**THIRU B. VENKATASAMY :** One minute please.

**Mr. SPEAKER :** No, No. you are exceeding your time. I have already told you specifically. Please sit down.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன், இறுதியாகப் பேசவிருப்பவர். 5 நிமிடங்களிலே தன்னுடைய பேச்சை முடித்துக்கொள்வதாக ஒரு உறுதி கொடுத்து, இன்னொரு த.மா.கா. உறுப்பினருக்கு 4 நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். திரு. ஞானசேகரன் அவர்களை நம்பலாமா என்று பொதுப் பணித் துறை அமைச்சரைக் கேட்டேன். நம்புவது உசிதம் இல்லை என்று சொன்னார்கள். (சிரிப்பு) இருந்தாலும் கண்டிப்பாக 5 நிமிடங்களிலே திரு. ஞானசேகரன் பேசி முடிக்க வேண்டும். ஆகவே இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. சின்னய்யா அவர்களை 4 நிமிடங்கள் பேச அழைக்கிறேன்.

*பிற்பகல் 12-50*

**திரு. வெ. சின்னய்யா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த எனது தொகுதி மக்களுக்கும், மாண்புமிகு தலைவர் திரு. மூப்பனார் அவர்களுக்கும், மத்திய நிதியமைச்சர், அண்ணன் திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய சக உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, ஓரிரு கருத்துக்களை மட்டும் நான் சொல்லி அமர்கிறேன்.

குறிப்பாக, கால்நடைத் துறையிலே, விவசாயிகள் பராமரிக்கின்ற ஆடுமாடுகளுக்கு இன்சூரன்ஸ் வழங்கப்படுவதில்லை. ஆகவே, குறைந்த கட்டணத்தில் இன்சூரன்ஸ் செய்து, கால்நடைகளின் இறப்பினால் ஏற்படும் இழப்பினைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே பெரும்பாலான கால்நடை மருத்துவமனைகள், மருத்துவர்கள் இல்லாமல் மூடிக் கிடக்கின்றன. எனவே, மருத்துவர்களை நியமித்து, மருத்துவமனைகளைத் திறக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, வானொலி மற்றும் தொலைக்காட்சியில் விவசாயச் செய்திகளுக்கு நேரம் ஒதுக்கப்படுவதுபோன்று, கால்நடைப் பராமரிப்புச் செய்திகளுக்கும் நேரம் ஒதுக்கி, அதற்குத் தேவையான நிதியினையும் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று, எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கி வருகின்ற கால்நடைப் பண்ணை, ஒரு காலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. கடந்த ஐந்தாண்டு காலமாக நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக தொழிலாளர்களிடையே பிரச்சினைகள் ஏற்பட்டு, இன்றைக்கு மிகக் குறைவான நிலையிலே செயல்பட்டு வருகின்றது. அதனைச் சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, இன்றைக்கு, பி.வி.எஸ்ஸி. படித்த மருத்துவர்களுக்கும், எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவர்களுக்கும் அதிக வேறுபாடு இல்லை என்ற காரணத்தினால், பி.வி.எஸ்ஸி. படித்த மருத்துவர்களுக்கும் அடிப்படை ஊதியத்தை ரூ.2000-லிருந்து ரூ.2200-ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு வாகன வசதியும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை மருத்துவர்களுக்கும் தொலைபேசித் தொடர்பு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நன்னிலம் தாலுக்கா, சன்னாநல்லூர் கிராமத்தில் நடமாடும் கால்நடை மருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகின்றது. அங்கே மருத்துவர் மட்டுமே பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். அங்கே துணை அதிகாரிகள் கிடையாது. ஆகவே, அங்கே துணை அதிகாரிகளை நியமிப்பதோடு தமிழ்நாட்டிலுள்ள இதர நிலையங்களிலும் இதுபோன்று இருக்கின்ற நிலைமைகளை மாற்றி அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில், பல இடங்களில், குறிப்பாக, கீழாநிலைக் கோட்டை, தல்லூர், தாரையூர் ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லாமல், அந்த மருத்துவமனைகள் மூடிக்கிடக்கின்றன. அந்த மருத்துவமனைகளிலே மருத்துவர்களை நியமித்து, அம்மருத்துவமனைகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், என்னுடைய தொகுதியின் சார்பாக ஓரிரு கோரிக்கைகளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தினை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள பொன்னமராவதி, அரிமளம், திருமயம் ஆகிய ஒன்றியங்களில் ஏற்பட்டிருக்கின்ற கடுமையான வறட்சியினைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள கடன், நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள கடன் ஆகியவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, திருமயம், அரிமளம், பொன்னமராவதி ஆகிய ஒன்றியங்களில் மின்சார விநியோகம் சரிவர இல்லாத காரணத்தினால், அங்கே துணை மின் நிலையங்களை அமைத்து, விவசாயிகளுக்குப்

பயன்படுகின்ற வகையில், மின்சாரம் சீரான முறையிலே வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திலே, சமஸ்தானப் போராட்ட வீரர்களுக்கு, எந்தவிதமான பென்ஷனும் வழங்கப்படவில்லை. எனவே, மொழிப்போர்த் தியாகிகளுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளைப் போல இவர்களுக்கும் பென்ஷன், பஸ் பாஸ் போன்ற வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருமயத்தில் கட்டப்பட்டு வந்த பேருந்து நிலையம், பாதியில் கட்டப்படாமல் நின்று விட்டது. எனவே, தொடர்ந்து பணிகள் நடைபெற, விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. காமராஜர் அவர்களுக்குக் குமரியிலே மணி மண்டபம் அமைப்பதைப் போல, திரு. சத்தியமூர்த்தி அவர்களுக்கும் திருமயத்திலே மணி மண்டபம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திருமயம் தொகுதியிலே குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், புதுக்கோட்டைக்கு வருகின்ற காவிரித் தண்ணீரைத் திருமயம் தொகுதி முழுவதற்கும் விநியோகம் செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, திருமயத்திலிருந்து சென்னைக்கு நேரடியாக, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றினை விட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற வீரன் அழகுமுத்துக்கோன் போக்குவரத்துக் கழகத்தின் கிளை அலுவலகம் ஒன்றினைத் திறந்து, திருமயம் பகுதியிலே உள்ள மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே பேருந்து வசதியினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிமளம், பொன்னமராவதி, திருமயம் ஆகிய பகுதிகளில் உள்ள காவலர் குடியிருப்புகள் இடிந்த நிலையில் காணப்படுகின்றன. எனவே, உடனடியாக புதிய குடியிருப்புகளைக் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரப் பஞ்சாயத்தாக இருந்த திருமயம், கிராமப் பஞ்சாயத்தாக மாற்றப்பட்டுள்ளது. அதனை மாற்றி, திருமயத்தை மீண்டும் நகரப்



பஞ்சாயத்தாக அறிவித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை—திருமயம் சாலையில், வெள்ளாற்றின் குறுக்கே, சிவபுரம் அருகில் பாலம் ஒன்று கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசியதில், மின்வளம் பற்றி விட்டுப் போயிருக்கிறது. ஏனென்றால், எல்லா இராகத்திலேயும் பாடினால் அது இராகமாலிகா என்று சொல்வார்கள். அதேபோன்று இவர் எல்லா இலாக்காக்களைப் பற்றியும் சேர்த்துப் பேசுகின்றார். எனவே, இது ஒரு இராகமாலிகா பேச்சு. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதனால், உங்களுக்கு எவ்வளவோ ஆதாயம் இருக்கின்றது. திரு. ஞானசேகரன் அவர்கள் பேச இருக்கின்ற நேரம் குறைகிறதே; அதனால் பொறுத்துக் கொள்ளுங்கள். பரவாயில்லை.

**திரு. வெ. சின்னய்யா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் முன்னாள் வீட்டு வசதித் துறை அமைச்சர் ரகுபதி அவர்கள் கட்டியுள்ள ஜெயலலிதா கல்லூரியை உடனடியாக அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற பிரேமானந்தா சாமியார், அவருடைய பினாமிகளிடம் பணம் கொடுத்து வைத்துள்ளார். அரசு அவர்கள்மீது உரிய விசாரணையை நடத்தி, அவர்களிடமுள்ள சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் விளவங்கோடு மணி அவர்கள் பேசுகிற நேரத்தில், "32 வனத் துறை ஊழியர்களுக்குக் கொஞ்ச காலமாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை ஒரு நபருக்குக் குறைந்தபட்சம் 50 ஆயிரம் ரூபாய் வரும்; இதற்கிடையில் நடந்த பேரம் என்னவென்று சொன்னால், வனத் துறையினுடைய * இதைப் பெற்றுத் தருவதற்கு * கமிஷன் வேண்டும் என்று சொல்கிற நிலை, அங்கே உருவாகியிருக்கிறது" என்று பேசியிருக்கிறார்கள். அதிலே, அவர் சொன்ன அந்தக் குற்றச்சாட்டை, வனத் துறையிலே இருக்கக்கூடிய மேலதிகாரிகள் என்று மாற்ற வேண்டும்; * என்று குறிப்பிட்ட * சொல்லக் கூடாது.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றன.

அப்படி * அவர்கள்மீது. ஆதாரமுள்ள குற்றச்சாட்டு இருந்தால். வனத் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுக்க வேண்டும். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே. பேரவைக் குறிப்பிலே பின்வரும் மாற்றத்தை நான் செய்கின்றேன்:

"வனத் துறையினுடைய மேலதிகாரிகள். இதைப் பெற்றுத் தருவதற்கு கமிஷன் வேண்டும் என்று சொல்கின்ற நிலை. அங்கே உருவாகியிருக்கின்றது."

இந்த மாற்றத்தைப் பத்திரிகை நிருபர்கள் கவனிக்க வேண்டும்.

அடுத்து. திரு. ஜி.கே. மணி. உங்கள் கட்சிக்கு இன்று பேசுவதற்கு வாய்ப்பு கிடையாது. இருந்தாலும். 5 நிமிடம் கொடுத்திருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்று காட்டுவளம், கால்நடை வளர்ப்பு. பால்வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களை மட்டும் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று காடு என்பது. இந்த நாட்டிற்கு வளத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது. வனம் இன்றி வராது நீர்: அதேமாதிரி நீர் இன்றி அமையாது உலகு என்று சொல்வார்கள். காட்டை வளர்ப்பது அரசாங்கத்தினுடைய கடமையாக இருப்பதோடு. பொதுமக்கள் ஒவ்வொருவருடைய கடமையும் என்ற அடிப்படையிலே, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்கள்கூட, எங்களைப் போன்றவர்கள் எல்லாம். ஒவ்வொருவரும் அவரைச் சந்திக்கிற நேரத்திலே, 5 மரக் கன்றுகளைக் கொண்டு வர வேண்டும்; அதை நட வேண்டும் என்று சொல்லி. எங்களுக்கெல்லாம் அறிவுரை செய்து. இப்போது காடுகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இந்தியாவினுடைய சுதந்திரத்திற்குப் பிறகு, இந்திய அரசானது. ஒவ்வொரு துறையிலும் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து. நடைமுறைகளையெல்லாம் மாற்றியமைத்திருக்கிறது. ஆனால்,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



வனத் துறை சட்டம் என்பது. வெள்ளையர் காலத்திலே இருந்து. அதாவது 1882-ஆம் ஆண்டுச் சட்டம். இதுவரையிலேயும் இருந்து கொண்டிருப்பது. நடைமுறைச் சிக்கலாக இருந்து வருகிறது. ஆகவே. நாட்டினுடைய நிர்வாகத்தை நெறிமுறைப்படுத்த. இப்போது ஒரு ஓய்வுபெற்ற நீதிபதியையோ. அல்லது ஒரு ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியையோ நியமித்து ஒருநபர் கமிஷன் மூலமாக இந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல். இந்தத் துறைக்குப் பல்வேறு துறைகளிலே இருப்பதைப்போல ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை பொறுப்பிலே நியமிப்பது சாலச்சிறந்ததாகும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வனத் துறை சிறந்த துறையாக இருக்கிற காரணத்தினால், இதிலே பணி நியமனம் செய்கிற நேரத்திலே. வனத் துறையைப் பொறுத்த வரையிலே. வனம் பற்றிய பொருள் படித்த. பி.எஸ்.சி. ஃபாரஸ்டரி படித்தவர்களை நியமிப்பது பொருத்தமாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

காடுகளை வளர்ப்பதற்காக நம்முடைய அரசாங்கம் எவ்வளவோ நிலைகளை மேற்கொண்டிருக்கக்கூடிய அதேநேரத்தில், காடுகள் ஒருபக்கம் அழிந்து கொண்டிருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று. இப்போது காடுகளை அழிப்பதைத் தடை செய்திருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, காடுகளை வளர்க்கக்கூடிய அதேநேரத்தில். சந்தன மரங்களையெல்லாம். அவை அழிந்து கொண்டிருந்தாலும்கூட, இன்றைய காலகட்டத்திலே, விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையிலேயும். சந்தன மரங்களை வளர்த்து. நாட்டுக்குச் செல்வத்தைச் சேர்க்கின்ற வகையிலேயும். பட்டா நிலங்களிலெல்லாம். சந்தன மரங்களை வளர்ப்பதற்கும், அவ்வாறு வளர்ந்த மரங்களை விவசாயிகளே வெட்டி அரசுக்கு விற்பனை செய்து. வரக்கூடிய வருமானம் முழுவதையும் விவசாயிகளே பெறுவதற்கும், அந்த நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடந்த 23 ஆண்டுகளாக வனத் துறையிலே, ரேஞ்சர்கள், பாரஸ்டர்கள் போன்றவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு வழங்கப்படாமல் இருக்கிறது. 'கார்டு' போன்ற பணியாளர்களுக்கு, இதுவரையில், 16 ஆண்டு காலமாக, பதவி உயர்வு வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 1-00*

அதேபோல இதற்கு முன்பாக கிராமங்களிலே இருக்கக்கூடிய கால்நடைகளை எல்லாம் காடுகளிலே பட்டி—அதாவது மந்தைகள் அமைத்து வளர்ப்பதற்கு ஆவன செய்யப்பட்டிருந்தது. அதனால் காடுகள் எல்லாம் அழிக்கப்பட்டுவிடும் என்று சொல்லி இப்போது அதை எல்லாம் தடை செய்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காடுகள் அழியாமல் செய்வதோடு மீண்டும் காடுகளின் ஓரப் பகுதிகளிலே பட்டி என்று சொல்லக்கூடிய ஆடு, மாடுகள் இருக்கக்கூடிய அளவுக்கு மந்தைகள் அமைத்து கால்நடை வளர்ப்புக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில், இந்தியாவானது உலக அளவில் உள்ள நாடுகளிலே கால்நடை உற்பத்தியில் உள்ள முதலிடத்தைப் பெறுகிறது. பால் உற்பத்தியில்கூட இரண்டாவது இடத்திலிருந்து நம்முடைய நாடு இப்போது முதலிடத்தைப் பெற்றிருப்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையிலே கால்நடைத் துறை என்பது விவசாயிகளுடைய ஒரு உப தொழிலாகவும், அவர்களுடைய குடும்பத்தினுடைய வருமானத்தைப் பெருக்கக்கூடிய ஒரு நல்ல துறையாகவும் இருக்கிற காரணத்தினாலே கால்நடைத்துறைக்கு மேலும் நல்ல ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும்.

என்னுடைய தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கால்நடை வளர்ப்புக்கு ஏற்றச் சூழ்நிலை அங்கிருக்கிற காரணத்தினால் என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே கால்நடை ஆராய்ச்சி மையம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று சொல்லி இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்து பெண்களுக்காக, பெண்களுடைய முன்னேற்றத்திற்காக பல திட்டங்கள் இருக்கின்றன. மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்டோர்களுக்கெல்லாம், அவர்களை ஊக்குவிக்கிற வகையிலேயும், அவர்களுடைய குடும்பத்தின் வருமானத்தைப் பெருக்குகிற வகையிலேயும் கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. அதைப்போல பெண்களுக்கும் மானியத்துடன் கூடிய கன்றுகள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடை மருந்தகங்கள். *(மணியடிக்கப்பெற்றது)* கடந்த ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும்கூட கால்நடை மருத்துவர்கள் 100 பேர் நியமனம் செய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது ஆனால் இதுவரையிலே நியமனம் செய்யப்படவில்லை. ஆகவே கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏறக்குறைய 60 கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்படாமல் இருக்கின்றன. ஆண்டுதோறும் அவைகளுக்கு நிதியொதுக்கப்பட்டும்கூட அவைகள் செயல்படாமல் இருக்கின்றன. இந்த ஆண்டிலே அவற்றை இயக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தருமபுரி மாவட்டதநில் இருக்கக்கூடிய ஓசூர் பகுதியிலே கால்நடைப் பண்ணையிலே இதுவரையிலே இல்லாத அளவுக்கு அந்தக் கால்நடை ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அங்கே அவர்களுக்கு 11 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு ஊதியம் இல்லாத பயிற்சி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஊதியத்தோடு கூடிய பயிற்சி அளிக்க முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு *(மணியடிக்கப்பெற்றது)* பால் வளத்தைப் பொறுத்தவரையில்.... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் இரண்டு முறை மணி அடித்து பின்னர் மூன்றாவது முறையும் மணி அடிக்கிறேன் என்றால் உட்கார வேண்டும் என்று அர்த்தம். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வழங்கு செயல் திட்டங்கள், கால்நடை வளர்ப்பு, காட்டு வளத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகிற நல்ல வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இங்கே பால் வழங்கு செயல் திட்டங்களைப் பொறுத்த அளவில் இந்தத் துறை மிக இலாபகரமாக நடந்து கொண்டிருக்கக்கூடிய துறை. சோளிங்கநல்லூரில் இருக்கக்கூடிய அந்தப் பால் பண்ணையை தேசிய பால் வள வாரியத்திற்குத் தாரை வார்ப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு அதற்கான செயல்திட்டங்கள் கொண்டு வரப்பட்டிருப்பதாக அறிகிறோம். நான் மெத்தப் பணிவோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இலாபகரமாக நடக்கக்கூடிய, இப்போதுதான் நிர்மாணிக்கப்பட்ட இந்த பால் வழங்கு திட்டத்தைக் கொண்டுபோய் ஏன் நீங்கள் தேசிய பால் வள வாரியத்திடம் ஒப்படைக்கிறீர்கள்? தயவு செய்து நீங்கள் அதை ஒப்படைக்க வேண்டாம். நமது ஆவினே அதை நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற மானியக் கோரிக்கையிலேயே 400 டாக்டர்களை நியமித்து அங்கே எல்லாம் மருந்தகங்கள் நிச்சயமாகத் திறக்கப்படும் என்று சொன்னார்கள். இன்றுவரை அது செயல்பாட்டுக்கு வரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த 400 டாக்டர்களை நியமித்து மருந்தகங்களைத் திறக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காட்டு வளம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மிகவும தாராள மனம் படைத்தவர். மணியடிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு நான் காட்டு வளத்திற்கு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுதியாக மணி அடிப்பேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடு மிகவும் பெரிய காடு. மானியக் கோரிக்கையிலே நமது அமைச்சர் அவர்கள் 33 சதவீதம் நிலப்பரப்பிலே காட்டை நாங்கள் உருவாக்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது 13 சதவிகிதம்தான் காடாக இருக்கிறது என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊட்டி, கொடைக்கானல், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கஞ்சா வளர்ப்பதற்கு உறுதுணையாக இருந்த 3 டி.எப்.ஓ.-க்களை சஸ்பெண்ட் செய்து ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். தைரியமாகச் செய்திருக்கிறார்கள். அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.



அதேநேரத்தில் எங்களுடைய மாவட்டத்தில இருக்கக்கூடிய சந்தனக் கிடங்கு எரிவதற்கு முழுக் காரணம் யார் என்பதில் அவர்கள் தன்னுடைய கண்ணோட்டத்தை அழுப்படுத்தி....

பிற்பகல் 1-05

**Mr. SPEAKER :** The matter is sub-judice.

**THIRU C. GNANASEKARAN :** I am not at all going into the judgment or anyother thing. But, what all information I heard, just I am going to submit here.

**Mr. SPEAKER :** What you wanted has been accepted by the Government.

**THIRU C. GNANASEKARAN :** Yes, yes. But, at the same time, judicial enquiry cannot....

**Mr. SPEAKER :** It is a Judicial Commission.

**THIRU C. GNANASEKARAN:** We want C.B.I. enquiry.

**Mr. SPEAKER:** It is a Judicial Commission headed by a High Court Judge. You asked only for that. You cannot go on changing your demand Please carry on.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டதற்காக நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் நீதிமன்ற விசாரணையில் வராத விஷயங்கள் எல்லாம் சி.பி.ஐ. என்கொயரியில்தான் வரும். காரணம், ரேஞ்சர், வாச்சர், கார்டுகளை எல்லாம் சஸ்பெண்ட் செய்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பிரச்சினையைத் தப்பாகச் சொல்லுகிறீர்கள். நான் வழக்கறிஞர் என்ற முறையில் பேசுகிறேன். சபாநாயகர் என்ற முறையில் பேசவில்லை. நீதி விசாரணை என்று சொல்லி, எல்லா நாளேடுகளிலும் இந்த நாட்டில் இருப்பவர்கள் யார் வேண்டுமானாலும் வந்து சாட்சி சொல்லலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் சி.பி.ஐ. கண்டுபிடிக்காததைக்கூட இதிலே கண்டுபிடிக்கலாம். நீங்கள் சொல்லுவது தவறு.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கருத்துக்கு நான் மதிப்பு அளிக்கிறேன். நானும் வழக்கறிஞர் என்ற முறையிலே ஒன்று சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கோர்ட்டுக்கே போனமாதிரி தெரியவில்லையே! (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** 16 ஆண்டுகளாகத் தொடர்ந்து நான் கோர்ட்டுகளுக்குச் சென்று கொண்டிருக்கிறேன். இப்போதுகூட கொலை வழக்கு போன்ற வழக்குகளை நடத்திக் கொண்டிருக்கிறேன். கோர்ட்டுக்குப் போகிற பழக்கம் எனக்கு இருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவரும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு ஞானசேகரன் அவர்களும் கோர்ட்டிலே வாதிட்டிருக்கலாம். இது சட்டமன்றம். சட்டமன்ற விதிகளுக்கு உட்பட்டு நீங்கள் விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன் :** நாங்கள் சொல்லுகிற கருத்து, நீதிமன்ற விசாரணையில் அதைப்பற்றி தெரிந்தவர்கள் வந்து சாட்சி சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன் :** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? இதுவெல்லாம் உறுப்பினர் ஞானசேகரன் நேரத்தில்தான் குறைந்து போகும்.

* **திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் ஒரு வழக்கறிஞர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் வருவது குறித்த சட்டமுன்வடிவு வந்தபோது, வேண்டாம் என்று தடுத்தவர் இவர். அதனால் அவர் வழக்கறிஞரா என்ற சந்தேகம் தங்களுக்கு வந்தது நியாயம்தான் என்று நான் கருதுகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** சட்டத்திற்கு என உலகத்திலேயே பல்கலைக்கழகம் இல்லை. அதனால் வேண்டாம் என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எந்த ஒலிபெருக்கியில் பேசுகிறீர்கள்? முதலில் அதைச் சொல்லுங்கள். (சிரிப்பு)



**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒலிபெருக்கி மூலமாகத்தான் பேசுகிறேன். நான் பணிவோடு இங்கே தெரிவித்துக்கொள்வது, சி.பி.ஐ. என்கொயரியில் அவர்கள் யாரையாவது அரஸ்ட் செய்வதற்கான அதிகாரம் இருக்கிறது. நீதிமன்ற விசாரணையில், நீதிபதியை வைத்து விசாரணை செய்கிறபோது கருத்துக்களைச் சொல்ல விரும்புபவர்கள் அவர்களுடைய கருத்துக்களைத் தாராளமாகச் சொல்லலாம். ஆனால் சில விஷயங்களில் மர்மங்கள் நிறைய இருக்கின்றன. ஏற்கெனவே அரசியல்வாதிகள் சிலபேர் நிறைய கடத்தல் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் குறுக்கிட விரும்பவில்லை. நீங்கள் இந்தப் பிரச்சினையில் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினீர்கள். அதிகாரிகள் எல்லாம் தப்பு செய்திருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். யாரோ ஒரு சிறுவன் பெயரில் பழியைப் போடுகிறார்கள் என்று சொன்னீர்கள். நீங்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதைப் பார்த்துதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதி விசாரணை வைத்திருக்கிறார்கள். இல்லையென்றால் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படி அவர் வைத்ததற்கு நன்றி தெரிவிக்காமல், நீதி விசாரணை போதாது, சி.பி.ஐ. வேண்டும் என்று இப்போது ஆரம்பித்தால் என்ன செய்வது ?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் முதலிலே அதிகாரிகள் என்று ஆரம்பித்தார். தாங்கள் குறிப்பிட்டதுபோல் படிப்படியாக வந்து இப்போது இறுதியாக அரசியல்வாதிகள் எல்லாம் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறார். பொதுவாக இதிலே எந்த அரசியல்வாதி, எந்தக் கட்சி என்ற பிரச்சினை வரும். எனவே மாண்புமிகு உறுப்பினரிடம் தகவல் இருந்தால் அதை முழுமையாக இந்த அவைக்குத் தெரிவிப்பது நல்லது. பொதுவாக அரசியல்வாதிகள் என்று சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உங்களுக்குக் கொடுக்கிற நான்கு நிமிடங்களையும் இதிலேயே முடித்துவிடப் போகிறீர்கள். நான் உங்களை வேறு விஷயத்தில் பேச விடமாட்டேன். நான் கடைசியாக ஒன்று சொல்லுகிறேன். நீங்கள் உண்மையிலேயே இதிலே உண்மை வர வேண்டுமென்று கருதினால் உயர்நீதிமன்ற நீதிபதி விசாரணையில், சட்டமன்றம் நடந்தாலும், நடக்காவிட்டாலும், ஒவ்வொரு நாளும்

சென்று உங்களுக்குத் தெரிந்த தகவல்களைச் சொல்லுங்கள். யார் பெயரிலே வேண்டுமானாலும் குற்றச்சாட்டு சொல்லுங்கள். இப்போது அடுத்த பிரச்சினையில் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அடுத்த பிரச்சினை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். காடுகளை வளர்ப்பதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற முயற்சி பாராட்டுக்குரியதாகும். சந்தன மரங்களை விற்றதில் 46 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. இருந்தாலும் சந்தனக் கடத்தல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ராஜரெட்டி அவர்கள் கூட வீரப்பனுக்குப் பொது மன்னிப்புக் கொடுக்கலாம் என்ற கருத்தை இந்த மாமன்றத்திலே தெரிவித்தார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில்தான் வீரப்பனை பிடிக்க முடியவில்லை. நாம் ஏதோ வீரப்பனை பிடிக்க முடியாத காரணத்தால்தான் பொது மன்னிப்புக்குப் போகிறோம் என்று நாட்டு மக்கள் நினைக்கக் கூடும். எனவே, இந்த அரசு உடனடியாக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வீரப்பனை உடனடியாகக் கைது செய்ய வேண்டும். காவல் துறைக்கும் வனத் துறைக்கும் சவாலாக இருந்து கொண்டிருக்கின்ற வீரப்பனை இந்த அரசு என்று கைது செய்யப்போகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வனத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற சில ரேஞ்சர்களுக்கு, அவர்கள் 15 ஆண்டுகள் பணியாற்றினாலும் புரமோஷன் கிடைப்பதில்லை. எனவே அவர்கள் 5 ஆண்டுகள் பணியாற்றிய உடனே அவர்களை ஏ.சி.எப்-ஆக புரமோஷன் செய்து, ஏ.சி.எப். ஆக இருப்பவர்களை எல்லாம் டி.சி.எப்—ஆக உயர்த்தி அவர்களுக்கு ஐ.எப்.எஸ். பட்டத்தை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

*பிற்பகல் 1-10*

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஏரிகளில், குளங்களில் எல்லாம் மரம் வைத்து இவ்வளவு காலம் வளர்த்து வந்தார்கள். அதிலே பல்லாயிரக்கணக்கான வன ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். இப்போது கூட ரூ.25 கோடியை கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு, அதிலே வரக்கூடிய வருவாயையெல்லாம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது ஏரிகளிலே



கருவேல மரங்களை நடக்கூடாது. ஜப்பானிலிருந்து பொதுப் பணித் துறைக்கு 200 கோடி ரூபாய் அளவிற்கு தூர் வாரக் கொடுத்திருக்கிறார்கள். அது போல ஜப்பானிலிருந்து மரம் நடுவதற்காக நம்முடைய வனத் துறைக்கு ஏற்கெனவே பணத்தைக் கொடுத்திருக்கிறது. இந்த, இரண்டு துறையிலே யார் இப்போது வெற்றிபெறப் போகிறார்கள் என்கிற அளவிற்கு இப்போது போட்டி நடந்து கொண்டிருக்கிறது. குளங்களிலே கருவேல மரங்களை நடக்கூடாது எனச் சொல்லப்படுகிறது. எனவே, எந்த எந்த ஏரிகளை அடையாளம் கண்டு நீங்கள் தூர் வாரப் போகிறீர்களோ, அந்த ஏரிகளை வேண்டுமானால் மரம் நடாமல் விட்டுவிட்டு, தூர் வாராத பகுதியிலே இருக்கக்கூடிய ஏரிகளை நீங்கள் கண்டெடுத்து, அங்கேயெல்லாம் மரம் நட்டால்தான், விறகுக்கு நாம் இப்போது .....

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் பொதுப் பணித் துறையில், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், 'எக்ஸ்-ஜமீன்' என்று எல்லாவற்றையும் சேர்த்து 39,000 ஏரிகள் இருக்கின்றன. அந்த 39,000 ஏரிகளையும் தூர் வார வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அதற்காக நான்கு, ஐந்து வகைகளை நாங்கள் கையாளுகிறோம். ஒன்று, அரசாங்கத்தில் கொடுத்திருக்கிற 20 கோடி ரூபாயிலிருந்து 200 ஏரிகளை தூர் வாரப் போகிறோம். ஈ.ஈ.சி. மூலமாக தூர் வாரப் போகிறோம், ஜப்பான் நாட்டு போகிறோம். இஃதன்னியில், உலக வங்கியின் உதவியுடன் தூர் வாரப் போகிறோம். 'எக்ஸ்-ஜமீன்', பஞ்சாயத்து ஏரிகள் கடன் பெற்று அதன் மூலமாக போன்றவைகளுக்கெல்லாம் செய்யப் போகிறோம். எல்லாவற்றையும் தூர் வாரப் போகிறோம். இது குறித்தெல்லாம் அமைச்சரவையில் ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏரிகளில் அதனை நடுவதன் மூலம் சில்ட் எடுக்க முடியாது, தண்ணீர் தேக்கி வைக்க முடிவதில்லை. ஆகையினால், இனிமேல் கருவேல மரங்களை ஏரிகளிலே நடக்கூடாது. பொதுப் பணித் துறையின் 'மெயின் நார்ம்ஸ்' கரைகளில் மரம் நடக்கூடாது. பனைமரம் மட்டுமேதான் நடலாம். இல்லையென்றால் கரை உடைந்துபோய்விடும். கரை, மதகு, ஏரி, நீர்ப்பாசனப் பிடிப்பு எல்லாவற்றிலும் நடுகிறார்கள். எனவேதான் அன்றைக்கே சொன்னேன். இந்த கருவேல மரங்களை நடுவது என்பது, பொதுப் பணித் துறையிலே நீங்கள் 'எய்ட்ஸ்'-ஐ பரப்புவதைப் போல, அதுவும் ஒரு காரணம். எனவே, அதை எடுக்க வேண்டும் என்பதுதான் பொதுப் பணித் துறையினுடைய திட்டம்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் இரண்டு நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும். நீங்கள் பேச ஆரம்பித்து 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு சிறு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். மரங்கள் இருந்தால்தான் மழை பெய்யும். நீங்கள் வெறும் குளத்தை வைத்து என்ன செய்வீர்கள் என அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அமைச்சரவையின் முடிவு.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 'சரியான போட்டி' என்று எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் அதற்காக வரவில்லை. 17 சதவிகிதம் இருக்கக்கூடிய காட்டுப் பகுதியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யார் 'சரியான போட்டி' என்று சொன்னார்கள்? திரு. ரங்கநாதன் அவர்கள் சொன்னாரா? இன்னொரு தடவை திரு. ரங்கநாதன் உட்கார்ந்து கொண்டே கமெண்ட் அடிக்கக்கூடாது.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17 சதவிகிதமாக இருக்கக்கூடிய காட்டுப் பகுதியை 33 சதவிகிதமாக மாற்ற வேண்டும் என்று சொன்னால், இது போன்ற ஏரிகளிலேகூட மேட்டுப் பகுதியில் நீங்கள் 'இயர்-மார்க்' செய்து, அந்தப் பகுதியிலே வேண்டுமானால் கருவேல மரங்களை நடலாம் என்கிற விதி விலக்கை பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், அதே போல வனத் துறை அமைச்சர் அவர்களும், இரண்டு பேரும் கொஞ்சம் மனம் விட்டுப் பேசி ஓரளவிற்கு இதற்காக நீங்கள் முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறையின் கண்ட்ரோலில் சில பள்ளிகள் இயங்கி வருகின்றன. ஆனால், ஏற்கெனவே இருக்கக்கூடிய மரங்களையும், காடுகளையும்



சரியாகக் காக்கமுடியாமல் சந்தன மரக் கடத்தல் எல்லாம் நடந்துகொண்டிருக்கும் வேளையில். இந்தப் பள்ளிகளைப் போய் வன அதிகாரிகள் எல்லாம் பார்க்க வேண்டிய அவசியமேயில்லை. ஏற்கெனவே ஆதிதிராவிட நலத் துறைதான் அவர்களுக்கு சம்பளமே கொடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே, வனத் துறையின் கண்ட்ரோலில் இருக்கக்கூடிய பள்ளிகளை தயவு செய்து நீங்கள் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆதிதிராவிட நலத் துறையே இது போன்ற பள்ளிகளைக் கவனிக்கலாம் என்று உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பால் வளத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆட்சியிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரே நிமிடம்தான், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத்தில் கடந்த கால ஆட்சியிலே நடைபெற்ற ஊழலைப் பற்றி இந்த மாமன்றத்தில் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். கடந்த காலத்திலும் அப்போது இருந்த அமைச்சர்கள் சொன்னார்கள், உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்று. பல சேர்மென்கள் பல கோடி ரூபாய் அளவிலே கொள்ளையடித்திருக்கின்றார்கள். ஆனால், இன்று வரை அவர்கள் மீது நடவடிக்கையெடுக்கப்படாமல் இருக்கின்றது. தாங்கள் எனக்குக் கொடுத்த பொறுப்பில், நான் 'அஷ்யூரன்ஸ் கமிட்டி'-யில் போய் பார்த்தபோதுகூட பல இடங்களிலே ஊழல் நடந்திருப்பதைப் பற்றி ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடம் கூறியிருக்கிறேன். என்னுடைய வேலூர் 'ஆவின்'-ஐ எடுத்துக்கொண்டால் பல கோடி ரூபாய்க்கு ஊழல், அது போன்று கிருஷ்ணகிரியில் ஊழல், நீலகிரியில் ஊழல், சேலத்தில் ஊழல்—எல்லா இடங்களிலும் இது போன்ற ஊழல். இவ்வளவு நடந்திருந்தும்கூட இன்றுவரை யாருமே கைது செய்யப்படவில்லை. இந்த அரசு துறை அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? 9 மாதங்கள் ஆகியும் கூட பொறுப்பேற்று 9 மாதங்கள் ஆகின்றன. இன்னும் அவர்கள் கைது செய்யப்படவில்லையென்று சொன்னால் எப்போது அவர்கள் கைது செய்யப்படுவார்கள்...

**மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் அவருக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தால், அவர் இன்னும்

நேரத்தை எடுத்துக்கொண்டு, பேசிக்கொண்டே இருப்பார். எனவே. நீங்கள் உங்களுடைய பதிலுரையில் சொல்லுங்கள். திரு. ஞானசேகரன். உங்களுடைய உரை முடிந்துவிட்டது. இப்போது மணி 1¼ ஆகிவிட்டது. மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**திரு. சி. ஞானசேகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, இன்னும் ஒருவார காலத்திற்குள் அந்த அதிகாரிகள் யார் யார் என்று கணக்கை எடுத்து, எல்லா 'ஆவின்' அலுவலகங்களிலும் ஊழல் செய்த அதிகாரிகள் யார் யார் என்று கணக்கெடுத்து, — சிலர் சேர்மென்களாக இருந்திருக்கிறார்கள்; சிலர் அதிகாரிகளாக இருந்திருக்கிறார்கள்—எவ்வளவு ரூபாய்க்கு ஊழல் செய்யப்பட்டிருக்கிறது என்று கண்டறிந்து, அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பால் சொசைட்டிகளிலே விவசாயிகள் பால் கொடுக்கின்றபோது, எங்களுடைய வேலூர் பகுதியிலே மூன்று மாதம் ஆனாலும்கூட பால் உற்பத்தியாளர்களுக்குப் பணம் கொடுக்கப் படுவதில்லை. பிரைவேட்டில் இருக்கக்கூடிய பால் உற்பத்தியாளர்கள் போட்டிபோட்டுக் கொண்டு—வேலூர் ஆவின், இங்கே இருக்கக்கூடிய ஆவின் இவற்றையெல்லாம் நசுக்கிவிடக்கூடிய நிலை—'பிரைவேட்டை சேஷன்' இப்போது ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிற நிலை உள்ளது. காரணம், நாம் கொடுக்கின்ற பாலுக்கு உண்டான பணத்தை உடனடியாக, கொடுப்பதில்லை. எனவே, நீங்கள் உடனடியாக, ஒரு வாரமோ அல்லது பத்து நாட்களுக்குள்ளோ பணத்தைக் கொடுப்பீர்களேயானால், பாலைக் கொள்முதல் செய்து, சென்னைக்கே நீங்கள் கொண்டுவர முடியும். அப்படிக் கொண்டுவரும் பட்சத்தில் தனியார்களுக்கு வேலையே இருக்காது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு பத்து நாட்களுக்குள் பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு, நன்றி கூறி மணியடிப்பதற்கு முன்னால் அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு.பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக இந்த அவையிலே கால்நடை மற்றும் வனத் துறை சார்பாக மானியக் கோரிக்கைகளை வைத்து விவாதிக்கிற வாய்ப்பினைக் கொடுத்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், இந்த அவையிலே அமர்வதற்கு வாய்ப்புக் கொடுத்த எனது சிங்காநல்லூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்.'

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் மலை வளத்தைப் பற்றியும், நீர் வளத்தைப் பற்றியும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். திருக்குறளிலே மட்டுமல்ல, புராணங்கள், இதிகாசங்கள் மற்றும் நமது சங்கப் பாடல்களிலே எல்லாம் மலை வளத்தைப் பற்றி ஏராளமான செய்யுட்கள் இருக்கின்றன. குறிப்பாக, ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் மலை வளம் காணச் செல்லும்போது மலைவாழ் மக்கள் கொண்டுவந்து கொடுத்த பரிசுப் பொருட்களின் பட்டியலைச் சொல்லும்போது,

யானை வெண்கோடும்

அகிலின் குப்பையும்

மான்மயிர்க் கவரியும்

மதுவின் குடங்களும்

சந்தனக் குறையும்

சிந்தூரக் கட்டியும்

அஞ்சனத் திரளும்

அணி அரிதாரமும்—

இப்படி 35 வகையான, மலையிலே விளையும் பொருட்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இருப்பதைவிட சங்க காலங்களிலே வாழ்ந்த மக்கள் மலையைப் பேணிக் காத்ததன் காரணமாக அன்றைக்கு மழை அதிகமாகப் பெய்திருக்கிறது. ஆனால், கடந்த

காலங்களிலே மலை வளம் பேணிக் காக்கப்படாததன் காரணமாக மலை வளமும் குறைந்து, மழை வளமும் குறைந்துபோய் விட்டது. இன்றைக்கு இந்தியாவிலே மூன்றில் ஒரு பங்கு மலை வளம் இருந்தால்தான் மழை பெய்யும் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அதனால், இந்தியாவிலே வன வளம் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு இந்தியாவில் 20 சதவிகிதம்தான் வன வளம் இருப்பதால் பருவமழை சரியாகப் பெய்வதில்லை. குறிப்பாகத் தமிழகத்திலே 20 சதவிகிதம்கூட வன வளம் இல்லை. 17 சதவிகிதம்தான் இருக்கிறது. ஆகவே, வன வளத்தை, இந்தியாவினுடைய சராசரி வன வளம் 20 சதவிகிதத்திற்குச் கொண்டு செல்வதற்கு பல்வேறு திட்டங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. அந்தவகையிலே, வன வளத்தைப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை, இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட 11 மாதங்களிலே எடுத்து, இன்றைக்கு மலையிலிருந்து ஒரு மரம் கூட வெட்டப்படாத நிலையை முதன்முறையாக, கடந்த 25 ஆண்டுகளில் செய்யமுடியாத காரியத்தினை நாங்கள் சாதித்திருக்கிறோம். மலையிலிருந்து தினம்தோறும் 500 லாரிகளில் 5,000 டன் மரங்கள் என்று கீழே இறங்கிக் கொண்டிருந்த நிலைமை மாறி இன்றைக்குச் சமவெளியிலிருந்து மலைப் பகுதிகளுக்கு, குறிப்பாக நீலகிரிப் பகுதி, வால்பாறைப் பகுதி மற்றும் கொடைக்கானல் பகுதி மக்களுக்கும், அங்கேயிருக்கிற தொழிற்சாலைகளுக்கும் கருவேல மரங்கள் போகின்ற நிலைமை ஏற்பட்டு, இன்றைக்கு மரங்கள் முழுவதுமாக வெட்டப்படாமல் இந்த அரசு தடுத்திருக்கிறது என்று சொல்லிக் கொள்வதில் நாம் பெருமைப்பட்டுக் கொள்ள முடிகிறது. இருப்பினும்கூட, சந்தன மரத்தைப் பொறுத்தவரையில், கடுமையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டாலும், பல்வேறு முயற்சிகள் எடுத்தாலும்கூட, வெளி மார்க்கெட்டிலே சந்தன மரங்களுக்கு ஏராளமான விலை இருக்கின்ற காரணத்தால், பொது மக்கள் இன்றைக்கு ஏராளமான பேர்கள், மலையில் வாழ்கின்றவர்கள், குறிப்பாக வேலை இல்லாமல் இருப்பவர்கள், இந்தத் தொழிலில் ஈடுபடுவதால், சந்தனமரக் கடத்தலை அடியோடு நிறுத்த முடியவில்லை. இருந்தாலும்கூட, கடந்த 3 மாதங்களாக சந்தனமரங்கள் வெட்டப்படுவது அறவே நிறுத்தப்பட்டு, இன்றைக்கு கடத்தல் வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1-20*

இப்போதுகூட சில இடங்களில் சந்தனமரங்கள் கடத்தப்படுவதை, அதிகாரிகள் பிடிக்கிறார்கள் என்றால், அந்த மரங்கள் எல்லாம் முன்பு



வெட்டி வைத்த மரங்கள். ஆகவேதான், வெளியே மறைத்து வைத்திருக்கும் மரங்களை சில கடத்தல்காரர்கள் கடத்திச் செல்லும்போது, அதிகாரிகள் பிடிக்கிறார்கள். இன்றைக்குக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டு, சந்தன மரங்களை நாங்கள் காப்பாற்றியபோதிலும், கடந்த மாதத்தில் ஒரு பெரிய தீ விபத்து, திருப்பத்தூரில் ஏற்பட்டு, ஏறத்தாழ 68 கோடி ரூபாய்க்கு இழப்பு ஏற்பட்டது. இதை மிகப் பெரிய நஷ்டமாக, இந்தத் தமிழகத்திற்கு மட்டுமல்ல, தேசிய இழப்பாகவே, நாம் கருத வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் பேசும்போது, உறுப்பினர்கள் ஏதோ கதை பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது முறையல்ல.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வனத் துறைக் கிடங்குகளில் ஏறத்தாழ 7,500 டன்களுக்கு மேலாக சந்தன மரங்கள் இன்றைக்குக் குவிந்து கிடக்கின்றன. கடந்த பல ஆண்டுகளாக, மத்திய அரசினுடைய தடை ஆணை காரணமாக இவைகள் எல்லாம் விலை போகாமல் இருக்கின்றன. இன்றைக்கு நாங்கள் பல்வேறு முயற்சிகள் எடுத்துக்கொண்டதன் காரணமாக, மத்தியில் இருக்கின்ற நமது அமைச்சர் மாண்புமிகு மாறன் அவர்களும், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மத்திய அரசை வற்புறுத்தியதன் காரணமாக, வருடத்திற்கு 1,500 டன் சந்தன மரங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, ஓர் உத்தரவின் மூலம், மத்திய அரசு அனுமதி அளித்திருப்பதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள், டில்லியிலிருந்து தன்னுடைய உதவியாளர் மூலமாக இன்றைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நிச்சயமாக வருகின்ற ஆண்டுகளில் 1,500 டன் அல்லது 2,000 டன் சந்தன மரங்கள் வருடந்தோறும் ஏற்றுமதி செய்வதால் இந்தத் தமிழகத்திற்கு 100 கோடி ரூபாய், சந்தன மரத்தில் மட்டும், வருவாய் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

சந்தன மரத்தைப்போல கருவேல மரங்கள், அன்புக்குரிய அண்ணன் துரைமுருகன் அவர்கள் கூறியது போல, கருவேல மரங்களை, ஒவ்வொரு வருடமும், 10,000 ஹெக்டேர் என்ற வீதத்தில், சுழற்சி முறையில் வெட்டி, அதே நேரத்தில் ஏரிகளில் தூர் எடுக்க உதவுவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே கருவேல மரங்களை வெட்டுவதற்கு ஏலம் விடுவதிலே, கடந்தகால ஆட்சியில் ஏராளமான ஊழல்கள் நடைபெற்றன. இன்றைக்கு அவைகள் எல்லாம் அடியோடு நீக்கப்பெற்று, முன்பு 10 கோடி ரூபாய், 9 கோடி ரூபாய் அளவில் விற்ற கருவேல மரங்கள் இன்றைக்கு 15 கோடி ரூபாய், 16 கோடி ரூபாய்

விற்கும் அளவிற்கு நிலைமை மாறியிருக்கிறது. ஆகவே வனத் துறைக்கு, கருவேல மரத்தின் மூலம் ஏராளமான இலாபம் கிடைக்கின்றது என்பதை இந்த நேரத்தில தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன்.

மேலும் சந்தன மரத்தைப் பற்றிப் பேசும்போது, தனியார் சந்தன மரங்களை வளர்க்க வேண்டுமென்று எல்லோரும் கூறினார்கள். ஆகவே கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே நான் தெரிவித்ததைப்போல தனியாரும் சந்தன மரத்தை வளர்ப்பதற்குரிய சட்டம் இன்றைக்கு ஏற்படுத்த வேண்டி, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள், அதற்கான சட்டமுன்வடிவை நான் இங்கே அறிமுகம் செய்ய இருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்...

**திரு. வி.கே. லட்சுமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரம் என்பது மற்ற எல்லா மரங்களைப் போல தனியாக திட்டமிட்டு வளர்க்கக் கூடிய ஒன்றா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரம் என்பது தனியாக விதை போட்டால் அது வளராது. அது செமி-பேரசைட்... என்ற வகையிலே.....

**திரு.வி.கே. லட்சுமணன் :** அது ஆப்ளிகேட்டரி பேரசைட்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் விவரம் தெரிந்துகொண்டு, அமைச்சர் அவர்களைக் கேள்வி கேட்பது சரியல்ல. நீங்கள், வேண்டுமானால், விளக்கத்தைச் சொல்லியிருக்கலாம்.

*பிறபகல் 1-25*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எம்.எஸ்ஸி. (பாட்டனி) படித்து இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்வதற்காக தனது கருத்துக்களை இங்கே தெரிவித்து இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆப்ளிகேட்டரி பேரசைட்—இன்னொரு மரத்தின் துணையோடு வளரக்கூடிய சந்தன மரத்தை இன்றைக்குப் பயிரிடுவதற்காகப் பல்வேறு யுக்திகள் இந்தத் துறையின் கீழ் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. சந்தன மரத்தைப் பயிரிடும்போது வேலிக் கருவேல முள்ளையோ அல்லது வேறு மரங்களையோ பயிரிட்டு, இரண்டையும் வளர்த்தால் அந்த சந்தன மரங்கள் நல்ல முறையிலே வளருவதாக இன்றைக்கு அதிகாரிகள்



வனத் துறை ஆராய்ச்சி மூலம் கண்டு வருகின்ற காலக்கட்டங்களிலே, தனிப்பட்டவர்களும் சந்தன மரம் வளர்க்கலாம் என்ற நிலையை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது.

முன்பெல்லாம் சநதன மரததிலே இருந்து கிடைக்கின்ற வருமானம் தனியார்களுக்கு 47 ½ சதவீதமும், அரசாங்கத்திற்கு 52 ½ சதவீதமும் என்ற நிலைமையிலே இருந்த காரணத்தினால் தனியாருக்குக் கொஞ்சம் அக்கறை இல்லாமல் போய்விட்டது. இப்போது முழுவதும், தனியாரிடம் இருக்கின்ற மரங்களை வளர்த்தால், அவர்களே பயனடையும் வகையிலேயும், அரசுக்கு ஏதும் கொடுக்க வேண்டாம் என்ற முறையிலேயும் இன்றைக்கு சட்டங்கள் திருத்தப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லோரும் கவலைப்பட்டது போல முற்றிலுமாக சந்தன மரங்கள் இன்றைக்கு அழிந்துவிடவில்லை. ஜவ்வாது மலைப் பகுதியிலும், சித்தேரி மலைக் காடுகளிலும் இன்றைக்கு ஏராளமான இளம் சந்தனக் குருத்துகள் வளர்ந்து கொண்டு இருக்கின்றன. அரசாங்கம், புதிதாக பல்வேறு முறைகளிலே இயற்கையாக வளரும் சந்தனமரக் காடுகளிலே விதைகளைத் தூவி இன்றைக்கு சந்தன மரங்களை வளர்த்து, வருங்கால சந்ததியினருக்கு மிகப் பெரிய செல்வத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல சந்தனக் கிடங்கில் தீ பற்றியது பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள சிபிசிஐடி விசாரணையை, தீப்பிடித்த அன்றே அறிவித்தார்கள். மேலும் பல்வேறு விவரங்களை இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு இராமன் அவர்களை இன்றைக்கு நீதி விசாரணை செய்ய உத்தரவிட்டு இருக்கிறார்கள். தங்களுக்குத் தெரிந்த விவரங்கள் அத்தனையையும்—எவ்வாறு இந்தத் தீ விபத்து ஏற்பட்டது; அதற்குக் காரணம் என்ன என்பதை எல்லாம் மாண்புமிகு நீதிபதி அவர்களிடம் தெரிவிக்குமாறு இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த இழப்பு மிகப் பெரிய இழப்பு என்பதிலே எந்தவிதமான கருத்துக்கும் இடமில்லை. குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும், கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் சந்தன மரத்தைப் பொறுத்தவரையில் இன்னும் ஒரு தகவல். சந்தன மர ஆலை ஒன்று நாட்றாம்பள்ளி தொகுதியிலே தெற்குப்பட்டில கடந்த பல ஆண்டுகளாக மூடப்பட்டுக் கிடந்தது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் அறிவித்தபடி, அந்த ஆலையைத் திறப்பதற்குக் கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இன்னும் பத்து, பதினைந்து நாட்களிலே அந்த ஆலை எண்ணெய் உற்பத்தியைத் துவக்கும் என்ற (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்ல செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வனத் துறையின் சார்பிலே கஞ்சா பயிர்களை பயிரிடுவது கடந்த பல ஆண்டுகளாக ஏராளமாக நடைபெற்று வந்தது. கடந்த மட்டும் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே ஏறத்தாழ 100 ஏக்கரிலே விளைந்த கஞ்சா செடிகள் வனத் துறையின் சார்பிலே முற்றிலும் அழிக்கப்பட்டு இருக்கிறது. அதன் மதிப்பு மட்டும் ஏறத்தாழ 50 கோடி ரூபாய்க்கு மேலாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல தஞ்சை டெல்டா பகுதியிலே வனத் துறையின் சார்பிலே ஏராளமான தேக்கு மரங்கள் நடப்பட்டு இருக்கின்றன. ஏறத்தாழ 4,500 கிலோ மீட்டர் நீளம் அளவுக்கு கால்வாயின் இரு மருங்கிலும் தேக்கு மரங்கள் நடப்பட்டு இருக்கின்றன; இன்றைக்கு அதனுடைய மதிப்பு 500 கோடி ரூபாய் இருக்கும் என்று சொல்கிறார்கள். அவைகள் எல்லாம்—கடந்த காலங்களில் புயலால், ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மரங்கள் விழுந்து, 3 ஆண்டுகளாக எடுக்கப்படாமல், திருடு போய்க் கொண்டு இருந்தன. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பின்னாலே அவற்றை எல்லாம் விற்று இன்றைக்கு 8 கோடி ரூபாயை அரசு கஜானாவிலே சேர்த்து இருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோல இன்னும் ஐந்து கோடி ரூபாய்க்கு மேலான மரங்கள் இப்போது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன என்ற நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத் துறையின் சார்பிலே ஒரு ஆராய்ச்சிப் பிரிவு இருக்கிறது. இந்த ஆராய்ச்சிப் பிரிவின் மூலமாக உயர்ரக வீரிய வித்துக்கள்—குறிப்பாக ஒட்டுப்புளி, வீரிய நெல்லி, வீரிய களாக்காய், 40 சதவீதம் அதிகமாக மகசூல் கொடுக்கக்கூடிய சவுக்கு மற்றும் தைல மரங்கள், வேம்பு ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டு அவற்றிலே நல்ல வீரிய விதைகள் உருவாக்கப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் 50 லட்சம் வீரியக் கன்றுகள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய இன்றைக்கு அரசு



முயற்சிகளை எடுத்து உள்ளது என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வனங்களில் இன்றைக்கு ஏராளமான மிருகங்கள், பறவைகள் வாழ்ந்து மிகப் பெரிய செல்வங்களாக, உலகத்திலே இருக்கின்ற சிறந்த வனப் பகுதிகளிலே ஒன்றாக இன்றைக்கு தமிழகத்தின் வனப் பகுதி விளங்கிக் கொண்டு இருக்கிறது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், வால்பாறையில் அக்காமலை கிராஸ் ஹில்ஸ் என்ற பகுதி உலகத்திலேயே மிகச் சிறந்த இயற்கை வளம் நிறைந்த பகுதி என்று பல்வேறு வல்லுனர்களால மதிப்பிடப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. உலகத்திலேயே மிகச் சிறந்த காட்சியாக நமது தமிழகத்திலே இருக்கின்ற அந்த அக்காமலைப் பகுதியில இருக்கின்ற கிராஸ் ஹில்ஸ் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் வனங்களைப் பாதுகாக்கவும், வன விலங்குகளைப் பாதுகாக்கவும் இருபதுக்கும் மேற்பட்ட வனவிலங்கு சரணாலயங்கள் இருக்கின்றன. இவைகளைக் கணக்கிட்டால் தமிழகத்தின் வனப்பரப்பில் 12 சதவீதமாக இருக்கின்றது. அதை 25 சதவீதமாக ஆக்கி, மரங்களையும் மிருகங்களையும் பாதுகாப்பதற்காகக் கீழ்க்கண்ட புதிய வனவிலங்கு சரணாலயங்களை அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. (1) கொடைக்கானல், (2) தர்மபுரி மாவட்டம், (3) கிருஷ்ணாபுரம் வெளிமான் சரணாலயம், (4) பெரியார் மாவட்டம், பவானிசாகர் சரணாலயம், (5) கன்னியாகுமரி மாவட்டத்தில், வனவிலங்குகள் உய்விடம், (6) திருச்சி மாவட்டத்தில் கரவெட்டி பறவைகள் சரணாலயம், (7) பெரியார் மாவட்டத்தில் வெள்ளோடு பறவைகள் சரணாலயம், (8) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில் பிச்சாவரம் மாங்குரோவ் காடுகள், (9) நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் கோடியக்கரை பறவைகள் சரணாலயம் உய்விடம் ஆகிய ஒன்பது இடங்களிலே புதியதாக வனவிலங்கு சரணாலயங்களை அமைக்க இந்தத் துறை முடிவு செய்துள்ளது. இன்னும் ஒரு இடம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஆக இப்போது ஒன்பது இடங்கள் மத்திய அரசின் அனுமதி பெற்று புதிய

வன விலங்கு சரணாலயங்களாக இன்று முதல் அறிவிக்கப்படுகிறது என்ற செய்தியை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

வனத் துறையின் சார்பிலே மூன்று வனக் கழகங்கள் மிகச் சிறப்பாக இந்த அரசால நிர்வகிக்கப்படுகின்றன. குன்னூரைத் தலைமையிடமாகக் கொண்ட தேயிலைத் தோட்டக் கழகம், திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்ட வனத் தோட்டக் கழகம், நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்ட அரசு ரப்பர் கழகம் ஆகிய இந்த மூன்று வனக் கழகங்களும் கடந்த ஆட்சியில் நஷ்டத்தில் இயங்கி வந்தன. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, தானைத் தலைவர் கலைஞருடைய அறிவுரையின்பேரில், பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு 11,000 ஏக்கர் பரப்பளவு உள்ள, ஆசியாவிலேயே பெரிய குளோனல் - உயர்குண தேயிலைச் செடிகள் கொண்ட தோட்டமாக உருவாக்கப்பட்டுள்ள இந்த தேயிலைத் தோட்டக் கழகம், மிகப் பெரிய அளவில் இலாபத்தோடு இந்த ஆண்டு முதல் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டில 87 லட்சம் கிலோ தேயிலை உற்பத்தியும், ரூ. 36 கோடிக்கு அதன் விற்பனையும் நடந்துள்ளது.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மிகப்பெரிய இலாபத்தில் இந்தத் தேயிலைத் தொழிற்சாலை இயங்கிக்கொண்டு வருகின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏறக்குறைய 6 கோடி ரூபாய்க்கு மேல் இந்த ஆண்டு இலாபம் வந்துள்ளது. இருந்தாலும் கூட அந்தப் பணத்தில் வால்பாறையில் லாசன் தேயிலைத் தொழிற்சாலை ஒன்றையும் 4,000 ஏக்கர் பரப்பில் அமைக்க தோட்டங்கள் அமைப்பதில் செலவிட்டு இருக்கிறோம். அப்படி செலவிட்டு ** ஆகவே மிகப் பெரிய அளவிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரின் அந்தக் கருத்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன். உங்களுடைய துறையின் விருத்திக்காக இதைச் 'செலவு செய்கிறோம் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மன்னிக்கவும், அதை நீக்கிவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தேயிலைத் தோட்டக் கழகத்தின் மூலம், சின்கோனா என்ற தேயிலைத் தோட்ட அமைப்பு இதோடு இணைக்கப்பட்டு அதன்மூலம் நிரந்தரமில்லாத 800 பணியாளர்களை இன்றைக்குத் தேயிலைத் தோட்டக் கழகத்தில் நிரந்தமாக்கி அவர்கள் குடும்பம் வாழ வழி செய்துள்ளோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சியை மையமாகக் கொண்டு திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டம், தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர்களில் முந்திரி, தைல மரங்கள், சவுக்கு மரங்கள் ஆகியவற்றைப் பயிரிட்டு வருகிறது. கடந்த ஆண்டு இந்தக் கழகம் 5 இலட்சம் ரூபாய் அளவுக்குத்தான் இலாபத்தை ஈட்டியது. ஆனால் இந்த ஆண்டு செம்மையான நிர்வாகத்தினால ஏறக்குறைய 5 கோடி ரூபாய் அளவுக்கு இதுவரை இலாபத்தை ஈட்டியுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ரப்பர் கழகம் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயிலில் 11,000 ஏக்கர் பரப்பளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி மணி அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். இந்த ஆண்டு ஏறத்தாழ, வரிக்கு முந்தைய இலாபமாக 7 ¾ கோடி ரூபாய் அந்த கார்ப்பரேஷன் ஈட்டியுள்ளது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). வரிக்குப் பிந்திய இலாபமாக 2.3 கோடி. ரூபாய் ஈட்டியிருக்கிறது. சில குறைபாடுகள் இருந்தாலும்கூட, அவைகளையெல்லாம் களைவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அன்புள்ள உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள் பல்வேறு குறைகளை என்னிடம் சொன்னார்கள். நான் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த ரப்பர் கார்ப்பரேஷன் தோட்டத்திறகுச் சென்று பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி வந்திருக்கிறேன். அவர்கள் சொன்ன அளவிற்குப் பெரிய குறைகள் அங்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, வன வளங்களை மேம்படுத்துவதற்காக நமது தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெரு முயற்சியின் காரணமாக, ஜப்பான் நாட்டிடமிருந்து 500 கோடி ரூபாயை நாம் கடனாக இரண்டு சதவீதம் வட்டியுள்ள 'சாஃப்ட் லோன்' ஆகப் பெற்றிருக்கிறோம். இதிலே முக்கியமான அம்சம் என்னவென்றால் இந்த 500 கோடி ரூபாயைப் பயன்படுத்தி ஐந்து ஆண்டுகளிலே, ஆண்டு ஒன்றுக்கு நூறு கோடி ரூபாய் வீதம் செலவிட்டு ஆயிரம் கிராமங்களிலே மரங்களை வளர்ப்பதற்காக முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். வனங்கள், மிகக் குறைவான இடங்களிலே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏறத்தாழ 25-லிருந்து 30 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்து, அந்தக்

கிராமங்களைச் சுற்றியுள்ள 750 ஏக்கர் பரப்பிலே இந்தப் புதிய வனங்களை, மலையும் மலை சார்ந்த இடங்களிலே, கிராமங்களிலே வளர்க்க ஏற்பாடு செய்துள்ளோம். இந்தப் பணம் முழுவதும் முன்பெல்லாம் வனத் துறை அதிகாரிகளால் செலவு செய்யப்பட்டு வந்தது. ஆனால் தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின் பேரிலே, கிராமங்களிலே மக்கள் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பணம் அவர்கள் மூலமாகச் செலவு செய்யப்படும். இது ஒரு சிறந்த முறையில செயல்படுத்தப்பட்டு, இந்தப் பணம் 500 கோடி ரூபாயும் செலவிடப்பட்டு, வருகின்ற ஐந்து ஆண்டுகளிலே மிகப் பெரிய இலாபகரமாக இந்த நாட்டு மக்களுக்கு இத்திட்டம் விளங்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, வனக் காப்பாளர்கள் மற்றும் இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் அத்தனைபேரும் கடந்த காலங்களிலே, பல்வேறு விதங்களிலே, எந்தவிதமான பதவி உயர்வும் கிடைக்காமல் இருந்து வந்தார்கள். ஆனால் அவற்றையெல்லாம் நான் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஏறத்தாழ இந்தத் துறையிலே இருக்கின்ற 291 பேர்களுக்குப் பல நிலைகளிலும் பதவி உயர்வுகளை உடனடியாக வழங்கி அவர்களுக்கு நல்ல செய்திகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). அந்த வகையிலே வனத் துறையில் பல்வேறு வேலைகளையும் இந்த அரசு முழுமூரமாகச் செயல்படுத்தி, இன்றைக்கு நாட்டிலே வன வளத்தைக் காப்பதற்காக முயற்சிகளை எடுத்துள்ளது.

அடுத்தபடியாக, கால்நடைத் துறையைப் பற்றிச் சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை 1892-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. தமிழகத்திலே இருக்கின்ற மிகப் பழமையான துறைகளிலே இதுவும் ஒன்று. 105 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க இந்தத் துறை, தமிழகத்திலே கால்நடை நலன்கள் மற்றும் கோழியின நலன்கள் மற்றும் நோய்த் தடுப்பு, தீவன அபிவிருத்தி மற்றும் விரிவாக்கம் ஆகிய பணிகளைச் சிறந்த முறையிலே செய்து வருகிறது. இந்தத் துறையின் மூலம் 3 பன்முக மருத்துவமனைகள், 21 முதன்மை மருத்துவமனைகள், 105 கால்நடை மருத்துவமனைகள், 765 கால்நடை மருந்தகங்கள், 50 நடமாடும் கால்நடை நிலையங்கள், 383 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மற்றும் 2,126 கால்நடைக் கிளை நிலையங்களைக் கொண்டு தமிழ்நாட்டு மக்களுக்கு மிகச் சிறப்பாகச் சேவைகளைச் செய்து வருகிறது.



இந்தத் துறையின் மூலம் பல்வேறு நலத் திட்டங்களை நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காக, நமது தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற இந்த ஆட்சி, குறிப்பாகப் பெண்கள் முன்னேற்றத்தைக் கருத்திலே கொண்டு, ஏறத்தாழ 383 ஒன்றியங்களிலும் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 10 பெண்கள் வீதம், பயிற்சியளிக்கப்பட்டு கால்நடைகளுக்கு சினை ஊசி போடுவதற்கும், மற்றும் சிறு நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்காகவும் இப்போது அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலமாக தமிழகத்திலே 3,830 மகளிர் பயனடைவார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் 11,000 ரூபாயிலே சைக்கிள் மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல இந்தத் துறையிலே பதவி உயர்வுக்கு வாய்ப்பின்றி இருந்த கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள், பதிவறை எழுத்தர்கள், மந்தைக் காப்பாளர்கள் போன்ற பதவிகளிலுள்ள 105 நபர்களுக்குச் சென்ற ஆண்டு கால்நடை ஆய்வாளர் பயிற்சி ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையிலே அளிக்கப்பட்டது. அதேபோன்று இவ்வாண்டு 104 நபர்களுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையிலே அளிக்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 1-40

அதைப்போல கடந்த ஆட்சியில் நிரப்பப்படாமல், நீண்ட நாட்களாக இருந்த உயர் பதவிகளான கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் பதவிகள் அனைத்தும் உரிய பதவி உயர்வு அளிக்கப்பட்டு இந்த ஆட்சியில் இந்தத் துறை செம்மையாகச் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் 1.10 கோடி ரூபாய் செலவில் 35 ஊர்திகளும், 42 இலட்சம் ரூபாய் செலவில் 63 குளிர் சாதனப் பெட்டிகளும் மற்றும் பல்வேறு உபகரணங்களும் வாங்கப்பட்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

டேனிடா உதவியுடன் புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 ஒன்றியங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட கால்நடை வளர்ப்புத் திட்டம் மேலும் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், காமராசர் மாவட்டம், வ.உ.சி மாவட்டம் ஆகிய 5 தென் மாவட்டங்களில்

ரூ 27.48 கோடி செலவில் 7 ஆண்டுகளுக்குச் செயல்படும். இந்தத் திட்டம் இரண்டாவது கட்டமாக 1-2-1997 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9 மாவட்டங்களில் தற்சமயம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் ஐரோப்பிய பொருளாதாரக் குழும நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஆடு வளர்ப்புத் திட்டம் 10 கோடி ரூபாய் செலவில் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் தெரி[illegible]க்கொள்கிறேன்.

ஒவ்வொரு மா[illegible]டத் தலைநகரிலும் ஏராளமான கால்நடைகள் இன்றைக்[illegible]ருக்கின்றன. ஆகவே தற்போது மாவட்டத் தலைநகரங்களில் சில முக்[illegible]ரங்களில் 21 பெரு மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. விலை மதி[illegible]மிக்க கால்நடைகளைப் பாதுகாக்கும் வகையில் அனைத்து மாவட்ட[illegible]லும் ஆய்வுக்கூடம் பரிசோதனை மற்றும் உள்நோயாளிகள் வசதிகள் போன்ற சிறப்புமிக்க சிகிச்சை அளிக்கும் வகையில் முதல்கட்டமாக கரூர், திருவாரூர், உதகமண்டலம் ஆகிய 3 மாவட்டத் தலைநகரங்களிலும் பெரு மருத்துவமனைகளாக தரம் உயர்த்த இந்த அரசு முயற்சிகளை எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்ததைப் போல 2,126 கிராமங்களில் இன்றைக்குக் கால்நடை உப கிளை நிலையங்கள் இருக்கின்றன. இவைகளில் இருக்கிற பணிகளைச் செம்மையாக்கி அவைகளைப் பயன்படுத்தும்பொருட்டு, இந்த அரசு மேலும் இதுபோன்ற 2,126 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அந்தப் பகுதிகளில் அந்தக் கிளை நிலையங்கள் பணிபுரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 2,126 கிராமங்களுக்குக் கூடுதலாக வசதி கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த 2,126 ஊர்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிற 5 ஊர்களுக்கு அவைகளுடைய சேவை தரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் 42.5 இலட்சம் ரூபாயில் செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இலட்சமா, கோடியா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலட்சம் தான். இது அடிஷனல் மருந்துகளுக்கு மட்டும்.

21801



தீவிர ஆடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இன்று மேலும் 2 மாவட்டங்கள்—பெரியார், கோயமுத்தூர் ஆகியவை சேர்க்கப்படும். இதற்காக 10 லட்சம் ரூபாய் கூடுதலாக இந்த அரசு செலவிட உத்தேசித்துள்ளது.

சைதாப்பேட்டை[illegible]கால்நடை மருத்துவ வளாகத்திலுள்ள நாய் வளர்ப்புப் பிரிவை மேம்படுத்துவதற்காக, இன்று தமிழகத்தில் அழிந்து வருகிற இனமான சிப்பிப்பாறை, கோம்பை மற்றும் இராஜபாளையம் நாய்களை மீண்டும் வளர்ப்பதற்காக, இனவிருத்தி செய்ய 5 இலட்சம் ரூபாய் இந்த அரசு ஒதுக்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வெங்கடசாமி அவர்கள் பலமுறை இந்த மன்றத்தில் பேசியதற்கிணங்க ஓசூரில் இருக்கிற அரசுப் பண்ணையில் குதிரை வளர்ப்பை 5 இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்பித்து, தரமான குதிரைகளை வளர்த்து, போலீஸ் இலாக்காவுக்குக் கொடுக்க இந்த அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட மருத்துவமனைகளில் மருந்துகள் இன்றும் 1993 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் அதே அளவுக்குத் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் அதிகமாக மருந்துகளைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் அதிகமான நிதியளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம். அவரும் ஏற்றிருக்கிறார். ஆகவே உறுப்பினர்கள் அனைவரும் சொன்னதுபோல அதிக அளவு மருந்து வருங்காலத்தில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

ஊட்டமேற்றிய வைக்கோல் தயாரிக்கும் செயல்முறை விளக்கப் பாத்திகளை கடந்த ஆண்டு ஆயிரம் இடங்களிலே செய்தோம். இப்போது இந்த ஆண்டு 1,500 பயனாளிகள் பயன் பெறுவதற்காக ரூ. 7 ½ இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் வான்கோழி வளர்ப்புப் பிரிவு இந்த அரசால் ரூ. 1½ இலட்சம் செலவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இராணிப்பேட்டை கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையத்தில் பி.பி.எல்.ஓ. பிரிவு, அதாவது கோழிகளைத் தாக்கும் நோயைக் கண்டுபிடிப்பதற்காக 15 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக மருந்துகள் தயாரிக்கும் திட்டத்தை இந்தத் துறை செயல்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



216828. 31 N 97 N 97.21.2

தமிழ்நாடு கோழி இன வளர்ச்சிக் கழகம் (டாப்கோ) என்ற அமைப்பு இந்தத் துறையின் மூலமாக இன்றைக்குச் செயல்பட்டு வருகிறது. மிகப் பெரிய இழப்பினை கடந்த அரசாங்கத்தின் மூலமாக டாப்கோ பெற்று இன்றைக்கு நிதிநிலை மிக மோசமான நிலைமையில் இருக்கிறது. இப்போது கடந்த ஓர் ஆண்டு காலமாக பல்வேறு முயற்சிகளை எடுத்து இதன் வாயிலாக இப்போது டாப்கோவினுடைய இழப்பு பெருமளவு குறைக்கப்பட்டு, இன்றைக்கு அதனுடைய நிதிநிலை ஓரளவுக்கு முன்னேறியுள்ளது. இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிற ஏழை எளிய குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதற்கு ஒரு திட்டம் தனியார் துறையினரால் இதுவரை செய்யப்பட்டு வந்தது. அந்தத் திட்டத்தை டாப்கோ மூலமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நினைத்து, தனியார்களோடு டெண்டர் மூலமாகப் போட்டியிட்டு இன்றைக்கு மிகக் குறைவான விலையிலே டெண்டரை டாப்கோ பெற்று இருக்கிறது. அதனுடைய இறுதி ஆணை முதல்வர் அவர்களிடம் இருக்கிறது. கோப்பு முதல்வர் அவர்களிடம் இருக்கிற காரணத்தால் அதை நான் அறிவிக்க விரும்பவில்லை. இருப்பினும் நாங்கள்தான் மிகக் குறைவாகக் கேட்டிருக்கிறபடியால் இன்றைக்கு டாப்கோ மூலமாக வருகின்ற காலங்களில் மாதம் ஒன்றுக்கு 1 ¼ கோடி முட்டைகள் மிகச் சுலபமாக ஏழையெளிய குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட இருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல கால்நடைத் துறையின் கீழ் வருகின்ற கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்—கடந்த ஆண்டு நான் அறிவித்ததுபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரான முன்னோக்கினால் இந்த மருத்துவப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டு இன்றைக்கு இந்தியா மட்டுமல்ல, ஆசியாவிலேயே சிறந்த பல்கலைக்கழகமாக விளங்கிக்கொண்டு இருக்கிறது. கடந்த 18-2-1997 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடந்த கால்நடை பராமரிப்பு தேசியக் கொள்கை என்ற கருத்தரங்கில் மத்திய அரசின் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டாக்டர் இரகுவான் பிரகாஷ் சிங், முன்னாள் இந்தியக் கால்நடை பராமரிப்புக் கமிஷனர் திரு. கிருஷ்ணாராவ், இந்தியக் கால்நடை மருத்துவக் கழகத்தின் தலைவர் முனைவர் சி.என்.சிங், பாராளுமன்ற உறுப்பினர் மேற்கு வங்கத்தினுடைய முன்னாள் அமைச்சர் மாண்புமிகு மெகபூப் ஜகதி மற்றும் நமது பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கே.பி. இராமலிங்கம் ஆகியோர் அந்தக் கால்நடை பராமரிப்பு தேசியக் கொள்கை கருத்தரங்கில் கலந்துகொண்டு பல்வேறு வகையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அவருடைய முன்னோக்கு



எண்ணங்களையும் அந்தக் கருத்தரங்கில் பாராட்டினார்கள் என்ற செய்தியை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்வதிலே பெருமைப் படுகிறேன். அதேபோல இந்தக் கால்நடை பல்கலைக்கழகத்தின் மூலம் மிகமிக நவீன வசதிகள்—மனிதர்களுக்கு எவ்வாறு நோயைத் தடுப்பதற்கு வேண்டிய வசதிகள் கிடைக்கிறதோ, அதைவிட அதிகமான வசதிகள் கால்நடைகளுக்கு இன்றைக்கு இந்த பல்கலைக்கழக மருத்துவமனையிலே கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மாணவர்கள்— பி.வி.எஸ்.சி., எம்.வி.எஸ்.சி. கடைசி வருடத்தில் படிக்கின்றவர்களுக்கு பயிற்சியின்போது உதவித் தொகையாக முன்பு 250 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இன்றைக்கு அதை 750 ரூபாயாக உயர்த்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த விலங்கியல் பல்கலைக்கழகத்தினுடைய புதிய கட்டிடம் கட்டுவதற்கு இந்த அரசு 4 கோடி ரூபாய் செலவிலே திட்டங்கள் திட்டமிட்டு மாதவரத்திலே புதிய பல்கலைக்கழகக் கட்டிடம் உருவாகி வருகிறது. இந்த ஆண்டில் மேலும் அதற்கு 85.54 இலட்சம் ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்புதிய பல்கலைக்கழகக் கட்டிடம் விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறக்கப்படவுள்ளது என்ற செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

அதேபோல ஆடுகளைத் தாக்கும் டி.பி.ஆர். நோயினை நீக்குவதற்காக இரண்டு கோடி ரூபாய் மத்திய அரசு மூலமும் ஐரோப்பிய சமுதாயத்தின் மூலமும் இந்தப் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருக்கிறது என்ற செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் நாமக்கல் வட்டாரத்திலே இறந்துபோகின்ற கோழிகளை எடுத்து, உரமாக மாற்றுவதற்கு 102 லட்சம் ரூபாய் இந்த அரசினால் வழங்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இன்னொரு முக்கியமான செய்தி, மிகவும் சுவாரஸ்யமான செய்தியைச் சொல்லவேண்டும், பசி நேரம். இந்தப் பல்கலைக்கழகத்தின் மூலமாக மரபியல் மாற்றம் மூலம் விலை மதிக்க முடியாத கால்நடைகளை உருவாக்குவதற்காக மத்திய அரசு 63 லட்சம் ரூபாயை ஒதுக்கி இருக்கிறது.

நீங்கள் எல்லாம் பத்திரிகையிலே படித்து இருப்பீர்கள். திசு பகுப்பாய்வு மூலம் டோலி என்ற ஆட்டுக்குட்டி பிறந்து இருப்பதைப் போல—அதைவிட முக்கியமான செய்தி—குளோனிங் முறையிலே உருவாகி இருப்பதைப் படித்து இருப்பீர்கள். இந்தக் கருமாபியல் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தி அவ்வாறாகப் பிறக்கும்—இன்றைக்கு ஆண் விந்துவும் பெண் முட்டையும் சேர்ந்து கருவாக உருவாகிறது என்பது எல்லோருக்கும் தெரியும்—அப்படி உருவாகின்ற கருவிலே சில ஜீன்களைப் புகுத்தி, அதன்மூலமாக ஒரு மருந்துத் தன்மையுள்ள ஆடோ அல்லது மாடோ உருவாவதற்காக இன்றைக்கு மத்திய அரசு ஏறத்தாழ 63 லட்சம் ரூபாயை இந்தப் பல்கலைக்கழகத்திற்குக் கொடுத்திருக்கிறது உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால் இன்சுலின் என்ற மருந்தை அந்தக் கருவிலே இருக்கின்ற அந்த ஆடோ அல்லது மாட்டினுடைய கருவுக்குச் செலுத்தினால், அது நன்றாகப் பிறக்கின்றபோது, இன்சுலினை கறக்கின்ற மாடாக, அல்லது ஆடாக அதுவரும் என்று சொல்கிறார்கள். அதேபோல் லாக்டோஜென் என்று சொல்லப்படுகிற ஜீனை எடுத்து, அந்தக் கருவிலே விட்டால் லாக்டோஜென் அதிகமான சத்துள்ள பாலாகக் கறக்கின்ற ஆடோ, மாடோ பிறக்கும். ஆகவே, அந்த மருந்துத் தன்மை உள்ள ஆட்டையோ அல்லது மாட்டையோ தயாரிப்பதற்கு —ஒரு மாட்டைத் தயாரிப்பதற்கு 5 இலட்சம் ரூபாய் செலவாகும்— ஆசியாவிலே முதன்முறையாக இந்தப் பல்கலைக்கழகத்திற்கு இத்தகைய ஆடுகளை, மாடுகளை உருவாக்குவதற்காக மத்திய அரசு 63 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்ற நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் பல்வேறு திட்டங்களை இந்த அரசு பல்கலைக்கழகத்தின் மூலமாகச் செய்து வருகின்றது. இந்த மன்றத்திலே இருக்கிற பல்வேறு உறுப்பினர்கள் கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் தங்களுடைய பகுதிகளிலே ஆஸ்பத்திரிகள் வேண்டும், மருத்துவமனைகளை மேம்படுத்த வேண்டும் என்று எல்லாம் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய கோரிக்கையை எல்லாம் கேட்டு—முன்பு இருந்த அரசாங்கம் வருடம் ஒன்றுக்கு 10, 10 ஆஸ்பத்திரிகளைத்தான் திறந்தார்கள்—கடந்த ஆண்டு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20 ஆஸ்பத்திரிகளையும் 10 மருந்தகங்களையும் திறக்க உத்தரவிட்டுள்ளார்கள். இந்த ஆண்டு தலைவர் அவர்கள், புதிதாக 20 கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் படித்தால் நேரமாகும் என்று நினைக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கு அதுதான் முக்கியம். படியுங்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** அதேபோல் புதிதாக 60 கால்நடை மருந்தகங்களைத் திறப்பதற்கு இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 10 நிமிடத்திற்குள் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் மதிய உணவு வழங்குகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் சற்றுப் பொறுமையோடு இருக்கவேண்டும். ஒவ்வொருவராகப் போய் சாப்பிட்டுவிட்டுக்கூட வரலாம் என்ற கருத்தைச் சொல்கிறேன். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாக உயர்த்துதல். தஞ்சாவூர் மாவட்டத்தில் பொன்னாவூரணி கால்நடை மருந்தகம் கால்நடை மருத்துவமனையாக உயர்த்தப்படும். அதேபோல் கோவை மாவட்டத்திலே கஞ்சம்பட்டியும், பொங்கலூரும், ராஜாஜி மாவட்டத்திலே பரமத்தி வேலூரும், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலே மேக்கிரிமங்கலமும், பெரியார் மாவட்டத்திலே மொடக்குறிச்சியும், எம்.ஜி.ஆர். மாவட்டத்திலே அம்பத்தூரும், ஏடி. பன்னீர்செல்வம் மாவட்டத்திலே திருத்துறைப் பூண்டியும், சேலம் மாவட்டத்திலே ஓமலூரும், எம்.ஜி.ஆர். மாவட்டத்திலே பூந்தமல்லியும், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலே விழுப்புரமும், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலே சீர்காழியிலும், தர்மபுரி மாவட்டத்திலே பாலக்கோடிலும், நீலகிரி மாவட்டத்திலே கூடலூரிலும், வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலே வாலாஜாபேட்டையிலும், கோவை மாவட்டத்திலே பீளமேட்டிலும், பெரியார் மாவட்டத்திலே பெருந்துறையிலும், அதேபோல் காமராஜர் மாவட்டத்திலே விருதுநகரிலும், ஆக 20 இடங்களில் பெரு மருத்துவமனைகள் உருவாக்கப்படும்.

பிற்பகல் 1-55

அதேபோல புதிய கால்நடை மருந்தகங்கள் 60 இடங்களிலே திறக்கப்பட இருக்கின்றன. அவைகளைப் பற்றிய விவரங்கள். திருச்சி- பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்திலே வண்ணான் கொம்பு, மகிளம்பாடி,

நாகலாபுரம் ஆகிய மூன்று இடங்களிலும், திருவள்ளுவர் மாவட்டத்திலே சந்திரமலை, ஆர்.எஸ். மாத்தூர் ஆகிய இடங்களிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல், களியல் மற்றும் வெண்ணமடம் ஆகிய மூன்று இடங்களிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலே பனைகுடி, கல்லூர், பாப்பான்குளம் ஆகிய இடங்களிலும், மன்னார் திருமலை மாவட்டத்திலே சுள்ளெறும்பூர், தேவக்கோடு ஆகிய இடங்களிலும், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலே நெமிலி, செங்குறிச்சி, பில்லூர் ஆகிய இடங்களிலும், பெரியார் மாவட்டத்திலே சின்னமகளூர் பட்டி, ஆப்பக்கூடல், கானிங்கராயன்மலை ஆகிய இடங்களிலும், காமராஜர் மாவட்டத்திலே மல்லங்கிராமம், சித்துராஜபுரம் ஆகிய இடங்களிலும், தர்மபுரி மாவட்டத்தில் மூலனப்பட்டி, பன்லப்பட்டி கிருஷ்ணாபுரம், ஜருகு ஆகிய இடங்களிலும், திருவண்ணாமலை மாவட்டத்திலே தச்சாம்பாடி, நாடாளகனேந்தல், கோவிந்த நகரம் ஆகிய இடங்களிலும், வைகை வீரன் அழகுமுத்து கோன் மாவட்டத்திலே கோவிந்தன் நகரத்திலும், மதுரை மாவட்டத்திலே சக்குடி, கட்டத்தேவன்பட்டி, சாத்தான்குடி ஆகிய இடங்களிலும், தஞ்சை மாவட்டத்தில் ஆதனூர், அதம்பை, பொன்னாகூர், புதூர் ஆகிய இடங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலே மஞ்சூர், உத்தரகோசமங்கை ஆகிய இடங்களிலும், திருவாரூர் ஏடி பன்னீர் செல்வம் மாவட்டத்திலே கள்ளிக்கோட்டை, திருக்கண்ணமங்கலம், அம்மையப்பன் ஆகிய இடங்களிலும், நாகை காயிதே மில்லத் மாவட்டத்திலே சிக்கல், வேப்பஞ்சோலை, புளியஞ்சேரி, பூம்புகார் ஆகிய இடங்களிலும், வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலே அலர்மேலுமங்காபுரம், புளியங்கனூர் ஆகிய இடங்களிலும், கோவை மாவட்டத்திலே தாளப்பட்டி, ஜே. கிருஷ்ணாபுரம், இரும்புரை ஆகிய இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்திலே கோயாபுரம், மட்டம்புதூர், சேலம் மாவட்டத்திலே புத்தூர், உப்பிலிநாடு, ஆட்டையாம்பட்டி ஆகிய இடங்களிலும், எம்.ஜி.ஆர். மாவட்டத்திலே பப்பேடு, பேரண்டூர், போரூர் ஆகிய இடங்களிலும், பசும்பொன் தேவர் மாவட்டத்திலே குமாரகுறிச்சியிலும், வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலே மாம்பாக்கத்திலும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே அரியூரிலும், தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டத்திலே வடலூர் மற்றும் வல்லம்படுகை ஆகிய 60 இடங்களிலும் இந்த அரசின் மூலம் புதியதாக கால்நடை மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்படுகின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் துறையின் மூலமாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே, உறுப்பினர்கள் அத்துணை பேருடைய கோரிக்கைகளையும்



நான் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். அவையனைவரும் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, என்னுடைய மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமைகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை மானியத்தின்மீது இரண்டாவது முறையாக உரையாற்றுவதற்கு அரிய வாய்ப்பை நல்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எனது முதற்கண் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பால்வளத் துறையில் சுமார் 10,000 இடங்களிலிருந்து 10 இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து 16 இலட்சம் லிட்டர் பாலை சுமார் 4,000 வண்டிகள் மூலமாக சுமார் 28 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ.1½ கோடி அளவில் விற்பனை செய்கின்ற ஒரு மிக முக்கியமான நிறுவனம் ஆவின் நிறுவனமாகும்.

பிற்பகல் 2-00

இந்தப் பால்வளத் துறையினுடைய முக்கிய நோக்கமே, இலாபக் கண்ணோட்டத்தோடு பார்க்காமல், நுகர்வோருக்கு சுகாதார முறையில் பால் விநியோகம் செய்ய வேண்டும் என்பதும், நல்ல நியாயமான விலையில் விற்பனை செய்ய வேண்டும் என்பதும்தான். அடுத்து ஏழையெளிய, விவசாய பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்கின்ற வகையில் இந்தப் பால்வளத் துறை தற்போது நியாயமான, தூய்மையான முறையில், நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆணைப்படி செம்மையாகச் செயல்பட்டு வருகின்றது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பால் என்பது அன்றாடம் தேவைப்படும் அத்தியாவசியமான உணவுப் பொருளாக இருப்பதால், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இன்றி அனைவருக்கும் அவசியமான பொருளாக இருப்பதால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது

என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). கடந்த கால ஆட்சியில், இந்தப் பால் வளத் துறையில் நடைபெற்ற சீர்கேடுகளையும், நட்டத்தில் இயங்கி வந்த செய்திகளையும் அனைவரும் நன்கு அறிவர். எனவே, இந்தத் துறையை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து, சீரோடும் சிறப்போடும் நடத்த வேண்டும் என்பதற்காக பல முற்போக்குப் பணிகளை, நிர்வாகத் திறனை அதிகரித்தல், வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் 29 மாவட்டங்கள் இருக்கின்றன. அதில் சென்னை இணையமாகவும் மற்ற 28 மாவட்டங்களில் 17 ஒன்றியங்களாகவும் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. கடந்த கால ஆட்சியில் அந்த 17 ஒன்றியங்களில் கோயம்புத்தூரைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இவை நட்டத்தில் இயங்கி வந்தன. ஆனால் நமது தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இந்த பத்து மாத காலத்தில், கடந்த நிதியாண்டில் தர்மபுரி, சேலம், பெரியார், நீலகிரி, மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள பால் வள ஒன்றியங்கள் இலாபம் ஈட்டியுள்ளன என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதர மாவட்டங்களில் உள்ள பால்வள ஒன்றியங்கள் பெரும் நட்டத்திலிருந்து சிறு நட்டமாகக் குறைந்து வந்திருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியதைப் போல் இவற்றையும் இலாபகரமாகக் கொணர்ந்து, ஏழையெளிய மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பட்டுவாடாக்கள் சீர்செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, சென்னையை மையமாகக் கொண்டிருக்கின்ற ஆவின் நிர்வாகம் பல்லாண்டு காலமாக சுமார் 32 கோடி ரூபாய்க்கு மேல் நட்டத்தில் இயங்கி வந்தது. ஆனால், இந்த 10 மாத காலமாக இலாபத்தில் இயங்கி வருகின்றது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). குறிப்பாக பால் தட்டுப்பாடு ஏற்படுகின்ற காலகட்டத்தில் அண்டை மாநிலங்களிலிருந்து பால் பவுடர் வரவழைத்து, அதைக் கொண்டு பால் உற்பத்தி செய்தது பற்றி கடந்த மானியக் கோரிக்கையில் நான் எடுத்துக் கூறியபோது, அதிக அளவில் வாங்கியிருக்கிறார்கள் என்பதை நான் புள்ளிவிவரத்தோடு எடுத்துச்



சொன்னேன். ஆனால் தற்போது நம்முடைய 10 மாத கால ஆட்சியில், பால் பவுடர் வாங்கியதில், 1 கிலோ 53 ரூபாய் என்ற விலையில் வாங்கியதில், இப்போது அந்த இணையத்திற்கு ரூ. 3 கோடி மிச்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை, வண்டிகள், வாகனங்கள் இவைகளுக்கெல்லாம் டெண்டர் விடுவதுண்டு. அதில் நாம் நேர்மையாக, நியாயமாக இருந்த காரணத்தினால் இந்த இணையத்திற்கு இப்போது 10 இலட்சம் ரூபாய் மிச்சப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை தேசிய பால்வள வாரியத் தலைவர் டாக்டர் குரியன் அவர்கள் சமீபகாலத்தில் சந்தித்ததில் பால்வள வாரியத்தின் வளர்ச்சிக்குரிய ஆலோசனைத் திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டன. அப்போது, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தியதைக் குறித்து அவர் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார். இன்னும், கடந்த கால ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் ரூ. 5 கோடி நிதி உதவியினைக் கொடுக்க முன்வந்தார் என்பதை இந்த நேரத்திலே சொல்ல விருப்பப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து கூட்டுறவுச் சங்கத் தேர்தல். சொன்னதைச் செய்வோம்; செய்வதைத் தான் சொல்வோம் என்ற வகையில் 3 அடுக்குகள் உள்ளவற்றில் முதலிலே கிராம அளவிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 8,323 கிராமிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் இப்போது நடந்து முடிந்து விட்டன என்பதைப் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 2-05

மேலும், பால் கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ள 93,000 நிர்வாகிகளுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மூலமாக, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக ஒருநாள் பால் பண்ணை வளர்ச்சி பயிற்சித் திட்ட வகுப்பு நடத்த சுமார் 50 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மன்றத்தில் தெரிவிக்கின்றேன்.

அடுத்து, ஆவினுடைய உப பொருள்கள். பால்வளத் துறையானது பால் விற்பனையில் அதிக இலாபம் ஈட்ட முடியாத நிலையில் கொள்கை அளவில் பால் அல்லாத பிற உப பொருட்களாகிய வெண்ணெய், நெய், நறுமண பால் 16 வகையான ஐஸ்கிரீம், இனிப்பு, தயிர், பால்கோவா, பாலாடைக் கட்டி, மோர் ஆகியவை விற்பனைக்கு வருவதால் பால் உப பொருள்களுக்கு கணிசமான அளவு இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது.

கடந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு ஜூன் மாதம் ஆவின் மூலம் அறிவிக்கப்பட்ட ஆவின் மாம்பழச் சாறு சேலம் பால் பண்ணையில் சுகாதார முறையில் 6 மாதம் வரைக்கும் கெடாத வண்ணம் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஆவின் மாம்பழச் சாறு பானம் மிகக் குறுகிய காலத்தில் 25 இலட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல இந்தியாவில் மட்டும் அல்ல, இலங்கை, சிங்கப்பூர், மலேஷியா பங்களாதேஷ் போன்ற வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு பல இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு வைட்டமின் - ஏ சத்துக் குறைவினால் ஏற்படும் பார்வைக் குறைபாட்டைத் தவிர்ப்பதற்காக பாலில் வைட்டமின் - ஏ சத்தைச் சேர்த்து வழங்கிடத் திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கறவை மாடுகளுடைய மானியத் திட்டம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மதம் மாறிய ஆதிதிராவிட கிருஸ்துவர்களுக்காக கறவை மாடுகள் வாங்க ஒரு மாட்டுக்கு 6,000 விலை நிர்ணயிக்கப்பட்டு 3,000 மானியமாகவும், 3,000 கடனாகவும் வழங்கப்படுகிறது. இந்த நிதியாண்டில் தாட்கோவின்கீழ் 13,000 மாடுகள், ரூபாய் 3 கோடியே 90 இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் நலத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக 2,000 கறவை மாடுகள் ரூ.60 இலட்சம் மானியத்துடன் வழங்கப்பட உள்ளன. மதம் மாறிய ஆதிதிராவிட கிருஸ்துவர்களுக்காக 214 மாடுகள் ரூ. 6.42 இலட்சத்திலும் வழங்கப்பட உள்ளன.



மேலும் தாட்கோ நிதியுடன் இந்த நிதியாண்டில் 2,000 கலப்பின ஜாதிக் கன்றுகளுக்கு 100% மானியமாக 30 மாதங்களுக்கு தீவனம் வழங்கிப் பராமரிக்க ஒரு கன்றுக்கு ரூ. 10,140 வீதம் 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பிற்படுத்தப்பட்டவர்களுக்காக இந்த நிதி ஆண்டில் முதன் முறையாக 115 பேருக்கு 6 கறவை மாடுகள் வாங்க ரூ. 75,000 வீதம் ரூ.86 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 2,000 கறவை மாடுகள் - ஒரு மாட்டின் விலை ரூ.8,000 வீதம் ரூ.2 கோடியே 60 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பால்வளத் துறையினுடைய வளர்ச்சித் திட்டங்கள். கடந்த 1990 ஆம் ஆண்டில் கழக அரசினால் உத்தாவிடப்பட்ட சோளிங்கநல்லூர் பால் பண்ணை கட்டி முடிக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 60,000 லிட்டர் பால் மட்டுமே பதப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் நமது அரசு பொறுப்பு ஏற்ற பிறகு இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் லிட்டர் பால் தற்போது பதனிடப்பட்டு சென்னைவாழ் மக்களுக்கு உபயோகப்பட்டு வருகிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது கழக அரசினால் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.95 இலட்சம் செலவிலும் மற்றும் இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், சிதம்பரனார் மாவட்டங்களில் ரூ.2 கோடியே 41 இலட்சத்து 60,000 செலவிலும் வெற்றிகரமாக செயல்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கிராம பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்படுத்துவதற்குத் தேவையான நிதி உதவிகளையும், கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சை மற்றும் இனவிருத்திக்குத் தேவையான கருவிகள் வாங்குவதற்கும், குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் பண்ணை தரத்தை மேம்படுத்துவதற்கும், தேவையான இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கும். இதர உபகரணங்களை வாங்குவதற்கும் தேவையான நிதி அளித்துள்ளது. குறிப்பாக, காரைக்குடி பால் பண்ணையில் பால் பதப்படுத்தும் திறன் நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 60,000 லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 38 இலட்சம் மதிப்பீட்டில் மாட்டுத் தீவனக் கிடங்கு, உபயோகிப்போர் தங்கும் விடுதி, உணவகம், நெய் தயாரிக்கும் அறை, மேல்நிலை தண்ணீர் தொட்டி, மாசு கட்டுப்பாட்டு

இயந்திரம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டு உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிவகங்கை மற்றும் பரமக்குடி பால் குளிரூட்டும் நிலையங்களில் குளிரூட்டும் திறன் நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டரிலிருந்து 30,000 லிட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் மேற்படி மாவட்டங்களில் 140 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டு ஒரு இலட்சத்து 26 ஆயிரம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 2-10

திருநெல்வேலி மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தில் 70 சதவீத கடன் உதவியுடன் தமிழ்நாடு அரசின் 30 சதவீத மானியத்துடன் ரூபாய் 7 கோடியே 7 லட்சத்தில் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்ட பால் பண்ணையில் தினம் ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் திறன் 1 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோல் சங்கரன்கோவில் பால் குளிரூட்டும் நிலையத்தின் திறன் நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

எட்டயபுரத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவந்த நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் லிட்டர் கொள்திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையத்தை கோவில்பட்டி நகரத்தில் சொந்தக் கட்டிடத்தில் நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் கொள் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையமாக மாற்றி அமைத்துள்ளது.

அதேபோல சாத்தான்குளத்தில் வாடகைக் கட்டிடத்தில் நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் லிட்டர் திறனோடு இயங்கி வந்த பால் குளிரூட்டும் நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டி, நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையமாக அமைக்கப்பட்டுள்ளது.

காமராஜர் மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் 70 சதவீத கடன் உதவியுடன் தமிழ்நாடு அரசின் 30 சதவீத மானியத்துடன் ரூபாய் 4 கோடியே 65 இலட்சத்து 5 ஆயிரம் செலவில் ஸ்ரீவில்லிபுத்தூரில்



புதிய பால் பண்ணை கட்டடப் பணி மிக விரைவாக நடந்து வருகிறது. இந்த மாவட்டப் பணிகள் நடப்பு நிதி ஆண்டின் இறுதிக்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் இந்த நிதி ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறையில் நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் கொள் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் மாவட்ட வளர்ச்சி முகமைத் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானியத்துடன் கட்டி முடிக்கப்படும்.

அதேபோல, தர்மபுரி மாவட்டம், மொரப்பூரில் நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் தேவைப்படும் இடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கரூர் வாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை கனவு நனவாகும் வண்ணம் நமது அரசு முதல் முறையாக கரூர் நகரில் ஆவின் பாலை பாலித்தீன் பையில் அடைத்து விற்பனை செய்து வருகிறது.

மேலும் தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியத்தின் மூலம் திருவாரூர், கூத்தாநல்லூர், பாபநாசம், முத்துப்பேட்டை, அதிராமபட்டினம், செம்பனார்கோவில் ஆகிய நகரங்களில் பாலித்தீன் பையில் அடைக்கப்பட்ட பால் விற்பனையை நமது அரசு பொறுப்பேற்றவுடன் செயல்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கணக்குத் தணிக்கை கடந்த 4, 5 ஆண்டுகளாக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் முடிக்கப்படாமல் இருக்கும் நிலை குறித்து இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தக்க அறிவுரைகளை வழங்கியதைத் தொடர்ந்து இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஆவின் சங்கங்களுடைய 1991-92, 1992-93, 1993-94 ஆகிய ஆண்டுகளின் கணக்குகள் முடிக்கப்பட்டன. 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளின் கணக்குகளை மிக விரைவாக முடிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வேலைவாய்ப்பு. 1980 ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் 370 நபர்களுக்கு 1989 ஆம் ஆண்டு கழக அரசு பொறுப்பேற்றவுடன் நமது முதல்வர் கலைஞர் அவர்கள், அவர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்து மீண்டும் பணியில் அமர்த்தினார்கள். மீண்டும் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நமது தாயுள்ளம் கொண்ட தலைவர், முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி நம்முடைய தொழிற்சங்கத் தலைவர் அன்பிற்குரிய திரு. கே. சுப்பராயன் போன்றவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 120 நபர்களுக்கு வேலை தரப்பட்டு இதுவரை 300 நபர்கள் பணியில் சேர்ந்து பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பால்வளம் மட்டும் அன்றி, பால்வளத் துறையின்மீது அக்கறை கொண்டுள்ள தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நிதி ஆண்டில் எங்களுடைய துறைக்கு அளித்த சலுகைகளாக கால்நடைத் தீவனத்தின் மீது வரியை அறவே நீக்கியதும், பால் உபப் பொருட்களின் மீதான வரி விகிதத்தை, 16 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தும், பாலிதீன் பையின் மீது வரி விகிதத்தை 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தும் வழங்கியமையால் ஆவின் நிறுவனம் மேலும் சிறப்புடன் செயல்பட வழிகாட்டிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் 21 பேர் 53 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களின் நோக்கங்கள் கனிவோடு கவனிக்கப்படும். அதேபோல் 16 மாண்புமிகு உறுப்பினர்கள் உங்களுடைய அரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்கள். குறிப்பாக பால் குளிரூட்டும் நிலையங்கள், சங்கங்கள் மற்றவைகளைப் பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த அரசு கனிவோடும், சொன்னதைச் செய்வோம், செய்வதைத் தான் சொல்வோம் என்ற அடிப்படையில், நாங்கள் கண்டிப்பாக உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவோம் என்று சொல்லி, நீங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வணக்கம். (குறுக்கீடு)



பிற்பகல் 2-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்லக்குமார், எந்தத் துறையில் விளக்கம் கேட்கப் போகிறீர்கள்?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** வனத் துறை சம்பந்தமாக.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி நீங்கள் எந்தத் துறை பற்றிக் கேட்கப் போகிறீர்கள்?

**திரு. ஜி. பழனிசாமி:** கால்நடைத் துறையில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ரங்கநாதன் நீங்கள் எந்தத் துறை பற்றிக் கேட்கப் போகிறீர்கள்?

**திரு. ப. ரங்கநாதன்:** பால்வளத் துறை சம்பந்தமாக.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. நீங்கள் கேளுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1992-93, 1994-95* இந்த ஆண்டுகளில் பால்வள ஒன்றியங்களிலும், மாதவரம் ஒன்றியத்திலேயும் தணிக்கைக் கணக்கை முடித்ததாக அறிவித்துள்ளீர்கள். இந்த முடித்த தணிக்கைகளில் எந்தெந்த ஒன்றியங்களில் எவ்வளவு தொகை கையாடல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் கூட்டுறவுத் துறையினுடைய சட்டத்தின் பிரகாரம் அங்கே தணிக்கை இப்பொழுது நடைபெற்று வருகிறது. கூடிய விரைவில் அறிக்கை வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் செல்லக்குமார், நீங்கள் கேட்கப் போவது இதிலே இல்லை, அடுத்ததிலே வருகிறது. இப்பொழுது உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பால்வளத் துறையிலே நான் ஒன்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நினைத்து நினைத்து கேட்கக் கூடாது. விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 10 - பால் வழங்கு செயல் திட்டங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10 - பால் வழங்கு செயல் திட்டங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர். இருக்கையில் இல்லை, திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 8,28,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

(ஆ) கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கால்நடை வளர்ப்பு. ஒவ்வொருவராகக் கேளுங்கள். டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி பாபனாசம் முதல் குற்றாலம் வரை இருக்கின்ற வனப் பகுதிகளில் ஆடு, மாடுகள்

மேய்ச்சலுக்கு. சென்ற 1995-96 வரை அனுமதி வழங்கப்பட்டு வந்தது: வனத் துறையின் மூலமாக. ஆனால், இப்பொழுது அதற்கான அனுமதி ரத்து செய்யப்பட்டிருக்கின்றது. அந்த மாவட்டம் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த அவை நன்கு அறியும்: துறையினுடைய அமைச்சரவர்களும் நன்கு அறிவார்கள் எனவே, 1995-96 வரை வழங்கப்பட்டு வந்த அந்த அனுமதி மீட்டுத் தரப்பட வேண்டுமென்பதிலே எனக்கு ஐயப்பாடு என்னவென்று சொன்னால், துறையினுடைய அதிகாரிகள் தவறு செய்தார்களா என்கின்ற ஒரு ஐயப்பாடு. அனுமதி வழங்கப்படவில்லை என்று சொன்னால் ஒட்டுமொத்தமாக அத்தனைபேருக்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கக் கூடாது. ஆனால் ஒரு சிலருக்கு மட்டும் அந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. எஞ்சியிருப்பவர்கள் மனுச் செய்தும் பல மாதங்களாகியும் இதுவரை அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. எனவே, வறட்சியினுடைய கொடுமையினை உணர்கின்ற இந்த அவையின் சார்பாக இன்றைக்கு நான் மாண்புமிகு அமைச்சரவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கால்நடைகளை வளர்ப்பதற்கு வேறு இடமில்லை. எனவே, காப்பாற்றப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்ற அந்த வனப் பகுதியிலே அதற்கான அனுமதி உடனடியாக வழங்கப்படுமா என்று இந்த அவையின் மூலமாக அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த நிகழ்வு பற்றி என்னிடம் விவரத்தை இப்பொழுது தெரிவித்திருக்கிறார்கள். உரிய நடவடிக்கை மேற்கொண்டு, எல்லோரையும் சரிசமமாக இந்த அரசு பாவித்து அவர்களுக்கு அந்த நடைமுறை, கால்நடை உள்ளே மேய்வதற்கான உரிமங்கள் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை உதவியாளர்கள் 1,100 பேர்கள் பல ஆண்டுக்காலமாக தற்காலிகமாகப் பணிபுரிந்து வருகிறார்களே அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இத்துறையில் கடந்த 23 ஆண்டுக்காலமாக ஏறத்தாழ 1,185 பேர்கள் தற்காலிகப் பணியாளர்களாக உள்ளார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரம் ஆக்குவதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொண்டு இந்த ஆண்டு அவர்களிலே 834 பேரை பணி நிரந்தரம் செய்ய முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையில் விளைகின்ற சந்தனக் கட்டைகளை திருப்பத்தூரில் தேக்கி வைத்திருக்கின்ற காரணத்தினால்தான் இவ்வளவு பெரிய விபத்து நடந்திருக்கிறது. இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அவைகளை உடனடியாகப் பயன்படுத்த நான் பல நாட்களாக வேண்டிக் கொண்டிருக்கின்ற சந்தன மரத் தொழிற்சாலையை குமரிக்கோட்டில், நிம்மியம்பேட்டில் ஏற்படுத்தினால் தேக்கி வைக்க வேண்டிய அவசியம் கிடையாது, உடனடியாக அதைப் பயன்படுத்த முடியும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து, இந்தக் கோரிக்கையை பிறகு கவனித்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தாலும். தங்களுடைய பரிந்துரையின் பேரில்தான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடும். எனவே, அருள்கூர்ந்து, எங்களுடைய பொருளாதாரத்தைக் காக்கவும் சந்தன மரங்களைப் பயன்படுத்தவும், அந்த இடங்களிலே இப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலைகளெல்லாம் உருவாகாமல் காக்கவும், குமரிக்கோட்டில், நிம்மியம்பேட்டில் உடனடியாக இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வனத் துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்ய வேண்டும், செய்வாரா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்தால்தான் இத்தகைய விபத்துக்களிலிருந்து காக்க முடியும். நாங்களே எரிந்தது போல இன்றைக்கு எரிந்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய சந்தன மரங்கள் எல்லாம் எரிந்து போன காரணத்தினால், உள்ளம் எரிந்து இன்றைக்கு அந்த எரிச்சலிலே இருந்து கொண்டிருக்கிறோம். தயவுசெய்து, எங்களுக்கு சந்தன மரத் தொழிற்சாலை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சருக்கு நீங்கள் பரிந்துரை செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டு காலமாக மூடப்பட்டிருந்த நாட்ராம்பள்ளி தொகுதி தெற்குப்பட்டு சந்தன ஆலை எல்லோருடைய வேண்டுகோளுக்கிணங்க இன்றைக்கு பழுதுபார்க்கப்பட்டு இப்போது ஓட்டத்திற்குத் தயாராக இருக்கிறது. அந்த ஆலை எவ்வாறு இயங்குகிறது என்பதை குறைந்தபட்சம் ஓராண்டு, ஒன்றரை ஆண்டு காலம் பார்த்து, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து முதல்வர் அவர்களுடன் கலந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள சேராப்பட்டு, வெள்ளிமலை பகுதிகளில் 1980 ஆம் ஆண்டு போடப்பட்ட நெடுஞ்சாலைத் துறையினுடைய தார்ச் சாலைகளில் இப்போது போக்குவரத்து வாகனங்கள் போகக் கூடாது என்று 24-2-1997 அன்று முதல் கள்ளக்குறிச்சி வனக் கோட்ட அலுவலர் மூலமாக போக்குவரத்து தடை செய்யப்பட்டிருக்கிறது. மலைவாழ் பழங்குடியின மக்கள் வாழ்கின்ற கல்வராயன் மலைப் பகுதியில் கிட்டத்தட்ட 73 ஹெக்டேர் நிலம் நெடுஞ்சாலைத் துறை மூலமாக போடப்பட்டிருக்கிறது. ஆனால், வனத் துறைக்கு இரண்டு பங்கு நிலம் தர வேண்டுமென்று வனக் கோட்ட அலுவலர் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கிட்டத்தட்ட 300 ஏக்கர் நிலத்தை மாநிலத்தில் எந்த இடத்திலாவது கொடுத்தால்தான் இந்தப் போக்குவரத்தை தடை செய்யாமல் இருக்க முடியும் என்று வனக் கோட்ட அலுவலர் மூலமாக அறிவிப்பு வந்திருக்கிறது. ஆகவே, அங்கே வாழ்கின்ற மலைவாழ் மக்கள் செல்வதற்கும், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், புதியதாக உருவாக்கப்பட்டிருக்கின்ற யூனியன் பெருந்தலைவர்கள், கவுன்சிலர்கள் எல்லாம் செல்வதற்கும் Chief Conservator-ரிடம்தான் ஒப்புதல் வாங்கிச் செல்ல வேண்டுமென்ற நிலையிருக்கிறது. ஆகவே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேச வேண்டும். நீங்கள் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் இருக்கின்ற நிலங்களை ஏதாவது ஒரு காரியத்திற்கு எடுக்க வேண்டுமென்றால் இரண்டு பங்கு நிலங்களை



கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆகவே, வனத் துறை அதிகாரி அவ்வாறு கூறியிருப்பார். மாண்புமிகு உறுப்பினர் உதயசூரியன் குறிப்பிட்ட அந்த நிகழ்வில் நியாயம் இருப்பின், அதில் ஏதாவது விதிவிலக்கு செய்ய முடியுமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இறுதியாக என்று அறிவித்த பிறகும் கையைத் தூக்கிக் கொண்டிருப்பது முறையல்ல. இருந்தாலும், நம்முடைய திரு. இ. கணேசன் பரிந்துரையின்பேரில் திரு. தீரன் அவர்களை அழைக்கின்றேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சிக் கொறடாவிற்கு நீங்கள் கொடுத்திருக்கின்ற மரியாதைக்கு நன்றி. மாண்புமிகு வனத் துறை அமைச்சரிடம் ஒரு கேள்வி. அனைத்து வனத் தோட்டங்களிலும் காவலர்களாகப் பணிபுரிகின்றவர்கள் 325 ரூபாய்தான் இன்றைக்கு குறைந்த சம்பளமாக வாங்கிக்கொண்டு பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் அவர்களுடைய வேலையை நிரந்தரம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையிலே பணிபுரிகின்ற அந்தக் காவலர்களுக்கு 325 ரூபாய் சம்பளம் என்று சொல்வது முன்பு இருந்த ஆட்சியிலே இருந்தது. இப்போது அவர்களுக்கு 819 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-25

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லேடீசுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லேடீஸா? Social Welfare-லே பேசுங்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**(ஆ) கோரிக்கை எண் 22 கால்நடை வளர்ப்பு**

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 123,78,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(இ) கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 67,84,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஈ) கோரிக்கை எண் 59 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 59 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 76,81,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-4-1997) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*144. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராயங்கள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 29-01-1996 ஆம் நாளிட்ட 36 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*119. மானியக் கோரிக்கை எண் 25 - கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய கொள்கையும் திட்டங்களும். 1997-98 (தமிழ், ஆங்கிலம்).*

*120. மானியக் கோரிக்கை எண் 52 - சுற்றுச் சூழல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1997-98 (தமிழ், ஆங்கிலம்).*

*121. மானியக் கோரிக்கை எண் 26 - தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம் பற்றிய கொள்கையும் திட்டங்களும். 1997-98 (தமிழ், ஆங்கிலம்).*

*122. மானியக் கோரிக்கை எண் 43 - எழுதுபொருள் அச்சுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1997-98 (தமிழ், ஆங்கிலம்).*

*123. கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய சாதனைத் திட்டம், 1996-97 (தமிழ், ஆங்கிலம்).*

*124. மானியக் கோரிக்கை எண் 10 - பால்பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கு திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98 (தமிழ், ஆங்கிலம்).*

*125. மானியக் கோரிக்கை எண் 22 - கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98 (தமிழ், ஆங்கிலம்).*

*126. மானியக் கோரிக்கை எண் 44 - காட்டு வளத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 59 - காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1997-98 (தமிழ், ஆங்கிலம்).*

*127. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம். 1997-98 (தமிழ், ஆங்கிலம்).*

*128. காட்டு வளத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1997-98 (ஆங்கிலம்).*

## இணைப்பு-1

*(313ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### கோரிக்கை எண் 10

### பால் பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கு திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98

### பால் பெருக்குத் துறை

**முன்னுரை**

பால்வளத் துறை 1958ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1963ஆம் ஆண்டு முதன் முதலாக நவீன பால்பண்ணை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967ஆம் ஆண்டில் மதுரை பால்பண்ணை நிறுவப்பட்டது. பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத்தில் உள்ளதைப்போல் பால் கூட்டுறவுச் சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்கு கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகவும், மத்தியில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமாகவும், மேல் மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகிறது.

**பால்வளத் துறையின் முக்கியமான குறிக்கோள்கள்**

(அ) நிலையான, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க வழி செய்தல்.

(ஆ) நுகர்வோர்களுக்கு பாலும் மற்றும் பாலில் இருந்து செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

**நடவடிக்கைகள்**

மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோளைக் கருத்தில் கொண்டு பின்வரும் பெரும்பான்மையான நடவடிக்கைகள் பால்வளத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(அ) பால் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள அங்கத்தினர்களுக்கு உரிமையான கால்நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி அளித்தல், செயற்கை முறை கருவூட்டல் நடத்துதல், சரிவிகித கால்நடை

தீவனம் அளித்தல் மற்றும் அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்பு பயிற்சி அளித்தல் இவைகள் அனைத்தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும், அதன்மூலம் மாடுகள் தொடர்ந்து நீண்ட காலத்திற்கு அதிகப் பால் அளிக்கவும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படுகின்றது.

(ஆ) அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும் பாலை விற்பனை செய்யவும் தகுந்த அளவில் உள்ளீட்டு வசதிகள் (Infrastructure) அளித்தல், பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், பால் பதப்படுத்தப்படும் ஆலைகள் அமைத்தல், நுகர்வோர் நலனுக்காக பால் துகள் (பால் பவுடர்) உற்பத்தி ஆலைகள் அமைத்தல் மற்றும் நவீன பால் விற்பனை முறை மேற்கொள்ளுதல் ஆகியவை அடங்கும்.

வணிக சம்பந்தமான பால் கொள்முதல், பக்குவப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விணையம் பால்வளத் திட்டங்களை தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி - கட்டபொம்மன், சிதம்பரனார், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் காமராஜர் ஆகிய 6 மாவட்டங்களில் பால்வளத் துறையின் மூலம் மாநிலத் திட்ட நிதியிலிருந்து பால்வளத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

சில சிறப்புத் திட்டங்களான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் நலத் திட்டம் முதலியன, சம்பந்தப்பட்ட நிதி நிறுவன உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால்வளத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றிட 17 பால்பத துணைப் பதிவாளர்கள் உள்ளனர். மற்றும் கால்நடைகளுக்கு மருத்துவ வசதியும், செயற்கைமுறை கருவூட்டல் வசதியும் அளிக்கும் வகையில் 11 பால் சேகரிப்புக் குழுக்களும், 13 நடமாடும் கால்நடை மருந்தகங்களும், பால் பெருக்குத் திட்டம் செயல்படாத (Non-operation





Flood) காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், கன்னியாகுமரி, திருநெல்வேலி - கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

தற்போது முக்கியமாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல் அவைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவைகளைக் கட்டுப்படுத்துதல், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் 1988 ஆகிய விதிகளை நடைமுறைப்படுத்துதல் ஆகிய பணிகளை பால் பெருக்குத் துறை மேற்கொள்கிறது.

கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இச்சங்க உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை மேற்படி சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலை பரிசோதித்து, அதன் தரத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையில் பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. கொள்முதல் மற்றும் இடுபொருட்கள், மருத்துவப்பிரிவு/மருத்துவ வசதிகள் குழுக்களில் இருக்கும் கால்நடை உதவி மருத்துவர்களால், பால் உற்பத்தியாளர்களின் மாடுகளுக்கு மருத்துவ வசதி அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகின்றது. மேலும் குறைந்த செலவில் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் வழங்கப்படுகின்றது. இச்சங்கங்களின் செயலாளர்களுக்கு சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தங்கள் சொந்த செலவில் முதலுதவிப் பெட்டிகள் வைத்துள்ளன. இக்கிராமச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில், உள்ளூர் உபயோகத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துக் கொண்டு எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

**பால்வளத் துறையின் முன்னேற்றம்**

அரசு திட்ட நிதி உதவியுடன் மற்றும் பிற சிறப்புத் திட்ட ஒதுக்கீட்டுடனும் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் பால்வளத் துறை அடைந்துள்ளது:

[1997 ஏப்ரல் 10

| வ. எண் | இனம் | 31-12-96 வரை செயலாக்கம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | முதன்மைச் சங்கங்களின் எண்ணிக்கை (நுகர்வோர் கூட்டுறவுகள் மற்றும் பால் வழங்கும் கூட்டுறவுகள் உள்ளடக்கியது) | 8,607 |
| 2. | மாவட்ட ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 3. | உறுப்பினர்களின் எண்ணிக்கை | 26.60 லட்சம் |
| 4. | பால் உற்பத்தி (சங்கங்களின் அளவில்) | 17.59 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு |
| 5. | பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்) | 13.24 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு |
| 6. | சென்னை நகரத்தில் பால் விற்பனை | 8.35 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு |
| 7. | பால் பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை | 19 |
| | திறன் | 27.39 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு |
| 8. | குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 43 |
| | திறன் | 10.31 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு |
| 9. | தானியங்கி நிலையம் | 199 |



1997 ஏப்ரல் 10]

## பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி

1995-96-ல் 400 சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 31-3-1996 வரை 405 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1995-96-ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட சங்கங்களில் 31-3-1996 வரை 174 சங்கங்கள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் 315 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 31-12-1996 வரை 292 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 31-12-1996 வரை 107 சங்கங்கள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

## பால் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்களும், புள்ளி விவரங்களும்

தமிழகத்தில் உள்ள ஆரம்ப பால் கூட்டுறவுச் சங்கங்கள்/ ஒன்றியங்கள்

| | | |
|---|---|---|
| அ. | பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | 8,607 |
| ஆ. | பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் | 8 |
| இ. | கூட்டுறவு பால் பண்ணைகள் | 2 |
| ஈ. | பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 61 |
| உ. | கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம் | 1 |
| ஊ. | மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் | 17 |
| எ. | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் (மாநில அளவு இணையம்) | 1 |

## பால் பண்ணை வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் தொடர் திட்டப் பணிகள்

1. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டம்

பால் பெருக்குத் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் இருக்கும் பால் பண்ணைகளுக்கு இணையாக உள்ளீட்டு வசதிகளை திருநெல்வேலி-

கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏற்படுத்தப்படுவதற்கென ரூ. 7.05 கோடி திட்ட மதிப்புடன் கூடிய ஒரு பெரிய ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கு இக்கழகம் திட்ட மதிப்பீட்டில் 70 சதவிகிதம் கடனாக வழங்கும். மீதம் 30 சதவிகிதத்தை மாநில அரசு மானியமாகவும் பங்கீட்டுத் தொகையாகவும் வழங்கி இத்திட்டம் 1987-88-ஆம் ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1. 651 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்.
2. மேலும் கூடுதலாக 73,300/- கால்நடைகளை கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.
3. 651 கூட்டுறவுச் சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி செய்தல்.
4. 3 பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.
5. தற்போதுள்ள, திருநெல்வேலி பால்பண்ணையில் கொள்திறனை நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக உயர்த்துதல்.
6. நாளொன்றுக்கு 73,000 லிட்டர் பால் விற்பனை செய்தல். இத்திட்டம் 53,000 விவசாய உறுப்பினர்களுக்குப் பயன்படும் என திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் நாளொன்றுக்கு 75,000 லிட்டருக்கு உயர்த்தப்படும்.

இத்திட்டத்திற்கான தொகை ரூ.705 இலட்சங்கள் அனைத்தும் மாவட்ட கூட்டுறவு பால் ஒன்றியத்திற்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

### 2. காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் காமராஜர் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் பால் பண்ணை அமைப்பதற்கு ரூ.465.50 லட்சம் திட்ட மதிப்புடன் திட்டமொன்று தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட மதிப்பீட்டில் 70 சதவிகிதம் ரூ. 325.85 லட்சங்கள் தேசிய கூட்டுறவு



வளர்ச்சி நிறுவனம் மூலம் கடனாகவும், 30 சதவிகிதம் ரூ.139.65 லட்சங்கள் அரசு மானியமாகவும் பங்குத் தொகையாகவும் கருதி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசுப் பங்குத் தொகையான ரூ.134.53 லட்சங்கள் அரசு விடுவித்துள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் ரூ.202.06 லட்சம் 31-3-1996 வரை நிதியினை அளித்துள்ளது. ஆக மொத்தம் இத்திட்டத்திற்கு ரூ.336.59 லட்சங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மிகுதித் தொகையும் தற்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை பூர்த்தி செய்ய 31-3-1998 வரை கால அளவு நீட்டிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### கறவை மாடுகள் மானியத் திட்டம்

ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர்களுக்காக மாநில ஆதி திராவிடர் நலத் துறை மூலமாகவும், தாட்கோ மூலமாகவும் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்களின்கீழ் கறவை மாடுகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் ஒருங்கிணைந்த முகவர்களாக இருந்து செயல்படுத்தி வருகின்றன.

1996-97-ஆம் நிதி ஆண்டில் இத்திட்டங்களுக்கு கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது :

| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | இலக்கு எண்ணிக்கை கறவை மாடுகள் | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நலத் திட்டம் | 2000 | ரூ. 60.00 இலட்சம் |
| 2. | ஆதி திராவிடர் இனத்திலிருந்து கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்கள் | 214 | ரூ. 6.42 இலட்சம் |
| 3. | தாட்கோ | 13,000 | ரூ. 390 இலட்சம் |

[1997 ஏப்ரல் 10

## பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்

பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை 31-3-1997-க்குள் நடத்தி முடிக்க வேண்டுமென்ற சென்னை உயர்நீதி மன்ற ஆணைக்கிணங்க, அரசாணை (டி) எண் 23, கால்நடை - பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 21-1-1997யின்படி தேர்தல் பணிகள் 1-2-1997 அன்று தொடங்கி 30-3-1997 அன்று முடிக்கப்பட வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி அனைத்து பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களும் நடத்தி முடிக்கப்பட்டன.

## பகுதி 2 திட்டங்கள்

1997-98-ல் பகுதி 2 திட்டத்தின்கீழ் அரசு மாதவரம் பால்பண்ணை மேம்பாட்டிற்காக ரூ. 17.58 லட்சம் அனுமதித்துள்ளது.

## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

1981-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் நாள் முதல் பால் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல், பால் மற்றும் பால் பொருட்களை விநியோகம் செய்தல் ஆகிய முழு வணிக சம்பந்தமான நடவடிக்கைகளை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் செய்து வருகிறது. தேசிய பால்வள வாரிய நிதி உதவியுடன் இவ்விணையம் கீழ்க்காணும் 23 மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் பால்வள மேம்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகின்றது:

1. சென்னை
2. எம்.ஜி.ஆர்.
3. அண்ணா
4. தென்னாற்காடு வள்ளலார்
5. விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார்
6. வட ஆற்காடு-அம்பேத்கர்
7. திருவண்ணாமலை-சம்புவராயர்
8. சேலம்
9. இராஜாஜி



1997 ஏப்ரல் 10]

10. தர்மபுரி
11. கோயம்புத்தூர்
12. நீலகிரி
13. பெரியார்
14. மதுரை
15. வைகை வீரன் அழகுமுத்து
16. திண்டுக்கல்-மன்னர் திருமலை
17. கரூர்-தீரன் சின்னமலை
18. பெரம்பலூர்-திருவள்ளுவர்
19. திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர்
20. தஞ்சாவூர்
21. நாகப்பட்டினம்-காயிதே மில்லத்
22. திருவாரூர்-ஏ.டி. பன்னீர்செல்வம்
23. புதுக்கோட்டை

பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் பால் கொள்முதல் மற்றும் விநியோகத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஆனால் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்த தேவைப்படும் உறைவிந்து தயாரிப்பதற்குத் தேவையான பொலிகாளைப் பண்ணைகள், உறைவிந்து நிலையங்கள் போன்ற பொதுவான வசதிகளை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அமைத்து நிர்வகித்து வருகிறது. தற்சமயம் இவ்விணையத்தின்கீழ் அம்பத்தூர், மாதவரம், சோளிங்கநல்லூர் மற்றும் அயனாவரம் ஆகிய நான்கு இடங்களில் பால்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அம்பத்தூர் பால் பண்ணை நாளொன்றுக்கு 4.00 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது 1-5-1996 முதல் இயங்கி வரும் சோளிங்கநல்லூர் பால் பண்ணையும் நாளொன்றுக்கு 4.00 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது.

[1997 ஏப்ரல் 10

மாதவரம் பால்பண்ணை நாளொன்றுக்கு 1.75 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது. மேற்படி மூன்று பால்பண்ணைகளும் பாலை பதப்படுத்தி, பாலித்தீன் பைகளில் நிரப்பி சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விநியோகம் செய்து வருகிறது. அயனாவரத்தில் நாளொன்றுக்கு 12,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்ட பால்பண்ணையில் பால் பொருட்களான சுவையூட்டிய தயிர் (யோகர்ட்), ஐஸ்கிரீம், பால்கோவா ஆகியவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒன்றியங்களை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைத்து வழிநடத்தி அவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை இணையம் நல்குகிறது. ஒன்றியங்களின் சார்பாக திட்டமிடல், பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல் ஆகிய பணிகளையும் இயந்திர சாதனங்கள் நிறுவி உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் (Tumkey basis) அடிப்படையில் இணையம் மேற்கொள்கிறது. ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பாலையும், பால்பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி போன்ற பால் பொருட்களையும், இம்மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி செய்கிறது.



1997 ஏப்ரல் 10]

**மாவட்ட ஒன்றியங்கள் வாரியாக கொள்முதல் செய்யப்பட்ட பாலின் விவரம்**

| வ. எண். | மாவட்டம். | 1996-97 நாளொன்றுக்கு சராசரியாக (ஆயிரம் லிட்டர்கள்) 31-12-1996 முடிய |
|---|---|---|
| 1. | சென்னை எம்.ஜி.ஆர். அண்ணா | 37 |
| 2. | தென்னாற்காடு-வள்ளலார் விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் | 96 |
| 3. | வடஆற்காடு-அம்பேத்கர் திருவண்ணாமலை-சம்புவராயர் | 250 |
| 4. | தர்மபுரி | 104 |
| 5. | சேலம்-இராஜாஜி | 248 |
| 6. | பெரியார் | 116 |
| 7. | கோயம்புத்தூர் | 85 |
| 8. | நீலகிரி | 21 |
| 9. | கரூர்-தீரன் சின்னமலை பெரம்பலூர்-திருவள்ளுவர் திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர் | 134 |
| 10. | தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் திருவாரூர்-ஏ.டி. பன்னீர் செல்வம் | 14 |
| 11. | புதுக்கோட்டை | 5 |
| 12. | திண்டுக்கல்-மன்னர் திருமலை | 25 |
| 13. | மதுரை-வைகை வீரன் அழகுமுத்து | 84 |
| 14. | இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | 22 |
| 15. | காமராஜர் | 12 |
| 16. | திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் | 60 |
| 17. | கன்னியாகுமரி | 11 |
| | மொத்தம் | **1324** |

[1997 ஏப்ரல் 10

## பால் கொள்முதல் விலை (உற்பத்தியாளர்களுக்கான விலை)

பால் உற்பத்திச் செலவுகள் அதிகரித்ததால், பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலை 24-10-1996 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:

| காலம் | எருமைப் பால் கிலோ கொழுப்புச் சத்து. ரூ.பை. | ஒரு லிட்டரின் விலை. ரூ.பை. | பசும்பால் கிலோ மொத்த திடப் பொருள் ஒன்றுக்கு. ரூ.பை. | ஒரு லிட்டரின் விலை. ரூ.பை. |
|---|---|---|---|---|
| 24-10-96-முதல் இன்றுவரை. | 111-30-லிருந்து 135-00 | 7-72-லிருந்து 9-45 | 49-69-லிருந்து 57-74 | 6-46 லிருந்து 7-51 |

## விற்பனை விலை

பால் உற்பத்தியாளர்களுக்கு அதிகப்படியான கொள்முதல் விலை கொடுத்ததாலும் பால் விநியோகப் போக்குவரத்துச் செலவு மற்றும் பாலித்தீன் பை தயாரிப்பதற்குத் தேவையான பாலித்தீன் பிலிம் விலை அதிகரித்ததாலும், பணியாளர்களின் சம்பள விகிதம் அதிகரித்ததாலும், பால் விற்பனை விலை 24-10-1996 முதல் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது:

| | பாலித்தீன் பைகளில். ரூ. பை. | தானியங்கி நிலையங்களில். ரூ. பை. |
|---|---|---|
| பால் அட்டை | 8-00-லிருந்து 9.50 | 7-80-லிருந்து 9.30 |
| ரொக்கத்திற்கு | 8-50-லிருந்து 10.00 | 8-00-லிருந்து 9.50 |

மேற்படி விலையேற்றத்திற்குப் பிறகும், பால் விற்பனை விலை இந்தியாவிலேயே நமது மாநிலத்தில்தான் குறைவாக உள்ளது. பால் கொள்முதல், பதப்படுத்துதல், விற்பனை போன்ற, பாலை கையாளுவதில் ஏற்படும் செலவும் நமது மாநிலத்தில் குறைவாகவே உள்ளது.



1997 ஏப்ரல் 10]

## கால்நடைத் தீவன உற்பத்தி ஆலை

கால்நடைத் தீவன உற்பத்தி ஆலைகள் கீழ்க்கண்ட மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன:

1. எம்.ஜி.ஆர்—மாதவரம்
2. பெரியார் ஒன்றியம்—ஈரோடு
3. மதுரை ஒன்றியம்—கப்பலூர்

மேற்குறிப்பிட்டுள்ள ஆலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும்.

இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் தீவனங்கள் 'பெல்லட்'(Pellet) மற்றும் 'மேஷ்' (Mash) வகைகள் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கும் ஒன்றியங்களின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது. மேலும் இத்தீவனம் கால்நடை பராமரிப்பு துறைக்கும், மாவட்ட கால்நடைப்* பண்ணைகளுக்கும், சென்னை மாநகராட்சி உட்பட ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கால்நடைத் தீவன ஆலைகளில் 1995-96-ஆம் ஆண்டில் தீவன உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் வருமாறு:

| இருப்பிடம். | உற்பத்தி (டன்). | 1996-97 31-12-96 முடிய விற்பனை (டன்) தொடர் இருப்பு உள்பட |
|---|---|---|
| சென்னை—மாதவரம் | 2298 | 2305 |
| ஈரோடு | 12567 | 11869 |
| கப்பலூர் | 5083 | 5933 |
| **மொத்தம்** | **19948** | **20107** |

[1997 ஏப்ரல் 10

இந்த அரசு கால்நடைத் தீவனத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளது. இதனால் கிராமப் புறங்களிலுள்ள பல ஏழை பால் உற்பத்தியாளர்கள் பயனடைவார்கள்.

## பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை

1996-1997-ஆம் ஆண்டு (31-12-1996 முடிய) நாளொன்றுக்கு சராசரியாக 8.35 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. 510 பால் விற்பனை நிலையங்கள், 38 பாலகங்கள் 199 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 296 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் (எப்.ஆர்.பி.டேங்க்) மூலமாக முறையாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நிறுவனங்களுக்கு மொத்தமாகவும், தனி வாடிக்கையாளர்களுக்கு பாலித்தீன் பைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பால் விநியோகம் சீராக நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு 34 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

## பால் பொருட்கள் விற்பனை விவரம் பின்வருமாறு

| இனங்கள் | 1996-97 (31-12-96 முடிய) |
|---|---|
| நாளொன்றுக்கு சராசரியாக விற்ற பால் (இலட்சம் லிட்டர்கள்) | 8.35 |
| வெண்ணெய் (டன்னில்) | 826 |
| நெய் (டன்னில்) | 299 |
| பால்பொடி (டன்னில்) | 26 |

## மாம்பழச்சாறு அறிமுகம்

இந்தியாவில் பெரிதும் விரும்பப்படும் குளிர்பானம் மாம்பழச்சாறு ஆகும். சேலம் பால்பண்ணையில் நிறுவப்பட்டுள்ள இயந்திர தொகுதியை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும், விற்பனை நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தவும் 1996 ஜூன் திங்களில் இணையம் மாம்பழச்சாறை அறிமுகப்படுத்தியது.



1997 ஏப்ரல் 10]

பிஸ்தா மற்றும் ஸ்ட்ராபெரி ஆகிய இருவகை புதிய நறுமணப் பால் விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. இந்த பால் பொருட்களுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது.

ஐஸ்கிரீமை சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களுக்கும் எடுத்துச் செல்வதற்காக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ரூ.25.00 இலட்சம் செலவில் இரண்டு குளிர்சாதன வாகனங்களை நடப்பு ஆண்டில் வாங்கியுள்ளது.

## மூன்றாம் பால் பெருக்குத் திட்டம்

மூன்றாம் பால் பெருக்குத் திட்டம் 17 மாவட்டங்களில் தேசிய பால் வள வாரியம் மூலமாக உலக வங்கி நிதி உதவி பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் ரூ.88.23 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு, 1996-ஆம் வருடம் மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது. இத்திட்டத்தின்கீழ் பல முக்கிய திட்ட வேலைகள் முடிவடைந்துள்ளன. புதிய பால் உற்பத்தியாளர் உறுப்பினர்கள் சேர ஊக்குவித்தல், கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்குதல், பால்பதப்படுத்துதல் மற்றும் பால் குளிரூட்டும் திறனை அதிகப்படுத்துதல், மாவட்ட அளவில் விற்பனை மற்றும் சென்னை நகரில் விற்பனை முன்னேற்றம் அடையச் செய்தல் போன்றவை இத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தில் முடிவடைந்த திட்ட விவரங்கள் பின்வருமாறு:

| வ.எண் | மாவட்டம் | இடம்/திட்ட விவரம் | கொள்ளளவு ('000) லிட்டர்களில் | செலவுகள் மதிப்பீடு(ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | இணையம் | 3-வது பால் பண்ணை சோளிங்கநல்லூர்(புதியது) | 400 | 2480.00 |
| | | அம்பத்தூர் பால்பண்ணை | 300 முதல் 400 | 161.98 |
| 2. | தென்னாற்காடு வள்ளலார் | விழுப்புரம்-பால் குளிரூட்டும் நிலையம் -பால் பதனிடும் ஆலையாக மாற்றம் | | 289.97 |
| | | குளிரூட்டும் திறன் | 100 | |
| | | பால் பதப்படுத்தும் திறன் | 50 | |

| வ.எண் | மாவட்டம் | இடம்/திட்ட விவரம் | கொள்ளளவு ('000) லிட்டர்களில் | செலவுகள் மதிப்பீடு(ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 3. | வட ஆற்காடு அம்பேத்கர் | திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம் | 30 முதல் 100 | 99.94 |
| | | ஆம்பூர் பால் குளிரூட்டும் நிலையம் | 30 முதல் 50 | 36.26 |
| | | அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம் | 30 முதல் 60 | 28.44 |
| | | கொடைக்கல் பால் குளிரூட்டும் நிலையம் (புதியது) | 30 | 72.69 |
| 4. | தர்மபுரி | கிருஷ்ணகிரி பால்பண்ணை | 100 முதல் 150 | 37.46 |
| | | தர்மபுரி பா.கு. நிலையம் | 40 முதல் 50 | 24.83 |
| 5. | சேலம் | சேலம் பால் பண்ணை | 200 முதல் 300 | 206.25 |
| | | ஆத்தூர் பா.கு. நிலையம் | 50 முதல் 80 | 64.29 |
| | | நாமக்கல் பா.கு. நிலையம் | 30 முதல் 50 | 134.27 |
| 6. | மதுரை | மதுரை பால் பண்ணை | 150 முதல் 200 | 104.44 |
| 7. | பெரியார் | ஈரோடு | 30 மெட்ரிக் டன் பால்பவுடர் ஆலை | 807.82 |
| | | சங்கராண்டாம்பாளையம் பா.கு. நிலையம் | 30 முதல் 50 | 55.40 |
| 8. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் பால் பண்ணை | 100 முதல் 200 | 158.73 |
| 9. | திருச்சி | திருச்சி பால் பண்ணை (புதியது) | 150 | 762.11 |
| | | பெரம்பலூர் பா.கு. நிலையம் | 8 முதல் 50 | 119.05 |
| | | கரூர் பா.கு. நிலையம் | 8 முதல் 30 | 83.88 |
| 10. | எம்.ஜி.ஆர். | காக்களூர் பால்பண்ணை | 30 முதல் 50 | 15.43 |



கீழ்க்கண்ட பால் பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்களின் விரிவுபடுத்தும் திட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன:

| வ.எண் | மாவட்டம் | இடம்/திட்ட விவரம் | கொள்ளளவு ('000) லிட்டர்களில் | செலவின் மதிப்பீடு(ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | எம்.ஜி.ஆர் | சாணூர் பா.கு. நிலையம் (புதியது) | 30 | 53.25 |
| 2. | கோயம்புத்தூர் | சண்முகாபுரம் பால் குளிரூட்டும் நிலையம் | 10 முதல் 50 | 56.52 |
| | | கல்தான் பேட்டை பால் குளிரூட்டும் நிலையம் | 10 முதல் 50 | 54.87 |
| 3. | மதுரை | தேனி பால் குளிரூட்டும் நிலையம் | 10 முதல் 50 | 107.00 |

## உள்ளீட்டுப் பணி

### பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்:

இவ்வாண்டு 1996-97 (டிசம்பர் '96 முடிய) மாவட்ட ஒன்றியங்களால் சராசரியாக நாளொன்றுக்கு 13.24 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது.

பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1996-97 (டிசம்பர் 96 முடிய) துவக்கப்பட்டு 13.67 200 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இலட்சம் பசு மற்றும் எருமை கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகளுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவ மற்றும் செயற்கைமுறை இனவிருத்தி வசதிகள் செய்வதற்குத் தேவையான உறைவிந்து குச்சிகள், கால்நடைத் தீவனங்கள், பசும்புல் உற்பத்திக்கான மானியம், வெக்கை மற்றும் கோமாரி நோய்களுக்கான தடுப்பு ஊசி போடுவது போன்ற வசதிகள் அளிக்கப்பட்டன. கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் கிராம அளவில் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் மூலம் செய்யப்பட்டது 1996-97 (டிசம்பர் 96 முடிய) உறைவிந்து மூலம் 6.58 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டன.

[1997 ஏப்ரல் 10

1996-97 (டிசம்பர் 96 முடிய) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், நல்ல தேர்ச்சி பெற்ற கால்நடை மருத்துவர்கள் மூலம் 6.12 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தன. கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர நேர அழைப்பிற்காக அவசர கால சிகிச்சைப் பிரிவுகள் செயல்படுத்தப்பட்டன. 1996-97 (டிசம்பர் முடிய) ஆண்டு 97 நடமாடும் கால்நடை சிகிச்சைப் பிரிவுகளும் 43 அவசரகால சிகிச்சைப் பிரிவுகளும் செயல்படுத்தப்பட்டன.

**உள்நாட்டு கால்நடைகளின் பால் வழங்கும் திறனை மேம்படுத்தும் பணி**

செயற்கை முறை கருவூட்டலின் பயனாக 1996-97-ஆம் ஆண்டு (டிசம்பர் 96 முடிய) 81,021 வீரியமுள்ள கிடாரிக்கன்றுகள் பிறந்துள்ளன. உதகமண்டலத்திலுள்ள கருவூல ஜெர்சி பொலிகாளை பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும், ஈரோட்டிலுள்ள எருமை இன பொலிகாளை உறைவிந்து நிலையத்திலும் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**அ) கருவூல மைய பொலிகாளை பண்ணை**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் உதகமண்டலத்தில் கருவூல ஜெர்சி பொலிகாளைப் பண்ணை ஒன்றைப் பராமரித்து வருகிறது. இந்தியா முழுவதிலும் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் அனைத்து பொலிகாளைப் பண்ணைகளிலும் இது இரண்டாவது இடத்தில் உள்ளது என தேசிய பால்வள வாரியத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. ஒரு பொலிகாளையிலிருந்து பெறப்படும் விந்து, மொத்த விந்து உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவைகளை மதிப்பீடு செய்யும்போது அகில இந்திய அளவில் இப்பண்ணை இரண்டாவது இடத்தில் இருப்பது தெரிய வருகிறது. இப்பண்ணை இலாபத்தில் இயங்கி வருவதோடு, இப்பண்ணையில் அமைந்துள்ள உறைவிந்து நிலையம் அகில இந்திய அளவில் பெருமை வாய்ந்ததாகும்.

ஆ) 1996-97-ஆம் ஆண்டு (டிசம்பர் 96 முடிய) உதகமண்டலத்தில் உள்ள கருவூல ஜெர்சி பொலிகாளைப் பண்ணையில் 6.17 இலட்சம் உயர் இன உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஈரோட்டில் உள்ள எருமை இன உறைவிந்து நிலையத்தில் 0.89 இலட்சம் முர்ரா எருமை இன உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்பட்டன.



1997 ஏப்ரல் 10]

**வம்சாவழி மூலம் பொலிகாளைகள் தேர்வு திட்டம்**

பால் உற்பத்தியை மேம்படுத்த நல்ல தரமான கலப்பின பொலிகாளைகளை தேர்ந்தெடுப்பதற்கான வம்சாவழி மூலம் பொலிகாளைகளைத் தேர்வு செய்யும் திட்டம் வட ஆற்காடு, தர்மபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எந்த காளைக்குப் பிறந்த கிடாரிக் கன்றுகள் பசுவாகி, மற்ற காளைக்கு பிறந்த கிடாரிக் கன்றுகள் பசுவாகி கொடுக்கும் பாலைவிட அதிகமாகக் கொடுக்கிறதோ அந்த காளை சிறந்த காளையென தேர்வு செய்யப்படும். நாம் இதுவரை முதல் குழுவில் தேர்வு செய்வதற்காக எடுத்துக்கொண்ட பொலிகாளைகளில், சில சிறந்த பொலிகாளைகள் என்று நிரூபிக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**கால்நடை பராமரிப்புத் துறையின் செயலாக்கப் பணிகள்**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் செயற்கை முறை இனவிருத்தி வசதிகளை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் செய்யப்படாத இடங்களில் மேற்குறிப்பிட்ட பணிகளை கால்நடை பராமரிப்புத் துறை செய்து வருகிறது. கால்நடை பராமரிப்புத் துறை கால்நடை மருத்துவம் மற்றும் இனவிருத்தி வசதிகளை கால்நடை பெரு மருத்துவமனை, கால்நடை மருத்துவமனை, கிளை நிலையங்கள் ஆகியவை மூலம் வழங்குகிறது. கால்நடை பராமரிப்புத் துறை தொண்டை அடைப்பான், சப்பை நோய், கோமாரி மற்றும் வெக்கை நோய் ஆகிய நோய்கள் கால்நடைகளுக்கு வருவதைத் தடுப்பதற்காக, தடுப்பு ஊசிகளை கால்நடைகளுக்குப் போடுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நோய் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு புலனாய்வு செய்து நோயைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

**இந்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்**

இந்திய அரசு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.336.63 இலட்சம், 100 விழுக்காடு மானியமாக வழங்க ஒப்புக் கொண்டது. அதில் இராமநாதபுரம், பசும்பொன்

[1997 ஏப்ரல் 10

முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களுக்கு ரூ.245.18 இலட்சங்களும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூ.91.45 இலட்சங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதற்கும், அவைகளுக்குத் தேவையான கருவிகளை வழங்குவதற்கும், பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்கு சிகிச்சை மற்றும் கருவூட்டல் செய்வதற்கு தேவையான உபகரணங்கள், பால் பண்ணைகளுக்குத் தேவையான உபகரணங்கள் பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பதற்குத் தேவையான பாலை பாலிதீன் பைகளில் அடைக்கும் இயந்திரம், பால் டெப்போக்கள், குளிர்சாதன பெட்டிகள் ஆகியவைகளை வாங்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் இத்திட்டத்தில் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 455 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 1,26,000 பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் மூலம் இம்மாவட்டங்களில் சராசரி பால் கொள்முதல் மற்றும் பால் விற்பனை நாளொன்றுக்கு முறையே 27,000 மற்றும் 31,000 லிட்டர்கள் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளன.

**திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்திலுள்ள மணப்பாறையில் ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம்**

திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்திலுள்ள மணப்பாறையில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலை குளிர்விக்கும் திறன் கொண்ட குளிரூட்டும் நிலையம் ஒன்றை நிறுவுகிறது. மேற்படி குளிரூட்டும் நிலையத்தை நிறுவ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடமிருந்து ரூ.10.00 இலட்சத்தைப் பெற்றுள்ளது. இக்குளிரூட்டும் நிலையத்தை அமைக்க தேவைப்படும் மீதி பணம், ஒன்றியத்தின் சொந்த நிதியிலிருந்து செலவழிக்கப்படும்.

**தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் அம்பத்தூர் பால் பண்ணையில் பாலை குளிர்விக்க பிரியான் வாயுவுக்குப் பதிலாக அம்மோனியா வாயுவை உபயோகிப்பதற்குத் தேவையான இயந்திரங்களை அமைத்தல்**

தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் அம்பத்தூர் பால் பண்ணையில் பாலை குளிர்விக்க தற்போது உபயோகப்படுத்தப்படும் பிரியான் வாயுவுக்குப் பதிலாக அம்மோனியா வாயுவை உபயோகப்படுத்துவதற்குத்



1997 ஏப்ரல் 10]

தேவையான சாதனங்கள் அமைக்க ரூ.107.00 இலட்சத்திற்கு ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி ரூ.107.00 இலட்சத்தில் 70 விழுக்காடு அதாவது ரூ.74.90 இலட்சத்தை தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் கடனாக வழங்கும். மீதமுள்ள 30 விழுக்காடான ரூ.32.10 இலட்சம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய நிதியிலிருந்து செலவிடப்படும்.

பிரியான் வாயுவைவிட அம்மோனியா வாயு மலிவானதால் பாலை குளிர்விக்க ஆகும் செலவு குறைவாக இருக்கும். அம்மோனியா வாயு சுற்றுச் சூழலுக்கு ஏற்றது.

**கழிவு நீரகற்றும் நிலையம்**

நடப்பு ஆண்டில் மாதவரம் பால்பண்ணையில் ரூ.71 இலட்சத்தில் ஒரு கழிவு நீரகற்றும் நிலையமும், மதுரை பால்பண்ணையில் ரூ.82.50 இலட்சத்தில் ஒரு கழிவு நீரகற்றும் நிலையமும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்ட பால் உற்பத்தியாளர்களின் நலனுக்கான திட்டம்**

நடப்பு ஆண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையோர் பொருளாதார வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெற்று பிற்படுத்தப்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு உதவிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு இரண்டு கறவைகளைக் கொண்ட திட்டமும், 6 கறவைகளைக் கொண்ட சிறிய பால் பண்ணை திட்டமும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**வைட்டமின் 'ஏ' சக்தியை பாலில் சேர்த்தல்**

வைட்டமின் 'ஏ' சக்தி குறையின் காரணமாக கண்பார்வை குறைவு ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இக்குறையினை தவிர்க்க இவ்விணையம் சென்னையில் மத்திய அரசின் உதவியுடன் பாலில் வைட்டமின் 'ஏ' கலந்து விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

**பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை**

பால் கூட்டுறவு தணிக்கைத் துறையானது, தேசிய பால் பெருக்கு வாரியத்தின் ஆலோசனைப்படி தமிழகத்தில் உள்ள அனைத்து வகையான

பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதற்காக தணிக்கை வாரியமாக 1-10-1983-ல் ஏற்படுத்தப்பட்டு பின்னர் அவ்வாரியம் **மாற்றியமைக்கப்பட்டு** 1-10-1987 முதல் பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் **துறை என்ற பெயரில்** அரசின் தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. **இத்துறையானது** பால்வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 10,000-க்கு **மேற்பட்ட** அனைத்து தொடக்க நிலை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் (சென்னை) ஆகியவற்றின் கணக்குகளை ஆண்டுதோறும் தணிக்கை செய்து வருகிறது.

## தணிக்கை முன்னேற்றம்

### (அ) தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை

### 1995-96 ஆம் ஆண்டு இறுதி தணிக்கை

மொத்தமுள்ள தொடக்க நிலை பால் (உற்பத்தியாளர்கள்/ நுகர்வோர்) கூட்டுறவுச் சங்கங்கள் 10,416 ஆகும். அவற்றில் 31-1-1997 **முடிய** 7,912 சங்கங்களில் திட்டமிட்டபடி 1995-96-ஆம் ஆண்டுக்கான **தணிக்கை** முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 607 சங்கங்களின் **தணிக்கை** 28-2-1997-க்குள் முடிக்கப்பட்டுவிடும். எஞ்சியுள்ள 1,897 சங்கங்களின் தணிக்கையை திட்டமிட்டபடி முடித்திட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

### (ஆ) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தணிக்கை

### 1. 1994-95-ஆம் ஆண்டிற்கான இறுதி தணிக்கை

மொத்தமுள்ள 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலும் 1994-95-ம் ஆண்டிற்கான தணிக்கை முடிக்கப்பட்டுவிட்டது.

### 2. 1995-96-ஆம் ஆண்டிற்கான இறுதி தணிக்கை

1995-96-ஆம் ஆண்டிற்கான தணிக்கை மூன்று மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 14 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் இறுதி தணிக்கையும் 31-3-1997க்குள் முடித்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





### (இ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்

தமிழ்நாடு **கூட்டுறவு** பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் 1991-92-ஆம் **ஆண்டு வரையிலான** தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டுவிட்டன. 1992-93-ஆம் ஆண்டுக்கான தணிக்கை பட்டயக்கணக்கர்களால் **முடிக்கப்பட்டு** அறிக்கை பெறப்பட்டு சோதனை தணிக்கையில் **உள்ளது. விரைவில்** தணிக்கைச் சான்று வழங்கப்படும். 1993-94 மற்றும் **1994-95**-ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கையும் பட்டயக்கணக்கர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முன்னேற்றத்தில் உள்ளது. அவ்வறிக்கைகள் பெறப்பட்டதும் சோதனைத் தணிக்கை மேற்கொண்டு தணிக்கைச் சான்றுகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

## 3. அரசு வருவாய்

தணிக்கை மேற்கொள்ளப்படும் பால் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து தணிக்கை கட்டணம் மற்றும் அடிப்படை விதிக் கட்டணம் வசூலிக்கப்பட்டு, அரசு வருவாய் கணக்கில் செலுத்தப்பட்டு/ சேர்க்கப்பட்டு வருகிறது. சிறிய அளவிலான சங்கங்களில் மேற்கொள்ளப்படும் **தணிக்கைக்கு தணிக்கைக்** கட்டணமாகவும் பெரிய அளவிலான சங்கங்களில் **அ.வி. பணியாளர்களால்** மேற்கொள்ளப்படும் தணிக்கைக்கு அ.வி. கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டு வருகிறது. 1996-97-ஆம் ஆண்டுக்கு நிதிநிலை அறிக்கையில் இவ்வினத்தில் வசூலிக்க மதிப்பிடப்பட்ட ரூ.142.73 இலட்சத்தில் 31-1-1997 முடிய 100.73 இலட்சம் கேட்பு எழுப்பப்பட்டு அதில் ரூ.92.25 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. கேட்பில் எஞ்சிய ரூ.8.84 இலட்சத்தை விரைவில் வசூலிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இணைப்பு-2

*(321-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண்-22

### கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-1998

**பாகம்-1**

### பொது விவரம்

தமிழ்நாடு மக்கள் தொகையில் 66 சதவீதம் கிராமப்புறங்களிலேயே வசித்து வருகிறார்கள். அதில் விவசாயத்தையே முதன்மை தொழிலாகக் கொண்டு 60 சதவீதம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இதில் பெருவாரியான மக்கள் நடுத்தர, சிறு மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆவார்கள். வேளாண்மை தொழிலையே நம்பி கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் முன்னேற்றத்திற்கு, அடிப்படைத் தேவைகளான நிலம் மற்றும் பாசன வசதி இல்லாமை ஒரு தடையாக உள்ளது. மேலும் பெரும்பாலான வேளாண்மை அடிக்கடி பொய்த்துவிடும் பருவமழையையே நம்பியுள்ளது.

கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள், குறிப்பாக ஏழை மக்கள் வேளாண்மைக்குத் தேவையான நிலமின்மையால் கால்நடை வளர்ப்பில் அதிகமான அக்கறை செலுத்தி வருகின்றார்கள். கால்நடை வளர்ப்பு ஏழை மக்களின் முன்னேற்றத்திற்கு ஒரு உப தொழிலாக அமைவதுடன், வேலை வாய்ப்பும், வருவாயும் கிட்ட ஏதுவாகிறது. குடும்ப உணவின் தேவையை பூர்த்தி செய்வதுடன், மீதமுள்ளவைகள் விற்பனையாக்கப்படுகிறது. அநேகமாக கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிலும் கால்நடைகளையோ, கோழிகளையோ வளர்த்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் கால்நடை மற்றும் கோழியின வளர்ப்பில் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ரீதியான முறைகளைக் கையாளுவதால் கால்நடை வளர்ப்பு நல்ல இலாபத்தையும், பொருளாதார மேம்பாட்டினையும் அடைய வழிவகை செய்கிறது. நல்ல உயரின தரம் வாய்ந்த வம்சாவழி கால்நடைகளின் பெருக்கம் சீரிய முறையிலான

மேலாண்மை, சத்து மிகுந்த தீவன உற்பத்தி, உடல் நலம் பேணுதல், நோய் கட்டுப்பாடு மற்றும் நோய்களைப் பற்றிய தீவிர கண்காணிப்பு ஆகிய பணிகளை கால்நடை பராமரிப்புத் துறை முறையாக கையாண்டதால் தனி எருமை மாட்டின் பால் உற்பத்தித் திறன், கோழிகளின் முட்டை இடும் திறன், இறைச்சி உற்பத்தி ஆகியவற்றை அதிக அளவில் பெற முடிந்தது.

கலப்பின காளைகள் உற்பத்தி மற்றும் அதற்குத் தேவையான இதர அபிவிருத்திப் பணிகளினாலும் மாநிலத்தில் தொடர்ந்து பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. பால் உற்பத்தி மதிப்பீட்டின்படி, 1989-90-ஆம் ஆண்டில் 34.10 இலட்சம் டன்னாக இருந்தது. 1995-96-ஆம் ஆண்டு 37.91 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. மொத்த பால் உற்பத்தியில் 62 சதவீதம் பசுவினம் மூலமும், 38 சதவீதம் எருமையினம் மூலமாகவும் கிடைக்கிறது.

ஆடு வளர்ப்பினை திறம்பட மேற்கொள்ள இத்துறை பல ஆடு வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதன்படி ஐரோப்பிய குழும உதவியுடன் கூடிய ஆடு வளர்ப்புத் திட்டம் மற்றும் டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ப்புத் திட்டம் ஆகியவைகளைச் செயல்படுத்தி வருகிறது. ஆடுகளின் தீவிர உடல்நலம் பேணும் திட்டத்தின் பயனாக ஆட்டின் உடல் எடை அதிகரித்து அதன் மூலம் இறைச்சி உற்பத்தியும் அதிகமாகிறது. இதன் பயனாக இறைச்சி உற்பத்தி 1989-90-ஆம் ஆண்டில் 373.57 இலட்சம் கிலோவாக இருந்தது 1995-96-ஆம் ஆண்டில் 402.67 இலட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் மொத்த இறைச்சி உற்பத்தியில், செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளின் இறைச்சி உற்பத்தி 63 சதவீதம் ஆகும். அதேபோல், முட்டை உற்பத்தி மதிப்பீடும் அதிகரித்துள்ளது. 1989-90-ஆம் ஆண்டு 246.10 கோடியிலிருந்து 1995-96-ஆம் ஆண்டு 304.90 கோடியாக உயர்ந்துள்ளது.

கால்நடைகளின் வாயிலாக கிடைக்கும் உணவுப் பொருட்களின் அளவு அதிகரித்துள்ளதால், தனி நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கும் பாலின் அளவும் கணிசமாக உயர்ந்துள்ளது.

1989-ஆம் ஆண்டு ஒரு நபருக்கு கிடைக்கும் பாலின் அளவு 169 கிராமாக இருந்தது, 1995-96-ல் 185 கிராமாகவும், அதே போல் 1989-90-ல் ஒரு ஆண்டில் ஒருவருக்கு கிடைக்கும் முட்டையின் அளவு 44 ஆக இருந்தது, 1995-96-ல் 54 முட்டைகளாகவும் உயர்ந்துள்ளது.





**பாகம்-2**

## கால்நடை மற்றும் கோழியின அபிவிருத்தி

### 1. ஆவின அபிவிருத்தி

*அ. கால்நடை எண்ணிக்கை:*

1994-ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி கால்நடைகளில் மாட்டினம் முதன்மையானதாகவும் (34.81%), வெள்ளாட்டினம் (22.81%) செம்மறியாட்டினம் (21.93%) எருமையினம் (12.01%) மற்ற இனங்கள் (8.45%) ஆகவும் உள்ளது. தமிழகத்தில் மாட்டினம் 92.72 இலட்சமாகவும், அதில் (44.79%) இனவிருத்திக்கு உகந்தவைகளாகவும், அதைப் போன்று 32 இலட்சம் எருமையினத்தில் 60.05% இனவிருத்திக்கு உகந்தவைகளாகும் உள்ளன.

கலப்பின கால்நடைகளின் உற்பத்தித் திட்டத்தினால் தனி மாட்டினம் மற்றும் எருமை இனத்தின் பால் உற்பத்தியின் அளவு கணிசமாக கூடியுள்ளது. கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்திருந்தும், உறைவிந்து தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தியதன் விளைவாக பால் உற்பத்தியின் அளவு அதிகரித்துள்ளது.

### ஆ. கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி:

தீவிர கால்நடை அபிவிருத்தியானது இதற்கு முன்னர் செயல்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முக்கிய திட்டமாகக் கருதப்பட்டு செயற்கை முறை இனவிருத்தி தொழில் நுட்பத்தைக் கொண்டு பசு மற்றும் எருமை இனங்களைப் பெருக்கி வந்தது. பசுக்கள் மற்றும் எருமை இனங்களின் வளர்ச்சிக்காக கால்நடை பராமரிப்புத் துறை தீவிர கால்நடை பெருக்குத் திட்டங்களையும், கேந்திர கிராமத் திட்டங்களையும் சில குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் கடந்த காலங்களில் செயல்படுத்தி வந்துள்ளது. அவை முன்னோடித் திட்டமாகக் கருதப்பட்டு உள்நாட்டில் பசு மற்றும் எருமையினங்களின் தரம் உயர்த்தப்பட்டு வந்துள்ளது. மேற்கண்ட திட்டங்களின் சாதனைகளைக் கருத்தில் கொண்டு தீவிர கால்நடை பெருக்குத் திட்டம் மற்றும் கேந்திர கிராமத் திட்டங்களை ஒருங்கிணைப்பு செய்து கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன உற்பத்திப் பணிகள் மாநிலம் முழுவதிலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 10

மாநிலத்தில் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி ஆகிய சிறப்புப் பணிகளை கவனிக்கும் பொருட்டு ஒரு துணை இயக்குனரின் தலைமையின்கீழ் 20 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### (1) இனவிருத்திக் கொள்கை:

மாநில அரசின் இனவிருத்திக் கொள்கை பின்வருமாறு:

(1) உள் நாட்டின் பசுக்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகியவைகள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில், தேர்ந்தெடுத்த முறையில் இனவிருத்தி செய்தல்.

(2) நாட்டினப் பசுக்களை அதிக அளவில் பால் தரக்கூடிய அயலின ஜெர்சி மற்றும் ப்ரிசியன் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனவிருத்தி செய்து தரம் உயர்த்துதல்.

(3) கிராமப்புறங்களில் உள்ள நாட்டின எருமைகளை முர்ரா வகை பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனவிருத்தி செய்து தரம் உயர்த்துதல்.

(4) கலப்பின பசுக்களை, கலப்பின பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

(5) நமது சீதோஷ்ண தட்பவெட்ப நிலைக்கு உகந்த இத்துறையில் மிகமிக முன்னேறிய இஸ்ரேல் போன்ற நாட்டு கால்நடை இனங்களின் விந்துவை வரவழைத்து கலப்பினங்களை உருவாக்குதல்.

தவிர பொதுக் கொள்கையாக இனவிருத்திக்காக கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லா சமவெளிப் பகுதிகளில் ஜெர்சி இன பொலிகாளைகளும், எல்லா மலைப் பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் ப்ரிசியன் இனக் காளைகளும் பயன்படுத்தப்படுகின்றன. தரம் வாய்ந்ததும் சத்துமிக்கதுமான தீவனங்கள் கிடைப்பதை கருத்தில் கொண்டு கறவை மாடுகளுக்கு சமவெளிப் பகுதிகளில் விந்தின் உபயோகம் அமைகிறது. தற்போது தேவைக்கேற்ப நகரப் பகுதிகளில் ப்ரிசியன் காளைகளின் விந்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவைகளின் மூலம் மாநிலத்தில் தரம் வாய்ந்த பசு மற்றும் எருமையின உற்பத்தியைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 10]

இத்துறையின் மூலம் கடைப்பிடிக்க வேண்டிய இனவிருத்திக் கொள்கை, உறைவிந்து தொழில் நுட்பம் சம்பந்தமாக தகுந்த ஆலோசனை கூற இம்மாநிலத்திலும், மற்ற மாநிலங்களிலிருந்தும், திறமையான அங்கத்தினர்களைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இக்குழு கூடுகிறது. நீண்ட காலத் திட்டங்கள் கால்நடை உற்பத்திக்காக தயாரிக்கப்பட்டு அதன்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது..

### (2) செயற்கை முறை கருவூட்டல்:

இத்துறையின் மூலம் சென்னையில் செயற்கை முறை கருவூட்டல் பணி 1948ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் தேதி முதற்கட்டமாக திரவ விந்து மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் உறைவிந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி 1975ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது மாநிலம் முழுமையும் உள்ள 3,510 செயற்கை முறை இனவிருத்தி நிலையங்கள் மூலமாக நவீன, விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியில் உறைவிந்து மூலம் கருவூட்டல் பணி நடைபெற்று வருகிறது.

### (3) உறைவிந்து உற்பத்தி:

உறைவிந்து தொழில் நுட்பத்தின் மூலம் கால்நடைகளுக்கு தரமிக்க வம்சாவழியைத் தோற்றுவிக்க வகை ஏற்படுகிறது. நான்கு உறை விந்து உற்பத்தி நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டு, உறைவிந்து உற்பத்தி செய்யப்படுகிறது. திரவ நைட்ரஜனும் இந்நிலையங்களில் உற்பத்தி செய்ய ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்தை இந்நிலையங்களில் உறைய வைத்து சேகரித்து வைக்கப்படுகிறது.

கீழ்க்கண்ட நான்கு இடங்களில் உறைவிந்து தயாரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன:

1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
2. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டம்)
3. ஓசூர் (தருமபுரி மாவட்டம்)
4. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

இந்த உறைவிந்து நிலையங்களில் உறைவிந்து சேகரிக்கும் பொருட்டு, தரம் மிகுந்த அயலின காளையினங்கள் நன்கு பராமரித்து பேணி

பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்து குச்சிகள் உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட 12 உறைவிந்து சேமிப்பு வங்கிகளில் சேமித்து வைத்து, தமிழகத்தில் உள்ள அனைத்து செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

1996-97 (31-01-1997 உடன் முடிந்த) காலத்தில் 12.99 இலட்சம் டோஸஸ் உறைவிந்து குச்சிகளும், 1.41 லட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜனும் மேற்படி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**(4) தீவன அபிவிருத்தி:**

நல்ல பசுந்தீவனம் உற்பத்தியே தரமான, மலிவான பால் உற்பத்திக்கு அடிப்படையாகும். இத்துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் கலப்பின கால்நடை வளர்ப்புத் திட்டமானது, பசுந்தீவன உற்பத்தி இல்லையெனில், நல்ல பலனைத் தராது. இதன்பொருட்டு இத்துறை மாநிலத்தில் பல்வேறு இடங்களில் தீவன அபிவிருத்தித் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. உணவு வகை பயிர்களை விட, குறைந்த கவனம் செலுத்தினால் ஆண்டு முழுவதும் பலன் தரக்கூடிய பலவகைப்பட்ட தீவனப்பயிர்கள் உள்ளன. போக்குவரத்து மற்றும் இதர வகை செலவுகளைக் குறைக்கும் பொருட்டு, கால்நடைப்பண்ணை அருகே தீவனப் பயிர்களை வளர்க்க ஆலோசனை கூறப்படுகிறது. இதனால் கால்நடைகளுக்கு ஆகும் தீவனச் செலவு மிகவும் குறைகிறது. ஆகவே மாநிலத்தில் அநேக விவசாயிகள் தீவனப்பயிர் பெருக்கு உற்பத்தியை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். மேம்படுத்தப்பட்ட புல்வகைகள், பயிறு மற்றும் தீவன மரக்கன்றுகள் அறிமுகப்படுத்தப்பட்டு அதனால் சத்துள்ள தீவனப் புல் பயிர்களை உற்பத்தி செய்து அதன்மூலம் பால் உற்பத்தி செலவினைக் குறைக்க வழிவகைகள் உண்டாகிறது.

கீழ்க்கண்ட இடங்களில் தீவனப்பயிர் விதை உற்பத்தி நிலையங்கள் இயங்குகின்றன:

1. படப்பை (அண்ணா மாவட்டம்)
2. திருநெல்வேலி (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்)
3. ஈச்சங்-கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
4. புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்)



5. செட்டிநாடு (பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டம்)
6. ஓசூர் (தருமபுரி மாவட்டம்)
7. சின்னசேலம் (விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம்)

உலக வங்கித் திட்டத்தின் கீழ், தீவனப்பயிர் திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டு, விவசாயிகளின் நிலங்களிலேயே தீவனப் பணிக்காக மாதிரி தளைகள் அமைக்கப்பட்டுள்ளன. சாலையோரங்களில் வறட்சியைத் தாங்கக்ககூடிய புல் விதைகளை விதைத்து, தீவனப்பயிர் உற்பத்திக்கான இடுபொருட்களான விதைகள், நாற்றுகள், புல்கரணைகள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட காரணங்களுக்காக வறட்சியைத் தாங்கக்கூடிய புல் விதைகள் ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து 587 கிலோ ரூ. 3.75 இலட்சம் செலவில் இறக்குமதி செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இது 170 மெட்ரிக் டன் விதைகள் உள்நாட்டிலிருந்து வாங்கியது நீங்கலாகும். 1996-97ஆம் ஆண்டில் 140.00 இலட்சம் புல்கரணைகளும் 104.00 மெட்ரிக் டன் புல் மற்றும் பயறு வகைகளும் 29.90 இலட்சம் மரக்கன்றுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## இ. திட்டங்கள்:

**(1) உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டம் மிகப்பெரிய அளவில் உலக வங்கி நிதி உதவியுடன் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 1991-92ஆம் ஆண்டு முதல் ரூ.46.62 கோடி செலவில் ஏழு ஆண்டுகளுக்கு இத்திட்டம் மாநிலம் முழுமையும் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் அடிப்படையான் குறிக்கோள், இந்த மாநிலத்திற்கு ஏற்ற கால்நடை உற்பத்தி முறைகளை மேம்படுத்துதல் ஆகும். இத்திட்டத்தின் ஒருபகுதி, சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேற்றவாறு உணவு உற்பத்தியை அதிகமாக்குதல் ஆகும். இத்திட்டம் கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குதல் மற்றும் பால் உற்பத்தித் தொழிலை அரசு தகுந்த முறையில் மேற்பார்வையிடவும், உதவி அளிக்கவும் தகுந்த வழிவகை செய்கிறது.

[1997 ஏப்ரல் 10

இத்திட்டத்தின் குறிக்கோள்கள் :

1. நிலையான உயரின கால்நடைகளை உற்பத்தி செய்வதற்கு சரியான வாய்ப்பு வளங்களையும் உரிய செயல் திறமைகளையும் செலுத்துவதன் மூலம் இலட்சியத்தை அடையலாம்.
2. தீவன உணவு உற்பத்தி அதிகரித்தல், சேமித்தல், உபயோகித்தல் போன்றவைகளில் கையாளப்படும் மேம்பாட்டு முறைகளை ஆதரித்தல் மற்றும் முன்னேற்றுதல்.
3. தகுந்த காலங்களில் கொள்ளை நோய்களைக் கண்டறிந்து, அதனை பொருளாதார ரீதியில், நோய் தடுக்கும் முறைகளை மேற்கொள்ளுமாறு கால்நடை நலப்பணிகளை மாற்றியமைத்தல்.
4. இத்துறையில் உள்ள உள்ளிருப்பு வசதிகளை பலப்படுத்தி, தொழில் அபிவிருத்தியை விவசாயிகளுக்கு கற்பித்தல்.

## 1996-97ஆம் ஆண்டு ஆற்றிய பணிகள்:

அ. 2,000 டோஸ் கலப்பின காளையின் உறைவிந்து உதகமண்டலம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பததி இணையத்திலிருந்து வாங்கப்பட்டது.

ஆ. கருவுற்ற 20 எருமையினங்கள் மற்றும் 9 கலப்பின காளைகள் வாங்கப்பட்டன.

இ. 35 லிட்டர் கொள்ளளவுள்ள திரவ நைட்ரஜன் குடுவைகள் 906 செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களில் உள்ளிருப்பு வசதியைப் பெருக்கும் நோக்குடன் வாங்கப்பட்டது.

ஈ. தீவனப் பெருக்கத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகள் அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும் நோக்குடன் துண்டு பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

உ. ஆஸ்திரேலிய தொழில் நுட்ப வல்லுநர்கள் அளிக்கும் பயிற்சியைத் தவிர, நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஊ. தீவனப் பெருக்கத்திற்கு விவசாயிகள் பலவகைப்பட்ட தீவனப்புல் விதைகள் பயிரிடும் வகையில் 170 மெட்ரிக் டன் விதைகள் ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து வாங்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன. ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து



1997 ஏப்ரல் 10]

பலவகையான 587 கிலோ புல்விதைகள் தீவனப் பெருக்கத்திற்கும் ஆராய்ச்சிக்கும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எ. 750 எண்ணிக்கை கொண்ட செயற்கை முறை கருவூட்டல் கிடுக்கி 3 லிட்டர் கொள்ளளவுள்ள 200 எண்ணிக்கையும், 500 லிட்டர் கொள்ளளவு உள்ள 4 எண்ணிக்கையிலும், திரவ நைட்ரஜன் குடுவைகள், 2 எண்ணிக்கை கொண்ட டிஜிட்டல் போட்டோ மீட்டர்கள் ஆகியவைகள் செயற்கை முறை கருவூட்டல் பணிக்காக வாங்கப்பட்டன.

## 1997-98 ஆம் ஆண்டிற்கான செயலாக்கத்திட்டம்:

1997-98 ஆம் ஆண்டில் பசு மற்றும் எருமையினம் ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தீவன அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், கீழ்க்குறிக்கப்பட்ட சில முக்கிய பணிகள் 1997-98 ஆம் ஆண்டில் செயல்படுத்த வேண்டிய வகையில் உலக வங்கித் திட்ட நிதி ஒதுக்கீட்டின் அங்கீகாரத்துடன் அதற்கான நிறுவனத்திடம் ஒப்புதல் பெறப்பட்டது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | உறைவிந்து உற்பத்தி, செயற்கை முறை இனவிருத்தி செயல்படுத்துவதற்கான செலவினங்கள் | 125.00 |
| 2. | செயற்கை முறை இனவிருத்தித் திட்டம்– கிளைநிலைய அபிவிருத்தி | 28.00 |
| 3. | ஈச்சங்கோட்டை/ஒரத்தநாடு பண்ணைகள் வளர்ச்சிப் பணிக்காக | 15.00 |
| 4. | ஓசூர் பண்ணை வளர்ச்சிப் பணிக்காக | 16.00 |
| 5. | பசுந்தீவன முறை உற்பத்திப் பெருக்கத்திற்காக | 84.00 |
| 6. | விதை உற்பத்தியாளர்களிடமிருந்து விதைகள் வாங்க | 75.00 |
| 7. | கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடைகள் பராமரிப்பு முன்னேற்றத்திற்காக | 32.00 |
| 8. | கால்நடை நோய் புலனாய்வு மற்றும் கால்நடை தொற்று நோய் புலனாய்வு | 50.00 |
| | மொத்தம் | 425.00 |

[1997 ஏப்ரல் 10

**(2) உலக வங்கி உதவியுடன் கால்நடை பராமரிப்பில் விவசாய மனிதவள மேம்பாடு:**

இத்துறையில் 1995-96ஆம் ஆண்டு முதல் 366.29 இலட்சம் செலவில் உலகவங்கி நிதி உதவியுடன் 5 வருட காலத்திற்கு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

1996-97ஆம் ஆண்டிற்கு ரூபாய் 122.47 இலட்சத்திற்கு திட்டம் செயல்படுத்த அங்கீகரிக்கப்பட்டது. இதில் ரூ.0.55 இலட்சம் திட்டத்திற்காக செலவிடப்பட்டது. மீதமுள்ள தொகையில் பயிற்சி நிலைய கட்டிடம் கட்டுவதற்கும், அறையணிகள் மற்றும் விரிவாக்க சாதனங்கள் பயிற்சிப் பணிக்காக வாங்குவதற்கும், இத்திட்டத்தில் செலவிடப்பட உள்ளது.

**1997-98 ஆம் ஆண்டுக்கான செயல்முறை திட்டம்:**

1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.35.24 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | ரூபாய் இலட்சத்தில். |
|---|---|---|
| 1. | ஈச்சங்கோட்டை, ஒசூர் மற்றும் அபிசேகப்பட்டியிலுள்ள செயற்கை முறை இனவிருத்தி நிலையங்களை விரிவுபடுத்த | 0.65 |
| 2. | ஒசூரில் மாநில அளவிலான பயிற்சி நிலையம் ஏற்படுத்த | 21.09 |
| 3. | பயிற்சி அளிக்கத் தேவையான இனங்களைக் கணிக்க இயக்குநரகத்தில் பணியாற்றும் பிரிவின் உபயோகத்திற்கு | 13.50 |
| | மொத்தம் | **35.24** |

**(3) டேனிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்:**

புதுக்கோட்டையில் வளர்ச்சி பெற்று வரும் அபிவிருத்தித் திட்டத்தில், தம்பதிகள் தொடர் பணியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தீவன அபிவிருத்தி மற்றும் கால்நடை பராமரிப்பு



1997 ஏப்ரல் 10]

நடைமுறைகள் பற்றிய விவரங்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்கள், அந்தப் பயிற்சிகளை மற்ற கிராம மக்களுக்குத் தெரிவிக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அன்னவாசல், குன்னாண்டார் கோவில் மற்றும் விராலிமலை ஆகிய 3 பகுதிகளில் 1-8-1990 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்களுக்கு கூடுதலான வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி அதன்மூலம் அதிக வருவாயை பெருக்கிடவும் மற்றும் தற்போதைய நவீன கால்நடை பராமரிப்பு தொழில் நுட்ப உத்திகளை கையாள்வதின் மூலம், நல்ல வருவாய் கிடைக்கச் செய்வதும் ஆகும். இத்திட்டத்தின் சிறப்பு அம்சமானது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தொடர் தம்பதிகளுக்கு கால்நடை பராமரிப்பு, தீவன அபிவிருத்தி மற்றும் தீவன சேமிப்பு ஆகியவற்றில் தகுந்த தொழில்நுட்ப விரிவாக்கப் பயிற்சி அளிப்பதாகும். பயிற்சி முடிந்த பின்பு, மேற்படி தொடர் தம்பதியர்கள் கிராம மக்களை கால்நடை வளர்ப்பில் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றிட முன்மாதிரியாகவும் இருப்பார்கள். இதற்கான தகுந்த அனைத்து உதவிகளையும் மனித வள மேம்பாட்டுத் துறையின் மூலமாக அவர்கள் பெறுவார்கள்.

இத்தொடர் பணியாளர்கள், கால்நடை பராமரிப்புத் துறையின் நவீன, தொழில் நுட்பங்கள் குறித்து குறியீடு நிர்ணயித்துள்ள, வேளாண் பெருங்குடி மக்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சி அளிப்பார்கள்.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன—

| | | |
|---|---|---|
| 1. | பயிற்சி அளிக்கப்பட்ட தொடர் தம்பதியர்கள் | 314 |
| 2. | தொடர் பணியாளர்களாக பணியாற்றிய வேளாண் குடிமக்கள் | 7,526 |
| 3. | தொடர் பணியாளர்களுக்காக நடத்தப்பட்ட கருத்தரங்கு | 147 |
| 4. | தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு ஒரு நாள் கூட்டம் நடத்தப்பட்டது | 4,602 |
| 5. | பசுந்தீவன மரங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டது | 1,49,272 |
| 6. | பசுந்தீவன புல் நாற்றுகள் விநியோகிக்கப்பட்டது | 4,16,000 |
| 7. | புல் தீவன விதைகள் வழங்கப்பட்டது. | 16,435 கிலோ. |

[1997 ஏப்ரல் 10

இத்திட்டத்தின் வெற்றிகரமான செயலாக்கத்தினைப் பாராட்டி டேனிடா இரண்டாவது கட்டமாக 46 பஞ்சாயத்து ஒன்றியங்கள் அடங்கிய 4 மாவட்டங்களுக்கு ரூ. 27.50 கோடி செலவில் பிப்ரவரி 97 முதல் 7 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

### ஈ. கால்நடைப் பண்ணைகள்:

கால்நடைப் பண்ணைகளில், தரம் உயர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியல் ரீதியான மற்றும் அயலினக் காளைகளைக் கொண்டு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த காளைகள் உற்பத்தி செய்யப்பட்டு, அவைகள், மக்களுக்கு செயல்விளக்கப் பண்ணைகளாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் தற்போது 7 கால்நடைப் பண்ணைகளும், ஒரு அயலினக் கால்நடைப் பெருக்குப் பண்ணையும் உள்ளது. அவைகள் பின்வருமாறு:—

1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர், தர்மபுரி மாவட்டம்.
2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
3. மாவட்டக் கால்நடைப் பண்ணை ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.
4. மாவட்டக் கால்நடைப் பண்ணை கொருக்கை, நாகை-காயிதேமில்லத் மாவட்டம்.
5. மாவட்டக் கால்நடைப் பண்ணை. அபிசேகப்பட்டி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.
6. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு, பசும்பொன்-முத்துராமலிங்க தேவர் மாவட்டம்.
7. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.
8. அயலினக் கால்நடைப் பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

ஒரத்தநாடு மற்றும் அபிசேகப்பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் முர்ரா வகை எருமையினம் மற்றும் உதகமண்டலம் பண்ணையில் ப்ரிசியன் பசுவினமும், ஈச்சங்கோட்டைப் பண்ணையில்



1997 ஏப்ரல் 10]

ஜெர்சி பசுவின வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறந்த தரம் வாய்ந்த உயரினக் கால்நடைகளை வளர்ப்பதிலும், சிறந்த உள்நாட்டினங்களைக் காப்பதில் ஆர்வம் கொள்ள உம்பளாச்சேரி இனத்தை கொருக்கைப் பண்ணையிலும் சிந்தி மற்றும் காங்கேயம் இனங்கள் ஓசூர் பண்ணையிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

சிந்தி இன வம்சாவழி ஆய்வு. ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும். முர்ரா எருமை இன வம்சாவழி ஆய்வு ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஓசூர், செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை பண்ணைகளில் சிந்தி கலப்பினக் காளைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உள்நாட்டு இனங்களில் கலப்பினக் காளைகளின் தரம் உயர்த்தப்படுவதால், நோய் எதிர்ப்பு சக்தியும் உற்பத்தித் திறனும் அதிகரிக்கப்படுகிறது. உட்கரு மாற்றம் தொழில் நுட்பம் இத்துறையினரால் கையாளப்படுகிறது. இதன்படி இரு உட்கரு மாற்றப் பிரிவுகள் ஈச்சங்கோட்டை மற்றும் ஓசூர் கால்நடைப் பண்ணைகளிலும் இயங்கி வருகிறது.

### 2. செம்மறி ஆடு அபிவிருத்தி:

செம்மறியாடு வளர்ப்பு இம்மாநிலத்தில், ஏழை விவசாயிகளிடம் மிகவும் பிரபலமடைந்துள்ளது. வேளாண்மை தொழிலுக்கு உபதொழிலாகவும், உபரி வருமானமாகவும். கிராமப்புற பொருளாதாரத்தில் ஆடு வளர்ப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, ஏழை விவசாயிகள் ஆடுகளை வாங்கி வளர்க்கக் கால்நடை பராமரிப்புத்துறை பல்வேறு செம்மறியாட்டு வளர்ப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### (1) ஆட்டுப் பண்ணைகள்.

கால்நடை பராமரிப்புத்துறை, சின்னசேலம் (விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம்), சாத்தூர் (காமராஜர் மாவட்டம்) மற்றும் முகுந்தராயபுரம் (வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம்) ஆகிய மூன்று இடங்களில் ஆட்டுப் பண்ணைகளையும் ஓசூர், புதுக்கோட்டை செட்டிநாடு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் தனியே 4 ஆடு வளர்ப்புப் பிரிவுகளையும் பராமரித்து வருகிறது. இங்கு உள்நாட்டு இனங்களான சென்னை சிவப்பு, மேச்சேரி, இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், மாண்டியா மற்றும் வேம்பூர் ஆகிய செம்மறியாடுகள் வளர்க்கப்பட்டு, தேர்ந்த

[1997 ஏப்ரல் 10

இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்டுக்கிடாக்களும், பெட்டைகளும், தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் உள்ள விவசாயிகளுக்கு, நாட்டின ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு வழங்கப்படுகின்றன.

**(2) செம்மறி ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் :**

ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்கு தக்க காலத்தில் இடு பொருள்கள் கிடைப்பதற்கும் பொருள் உதவிக்கும் தமிழ் நாட்டில் பல்வேறு பாகங்களில் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1,728 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களில் 941 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(3) ஐரோப்பிய பொருளாதார குழும நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஆடு வளர்ப்புத் திட்டம்:**

ஐரோப்பிய குழும நிதி உதவியுடன் கூடிய ஆடு வளர்ப்புத் திட்டம் தமிழகத்திலுள்ள அண்ணா, எம்.ஜி.ஆர். வட ஆற்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், தென்னாற்காடு-வள்ளலார், விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார், சேலம்-இராஜாஜி மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 13.67 கோடியில், இத்திட்டம் 19-5-1989 முதல் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் குறிக்கோள்கள்:

1. இறைச்சி உற்பத்தியைப் பெருக்குதல்
2. ஆடு வளர்ப்போரின் வருவாயை உயர்த்துதல்
3. சமுக மேய்ச்சல் நிலங்களை மேலும் தரிசு ஆகாமல் தவிர்த்தல்
4. பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குதல்.

இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட பின்பு, திட்ட செயலாக்கப் பகுதிகளிலுள்ள செம்மறி ஆடுகளின், பிறப்பு எடை தாயிடமிருந்து பிரிக்கப்பட்ட குட்டிகளின் எடை மற்றும் பெரிய குட்டிகளின் எடை அதிகரித்துள்ளது.

இத்திட்டப் பகுதிகளில், இனப்பெருக்க சதவிகிதம் அதிகரித்தும், செம்மறி ஆட்டுக்குட்டிகளின் இறப்பு விகிதம் குறைந்தும் உள்ளது. இதனால் திட்டப் பகுதியிலுள்ள செம்மறி ஆட்டு விவசாயிகளுக்குக் கூடுதலான வருமானம் கிடைக்கிறது. இத்திட்டத்தின் வெற்றிகரமான



1997 ஏப்ரல் 10]

செயலாக்கத்தினால், ஐரோப்பிய குழுமம் இத்திட்டத்தினை ஏப்ரல் 1997 முதல் கூடுதல் தொகை ரூ. 9.67 கோடி செலவில் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்க பரிசீலனை செய்து வருகிறது. அதனுடைய முடிவான அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தில் 1996-97-இல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டன:—

| | | எண்ணிக்கையில் |
|---|---|---|
| 1. | குடற்புழு நீக்கம் செய்யப்பட்டவை | 50,62,930 |
| 2. | பார்வையிடப்பட்ட ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 3,530 |
| 3. | பார்வையிடப்பட்ட கிராமங்கள் | 43,645 |
| 4. | தடுப்பூசி போடப்பட்டது | 5,34,537 |
| 5. | பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | 3,40,341 |
| 6. | பயணம் மேற்கொண்டு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் | 3,42,965 |
| 7. | சூபாபுல் தீவன மரக்கன்றுகள் விநியோகம் | 6,38,666 |
| 8. | தீவனப் பாத்திகள் ஏற்படுத்தப்பட்டது | 462 |
| 9. | ஆடுவளர்ப்பு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டவை | 7.248 |
| 10. | பயிற்சி பெற்ற நபர்கள் | 58,108 |
| 11. | உண்ணி நீக்கம் செய்யப்பட்ட ஆடுகள் | 6,78,621 |
| 12. | ஆடு கொட்டகைகளில் உண்ணி நீக்கம் செய்யப்பட்டது | 13,112 |
| 13. | ஆண்மை நீக்கம் செய்யப்பட்ட கிடாக்குட்டிகள் | 5,568 |
| 14. | குடற்புழு நீக்கம் மூலமாக வசூலிக்கப்பட்ட தொகை | ரூ. 8.65 (இலட்சங்கள்.) |

[1997 ஏப்ரல் 10

**(4) செம்மறி ஆடுகளுக்கு தீவிர மருத்துவ நலப் பணி:**

செம்மறியாடுகளின் உடல் கூறுகளில் ஏற்படும் இடையூறுகளினால் எடை இழப்பு ஏற்படுகிறது. அதன் காரணமாக விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு ஏழை விவசாயிகள் பராமரிக்கும் செம்மறி ஆடுகளுக்கு இத்துறையின் மூலம் தீவிர நலம் பேணும் முறையின்கீழ் குடற்புழு நீக்கம் முறையாகச் செய்யப்படுகிறது.

சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் நாகை-காயிதேமில்லத் மாவட்டங்கள் தவிர, தமிழ்நாட்டில் ஏனைய அனைத்து மாவட்டங்களிலும், இத்திட்டம் 1982-83 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1996-97ஆம் ஆண்டில் 31-1-1997 உடன் முடிவடைந்த காலத்திற்கு 17 இலட்சம் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**3. வெள்ளாட்டுப் பெருக்கம்:**

தமிழ்நாட்டில் வெள்ளாட்டு வளர்ப்பு, விவசாயிகளிடையே அதிக ஆர்வம் காட்டப்பட்டு வருகிறது. சில விவசாயிகள் வெள்ளாடுகளைக் கொட்டில் முறையில் தீவிரமாக வளர்த்து வருகின்றனர். இறைச்சி மற்றும் பால் உற்பத்தித் திறன் உள்நாட்டு வெள்ளாடுகளில் குறைவாக இருப்பதால் கால்நடை பராமரிப்புத் துறை ஜமுனாபாரி வெள்ளாட்டு இனங்களை சின்னசேலம் ஆட்டுப் பண்ணையிலும், செட்டிநாடு மற்றும் கொருக்கை கால்நடை பண்ணையிலும் மற்றும் சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்திலும் இனப்பெருக்கத்திற்காக வளர்த்து வருகிறது. புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகள் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன. வம்சாவழி முறையில் பெறப்படும் வெள்ளாடுகள் உள்நாட்டில் வெள்ளாடுகளின் பால் மற்றும் இறைச்சியின் தரம் உயர்த்த அவை தமிழக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. தென் மாவட்ட உள் நாட்டினங்களான கொடி ஆடு, கன்னி ஆடு ஆகியவை ஜமுனாபாரி மற்றும் தெல்லிச்சேரி இனங்களுக்கு இணையானது. இவ்வினங்களை சேகரிப்பு செய்து அழியாமல் பாதுகாக்கவும், கால்நடைப் பண்ணைகளில் நன்கு பராமரித்து வளர்க்கப்படுகின்றன.

**4. பன்றி இனப்பெருக்கம்:**

பன்றி வளர்ப்பு கிராமங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஏழை குடும்பங்களுக்கு உபரி வருமானத்தை அளிக்கிறது.



1997 ஏப்ரல் 10]

நாட்டு பன்றிகளின் இறைச்சி உற்பத்தித் திறன் குறைவாக உள்ளதால் கால்நடை பராமரிப்புத்துறை சென்னை சைதாப்பேட்டையிலும், ஓசூர், அபிசேகப்பட்டி, செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை கால்நடைப பண்ணைகளிலும் லார்ஜ் ஒயிட் யார்க்ஷையர் இனப் பன்றிகளை இனப்பெருக்கம் செய்து வருகிறது. உள்நாட்டின பன்றிகளின் தரத்தினை உயர்த்த விவசாயிகளுக்கு இப்பிரிவுகளிலிருந்து பன்றிகள் வழங்கப்படுகின்றன. 1996-97ல் மேற்படி 5 இடங்களில் பன்றிப் பிரிவுகளை வலுப்படுத்த ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உயரின பன்றிகள் பன்றிப் பிரிவுகளுக்கு வழங்குவதற்காக வெளிமாநிலத்திலிருந்து வாங்கப்பட்டு, மேற்கண்ட ஐந்து பன்றி பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**5. முயல் அபிவிருத்தி:**

பொதுமக்களிடம் முயல் வளர்ப்பினை பிரபலப்படுத்தவும், முயல் கறியினை ஊக்கப்படுத்தவும், உரோம அபிவிருத்தியைப் பெருக்கவும் சென்னை சைதாப்பேட்டையிலும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் எஸ்.வி. நகரம் கோழி விஸ்தரிப்பு நிலையத்திலும் முயல் வளர்ப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. 1996-97-ல் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 500 அலகுகள் 500 பழங்குடியினர் குடும்பங்கள் பலனடையும் பொருட்டு நிறுவப்பட்டன.

**6. நாய் வளர்ப்பு**

தமிழ்நாட்டில் உள்ளூர் இனங்களான கோம்பை மற்றும் இராஜபாளையம் நாய்களை வளர்ப்பதற்கு சென்னை, சைதாப்பேட்டையில் 1980-81-ல் நாய் வளர்ப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. பொதுமக்களின் தேவைக்கு ஏற்ப, மற்றைய இனங்களான லாப்ரடார், கூலி மற்றும் பாபர்மேன் நாய்கள் . புலன் கண்டுபிடிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு என 1994-95-ல் இருந்து வளர்க்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த இனங்களின் குட்டிகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதுவரை 436 குட்டிகள் இப்பிரிவின் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**7. கோழி இனப்பெருக்கம்:**

கோழி வளர்ப்பு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பும், வருமானமும் தரக்கூடிய முக்கிய தொழிலாகும், வர்த்தக ரீதியாக கோழிப் பண்ணைகள்

[1997 ஏப்ரல் 10

மாநிலத்தில் முக்கிய அங்கம் வகிக்கிறது. கிராமப்புறங்களில் 6 முதல் 10 கோழிகள் வரை வளர்த்து, குறைந்த செலவில் வீட்டிற்குத் தேவையான இறைச்சி மற்றும் முட்டைகளை அவர்களே பெறுகின்றனர்.

கிராமப்புறங்களில் உள்ள கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ள பெண்களுக்கு, நவீன தொழில்நுட்ப முறைகளில் கோழி வளர்ப்பு பற்றிய பயிற்சி அளிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்படி கோழி வளர்ப்பு அதிகம் உள்ள தருமபுரி, பெரியார், சேலம் மற்றும் இராஜாஜி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 600 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

'அசில்' இனக் கோழிகள், கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம் மற்றும் மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் ஆகிய இடங்களில் வளர்க்கப்பட்டு, தரமான கோழிகளைப் பெருக்கவும், முட்டையிடும் அளவினை உள்நாட்டினங்களில் அதிகப்படுத்தவும் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

ஓசூர் (தருமபுரி மாவட்டம்) மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும், காட்டுப்பாக்கம் (அண்ணா மாவட்டம்) ஆகிய 2 இடங்களில் கோழி குஞ்சு பொரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. 1996-97-ம் ஆண்டில் 20,000 ஆதி திராவிட குடும்பங்கள் பயனடையும் வகையில் 'கிரி ராஜா' மற்றும் 'அசில்' நாட்டின கோழிகளை சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது, மற்றும் 1,000 கொல்லைப்புற கோழி அலகுகள் ஒருங்கிணைந்த பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளன.

கோழியினங்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து கோழி நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை பற்றி விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விவரித்து விவசாயிகள் பயனடைய தக்க வகையில் பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டிலும், சேலம் மாவட்டத்தில் ஆண்டலூர்கேட்டிலும் கோழி நோய்கள் கண்டறியும் புலனாய்வுக் கூடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டில், (31-1-1997 உடன் முடிந்த காலத்தில்) 774 கிராமங்களிலுள்ள 1,603 கோழிப் பண்ணைகளுக்கு அதிகாரிகள் சென்று பார்வையிட்டு நோய் கண்டறியும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.



1997 ஏப்ரல் 10]

## 8. சிறப்புத் திட்டங்கள்

### (1) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மலையின் இயற்கைசூழலை பாதிக்காவண்ணம் அம்மாவட்ட மக்களின் தரத்தினை உயர்த்தவும், நீலகிரி மாவட்டத்தில் 1975-ம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய உதவித் திட்டம் ஒன்று, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கன்று மற்றும் ஆடு வளர்ப்பு போன்ற தனி நபர் பயனடையும் திட்டங்கள் இத்திட்டத்திற்குள் அடங்கும்

உறைவிந்து உற்பத்தி நிலையம் நிறுவுதல், உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தீவன உற்பத்திக்காக உள்ளமைப்பு வசதிகள் செய்து தருதல், நோய் கண்டறியும் வசதிகளை மேம்படுத்த கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு ஒன்று உதகமண்டலத்தில் நிறுவுதல், கால்நடை மருந்தகம், கிளை நிலையம் கட்டுதல் மற்றும் நடமாடும் கால்நடைப் பிரிவுகளை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளின் மூலம் இத்திட்டம் அதிக அளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மூன்று கால்நடை மருந்தகங்களுக்கான புற நோயாளி பிரிவு கட்டிடங்களும், ஒரு கால்நடை மருந்தகத்திற்கான கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலத்தில் உள்ள உறைவிந்து தயாரிப்பு நிலையத்திற்கான அடிப்படை வசதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. 1996-97ஆம் ஆண்டில் கோத்தகிரி மற்றும் கூடலூர் நடமாடும் கால்நடை பிரிவினை வலுப்படுத்த ரூ.0.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (2) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:

1981-ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் காமராஜர் மாவட்டத்திலுள்ள 24 தாலுகாக்களில், சுற்றுப்புற சூழல் பாதிக்காவண்ணம் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பசுந்தீவனப் புல்நாற்றுகள், பசுந்தீவன மரக்கன்றுகள் மற்றும் பசுந்தீவன விதைகள் ஆகியவைகளை வழங்குதல், கால்நடை மருத்துவ நிலையங்களை ஒட்டிய காலியாக உள்ள நிலங்களில் தீவன வளர்ச்சியைப் பெருக்குதல், மேலே குறிப்பிட்ட 24 தாலுக்காக்களை உள்ளடக்கிய கால்நடை மற்றும் ஆட்டினப் பண்ணைகளின் உள்ளிருப்பு

வசதிகளை மேம்படுத்தி தீவனப் பெருக்கம் செய்தல் ஆகிய பணிகள் அடங்கும். உரிய நிதி உதவி செய்வதன் மூலம், பண்ணையின் அடிப்படை வசதிகளை வலுப்படுத்திக் கொள்வதும் குறிக்கோளாகும்.

இத்திட்டத்திற்கென 1996-97-ம் ஆண்டில் ரூ.10.31 இலட்சம் செலவில் நடைமுறையிலுள்ள திட்டங்களைச் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (3) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டம் கால்நடை பராமரிப்புத் துறையினால் 1976 முதல் சேலம், இராஜாஜி, தர்மபுரி, வட ஆற்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், திருச்சி-பெரும்பிடுகு முத்தரையர் ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினரின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மலைப்பகுதியில் வாழும் இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள பழங்குடியினருக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது.

1996-97-ம் ஆண்டில் ரூ. 81.58 இலட்சம் செலவில் 2,300 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடைய கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:

1. கறவை மாடு வளர்ப்பிற்கு
2. செம்மறியாடு வளர்ப்பிற்கு
3. கொல்லைப்புற கோழி வளர்ப்பிற்கு
4. முயல் வளர்ப்பிற்கு

இது தவிர 9 கால்நடை மருந்தகங்கள், 9 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் மற்றும் 3 கிளை நிலையங்களின் மூலம் இப்பகுதியில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு மருத்துவ வசதியும், பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணியும் இலவசமாக செய்யப்படுகின்றன.





### (4) சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம்:

இத்திட்டம் 1983ஆம் ஆண்டு முதல், இந்து ஆதி திராவிடர் சமூகத்தினருக்கென செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

இத்திட்டத்தில் பயன்பெறும் ஒவ்வொரு பயனாளிக்கும் 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. கால்நடைகளின் நலப் பணியின் அங்கங்களான தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம் குறித்தகாலத்தில் செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலமாக கீழ்க்கண்ட திட்டங்கள் ரூ.876.70 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

| | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | குஞ்சு பொரிப்பகம் ஏற்படுத்துதல் | 4 |
| 2. | செம்மறியாடு அலகு ஏற்படுத்துதல் | 70 |
| 3. | வெள்ளாடு அலகு ஏற்படுத்துதல் | 135 |
| 4. | கலப்பின கன்று வளர்ப்புத் திட்டம் | 5,400 |
| 5. | வேலையில்லா கால்நடை பட்டதாரிகளுக்கு தனியார் கால்நடை மருந்தகம் அமைத்தல் | 10 |
| 6. | சுய வேலை வாய்ப்பில் செயற்கை முறை கருவூட்டல் பணி செய்ய இந்து ஆதி திராவிடர் பெண்களுக்கு பயிற்சியளித்தல் | 300 |
| 7. | கிரிராஜா கோழியினக் குஞ்சுகள் | 10,000 |
| 8. | அசில் இனக் கோழிக் குஞ்சுகள் | 10,000 |
| | மொத்தம் | **25,919** |

[1997 ஏப்ரல் 10

## (ஊ) மாதிரி வரைவுத் திட்டம்:

மாதிரி அளவீட்டுத் திட்டம் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் 1977-78ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியில் அளவீடுகள் பருவ வாரியாக, வருடந்தோறும் தொடர்ந்து கணக்கெடுப்பு மூலம் அறியப்பட்டு வருகிறது.

இவ்வாறு மாநில மாதிரி வரைவுத் திட்டத்தின் மூலம், பரிசீலிக்கப்பட்டு நவீன முறையில் அறியப்படும் பால் மற்றும் கால்நடை மூலமாக பெறப்படும் இதர பொருட்கள் மதிப்பீட்டினால் திட்ட மதிப்பீடு தவிர மற்றும் வருங்காலத் திட்டங்களுக்கு அடிப்படை புள்ளி விவரமாக இது அமைகிறது.

1996-97ஆம் ஆண்டில் குளிர்காலம் நீங்கலான முதல் இரண்டு பருவ காலங்களில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் கணக்கெடுப்பு அளவீடுகள் பின்வருமாறு:

| | | கோடை காலம் | மழைக் காலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | பால் ('000 ' மெ. டன்.) | 1300.761 | 1370.820 | 2671.581 |
| 2. | முட்டை (மில்லியன் எண்கள்) | 1010.811 | 1031.626 | 2042.437 |
| 3. | இறைச்சி ('000' மில். கிலோ.) | 12.847 | 13.360 | 26.207 |

கால்நடை கணக்கெடுப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால கணக்கெடுப்புத் திட்டம் ஒன்று இத்துறையினால் செயல்படுத்தப்படுகிறது. இக்கணக்கெடுப்பு வருங்கால திட்டப் பணிகளுக்கு உறுதுணையாக செயல்படுகிறது.

## 9. கூட்டுறவுச் சங்கங்கள்:

ஆடு, கோழி, நாய் மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 1964 முதல் கால்நடை பராமரிப்புத் துறை இயக்குனரின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சங்கங்களுக்கு செயல்முறை பதிவாளராக இயக்குநரே செயல்படுகிறார். 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம் மற்றும் 1988ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க



1997 ஏப்ரல் 10]

விதியின்படி பதிவாளருக்கு உள்ள அதிகாரம் கால்நடை பராமரிப்புத் துறை, மண்டல இணை இயக்குநருக்கும், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற பகுதியினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும். இது தவிர, உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ நலன் அளித்து கால்நடை வளர்ப்பு மற்றும் நிர்வாகத்தில் பயிற்சி அளிக்கிறது.

31-1-1997-ல் இத்துறையில் கீழே குறிப்பிட்டுள்ள சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன:

| | | |
|---|---|---|
| 1. | ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 941 |
| 2. | கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 10 |
| 3. | வாத்து வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 8 |
| 4. | பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 2 |
| 5. | மாடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 1 |

# பாகம் - 3

## கால்நடை பணிகள்:

### 1. கால்நடை மருத்துவ நலப்பணிகள்:

### (அ) கால்நடை மருத்துவ நிலையங்கள்:

தமிழ்நாட்டில் உள்ள 893 கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் 2,126 கிளை நிலையங்கள் மூலமாக கால்நடைகளின் உடல் நலம் பாதுகாக்கப்படுகிறது. நோய் நீக்கப் பணி மற்றும் தடுப்பூசி பணி மேற்கொள்வதனால், கால்நடைகளின் உடல்நலத்தைக் காப்பதுடன் கால்நடைகளின் இனவிருத்தி சம்பந்தப்பட்ட பணிகள் இந்நிலையங்களில் கவனிக்கப்படுகின்றன.

[1997 ஏப்ரல் 10

கால்நடை மருத்துவ நிலையங்களின் விவரம்—

| | | |
|---|---|---|
| 1. | பன்முக மருத்துவமனைகள் | 3 |
| 2. | பெரு மருத்துவமனைகள் | 21 |
| 3. | கால்நடை மருத்துவமனைகள் | 104 |
| 4. | கால்நடை மருந்தகங்கள் | 765 |
| | மொத்தம் | 893 |

சென்னை சைதாப்பேட்டை, மதுரை தல்லாகுளம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 பன்முக மருத்துவமனைகளில் கால்நடைகளுக்கு சிகிச்சை வசதி 24 மணி நேரமும் செய்யப்பட்டு வருகிறது. உள்நோயாளிகள் பிரிவு வசதி மேற்கண்ட பன்முக மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைகளில் பெரிய அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர சேலம், மதுரை, ஈரோடு, பொள்ளாச்சி, சைதாப்பேட்டை (சென்னை), வேலூர் மற்றும் கோயமுத்தூர் ஆகிய நிலையங்களில் எக்ஸ்ரே வசதிகளும் உள்ளன.

1996-97ஆம் ஆண்டில், 31-1-1997 வரை கால்நடை மற்றும் கோழிகளுக்கு கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டன:

| | | (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சிகிச்சை அளிக்கப்பட்டது | 109.72 |
| 2. | ஆண்மை நீக்கம் செய்யப்பட்டது | 4.52 |
| 3. | தடுப்பூசி பணி | 200.28 |
| 4. | குடற்புழு நீக்கம் | 32.80 |
| 5. | செயற்கை முறை கருவூட்டல் பணி | 20.03 |

**(ஆ) நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் மற்றும் மருந்தகங்கள்:**

நம் மாநிலத்தில் 54 நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்பட்டு வருகின்றன:



1997 ஏப்ரல் 10]

1. குக்கிராமங்களில் கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய தொற்றுநோய்களைக் கண்டறிந்து உரிய முறையில் தடுப்பூசி போடுதல்.
2. தொற்று நோய் தாக்கி ஏற்படும் நோய் கிளர்ச்சியினைத் தடுத்து நிறுத்துதல்.
3. நோய் கிளர்ச்சி காலங்களில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
4. தொலைதூரத்தில் உள்ள கிராம விவசாயிகளுக்கு ஆய்வுக்கூடங்கள் மூலமாக கால்நடை பராமரிப்புத் துறையில் அறியப்படும் தொழில்நுட்ப விவரங்களைத் தெரிவித்தல்.
5. குக்கிராமங்களில் உள்ள கிராம மக்களின் பசு, எருமை இனங்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்தல்.

இதைத் தவிர 383 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்துக்கு ஒன்று வீதம், நாகப்பட்டினம் பஞ்சாயத்து ஒன்றியம் நீங்கலாக, கால்நடை பராமரிப்பு விரிவாக்க அலுவலர் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. உடல்நலம் பேணுவதற்கும், இனவிருத்திப் பணிக்குத் தேவையான உபகரணங்கள் இந்நிலையங்களுக்கு உலக வங்கி நிதி உதவியுடன் வழங்கப்பட்டுள்ளது.

## 2. நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு:

### (அ) கால்நடை நோய் கடுங்கண்காணிப்பு தகவல் முறை:

கால்நடை நோய் கடுங்கண்காணிப்பு முறை என்பது கால்நடைகளில் ஏற்படும் தொற்று நோய்கள் பற்றி, ஒரு குறிப்பிட்ட பகுதியில் தெரிந்து கொள்ளவும், அப்பகுதியில் அதற்கான, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும், இதன் மூலம் நோய்களின் தோற்றம் பற்றி தெரிந்துகொள்ளவும் நோய்களைத் தடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் அறவே ஒழித்தல் ஆகிய செயல்பாடுகளுக்கு மிகவும் இன்றியமையாததாக அமைகிறது. இத்திட்டத்தின் குறிக்கோள்களை இருவகைப்படுத்தலாம்:

(1) நவீன தொழில்நுட்ப உதவியுடன், நோய்கள் புலனாய்வு மற்றும் தடுப்பூசி மருந்து பயன்படுத்தல் ஆகிய செயல்பாடு மூலமும்

நோய் பற்றிய தகவலைப் பரிமாற்றம் செய்து கொள்வதன் மூலமும், நோய்களைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், அறவே ஒழித்தல்.

(2) கால்நடைகள் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருள்கள், விற்பனையினை பன்னாட்டு அளவில் உயர்த்துதல்.

கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள் மற்றும் கால்நடைப் பண்ணைகள் அந்தந்தப் பகுதிகளில் தலையாய கண்காணிப்பு மற்றும் அறிவிப்புப் பிரிவுகளாக செயல்படுகின்றன.

பிரதம அறிவிப்புப் பிரிவுகள் நோய் கண்ட முதல் தகவல் மற்றும் வாராந்திர அறிக்கைகளை மாவட்ட அளவில் மண்டல இணை இயக்குநர்களுக்கு தெரிவித்து, சம்பந்தப்பட்ட உதவி இயக்குநருக்கும் ஒரு நகல் அனுப்ப வேண்டும்.

இதுவரை அறிக்கைகள் அஞ்சல் அல்லது தந்தி மூலம் அனுப்பப்பட்டு வந்துள்ளன. இதனால் காலதாமதம் மற்றும் அஞ்சலில் இழப்பும் ஏற்படுகிறது. நேரிடை மின் அணு அஞ்சல் முறையில், தகவல்களை அனுப்புவது மூலம் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. கால்நடை பராமரிப்புத் துறைக்கு இந்தத் தகவல் அனுப்பும் முறை தேசிய தகவல் மையம் இணைப்பு (நிக்நெட்) மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் பிரிவுகள் மாநில தலைமை அலுவலகத்திலும், அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் மின் அணு அலைகள் மூலம் தகவல் அனுப்பும் முறையினைச் செயல்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

## (ஆ) கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு :

கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய தொற்று நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து அதற்கு தடுப்பூசி போடுவதுதான் கால்நடை மருத்துவத் துறையின் தலையாய நோக்கமாகும். இதன் அடிப்படையில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் கீழே குறிப்பிட்டுள்ள 14 இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

1. வேலூர்
2. மதுரை



3. திருநெல்வேலி
4. உதகமண்டலம்
5. கடலூர்
6. சேலம்
7. திருச்சிராப்பள்ளி
8. கோயம்புத்தூர்
9. தஞ்சாவூர்
10. சிவகங்கை
11. காஞ்சிபுரம்
12. ஈரோடு
13. திண்டுக்கல்
14. தூத்துக்குடி

இப்பிரிவின் முக்கிய பணிகளாவன—

(1) நோய் கிளர்ச்சி ஏற்படக்கூடிய இடங்களில் நோய்க்கான காரணங்களை ஆராய்ந்து களப்பணி அலுவலர்களுக்கு தகுந்த முறையில் எச்சரித்து உதவி செய்தல்.

(2) தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய காரணங்களை முன்கூட்டியே கண்டறிந்து அதைத் தவிர்க்கும் நோக்குடன் தடுப்பு வழிமுறைகளை குறித்த காலத்தில் மேற்கொள்ளுதல்.

(3) இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப் மருந்து நிலைய உதவியுடன் கோமாரி நோயின் அறிகுறிகளைக் கண்டறிந்து நோய் கிளர்ச்சியின் தன்மையை அறிந்து கொள்ளுதல்.

(4) அப்பகுதியினை ஆய்வு செய்து நோய் கிளர்ச்சியின் தன்மையை வரைபடம் மூலம் விளக்குதல்.

(5) உடனடியாக நோயின் தன்மையைக் கண்டறிந்து அதற்கு சரியான மருத்துவ சிகிச்சை அளித்தல்.

[1997 ஏப்ரல் 10

(6) காசநோய், ஜோன்ஸ் நோய், கருச்சிதைவு மற்றும் மடிவீக்க நோய் ஆகியவைகளை காலமுறைப்படி பரிசோதனை செய்தல்.

மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் நோய் கண்டறியும் பரிசோதனை நிலையம் நான்கும், தொத்துநோய் கண்டறியும பிரிவுகள் நான்கும் உலகவங்கி நிதியுதவியுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. நோய் கண்டறியும் பரிசோதனை மூலமாக களத்தில் உள்ள கால்நடை உதவி மருத்துவர்கள் நோய் கண்டறிதலில் உதவி செய்யும் காலங்களில், தொற்றுநோய் கண்டறியும் பிரிவு, பல்வேறு விதமான நோய்களின் தன்மைகளை ஆய்ந்து, அவைகளிலிருந்து கால்நடைகளை அதிக அளவில் தாக்கக்கூடிய தொற்று நோய்களை மாநிலத்திலிருந்து அறவே ஒழிக்கப் பாடுபடுகிறது.

## (இ) மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம்:

கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகளின் பணிகளை ஆய்வு செய்தல், நோய் கண்டறிதல் மற்றும் அதன் தொடர்பான புலனாய்வுப் பணிகளில் உதவிடவும் ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம் சென்னை, சைதாப்பேட்டை பன்முக மருத்துவ வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

கோழிகளின் நோய் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று சேலம் மாவட்டம் ஆண்டலூர் கேட்டிலும், பெரியார் மாவட்டம் ஈரோட்டிலும், அந்தப் பகுதி கோழி வளர்ப்பு விவசாயிகளுக்கு பேருதவியாக நோய் கண்டறிதல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது.

## (ஈ) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்:

நம் நாட்டில் தென்பகுதியில், கால்நடைகளுக்கு உயிர்ச்சேதம் அதிகம் விளைவிக்கும் நோய் வெக்கை நோய் அல்லது கால்நடைகளில் பிளேக் ஆகும். இது அதிக அளவில் இறப்பு சதவீதத்தை அதிகரிப்பதோடு மட்டுமின்றி, தீவிர கால்நடை உற்பத்திக்குத் தேவையான உயரின மரபுவழியைச் சார்ந்த கால்நடைகள் இழப்பினால் பொருளாதாரத்தில் பேரிழப்பை ஏற்படுத்துகிறது. மாநிலத்தில் தெரிவிக்கப்படாத வெக்கை நோய் பாதிப்புகளை அறியும் பொருட்டு பல இடங்களில் பார்வையிட்டு இந்நோயை அறவே இம்மாநிலத்திலிருந்து ஒழிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இராணிப்பேட்டை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ஊநீரைக் கொண்டு வெக்கை நோய் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் 10 கால்நடை சோதனைச் சாவடிகள் கேரளம்,



1997 ஏப்ரல் 10]

கர்நாடகம் மற்றும் ஆந்திரம் ஆகிய மாநிலங்களின் எல்லைப்புறங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 10 வெக்கை நோய் கண்காணிப்புப் பிரிவுகள் மற்றும் 18 வெக்கை நோய் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசிய வெக்கை நோய் தடுப்புத் திட்டக்குழுவின் பரிந்துரைப்படி 1994-95-ல் பெரியார், சேலம், திருவண்ணாமலை-சம்புவராயர், கோயம்புத்தூர், காமராஜர் மற்றும் திண்டுக்கல் ஆகிய ஆறு மாவட்டங்கள் 100 விழுக்காடு தடுப்பூசி போடும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தின்படி 1993-94 முதல் 1995-96 வரை 100 சதவீத தடுப்பூசி தமிழ்நாட்டிலுள்ள 14 எல்லையோர மாவட்டங்களில் போடப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள மற்ற மாவட்டங்களில் 100 சதவீத தடுப்பூசிகள் போடப்படும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மே 1995 முதல் இம்மாநிலத்தில் எங்கும் வெக்கை நோய் நோய் கிளர்ச்சி ஏதும் ஏற்படவில்லை. தடுப்பூசிகள் பணி அனைத்தும் முடிவடைந்ததும் சீரோ கடுங்கண்காணிப்புப் பணி 1997-98 முதல் மேற்கொள்ளப்படும்.

## (உ) கோமாரி நோய் கட்டுப்பாட்டுத் திட்டம்:

கோமாரி நோய் நுண்ணுயிர் கிருமிகளினால் ஏற்பட்டு, நோயின் பாதிப்பினால் கால்நடைகளுக்குப் பேரிழப்பு ஏற்பட்டு, பொருளாதார இழப்பையும் ஏற்படுத்துகிறது. நல்ல திறன் வாய்ந்த உயரின மரபு வழியைச் சார்ந்த கால்நடைகளின் உற்பத்தியானது இந்நோயின் கிளர்ச்சியினால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றது. நல்ல மதிப்புள்ள கால்நடைகளை இக்கொடிய நோயின் பாதிப்பிலிருந்து காக்க இத்துறையானது ஊசி மருந்தின் விலையில் 50 சதவீத மானியமாக அளித்து ஏழை வேளாண் குடிமக்களின் கால்நடைகளுக்கு தடுப்பூசி திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

## (ஊ) கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை:

இராணிப்பேட்டையில். அமைந்துள்ள முன்னோடி நிலையமான கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், மாநிலத்தில் உள்ள கால்நடை நிலையங்களுக்குத் தேவையான தடுப்பு மருந்துகள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை, தயாரித்தும், விநியோகித்தும் வருகிறது.

[1997 ஏப்ரல் 10

இந்நிலையத்தின் செயல்முறைகளை கீழ்க்கண்டவாறு இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.:

அ. கால்நடை மற்றும் கோழியின தடுப்பு மருந்துகள், உயிர் மருந்துகள், ஊநீர் மற்றும் மருந்துகள் தயாரித்தலும், விநியோகித்தலும்.

ஆ. கால்நடை நோய் புலனாய்வு மற்றும் நோய் கண்டறிதல்.

இந்நிலையம் 7 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருந்துகளும், 11 வகையான வைரஸ் தடுப்பு மருந்துகளும், நோய் கண்டறியும் சாதனங்களையும், மருந்து வகைகளையும், ஊநீர்களையும் தயாரித்து வருகிறது. இவைகள் பின்வருமாறு:

**நுண்ணுயிர் தடுப்பு மருந்துகள்:**

1. தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (ஆலம் பிரிசிபிடேட்)
2. தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (ஆயில் அட்ஜூவண்ட்)
3. மாட்டின நிணநீர் சுரப்பி நோய் தடுப்பு மருந்து
4. சப்பை நோய் தடுப்பு மருந்து
5. துள்ளுமாரி நோய் தடுப்பு மருந்து
6. அடைப்பான் ஸ்போர் தடுப்பு மருந்து
7. கருச்சிதைவு நோய் தடுப்பு மருந்து

**வைரஸ் நோய் தடுப்பு மருந்துகள்:**

1. திசுவளர் வெக்கை நோய் தடுப்பு மருந்து
2. ஆட்டம்மை தடுப்பு மருந்து
3. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (கே)
4. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (லசோட்டா)
5. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (எப்)



1997 ஏப்ரல் 10]

6. திசுவளர் கோழியின அம்மை நோய் தடுப்பு மருந்து
7. வாத்துக்கழிச்சல் நோய் தடுப்பு மருந்து
8. மேரக்ஸ் நோய் தடுப்பு மருந்து
9. வெறி நாய்க்கடி நோய் தடுப்பு மருந்து
10. நாய் டிஸ்டெம்பர் நோய் தடுப்பு மருந்து
11. கோமாரி நோய் தடுப்பு மருந்து (மோனோ வெலன்ட்)

களப்பணிக்கு விநியோகிக்கும் முன் தடுப்பு மருந்துகளின் தரத்தை பரிசோதனை செய்ய சோதனை மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்றும் இந்நிலையத்தில் இயங்கி வருகிறது.

வெறி நாய்க்கடி நோய் தடுப்பு மருந்து, டிஸ்டெம்பர் மற்றும் வாத்துக்கழிச்சல் தடுப்பு மருந்துகளைத் தவிர மற்றவை களப்பணியாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. கோழியின நோய் தடுப்பு மருந்துகள் தனியார் கோழி வளர்ப்பாளர்களுக்கு விலைக்கு கொடுக்கப்பட்டு வருகின்றன. கோழியின நோய் தடுப்பு மருந்துகள் நாமக்கல் மற்றும் ஆண்டலூர் கேட் (சேலம் மாவட்டம்) மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் விற்பனைக் கூடங்களில் விற்கப்பட்டு வருகின்றன. கால்நடை நோய் தடுப்பு நிலையத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ஊநீர் குளிர்ந்த நிலையிலேயே எடுத்துச் சென்று விநியோகிப்பதற்காக மாநிலத்தில் முதல்முறையாக குளிரூட்டப்பட்ட நடமாடும் ஊர்தி பயன்படுத்தப்படுகிறது.

**(எ) நோயற்ற மண்டலம்:**

கால்நடை மற்றும் கால்நடைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இந்நாட்டின் தென்பகுதியில் கேரள மாநிலத்தில் உள்ள கொல்லம் மற்றும் திருவனந்தபுரத்திலும், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கால்நடைகளைப் பெரிதும் தாக்கக்கூடிய நோய்களான வெக்கை மற்றும் கோமாரி நோய் தாக்காவண்ணம் கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள் விற்பனையை வெளிநாட்டு சந்தையில் வலுப்படுத்தவும், அதிகரிக்கவும் நோயற்ற பகுதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி திட்டப் பகுதியில் மற்றும் அதனைச் சார்ந்த திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் 40 கிலோ மீட்டர் உள்ளடக்கிய பகுதியில் முறையான தீவிர நோய் தடுப்பு

[1997 ஏப்ரல் 10

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தினை ஒட்டிய எல்லையோரப் பகுதியில் நுழையும் கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது. இத்திட்டம் துவக்கப்பட்டது முதற்கொண்டு இதுநாள்வரை திட்டப் பகுதியில் எந்தவிதமான நோய்க் கிளர்ச்சியும் ஏற்படவில்லை.

## பகுதி - 4

## விரிவாக்கப் பணி மற்றும் பொதுச் சுகாதாரம்

### 1. விளம்பரம் மற்றும் பிரச்சாரம்

நவீன கால்நடைப் பராமரிப்பு மற்றும் மக்கள் நலம் குறித்து. பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு, அவ்வப்போது நடைபெற்றுவரும் விழாக்களிலும், கண்காட்சிகளிலும் 'பார்ப்போம் தெரிந்து கொள்வோம்' என்ற நிகழ்ச்சியின் மூலமாக இத்துறை கலந்துகொண்டு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இத்துறை ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் சென்னை அகில இந்திய சுற்றுலா பொருட்காட்சியில் கலந்து கொள்கிறது. இத்துறையின் விரிவாக்க அலுவலர்கள் வாரந்தோறும் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகிறார்கள்.

இத்துறை மேலும் துறையின் நவீன யுக்திகளையும், குறிப்பாக இனவிருத்தி மற்றும் கால்நடை நிர்வகிப்பு குறித்தும் புகழ்பெற்ற நடிகர்களைக் கொண்டு 11 வண்ணப் படங்களைத் தயாரித்துள்ளது. இவ்வண்ணப் படங்கள் மாநிலமெங்கும் நடைபெற்றுவரும் பொருட்காட்சிகளிலும், திருவிழாக்களிலும் மற்றும் மக்கள் தொடர்பு முகாம்களிலும் காண்பிக்கப்படுகிறது.

சென்னை சைதாப்பேட்டையில் விளம்பரம் மற்றும் விரிவாக்க செயலாக்கத்திற்குத் தேவையான விளம்பர வெளியீடுகளை அச்சடித்து வழங்க தற்காலத்திய நவீன தொழில் நுட்ப யுக்திகளைக் கொண்ட அச்சுக்கூடமொன்று உலக வங்கி நிதி உதவியுடன் வலுப்படுத்தப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 10]

இந்த வருடம் 1996-97-ல் 31-1-1997 உடன் முடிந்த காலத்திற்கு 9 கண்காட்சிகளிலும், 77 தொலைக்காட்சி மற்றும் அகில இந்திய வானொலி நிகழ்ச்சிகளிலும் இத்துறை பங்கேற்றுள்ளது.

### 2. மக்கள் தொடர்பு முகாம்:

இத்துறை மக்கள் தொடர்பு முகாம்களை குக்கிராமங்கள்தோறும் முன் அறிவிப்பு செய்து நடத்தி வருகிறது. வைக்கோலின் தரத்தை யூரியா கொண்டு சக்திமிக்கதான வைக்கோலாக மாற்றக்கூடிய செயல்முறை விளக்கங்களையும், கால்நடை வளர்ப்பு மற்றும் தீவனப் பெருக்கம், காலத்தில் நோய் தடுப்பு முறையும், மக்கள் எளிதாக புரிந்துகொள்ளும் வகையில் திரைப்படங்கள் திரையிட்டு காண்பிக்கப்படுகின்றன. 1996-97 ஆம் ஆண்டில் (31-1-1997 உடன் முடிந்த காலத்திற்கு) 20,625 மக்கள் தொடர்பு முகாம்கள் நடைபெற்றுள்ளன.

### 3. வெறி நாய்க்கடி நோய் தடுப்புத் திட்டம்:

பொதுமக்களின் நலத்தைக் கருதி இத்துறை முக்கியமாக இப்பணியைச் செய்கிறது. வெறி நாய்க்கடி ஒரு அபாயகரமான நோய். நாய்களில் வெறிநோய் ஏற்படாமல் தடுப்பதுடன் அது மனிதர்களுக்குப் பரவாமல் தடுக்க வெறி நாய்க்கடி நோய் தடுப்புத் திட்டம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக எல்லா வளர்ப்பு நாய்களுக்கும் காலமுறைப்படி வெறிநோய் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டச் செயலாக்கத்திற்குப் பின் மனிதர்களை தாக்கக்கூடிய வெறிநாய்க்கடி நோய் இப்பகுதிகளில் வெகுவாக குறைந்துள்ளது.

வெறி நாய்க்கடி நோய் தடுப்பு திட்டப் பணிகளின் முக்கிய நோக்கங்கள்:

(1) கட்டாய நோய் தடுப்பு முறையைக் கையாள வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி மருந்தின் விலையை மட்டும் கட்டணமாக வசூலித்து பணி மேற்கொள்ளப்படுகிறது.

(2) நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாகத் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படுகிறது.

[1997 ஏப்ரல் 10

(3) பொதுமக்களிடையே இந்நோய் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் மூலம் தகுந்த விளம்பரம் செய்தல், நாய் கண்காட்சி நடத்துதல்.

**4. பெருமளவில் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம்:**

இத்துறை கால்நடை மற்றும் கோழிகளுக்கு முறையாகத் தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம் செய்து வருகிறது. 29-10-1996 முதல் அனைத்து கால்நடைகளுக்கும் இலவசமாக குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. அடைப்பான், புருஸெல்லாஸிஸ், டெட்டனஸ் போன்ற அபாயகரமான நோய்களைத் தடுத்து, மேலும் பரவாமல் தடுக்கப்படுகிறது. குடற்புழு நீக்கம் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் செய்வதன் பலனாக மனிதனுக்கு பரவக்கூடிய குடற்புழுவினால் மனித உடல்நலம் பாதிப்பு ஏற்படாவண்ணம் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ குடற்புழுக்களின் வளர்ச்சி தவிர்க்கப்படுகிறது.

**5. இறைச்சிக் கூடங்களில் ஆய்வு:**

உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 183 பதிவு பெற்ற இறைச்சிக் கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் இறைச்சி எலும்பு நோய்கள் மனிதர்களுக்கு பரவாமல் தடுக்கப்படுகிறது. பொது நலப் பணிகளில், இந்தப் பணி ஒரு தலையாய பணியாக இத்துறை மேற்கொண்டு வருகிறது.

## பகுதி - 5

### 1997-98 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

1. ரூ. 2.12 இலட்சம் செலவில் 20 கால்நடை மருந்தகங்களை மருத்துவமனைகளாக தரம் உயர்த்துதல்.
2. ரூ. 15.00 இலட்சம் செலவில் கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் கோழிக் கழிச்சல் மற்றும் வாத்துக் கழிச்சல் நோய்களுக்கான தடுப்பூசி மருந்துகளின் உற்பத்தியை அதிகரித்தல்.
3. ரூ. 147.96 இலட்சம் செலவில் புதிதாக 60 கால்நடை மருந்தகங்கள் தோற்றுவித்தல்.
4. ரூ. 1.50 இலட்சம் செலவில் காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையில் வான் கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்துதல்.



1997 ஏப்ரல் 10]

## தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்

**1. முன்னுரை:**

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் 12-7-1973 ஆம் ஆண்டு ஒரு அரசு நிறுவனமாக ரூ. 100 இலட்ச மூலதனத்துடன் துவங்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 200 இலட்சங்களாக 1991 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 200 இலட்சங்களாக 1991 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 126.69 இலட்சமாகும். இந்த ஏற்றம் தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தை தமிழ்நாடு கோழி கழகத்துடன் இணைத்ததால் ஏற்பட்டது.

**2. தற்போதைய நடவடிக்கைகள்:**

முட்டையிடும் கோழிக் குஞ்சுகள், கறிக்கோழிக் குஞ்சுகள், கோழித் தீவனம் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பதிலும், முட்டை, கோழி, கோழிக்கறி, ஆட்டு இறைச்சி விற்பனையிலும் ஈடுபட்டுள்ளது.

டாப்கோவின் கீழ் இயங்கி வரும் பிரிவு அலுவலகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**(1) குஞ்சு பொரிப்பகங்கள்:**

அரசூர் (கோயம்புத்தூர் மாவட்டம்)

கப்பலூர் (மதுரை மாவட்டம்)

கொட்டப்பட்டு (திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்)

அனுப்பன்குளம் (காமராஜர் மாவட்டம்)

**(2) தீவன கலவை நிலையம்:**

கப்பலூர், மதுரை மாவட்டம்

**(3) விற்பனை நிலையங்கள்:**

சென்னை

திருச்சிராப்பள்ளி

[1997 ஏப்ரல் 10

மதுரை
கோயம்புத்தூர்
சேலம்
நாமக்கல்

**(4) கோழி வளர்ப்புப் பண்ணைகள்:**

வெம்பாக்கம் (அண்ணா மாவட்டம்)
தெக்குப்பாளையம் (கோவை மாவட்டம்)
(தற்சமயம் வான்கோழிகள் வளர்க்கப்படுகின்றன.)

## 3. திட்டச் சாதனை

**(அ) கோழிக்குஞ்சு பொரிப்பகங்கள்:**

உற்பத்தி செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகள்:

| ஆண்டு | கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை (இலட்சங்களில்) | மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1994-95 | 32.11 | 214.89 |
| 1995-96 | 38.28 | 278.87 |
| 1996-97 (1/97 வரை) | 25.16 | 198.52 |

**(ஆ) கோழித் தீவனக் கலவை நிலையங்கள்:**

| ஆண்டு | உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) | மதிப்பு (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| 1994-95 | 2338 | 144.34 |
| 1995-96 | 551 | 38.20 |
| 1996-97 (1/97 வரை) | 405 | 33.77 |



1997 ஏப்ரல் 10]

**(இ) விற்பனை நிலையங்கள்:**

விற்பனை நிலையங்கள், முட்டையிடும் கோழிக் குஞ்சு, கறிக் கோழிக் குஞ்சு மற்றும் முட்டை, கோழி, ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி ஆகியவற்றைக் கொள்முதல் செய்து விற்பதிலும் ஈடுபட்டுள்ளன.

அனைத்து விற்பனை நிலையங்களின் செயல்பாடு கீழே தரப்பட்டுள்ளது :

| | | ஆண்டு 1994-95 | | ஆண்டு 1995-96 | | ஆண்டு 1996-97 (1/97) | |
|---|---|---|---|---|---|---|---|
| எண். | விற்பனை செய்த பொருள்கள் | எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) | எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) | எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) |
| 1. | முட்டை (இலட்சத்தில்) | 113.74 | 129.49 | 46.99 | 51.68 | 34.94 | 46.06 |
| 2. | கோழி (இலட்சத்தில்) | 0.65 | 37.14 | 0.66 | 32.47 | 0.41 | 23.65 |
| 3. | இறைச்சி (மெட்ரிக் டன்களில்) | 66.58 | 43.00 | 40.44 | 26.14 | 32.00 | 21.47 |
| 4. | கோழிக் குஞ்சுகள் (இலட்சத்தில்) | 14.23 | 214.89 | 16.62 | 203.87 | 12.22 | 156.85 |
| 5. | தீவனம் (மெட்ரிக் டன்களில்) | 515.00 | 26.83 | 90.67 | 7.32 | .. | .. |

**நிதி நிலைமை:**

இந்நிறுவனம், 31-3-1996 முடிய ரூ. 276.67 இலட்சங்கள் (உத்தேசமான) நட்டமடைந்து உள்ளது. அதற்கான முக்கிய காரணங்கள்:

(1) திறன் அளவுக்கு தீவனக் கலவை நிலையங்களை பயன்படுத்தாதது.

[1997 ஏப்ரல் 10

(2) நட்டத்தில் இயங்கி வந்த தீவனக் கலவை நிலையங்களும் தாது உப்புக் கலவை நிலையங்களும் மூடப்பட்டன.

(3) குஞ்சு பொரிப்பின் உற்பத்தி விலை அதிகரிப்பு.

(4) தேவையான அளவுக்கு விற்பனை நிலையங்கள் விற்பனை செய்யாதது.

(5) தலைமை மற்றும் பிரிவு அலுவலகங்களில் அதிகமான ஊதியச் செலவுகள்.

(6) நிதி நெருக்கடி.

ஊழியர்கள் எண்ணிக்கையைக் குறைக்க டாப்கோ 'தன்னார்வமாக ஓய்வு பெறும் திட்டத்தை' அமல்படுத்தியுள்ளது. அதனுடைய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | | அனுப்பப்பட்ட தேதி |
|---|---|---|---|
| முதல் கட்டத்தில் | 11 | ஊழியர்கள் | 31-05-1995 |
| இரண்டாவது கட்டத்தில் | 60 | ஊழியர்கள் | 31-08-1995 |
| | 1 | அலுவலர் | 29-03-1996 |
| **மொத்தம்** | **72** | **ஊழியர்கள்** | |

தற்போதைய ஊழியர்கள், அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 296.



1997 ஏப்ரல் 10]

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் ஆசியாவிலேயே முதன்முதலாக 20-09-1989 அன்று தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகின்றது:—

அ. கால்நடை மருத்துவம், விலங்கு அறிவியல் மற்றும் மீன் வளத்திலுள்ள பல்வேறு கிளைகளில் சிறந்த கல்வியை அளித்திடல்;

ஆ. கால்நடை மருத்துவம், விலங்கு அறிவியல் மற்றும் மீன் வளத்தில் ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல்; மற்றும்

இ. அரசு மற்றும் பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப்புற மக்களின் முன்னேற்றத்திற்காக அறிவியல் நுட்பங்களை வழங்குதல்;

இப்பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியல், மீன் வளம் மற்றும் அடிப்படை அறிவியல் ஆகிய மூன்று புலன்களைக் கொண்டுள்ளது.

இந்தப் பல்கலைக் கழகம், மூன்று கல்லூரிகளையும் (இரண்டு கால்நடை மருத்துவம் மற்றும் ஒரு மீன் வளக் கல்லூரி), 6 ஆராய்ச்சி மருத்துவம் மற்றும் ஒரு மைய பல்கலைக் கழக ஆய்வகம், பறவையின நிலையங்களையும், ஒரு மைய பல்கலைக் கழக ஆய்வகம், கால்நடைத் தீவன ஆராய்ச்சி ஆய்வகம், 16 நோய்காண் ஆய்வகம், கால்நடைத் தீவன ஆராய்ச்சி மையங்கள், மூன்று உழவர் பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள் மற்றும் இரண்டு வேளாண் அறிவியல் நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**கல்வி:**

இப்பல்கலைக்கழகத்தில் மூன்று கல்லூரிகள், முறையே, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை; கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் மற்றும் மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி முதலியவை செயல்பட்டு வருகின்றன.

[1997 ஏப்ரல் 10

இப்பல்கலைக்கழகத்தில் இளங்கலை கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் இளங்கலை மீன் வள அறிவியல் ஆகிய இரண்டு இளம் அறிவியல் பட்டப் படிப்புகள் உள்ளன. 22 துறைகளில் காலநடை மருத்துவ அறிவியல் பட்ட மேற்படிப்பும், ஏழு துறைகளில் மீன் வள அறிவியல் பட்ட மேற்படிப்பும், முனைவர் பட்டப் படிப்புகள் 19 துறைகளில் கால்நடை மருத்துவ அறிவியலிலும், மூன்று துறைகளில் மீன் வள அறிவியலிலும் அளிக்கப்பட்டு வருகின்றது. இதைத் தவிர, கால்நடை மற்றும் மீன் வள வணிகம் மற்றும் மேலாண்மையில் பட்டயப் படிப்பும் அளிக்கப்பட்டு வருகின்றன. இளங்கலை கால்நடை மருத்துவ அறிவியலில் 226 மாணவர்களும், இளங்கலை மீன் வள அறிவியலில் 25 மாணவர்களும், முதுகலை கால்நடை மருத்துவ அறிவியலில் 161 மாணவர்களும், முதுகலை மீன் வள அறிவியலில் 22 மாணவர்களும், கால்நடை மருத்துவ அறிவியலில் முனைவர் பட்டப் படிப்பிற்கு 97 மாணவர்களும், மீன் வளத் துறையில் 13 மாணவர்களும் கால்நடை மற்றும் மீன் வள வணிகம் மற்றும் மேலாண்மையில் பட்டயப் படிப்பில் 15 மாணவர்களும் படிப்பதற்கான வசதிகள் உள்ளன. 931 மாணவர்கள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலும், 463 மாணவர்கள் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லிலும், 106 மாணவர்கள் மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடியிலும் கல்வி பயின்று வருகின்றார்கள். மொத்த மாணவர் எண்ணிக்கையில் 613 மாணவர்கள் கல்வி உதவித் தொகையை தமிழ்நாடு அரசு, இந்திய அரசு மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடம் இருந்து பெற்று வருகிறார்கள். இவர்களுள் 501 பேர் மாணவர்கள் மற்றும் 112 பேர் மாணவியர் ஆவார்கள். மொத்தம் 1,500 மாணவர்களுள் 363 பேர் மாணவியர்கள். மாணவியர்கள் அதிக எண்ணிக்கையில் இக்கல்லூரிகளில் சேருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். மொத்த மாணவர்களுள் 24.2 விழுக்காடு மாணவியர் என்பது சிறப்பம்சமாகும். மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் ஆகிய இரண்டு கல்லூரிகளில் பயிலும் மாணவிகளுக்குத் தேவையான விடுதி வசதிகளை அளிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு ரூ. 35.00 இலட்சங்களை அளிக்க உத்தேசித்துள்ளது. இந்தத் தொகையில் ரூ. 20.00 இலட்சம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லிலும், ரூ. 15.00 இலட்சம் மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடியிலும், மகளிர் விடுதி கட்ட உபயோகப்படுத்தப்படும். கால்நடை நோய் தீர்ப்பியல், கோழியின அறிவியல் ஆகிய துறைகளில்



1997 ஏப்ரல் 10]

இரண்டு உயர் படிப்பு மையங்களை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் வழங்கியுள்ளது. மைய அரசின் உயிர் தொழில் நுட்பத் துறை, கால்நடை உயிர் தொழில் நுட்பவியலில் பட்ட மேற்படிப்பிற்காக நிதி உதவி அளித்துள்ளது.

**ஆராய்ச்சி:**

தமிழ்நாடு அரசு, இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் உயர் கல்விக் கழகங்கள் மூலம் நிதி உதவி பெற்று பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களை இப்பல்கலைக்கழகம் செயல்படுத்தி வருகின்றது. இந்த ஆராய்ச்சித் திட்டங்களின் முக்கியமான குறிக்கோள்கள் கீழே தரப்பட்டுள்ளன:

(அ) தற்போது உள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்தி புதிய இனங்களை உருவாக்குதல்.

(ஆ) புதிய தரமான தீவன வகைகளை, கால்நடைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காகக் கண்டறிதல்.

(இ) நவீன தடுப்பூசி மற்றும் நோய்க் காரணிகாண் வசதி மூலம் கால்நடைகளின் நலத்தைப் பேணுதல்.

(ஈ) கால்நடை விளைபொருட்களின் சேமிப்பு காலத்தை புதிய பின் அறுவடை தொழில் நுட்பங்களின் மூலம் அதிகரித்தல்.

(உ) கால்நடை கழிவுப் பொருட்களை, கால்நடை மற்றும் மீன்களுக்குத் தீவனமாக மாற்றுதல்.

(ஊ) மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்வது.

இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு ஆராய்ச்சிகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன:

**1. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், புது தில்லி:**

இந்த ஆராய்ச்சிக் கழகம் 24 ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு நிதி உதவி அளிக்கின்றது. அவையாவன:

(1) நாமக்கல்லில் காங்கேய இன மாடுகளைப் பாதுகாப்பது பற்றிய ஆராய்ச்சி.

(2) வேளாண் காடுகளில் காணப்படும் தேவையற்ற விதை மற்றும் இலைகளை கோழிகளுக்குத் தீவனமாக அளிப்பது பற்றிய ஆராய்ச்சி.

(3) வேளாண் காடுகளில் காணப்படும் மரங்களின் மருத்துவ உபயோகம் பற்றிய ஆராய்ச்சி.

(4) தமிழ்நாட்டில் பல்வேறு தட்பவெட்ப நிலைக்கேற்ப கால்நடை உற்பத்தியில் வேளாண் காடுகளின் பங்கு பற்றி திறனாய்வு.

(5) அறுவை சிகிச்சையின்றி மாடுகளில் கரு மாற்றம் செய்வதற்கான இணைப்புத் திட்டம்.

(6) செம்மறி ஆடுகளின் உயர் தர இனங்களைக் கண்டறிந்து அவைகளை உற்பத்தி செய்வதற்கான இணைத் திட்டம்.

(7) நாய்களில் எர்ளிகோசிஸ் (Ehrilichosis) நோயை உண்டாக்கும் கிருமி பரவும், நோயை உற்பத்தி செய்யும் நோய் கண்டறியும் முறைகளைப் பற்றியும், இந்தக் கிருமிகளை புறச்சூழ்நிலையில் வளர்க்கும் முறை பற்றியும் ஆராய்ச்சி.

(8) கோழிகளில் கும்போரோ நோயை உருவாக்கும் நச்சுயிரியை நுண்பகுப்பாய்வு செய்தல் மற்றும் நோய் பரவும் முறைகள் பற்றிய ஆராய்ச்சி.

(9) தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய் பற்றிய ஆராய்ச்சி.

(10) உம்பளாச்சேரி மாட்டு இனத்தை தரமறிந்து அந்த இனத்தைப் பாதுகாக்கும் ஆராய்ச்சித் திட்டம்.

(11) தமிழ்நாட்டின் வட மேற்கு தட்பவெட்ப நிலைகளுக்கேற்ப வேளாண் காடுகள் அமைக்கும் திட்டம்.

(12) தேசிய விலங்கு மரபியல் ஆராய்ச்சி அமைப்பின்கீழ் ஆய்வகம் அமைப்பதற்கான இணைப்புத் திட்டம்.

(13) தனியாக மற்றும் கூட்டு மீன் வளர்ப்பு மூலம் நன்னீர் இறால் உற்பத்தியைப் பெருக்குதல்.





(14) இந்தியாவிலேயே கிடைக்கும் உணவு இணைப்புப் பொருட்களைக் கொண்டு நீரில் கரையாத உணவுப் பொருட்களை நன்னீர் இறால்களுக்குத் தயாரிக்கும் ஆராய்ச்சி.

(15) செயலியல் வீரியத் திசு மூலம் எருமைகளில் மரபணு ஒப்பீடு பற்றிய ஆராய்ச்சி.

(16) ஆராய்ச்சி நிலையம் மற்றும் கிராமங்கள் இணைப்புகள் மூலம் தொழில் நுட்பங்களை ஆராயும் ஆராய்ச்சி.

(17) அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் இந்திய பன்றிகளின் இறைச்சி உற்பத்தியை, அவைகளுக்குத் தகுந்த கொட்டில் அமைப்பு, தீவனம் மற்றும் இனச் சேர்க்கைகளின் மூலம் பெருக்குவது.

(18) கால்நடைத் தீவனங்களில் நுண்ணிய நுண்ணூட்டச் சத்துக்களைப் பற்றி ஆராய்ந்து கால்நடைகளின் உற்பத்தியைப் பெருக்குவது பற்றிய இணைத் திட்டம்.

(19) காட்டுப்பாக்கத்தில் வேளாண் அறிவியல் மையம்.

(20) தமிழ்நாட்டில் கறவை மாடுகளுக்கு கொட்டில் அமைக்கும் முறைகளும், அவற்றின் நலம் மற்றும் உற்பத்தியின் பேரில் தாக்கமும்.

(21) குன்றக்குடியில் வேளாண் அறிவியல் மையம்.

(22) சிங்கிஇறால் வளர்த்தலும், அவற்றை எடுத்துச் செல்லும் முறைகளும்.

(23) செம்மறி ஆடுகளை கறிக்காக வளர்க்கும் அனைத்திந்திய இணைப்புத் திட்டம்.

(24) வேளாண் காடுகள் வளர்ப்பில் அனைத்திந்திய இணைப்புத் திட்டம்.

**2. உயிர் தொழில் நுட்பவியல் துறை:**

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகத்தின் அங்கமான உயிர் தொழில் நுட்பவியல் துறை, 10 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகின்றது. அவையாவன:

(1) உயிர் தொழில் நுட்பவியல் தகவல் அமைப்பின் உபயோகிக்கும் நிலையத்தை நிறுவி, அதன்மூலம் தேசிய இணைப்பின் மூலம் கணிப்பொறி தகவல் கூறுதிரள் (data base) உருவாக்குவது மற்றும் அறிவியல் தகவல்களைப் பெறுவது மற்றும் மற்றவர்களுக்கு அளிப்பது.

(2) உயிர் தொழில் நுட்பவியல் மூலம் தாவரத் திசு வளர்ச்சியின் மூலம் வேளாண் காடுகளில் வளர்க்கப்படும் மரங்களைப் பெருக்குவது பற்றிய ஆராய்ச்சி.

(3) இறால் மீன்களில் காணப்படும் நச்சுயிரி நோய்களைக் கண்டறிவதற்காக ஒரு நோய்காண் சாதனம் தயாரித்தல்.

(4) இறால்களில் காணப்படும் நுண்ணுயிரி நோய்களை ஆராய்ந்து அவைகளைத் தடுப்பதற்கான முறைகளைக் கண்டறிதல்.

(5) லெப்ட்டோஸ்பைரா நுண்ணுயிரியைப் பிரிக்க மற்றும் கண்டறிய மரபமில வெட்டு நொதிநீர் முறையைப் பயன்படுத்தும் ஆராய்ச்சி.

(6) நீலநாக்கு நோய் இந்தியாவில் இருப்பதைக் கண்டறிதல்.

(7) சென்னை மற்றும் எம்.ஜி.ஆர். மாவட்டங்களில் முட்டையிடும் கோழி வளர்ப்பு தொழில் நுட்பப் பரிமாற்றம்.

(8) கறிகள் மூலம் பரவும் நச்சுப் பொருட்களைக் கண்டறிதல்.

(9) உள்நாட்டில் கிடைக்கும் வெறிநோய் நச்சுயிரியை வைத்து செயலிழக்கப்பட்ட திசு வளர் வெறிநோய்த் தடுப்பு மருந்து உருவாக்குதல்.

(10) லெப்டோஸ்பைரா நோய் கண்டறிவதில் உயிர் தொழில் நுட்பவியல் முறைகளைப் பற்றிய 'சிறிய கால' பயிற்சி வகுப்பு.

## 3. அணு எரிசக்தித் துறை, இந்திய அரசு, மும்பை:

இந்தத் துறை, மூன்று ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கின்றது. அவையாவன:

(1) கால்நடைகளில் காணப்படும் வெக்கை நோய் மற்றும் பிபிஆர் நச்சுயிரிகளின் புரதங்களை ஆராய்தல்.





(2) மனிதன் மற்றும் ஆட்டின புரோலாக்டின் (prolactin) சுரப்பிற்கு ஓரின எதிர்க்காரணி தயாரித்தல்.

(3) நீலநாக்கு நோயைக் கண்டறியும் முறையை உருவாக்குதல்.

## 4. தேசிய தரிசு நில அபிவிருத்தி வாரியம்:

இந்த வாரியம் இரண்டு திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கின்றது. அவையாவன:

(1) வேளாண் காடுகளின் தொழில் நுட்ப விரிவாக்கம் - வாத்து, கினிகோழி, வான்கோழி மற்றும் மீன் பற்றிய செயல் ஆராய்ச்சித் திட்டம்.

(2) ஒருங்கிணைந்த நில மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு மூலம் கால்நடை உற்பத்தியைப் பெருக்குதல்.

## 5. இந்திய அரசு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகம்:

விவசாயிகளுக்காக தேசிய தட்பவெட்ப நிலை முன்னறிவிப்பு நிலையம் அமைப்பதற்காக இரண்டு திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கின்றது. அவையாவன:

(1) வேளாண் வானிலை ஆலோசனையகம், சென்னை.

(2) நாமக்கல்லிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் வேளாண் வானிலை ஆலோசனை சேவை மையம் தொடங்குதல்.

## 6. தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கழகம்:

சத்துள்ள விலை குறைந்த பாலைத் தயாரிக்கும் முறைகளைக் கண்டறிதல் திட்டத்திற்கு இந்தக் கழகம் நிதியுதவி அளித்துள்ளது.

## 7. சுற்றுப்புறச் சூழல் மற்றும் காடுகள் அமைச்சகம், இந்திய அரசு:

திமிங்கலம், கடல் பன்றிகளின் உயிரியல் வேறுபாடுகளைக் கண்டறிவதற்கான திட்டத்திற்கு இந்த அமைச்சகம் நிதியுதவி அளித்துள்ளது.

[1997 ஏப்ரல் 10

**8. தேசிய பால் வள அபிவிருத்தி வாரியம், ஆனந்த்:**

தமிழ்நாட்டில் பாலில் பூசன (aflotoxin m.1) நஞ்சை கண்டுபிடிப்பதற்காக இந்த வாரியம் இரண்டு திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கின்றது.

**9. அமெரிக்க அரசின் வேளாண்மைத் துறை:**

எதிர்க்காரணிகள் ஊக்குவிக்கும் டஃப்ட்சின் (tuftsin) மற்றும் ஆர்.என்.ஏ.வி.-ன் செயல்திறனை கோழிகளில் கண்டறிவதற்காக அமெரிக்க அரசின் வேளாண்மைத் துறை நிதியுதவி அளிக்கின்றது.

**10. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு:**

வங்காள விரிகுடா திட்டத்தின்கீழ் கட்டு மரங்களில் மீன்களை ஏற்றி வருவதற்குத் தகுந்த முறையில் பதனம் செய்யப்பட்ட பெட்டிகளை உருவாக்குவதற்கு நிதியுதவி அளிக்கின்றது.

**11. உலக நல நிறுவனம்:**

இந்நிறுவனம் வணிக முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலத்தில் வாழும் நுடுப்புடைய மீன்களின் இளம் பருவநிலை பற்றிய கையேடு ஒன்று தயாரிப்பதற்கு நிதியுதவி அளித்துள்ளது.

**12. கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை, இந்திய அரசாங்கம்:**

இறைச்சி மற்றும் இறைச்சி உப பொருட்களை உபயோகிப்பதற்கான நிலையத்தை அமைப்பதற்கு நிதியுதவி அளிக்கிறது.

**13. இந்திய கால்நடைகள் நல வாரியம், சென்னை:**

தொலைதூர கல்வி மூலம் கால்நடைகள் நலம் பற்றிய வகுப்பு அமைப்பதற்கு நிதியுதவி அளிக்கிறது.

**14. பெருங்கடல் முன்னேற்றத் துறை:**

கடல் வாழ் முட்சிங்கிறால் மீன் வளர்க்கும் முறை அமைப்பதற்கு நிதியுதவி அளிக்கிறது.



1997 ஏப்ரல் 10]

**15. ஊரக வேலைவாய்ப்பு அமைச்சகம்—ஊரக வளர்ச்சித் துறை:**

கீழ்க்கண்ட இரண்டு திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது.

(1) தமிழ்நாட்டில் வாத்து முட்டைகளின் கிடைப்பும் அவற்றை ஏற்றுக்கொள்ளும் நிலை பற்றிய கணிப்பு ஆராய்ச்சி.

(2) தமிழ்நாட்டில் பெரியார், சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள சந்தைகளில் கால்நடைகள் விற்பனை பற்றிய கணிப்பு ஆராய்ச்சி.

**16. உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம்:**

கறியைப் பதப்படுத்தும் மற்றும் வரிந்து கட்டுதல் தொழில் நுட்பங்கள் பற்றிய சிறிய கால ஆராய்ச்சி.

**17. கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சித் திட்டம் (மாநில அரசு மூலம்):**

கிராமப்புறங்களிலுள்ள இளைஞர்களுக்கு மீன் பிடித்தல், மீன் பதப்படுத்துதல் மற்றும் கடலோர மீன் வளர்ப்பு பற்றிய பயிற்சி.

**18. தேசிய ஊரக வளர்ச்சிக்கான வேளாண் வங்கி, மும்பை:**

குறைந்த விலையில் பால் பொருட்களும், வேளாண் சார்ந்த உணவுப் பொருட்கள் தயாரிப்புப் பற்றிய பயிற்சி.

**19. மீன் வளர்ப்புத் துறை, தமிழ்நாடு அரசு:**

கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மீன் வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சி.

**20. பல்கலைக்கழக திட்டமிடப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள்:**

இப்பல்கலைக்கழகத்தில் கல்வி, கால்நடை உற்பத்தி, கால்நடை நலம், மீன் உற்பத்தி, மீன் நலம், மீன் தொழில் நுட்பம், பின் அறுவடை தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் 88 ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சித் திட்டங்கள் இப்பல்கலைக்கழகத்தின் மூன்று கல்லூரிகளிலும், ஆராய்ச்சி நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவையாவன:

[1997 ஏப்ரல் 10

## (அ) கால்நடை மற்றும் விலங்கு அறிவியல்:

கல்விக்கான திட்டங்களைத் தவிர இப்பல்கலைக் கழகத்தில் காளைகளில் ஆண்மைக் குறைவு, கதிரியக்க ஐசோடோப்புகள், திசுவியல் மற்றும் திசு வேதியியல், சைனஸ் புற்றுநோய், மாடுகளில் தைலேரியா நோய், ஒட்டுண்ணி நோய்கள் பரவும் முறை, இறைச்சியில் தரக் கட்டுப்பாடு, பால் நிலையம், தீவன தரக்கட்டுப்பாடு நிலையம், இறைச்சி முயல் வளர்ப்பு, செல்லுலோஸ் கழிவுப் பொருட்களை உபயோகப்படுத்துவது மற்றும் வேளாண்மை தகவல் தொடர்பகம் அமைப்பது ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## (ஆ) மீன்வள அறிவியல்:

கல்வித் திட்டங்களைத் தவிர, புகை மூலம் பதப்படுத்தப்பட்ட மீன்களை தயாரித்தல், மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்வது, கோழியுடன் மீன் வளர்ப்பு, மீன்களைப் பதப்படுத்துதல், மீன் பண்ணை மேம்பாடு, நன்னீர் இறால் குஞ்சு பொரிப்பகம், உவர் நீர் சிப்பி மீன் வளர்ப்பு மற்றும் உற்பத்தி, கெண்டை மீன் உற்பத்தி, மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## விரிவாக்கக் கல்வி

பதினாறு பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள், நான்கு மீன் வள மையங்கள் மூலம் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களின் பண்ணையாளர்களுக்கும் புதிய தொழில் நுட்ப முறைகளானது அவர்களின் முன்னேற்றத்திற்காக அளிக்கப்பட்டு வருகின்றது. மற்றும் இந்த நிலையங்களில் நல்ல ஆய்வக வசதி இருப்பதன் காரணமாக தீவனங்களை பகுப்பாய்வதற்கும், பல்வேறு சோதனைகள் நடத்துவதற்கும், கொடிய நோய்களைக் கண்டறிவதற்கும் முடிகின்றது. பண்ணையாளர்களின் அறிவைப் பெருக்குவதற்காக பல்வேறு பயிற்சி முகாம்களும் நடத்தப்படுகின்றன.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்தித்தாள்களின் மூலம் புதிய தொழில்நுட்பங்கள் ஆய்வகத்திலிருந்து பண்ணையாளர்களை சென்று அடைகின்றது. பண்ணையாளர்களை மாணவர்களாகக் கொண்டு பண்ணை வானொலி பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றது.



1997 ஏப்ரல் 10]

அவ்வாறு நடத்தப்பட்ட ஆறு வகுப்புகளில் 2,418 பண்ணையாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

பண்ணையாளர்கள், மாணவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் பொதுமக்களுக்காக கால்நடைக் கதிர், பல்கலைக்கழகச் செய்தி மடல், ஆங்கிலத்திலும், தமிழிலும் மற்றும் 'Cheiron' எனப்படும் அறிவியல் ஆராய்ச்சி இதழ்களும் வெளியிடப்பட்டு வருகின்றன.

நடப்பு ஆண்டில் 15,000 உழவர் பெருமக்களுக்கு குறுகிய கால பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமும் மற்றும் அகில இந்திய வானொலி நிலையமும் சேர்ந்து இரண்டு வானொலி வேளாண் பள்ளிகள் நடத்தின. அஞ்சல் வழிக் கல்வி மூலம் 175 விவசாயிகளுக்கு சுய வேலைவாய்ப்புகள் பெறுவதற்காகக் கறவை மாடுகள் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

## திட்டம் மற்றும் வளர்ச்சி

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பல்கலைக் கழகத்திற்கு ரூ. 29.45 கோடி ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டக் காலத்தில் ரூ. 46.12 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றின் வளர்ச்சி சதவீதம் 156 விழுக்காடு ஆகும். இந்த ஆண்டிற்கான புதிய ஆராய்ச்சித் திட்டங்களுக்காக ரூ. 143.60 இலட்சங்கள் அளிக்கப்பட்டுள்ளது. பகுதி-2 திட்டங்களுக்காக ரூ. 67.90 இலட்சம் 1997-98-ஆம் ஆண்டிற்கு அளிக்கப்படவுள்ளது. அவற்றின் விவரங்கள்:

(1) குஞ்சுகளின் தரம் பற்றிய திறனாய்வு (குஞ்சுகளின் தோற்றம் உள் மற்றும் வெளித் திறனாய்வு), மாதவரம்.

(2) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் இறைச்சியியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையை மேம்படுத்துதல்.

(3) நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பறவைகளில் ஏற்படும் நச்சுயிரி கிருமிகளைத் திசு வளர்ச்சி மூலம் பகுப்பாய்வு செய்யும் ஆய்வுக் கூடத்தை நிறுவுதல்.

(4) கால்நடை தீவனம் மற்றும் மூலப் பொருட்களில் உள்ள பலதரப்பட்ட பூஞ்சான நச்சுக்களை நாமக்கல் கால்நடை தீவன பகுப்பாய்வு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆய்வகத்தில் ஆராய்ந்து அறிதல்.

[1997 ஏப்ரல் 10

(5) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் முதுகலை மாணவர் (மகளிர்) இல்லம் கட்டுதல், சென்னை.

(6) நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் முதுகலை மாணவர் (மகளிர்) இல்லம் கட்டுதல்.

(7) தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறால் நோய்களை துரிதமாகக் கட்டுப்படுத்த இறால் நல மருத்துவமனை நிறுவுதல்.

## சாதனைகளும் ஆய்வு முடிவுகளும்

**(அ) கால்நடை மருத்துவ அறிவியல்:**

**கல்வி:**

1. இந்தப் பல்கலைக் கழகத்தில் அளிக்கப்பட்டு வரும் இளங்கால்நடை மருத்துவப் பட்டப்படிப்பு இந்திய கால்நடை மருத்துவச் சட்டம் 1984-ன் முதலாவது பட்டியலில் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் 20-09-1989 முதல் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு இந்த அங்கீகாரம் அத்தியாவசியமான ஒன்றாகும்.

(2) வனவிலங்கு அறிவியலில் பட்ட மேற்படிப்பு துவங்கப்பட்டுள்ளது.

(3) கதிரியக்க ஐசோடோப் ஆய்வகம் துவங்கப்பட்டுள்ளது.

## ஆராய்ச்சி

**கால்நடை நலம்:**

(1) கும்போரோ நோய்க்கு எதிராக உருவாக்கப்பட்ட தடுப்பு மருந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இது தமிழகத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

(2) இராணிக்கெட் நோயிற்கு எதிராக உருவாக்கியுள்ள தடுப்பு மருந்து நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இதுவரை 2.5 இலட்சம் கோழிகளுக்கான தடுப்பு மருந்து விநியோகிக்கப்பட்டுவிட்டது.



1997 ஏப்ரல் 10]

(3) இறால்களுக்குத் தேவையான தீவனங்களை கணிப்பொறி மூலம் தயாரிக்கத் தேவையான கணிப்பொறி திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டது. குறைந்த செலவில் தயாரிக்கக்கூடிய இறால் தீவனக் கலவை உருவாக்கப்பட்டுள்ளது.

(4) திருப்பூரில் உள்ள பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் கோழிகளைத் தாக்கும் புதிய நோயான வீசி நோயை 1996 ஏப்ரல் திங்களில் கண்டுபிடித்துள்ளது. இதற்கான ஒளிப்பேழை தயாரிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை சிகிச்சை:**

(1) சென்னையில் குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட நாட்களில் செயல்படும் நடமாடும் கால்நடை மருந்தகம் நல்ல வரவேற்பைப் பெற்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதில் பெரிய மற்றும் சிறிய விலங்கினங்களுக்குக் சிகிச்சையளிக்கப்படுகிறது.

(2) நடமாடும் கதிரியக்கக் கருவி மூலம், மாதவாம் கால்நடை மருத்துவமனையில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(3) பசு, எருமை செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் நாய்களில் உள்நோக்கி கருவி (Laproscope) முறையில் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(4) நுண்ஒலி கதிர் பரிசோதனைக் கருவி (ultrasound scanner) மூலம் நோய் கண்டுபிடிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**விரிவாக்கம்:**

(1) குன்றக்குடியில் வேளாண் அறிவியல் மையம் 21-09-1996 அன்று ஆரம்பிக்கப்பட்டது.

(2) காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையத்தில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் பல்கலைக் கழக மற்றும் கிராமங்களின் இணைப்புத் திட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(3) கறவை மாடுகள் வளர்ப்பு என்பது பற்றி 175 பேருக்குத் தொலைதூரக் கல்வி அளிக்கப்பட்டது.

(4) அகில இந்திய அளவில் 100 பேருக்கு இந்திய கால்நடைகள் நலத் சங்கத்தின் உதவியுடன் தபால் தொடர்பு கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 10

## (ஆ) மீன்வள அறிவியல்:

(1) இறால் குஞ்சுகள் வளர்ப்பில் நுண்ணுயிர் ஊட்டச் சத்து மூலம் 90 சதவிகித அதிக உற்பத்தியும், வளர்ச்சியும் பெறப்பட்டுள்ளது.

(2) தேலி மீன்களில் செயற்கை முறையில் இனவிருத்திப் பருவத்தை மாற்றி அமைக்கும் ஆராய்ச்சிகளில் வெற்றி கிட்டியுள்ளது.

(3) மீன் வளர்ப்பில் பாஸ்பாரஸின் பங்கு ஆராயப்பட்டு அதன் அத்தியாவசியம் உணரப்பட்டுள்ளது.

(4) சிங்கியிறால் குட்டிகள் 6 மாத காலத்தில் 500 கிராம் அளவை எட்டும் அளவிற்கு தீவன மாற்றம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் 50 சதவிகிதம் இலாபம் அதிகம் கிடைக்கும்.

(5) கடல் விசிறிகளிலிருந்து அத்யாவசியமான வேதிய பொருட்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பொருட்கள் மீன்களின் வளர்ப்பு விகிதத்தை கூட்ட உதவுகின்றன.

(6) ஜப்பானிய அலங்கார மீன் வளர்க்கும் விதம் சீரமைக்கப்பட்டுள்ளது.

(7) மீன்களின் விந்துகளையும், முட்டைகளையும் உறை பாதுகாப்பு மூலம் பாதுகாக்கும் முறை கண்டறியப்பட்டுள்ளது. இதனால் அவற்றை இனவிருத்தி பருவம் கழிந்த பிறகும் இலாபகரமாக பயன்படுத்தலாம்.

(8) இறால் மீன்கள் வளர்ப்பதிலுள்ள சுற்றுப்புறச் சூழல் பாதிப்புகளை தவிர்க்க சுழல் முறை மாற்று வளர்ப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(9) குறைந்த செலவில் இறால் தீவனம் உருவாக்கப்பட்டுள்ளது.

(10) அலங்கார மீன்கள் பற்றிய புத்தகம் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

(11) இறால்களில் பரவும் நோய்களைத் தடுக்கும் முறைகளைக் கொண்ட ஒரு கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 10]

(12) நன்னீர் இறால் வளர்ப்பு பற்றிய ஒரு புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(13) இறால்களை 12.5 சதம் சோடியம் மெடாபைசல்பைட் கரைசலில் போட்டு எடுப்பதன் மூலம் அவற்றின் ஓடுகளில் ஏற்படும் கருப்புத் திட்டுகள் தடுக்கப்பட்டுள்ளது.

(14) இறால் பண்ணைகளில் அம்மோனியா மூலம் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் ஆபத்தை பார்மலின் மூலம் தவிர்க்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

(15) பொட்டாசியம் பார்மாங்கனேட் கரைசலும் அம்மோனியாவை நீக்குவதற்குப் பயன்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

(16) நுண்ணுயிர்கள் மூலம் அம்மோனியாவை இறால் பண்ணைகளில் அகற்றும் முறை கண்டறியப்பட்டுள்ளது.

(17) அலங்கார மீன்களுக்குத் தேவையான நீரின் தன்மைகள் ஆராயப்பட்டுள்ளன.

## எதிர்காலத் திட்டங்கள்:

### அ. கல்வி:

(1) கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியலில் தமிழ் மூலம் கற்பிப்பது பரப்புதல்.

(2) வேளாண் தட்பவெட்பவியல் பற்றிய முதுநிலை பட்டயப் படிப்பு ஆரம்பித்தல்.

(3) கால்நடை மற்றும் மீன் வளத் தொழில் மேலாண்மையில் முதுநிலைப் பட்டப் படிப்பு ஆரம்பித்தல்.

(4) கால்நடை மருந்தியலில் பட்டயப் படிப்பு ஆரம்பித்தல்.

(5) பள்ளியிலிருந்து விடுபட்ட சிறார்களுக்கும் மற்றவர்களுக்கும் தொலைதூர படிப்பு முறை.

[1997 ஏப்ரல் 10

## ஆ. ஆராய்ச்சி

**1. கால்நடை நலம்:**

(1) மரபியல் தரங்களை உயர்த்த மரபு கூறுயியல் ஆராய்ச்சி, திசு வளர்ப்பு முறை, கரு மாற்றம் முதலிய முறைகளைக் கையாளுதல்.

(2) தமிழ்நாட்டின் கால்நடை வளங்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி இன மாடுகளையும், சென்னை சிகப்பு மற்றும் திருச்சி கருப்பு இன ஆடுகளையும், தோடா எருமை இனங்களையும் இதுபோன்ற அரிய மரபினங்களையும் பாதுகாத்தல்.

(3) ஆட்டினம் பற்றி பண்ணையாளர்களிடையே பண்ணை அமைத்து அதன் மூலம் பண்ணையாளர்களுக்குக் கற்பித்து ஆட்டின வளத்தை மேம்படுத்துதலும் அதன் மூலம் சுயவேலை வாய்ப்பை உருவாக்குதலும்.

(4) விவசாயக் கழிவு மற்றும் கால்நடை கழிவுகளில் இருந்து தீவனம் தயாரித்தல் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட பொருட்கள் தயாரித்தல்.

(5) அசையூண் வயிற்றிலுள்ள நுண்கிருமிகளையும், சிறு குடலிலுள்ள நுண் கிருமிகளையும் வைத்து கால்நடைகளில் பால் மற்றும் இறைச்சி பெருக்குதல்.

(6) ஆதரவு நுண்ணுயிர்களையும் வளர்ச்சி ஊக்கிகளையும் பயன்படுத்துதல்.

(7) பன்றி இதய வால்வை மேம்படுத்துதல்.

(8) உயிர் தொழில் நுட்பவியல் மூலம் நோய் கண்டறியும் முறை.

(9) களநிலைக் கால்நடை மருத்துவர்கள் உபயோகிக்கும் வண்ணம் நோய் கண்டறியும் முறைகளைத் தயாரித்தல்.

(10) மூன்றாம் தலைமுறை தடுப்பூசி மருந்தையும் பல்நோக்குத் திறன் தடுப்பு மருந்தையும் உருவாக்குதல்.

(11) பால் பொருட்களின் தரத்தை உயர்த்துதலும், அவற்றைக் கெடாமல் பாதுகாத்தலும்.



1997 ஏப்ரல் 10]

(12) புதிய பால் பொருட்களை உண்டாக்குதல்.

(13) இதய மற்றும் நாள அறுவைச் சிகிச்சை.

(14) கால்நடை தீவனப் பயிர்களையும், மரத்தின் இலைகளையும் பெருக்கி கால்நடைகளுக்கு உணவாக்குதல்.

(15) கால்நடை மற்றும் மீன் வளர்ப்புக்கு உகந்த பல்வேறு வேளாண்காடு வளர்ப்பு மாதிரிகளை உருவாக்குதல்.

(16) கொட்டில் முறையில் ஆடு வளர்ப்பு விரிவாக்குதல்.

(17) வனவிலங்குப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு.

(18) கறிக்கான முயல் மற்றும் ரோமத்திற்கான முயல் வளர்த்தல்.

(19) இறைச்சிக்கோழி/மீன் உற்பத்தியில் தொழில்நுட்பப் பரிமாற்றம்.

(20) ஜப்பானிய காடை வளர்ப்பு முறைகள்.

(21) ஆட்டுப்பாலில் நுண்ணுயிர்க் கிருமிகளைக் கட்டுப்படுத்துதல்.

(22) பூஞ்சான் நோய்களைப் பற்றிய ஆராய்ச்சி.

(23) சூரிய ஒளியால் மாடு, வெள்ளாடு, செம்மறியாடுகளில் ஏற்படும் நோய் பாதிப்புகளும் மற்றும் அதனால் தமிழ்நாட்டின் பொருளாதாரப் பாதிப்பும்.

(24) கோழிகளில் எதிர்க் காரணிகளை ஒரே நேரத்தில் கண்டுபிடிக்கும் முறைகள்.

(25) வெறி நோயை கட்டுப்படுத்த வாய்மூலம் செலுத்தும் தடுப்பு மருந்து தயாரித்தல்.

(26) மாடு மற்றும் எருமைகளில் காணப்படும் பல்வேறு குணாதிசயங்களுக்குக் காரணமான மரபுக்கூறு தொகுப்புகளைப் பற்றி ஆய்வு செய்தல்.

(27) கால்நடை மற்றும் செல்லப் பிராணிகளில் ஒட்டுண்ணிகளை தடுத்தல்.

(28) பிறந்த புதுக்கன்று பற்றிய படிப்பை துவக்குதல்.

[1997 ஏப்ரல் 10

(29) இளங்கன்றுகளையும், இளங்குட்டிகளையும் வளர்க்கும் முறை பற்றிய ஆய்வு.

(30) சுவாசநோய் பற்றிய ஆய்வு.

(31) புதுக்கோட்டையில் வெள்ளாடு இன ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்.

(32) பி.வி.ஆர். என்னும் நோய்க்கு எதிராக செயலிழக்கப்பட்ட தடுப்பு மருந்து தயாரிப்பில் உள்ளது.

(33) நீலநாக்கு நோயிற்கான தடுப்பு மருந்து தயாரிப்பில் உள்ளது.

(34) கோழிகளை தாக்கும் இராணிக்கெட், கும்போரோ மற்றும் பரவும் சுவாச சுழற்சி நோய் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் சோதனைப் பெட்டி தயாரிப்பில் உள்ளது.

(35) கால்நடைகளைத் தாக்கும் சுவாச மூச்சுக் குழாய் சுழற்சி நோயை, ஊநீர் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(36) தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழிவினால் பால் தொழிலிற்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளை கால்நடைப் பராமரிப்புத் துறை ஒத்துழைப்புடன் ஆராய திட்டமிடப்பட்டுள்ளது.

(37) லெப்டோஸ்பைராஸிஸ் நோய்க்கு எதிராக தடுப்பு மருந்து தயாரிப்பிலுள்ளது.

(38) கால்நடை நல ஆய்வு மையத்தால் ரிப்ட் பள்ளத்தாக்கு காய்ச்சல் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இம்மையத்தால்தான் இந்நோய் இந்தியாவிலேயே முதன்முறையாக கண்டறியப்பட்டது.

**2. மீன்வள அறிவியல்:**

(1) முத்து உற்பத்தி பற்றிய ஆராய்ச்சி.

(2) மீன்களில் இருந்து தரம் உயர்த்தப்பட்ட பொருட்கள் தயாரித்தல்.



1997 ஏப்ரல் 10]

(3) கடல் வாழ் பாலூட்டிகளான டால்பின் போன்ற இனங்களை பெருக்குதல்.

(4) அலங்கார மீன் வளர்ப்பு.

(5) கடலோர மீன்வளப் பெருக்கம், மீன்களின் வளர்ப்பை பெருக்கும் முறைகள்.

(6) மீன்களை தாக்கும் நோய்களைப் பற்றிய ஆராய்ச்சி.

(7) ஹார்மோன் அல்லாத, வளர்ச்சியூட்டிகளைப் பயன்படுத்தி சாதாக் கெண்டை குஞ்சுகளை வளர்த்தல்.

(8) வளர்ப்புக் கடல் இறால்களைத் தாக்கும் விப்ரியோசிஸ் நோய் பற்றிய ஆராய்ச்சி.

மேலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காகவும், டால்பின் மற்றும் ஆமை போன்ற நீர்வாழ் உயிரினங்களின் வளர்ச்சி, இனப்பெருக்கம் மற்றும் பழக்கவழக்கங்களை அறிய ஒரு டால்பின் காட்சியகம் மற்றும் ஆமை காட்சியகத்தையும் அமைத்தல்.

**இ. விரிவாக்கம்:**

(1) கால்நடை மற்றும் விலங்கு மருத்துவ அறிவியலில் தமிழ் மொழியை பிரபலப்படுத்துதல்: கால்நடை மற்றும் விலங்கு மருத்துவ அறிவியலில் தமிழ்ப் புத்தகங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் தமிழ்ப் புத்தகங்களை எழுதும் ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதற்கான திட்டம்.

(2) மாடு, எருமை, செம்மெறி ஆடு, வெள்ளாடு, பன்றி மற்றும் கோழி பராமரிப்பு பற்றிய ஒலி ஒளிப்பேழைகள் வெளியிடுவது.

(3) வேளாண் அறிவியல் மையங்கள் தொடங்குவது.

## வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம்

**1. பல்கலைக் கழகத்தில் பணிபுரிவோர் முன்னேற்றம்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டில் கால்நடை மருத்துவம் மற்றும் மீன்வளக் கலைப் புலங்களைச் சேர்ந்த ஏழு ஆசிரியர்கள் வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

[1997 ஏப்ரல் 10

(அ) அமைப்பு சார்ந்த நடத்தை நிலை எனும் தலைப்பில் வெளி விரிவுரை ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

(இ) ஐதராபாத் தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மைக் கழகத்தில், ஆசிரியர் தொழில் மற்றும் கல்வி நிர்வாகத்தில் 30 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**2. ஆய்வுக் கூடத்தை வலுப்படுத்துதல்:**

(அ) மாணவர் ஆய்வுக் கூடங்களிலும் மருத்துவமனையிலும் நவீன கருவிகளை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) நவீன கேள்-காண் கருவிகளைத் தருவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**3. நூலகத்தை நவீன மயமாக்குதல்:**

(அ) சென்னை, நாமக்கல், தூத்துக்குடியிலுள்ள மூன்று கற்பிக்கும் வளாகங்களுக்காகப் பாடப் புத்தகங்கள், இதழ்கள், பழைய தொகுதிகள், காம்பேக்ட்டிஸ்க் ஆகியவை தருவிக்கப்பட்டன.

(ஆ) மாணவர்கள் பயன்பாட்டிற்காக, ஒளிநகல் எடுக்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(இ) நூலகப் பணிகளைக் கணிப்பொறி மயமாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஈ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் இப்பல்கலைக்கழக நூலகங்களை மேம்படுத்த சிறப்பு நிதியாக ரூ. 10 இலட்சம் இப்போது ஒதுக்கியுள்ளது.

**4. கணிப்பொறி மையம்:**

(அ) பல்கலைக் கழகப் பணிகள் முழுவதையும் கணிப்பொறி மயமாக்குவதற்கான தலைமை வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேவைப்படும் வன்னிலை மற்றும் மென்னிலை சாதனங்களைத் தருவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இத்திட்டத்தின் நிதியுதவியைக் கொண்டு, இதுவரைக்கும், கணிப்பொறியை இயக்குவதில் 228 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 10]

(இ) மாணவர் பதிவேடுகள், ஊதியப் பட்டியல், சேம நல நிதிக் கணக்குகள் ஆகியவை கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன.

**5. கலைப்புல மேம்பாடு:**

(அ) வகுப்பறை வளாகம், உணவு விடுதி மற்றும் நூலக விரிவாக்கம் தொடர்பான முன்னோடி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறையால் நடத்தப்படும் கால்நடை வணிக மேலாண்மையில் சிறப்புப் பயிற்சி பெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக வாகனம் ஒன்று தருவிக்கப்பட்டுள்ளது.

(இ) மாணவர் நல் ஆலோசனை மையம், வலுப்படுத்தப்பட்டு வருகின்றது.

**6. பொது:**

கால்நடை வளர்ப்புத் தொழில் தேவையினைப் பற்றி விவாதிப்பதற்காக, கால்நடை வளர்ப்புத் தொழில் தேவையினைப் பற்றி விவாதிப்பதற்காக, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 1996 நவம்பர் 18-இல் பரந்த மனப்பாங்கு ஆலோசனைக் குழுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

# இணைப்பு 3

(321 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை மற்றும் கோரிக்கை எண் 59—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98

நம் மாநிலத்தின் வனங்கள், உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்குவதிலும், சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதிலும், கிராமப்புற வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இயற்கை வளங்களை வழங்கும் வனங்கள் மக்களுக்கு மிகுதியான பயன்தரும் வகையில் கீழ்க்கண்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நிர்வகிக்கப்படும்.

- சுற்றுப்புறச் சூழலை நிலைநிறுத்தி தட்பவெட்ப நிலையினை சமநிலைப்படுத்துதல்.
- வளமிக்க உயிரின பரவல்களாக அமைந்துள்ள, தாவர வன உயிரினங்களைப் பாதுகாத்தல்.
- நீர்த் தேக்கங்கள், ஏரிகள் மற்றும் ஆறுகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளைப் பராமரித்து சிறந்த வகையில் மண்வளத்தையும் அதன் ஈரப்பதத்தினையும் பாதுகாத்தல்.
- சமுதாய மற்றும் தனியார் நிலங்களில் மரங்களின் வளர்ச்சியை கணிசமான அளவில் அதிகப்படுத்துதல்.
- கூட்டு வன நிர்வாக முறையில் வனவியலில் மக்களிடையே மாபெரும் இயக்கத்தை உருவாக்குதல்.
- கிராமப்புற மற்றும் பழங்குடிமக்களின் விறகு, தீவனம், இதர வனப் பொருட்களின் அவசிய தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- மதிப்பு மிக்க வனப் பொருட்கள் திருட்டுத் தனமாக அகற்றப்படுவதிலிருந்து பாதுகாக்கும் பணியை வலுப்படுத்துதல்.
- மாநிலத்திலுள்ள வனங்கள் மற்றும் மரங்களின் அடர்த்தியை அதிகப்படுத்தி மொத்த நிலப்பரப்புகளில் காடுகளின் பரப்பை மூன்றில் ஒரு பங்காக உயர்த்துதல்.
- எளிதில் மாறுபடுகின்ற நுண்ணிய அளவில் கடலோர சுற்றுச் சூழலை நிலைநிறுத்துதல்.

- மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் முனைப்படுத்துகின்ற ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இந்நாள் வரையிலான வன தொழில் நுட்பங்களை நவீன மயமாக்குதல்.

- மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வனத் துறைப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துதல்.

## 2. நோக்கங்கள்

### 2.1 காடுகளின் பரப்பளவு :

தமிழ்நாட்டில் வனங்களின் மொத்த பரப்பளவு 22,699 சதுர கிலோ மீட்டராகும். இது மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பளவில் சுமார் 17.45 விழுக்காடாகும். மொத்த மாநில நிலப்பரப்பளவில் வனங்களை அதிகப்படுத்தி அல்லது மரங்களின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்தி வனங்களின் பரப்பளவை மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பளவில் மூன்றில் ஒரு பங்காக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

### 2.2. வன வளர்ப்பு :

2.2.1. தமிழ் நாட்டில் வனங்களை ஒட்டியுள்ள 3,072 கிராமங்களில் பெரும் தேவைகள் மற்றும் உயிரின தலையீடுகளால் ஏற்படும் அழிவினால் சுமார் 7,000 சதுர கிலோ மீட்டர் வனங்கள் தரம் குன்றிவிட்டன. இந்த தரங்குன்றிய வனப்பகுதியில் சுற்றுச்சூழலை மீட்டு இயற்கை உயிரின சூழலை நிலை நிறுத்தவும், இயற்கை வனங்களை மேம்படுத்தவும் கூட்டு வன நிர்வாக முறையில் தொடர்ந்து மிகுந்த பயன்களைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

2.2.2. மக்களின் விறகு, தீவனம் மற்றும் சிறு மரங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, கால்வாய் ஓரங்கள், சாலை ஓரங்கள் மற்றும் வனங்களல்லாத சமுதாய நிலங்களில் மரங்களை நட்டு வனவளர்ப்பு செய்யப்படும்.

### 2.3. உயிரினப் பரவல்களைப் பாதுகாத்தல்:

தமிழ்நாடு வளமிக்க உயிரினப் பரவல்களைக் கொண்டிருக்கிறது. மாநிலத்தின் மொத்த வனப் பரப்பளவில் 2,833 சதுர கிலோ மீட்டர் அல்லது 12.6 விழுக்காடு ஐந்து தேசிய உயிரினப் பூங்காக்கள், ஆறு வன உயிரின சரணாலயங்கள் மற்றும் ஒன்பது பறவைகள் சரணாலயங்களையும்



உள்ளடக்கிய வன உயிரின பாதுகாப்புப் பகுதியாகும். தாவர வன உயிரினங்களைப் பாதுகாத்தலின் முதன்மை கொள்கைகளைத் தொடர்ந்து செயல்படுத்துவதன் மூலம் சரணாலயங்களும். தேசியப் பூங்காக்களும் பாரம்பரிய வனங்களும் உருவாக்கப்படும். மாநிலத்தின் மொத்த வனப் பரப்பளவில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் பரப்பளவை 25 விழுக்காடாக உயர்த்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

### 2.4. நீர்பிடிப்புப் பகுதி நிர்வாகம் :

தமிழகத்தில் 32 ஆறுகள். 11 பெரும் நீர்த்தேக்கங்கள், 2,679 கால்வாய்கள், 38,863 ஏரி. குளங்கள் உள்ளன. இவைகளின் பெரும்பாலான நீர்பிடிப்புப் பகுதிகள் வனங்களில் உள்ளன. ஆகையால் நீர்வளத்தினை நிலப்பகுதிகளில் சீராக வளப்படுத்தவும், ஆறுகள், அருவிகள், நில நீர்வளத்தினை ஒழுங்குபடுத்தவும். மண்வளத்தினை மேம்படுத்தவும், நீர்பிடிப்புப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 2.5. தனியார் நிலங்களில் மரங்கள் நடுதல் :

தனியார் நிலங்களில், வேளாண்மைக்கு எந்த முறையிலும் பாதகம் விளைவிக்காமல் மரங்களின் அளவினை அதிகப்படுத்துவதற்கு மிக அதிக அளவில் வாய்ப்புகள் உள்ளன. இத்திட்டமானது மாநிலத்தில் தடிமரங்களின் விநியோகம் மற்றும் இதர சிறுவனப்பொருட்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு சுற்றுப்புற சீதோஷ்ண நிலைகளுக்குத் தேவையாகவும் அமையும். வரும் ஆண்டுகளில், விரிவாக்க வனவியல் திட்டம் வேகப்படுத்தப்படும். தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புக்குத் தடையாக அமையும் விதிகளும், ஒழுங்கு முறைகளும் ஆராயப்பட்டு, படிப்படியாக அகற்றப்படும்.

### 2.6. வனவியலில் மக்களிடையே மிகுந்த ஈடுபாட்டை உருவாக்குதல் :

உள்ளூர் அளவிலான நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளை, திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், அதனால் வரும் பயன்களைப் பகிர்ந்து கொள்ளுதல், கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பிடுதல் ஆகியவற்றில் ஈடுபடுத்தி வன வளர்ப்பில் மக்களின் பங்கேற்பு உறுதி செய்யப்படும். வரும் காலங்களில், வனக்கூட்டு மேலாண்மைக்கு முக்கிய பங்கு கொடுக்கப்படும்.

[1997 ஏப்ரல் 10

## 2.7. வனப் பாதுகாப்பு :

அட்டவணை மரங்கள் உள்ளிட்ட மதிப்பு மிக்க வனப்பொருட்கள் சமுதாய எதிரிகளால் கள்ளத்தனமாக கடத்தப்படுகின்றன. இதுபோன்று அரசாங்கத்திற்கு எதிரான தீய சக்திகளை எதிர்த்துப் போராட, அரசு துறையில் தகுந்த உள்ளமைப்பு மற்றும் நவீன சாதனங்களைக் கொண்டு வலுப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

## 2.8. கடலோர இயற்கைச் சூழலை நிலை நிறுத்தல் :

தமிழகத்தில் கிட்டத்தட்ட 1,000 கிலோ மீட்டரளவில் அமைந்துள்ள கடலோரப் பகுதிகள் மாறுபட்ட பல்வேறு இயற்கையின் சவால்களையும் உயிரின தலையீடுகளையும் தாங்கிக் கொண்டு நுண்ணிய உயிரினச் சூழல் அமைப்புகளைக் காத்து வருகின்றன. மன்னார் வளைகுடாவின் அரிதான உயிரின பரவல்களில் தாவர மற்றும் நீர்வாழ் உயிரினங்களைக் காப்பதற்கும், கடலோரங்களில் வீசும் அதிவேக காற்று மற்றும் புயல்களின் நாச விளைவுகளைக் குறைப்பதற்கும் மணல் குன்றுகள் உருவாகுவதால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்கவும், சதுப்பு நில மாங்குரோவ் மற்றும் பல வனவளத்தைக் காக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 2.9. பழங்குடியின மக்களும் வளமும் :

வனங்களில் வாழும் பழங்குடி மக்களின் பொருளாதாரம் வன வளத்தினைச் சார்ந்தே உள்ளது. பழங்குடியினருக்கு பாதுகாப்பளிக்கும் ஆதாயங்களை வளப்படுத்தும் வகையில் வனப்பகுதிகளிலும் மற்றும் பழங்குடியினரின் இடங்களிலும் மரங்கள் மற்றும் தாவர வளம் கொண்ட மூலதனச் சொத்துக்கள் உருவாக்கப்படும். பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் நில முன்னேற்றப் பணிகள், வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் அடிப்படை உள்ளமைப்பு வசதிகளை வழங்கும் பல பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

## 2.10. வனத்துறையில் மனிதவள மேம்பாடு :

வனத்துறை 1806-ம் ஆண்டு, அமைதியாக சிறிய அளவில் தொடங்கப்பட்டு கடந்த வருடங்களில் விரிவு படுத்தப்பட்டு தற்போது சுமார் 10,000 பணியாளர்களை உள்ளடக்கியுள்ளது. இந்த விலை மதிக்கமுடியாத மனித வளத்தின் திறன், திறமை அளவில் மேம்படுத்தப்பட்டும், தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டும் உயர்த்தப்படும்.

## 2.11. வன ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி :

முன்னர் உருவாக்கப்பட்ட வன நுட்பவியல், தற்போதைய மாறிவரும் சூழ்நிலைக்குப் போதுமானதாக இல்லை. நுட்பவியலின் பற்றாக்குறை,



1997 ஏப்ரல் 10]

தரங்குன்றுதல் மற்றும் உயிரினங்களின் அழிவுகள் ஆகியவைகளில் பிரதிபலிக்கப்பட்டு இயற்கை வளப் பொருட்களின் தேவை மற்றும் அதன் உற்பத்தி அளவில் மிகுந்த இடைவெளி ஏற்பட்டுள்ளது. மேலும் வனப் பாதுகாப்பு செயல்முறைக்கும், வனங்களைச் சார்ந்து வாழும் மக்களின் சமுதாய பொருளாதாரத்திற்குமிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. வன நுட்பங்கள் தற்போதைய நடைமுறையிலுள்ள காலத்திற்கேற்பவும் வருங்கால தேவைகளையும் நிறைவு செய்யும் வண்ணம் மேம்பாடு திட்டங்களையும் நல்முகப்படுத்தும் ஆராய்ச்சிகளை மாநில வன ஆராய்ச்சி நிறுவனம் மூலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 3. 1996-97-ம் ஆண்டின் சாதனைகள் :

நமது அரசு 1996-97 ஆம் ஆண்டில் காடுபடு பொருட்களை விற்பதில் அதிக அளவில் வருவாய் ஈட்டி வெற்றி கண்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் நடந்த பொது ஏலத்தில், சந்தன மரங்கள் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு விலை ஈட்டியுள்ளது. அதாவது 1995-96 ஆம் ஆண்டில் கிலோவிற்கு ரூ.260.00 அளவில் ரூபாய் 1323 லட்சம் வருவாய் ஈட்டியதை விட 1996-97 ஆம் ஆண்டில் கிலோவுக்கு ரூ.500.00-க்கு விற்று ரூ.4620 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

3.2. நமது அரசு, தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மூலப் பொருட்களின் விலையினைக் கணிசமாக உயர்த்தி, அரசுக்கு அதிக வருவாய் கிடைக்க வகை செய்துள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு:—

| மூலப்பொருட்கள் | 1995-96 டன் விலை ரூ. | 1996-97 டன் விலை ரூ. | விழுக்காடின் அதிகம் |
|---|---|---|---|
| மூங்கில் | 570 | 1,140 | 100% |
| யூகலிப்டஸ் ஹைபிரிட் | 770 | 1,348 | 75% |
| புளுகம் | 1,570 | 2,748 | 75% |
| யூகலிப்டஸ் கிராண்டிஸ் | 1,360 | 2,380 | 75% |
| தோல் உரிக்கப்பட்ட மிலாறு மரம் | 1,020 | 1,785 | 75% |
| மிலாறு பட்டை | 3,375 | 4,725 | 40% |

**3.3.** வனப்பாதுகாப்பை வலுப்படுத்த நமது அரசு ரூ.286.07 லட்சம் நிதி ஒப்புதல் வழங்கியுள்ளதுடன் பாதுகாப்பு பணியாளர்கள் பற்றாக்குறையைத் தீர்க்க 495 பணியிடங்களையும் தோற்றுவித்துள்ளது. இது போன்று ஒரே நேரத்தில் பாதுகாப்புப் பணிக்காக அதிக அளவு பணியாளர்களை நியமனம் செய்தது, தமிழக வனத்துறை வரலாற்றில் இதுவே முதன் முறையாகும்.

**3.4.** மற்றுமொரு முக்கிய பணியான வன நிலங்களில் கள்ளத்தனமாக பயிரிடப்படும் கஞ்சா பயிரைக் கண்டுபிடித்து அழிப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. மே 1996-லிருந்து பிப்ரவரி 1997 வரையிலும் 101.80 ஹெக்டேர் வனப்பரப்பில் சுமார் 3.35 லட்சம் கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு சுமார் ரூ. 58.10 கோடியாகும்.

**3.5.** நம் அரசு மற்றுமொரு குறிப்பிடத்தக்க சாதனையாக ஜப்பான் நாட்டு கடல் கடந்த பொருளாதார கூட்டுறவு நிதி நிறுவனத்துடன் ரூ.499.20 கோடி ஒதுக்கீட்டில் 'தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம்' ஒன்றினை செயல்முறைப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தினை நிறைவு செய்துள்ளது.

**3.6.** கிராமப் பகுதிகளில் விறகு மற்றும் தீவன மரம் வளர்க்கும் திட்டத்தின் கீழ் மேலும் 6 கோட்டங்களை உருவாக்கியுள்ளது.

**3.7.** மனிதவள மேம்பாட்டுக்கென நமது அரசு சிறப்புக் கவன நடவடிக்கை எடுத்து 27 அலுவலர்களுக்கும் 96 சார்நிலைப் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கியுள்ளது.

## 4. வன வருவாய் மற்றும் செலவினங்கள் :

(1996-97) இந்த வருடத்தில் மதிப்பீட்டு வருவாய் ரூ.8,000 லட்சங்கள். விவரம் கீழ்க்கண்டவாறு :

| | வருவாயின் இனம் | ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1. | சந்தன மரங்கள் | |
| 2. | தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 4,008 |
| 3. | மரங்களல்லாத காடுபடுப் பொருட்கள் | 632 |
| 4. | தடிமரம், விறகு, மூங்கில் சவுக்கு, மென்மரம் மற்றும் வனவியல் பண்ணைத் தோட்டங்கள் மற்றவைகள் | 117 |
| | | 3,243 |
| | மொத்தம் | 8,000 |



**வரவு:** 1997-98-ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ.8184.54 லட்சம்.

**செலவினங்கள் :** 1996-97-ம் ஆண்டின் வன மேம்பாட்டிற்கான திட்ட செலவு ரூ.6,787 இலட்சங்களாகும். திட்டமில்லாத இனங்களுக்கான செலவு ரூ.4,027.00 இலட்சங்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1997-98-ம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடு ரூ.14,467 இலட்சங்கள் ஆகும்.

## 5. திட்டப்பணிகள் :

**5.1.** 1995-96 ஆம் ஆண்டின் செலவு 1996-97 ஆம் ஆண்டின் உத்தேச செலவு மற்றும் 1997-98 ஆம் ஆண்டு செய்யக் கருதப்படும் செலவு ஆகியவற்றின் விவரங்கள் கீழ்வருமாறு :

| திட்டம் | 1995-96-ம் ஆண்டின் செலவு | 1996-97-ம் ஆண்டின் உத்தேச செலவு (திருத்திய மதிப்பீடு) | 1997-98-ம் ஆண்டின் செய்யக் கருதப்படும் செலவுகள் (வரவு செலவு மதிப்பீடு) |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்) | |
| மாநில வனத் திட்டம், மலைப் பகுதி மேம் பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் | 4,724.38 | 5,593.99 | 9,467.16 |
| மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டம் 100% | 237.05 | 104.27 | 89.11 |
| மாநில அரசும் மத்திய அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டம் 50 : 50 | 310.38 | 459.69 | 331.84 |
| மண்வளப் பாதுகாப்பு திட்டங்கள் | 115.93 | 139.44 | 149.93 |
| மொத்தம் | 5,387.74 | 6,297.39 | 10,038.04 |

[1997 ஏப்ரல் 10

| திட்டம் | 1995-96-ம் ஆண்டின் செலவு | 1996-97-ம் ஆண்டின் உத்தேச செலவு (திருத்திய மதிப்பீடு) | 1997-98-ம் ஆண்டின் செய்யக் கருதப்படும் செலவுகள் (வரவு செலவு மதிப்பீடு) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மத்திய அரசின் உதவித் திட்டம் 50% பங்கு கழித்தது | 155.19 | 229.84 | 165.92 |
| நிகர மொத்தம் | 5,232.55 | 6,067.55 | 9,872.12 |

5.2. 1997-98 ஆம் ஆண்டின் திட்டப் பணிகளின் கீழ் முதலீடு செய்யக் கருதப்பட்டது.

1997-98 ஆம் ஆண்டின் வன அபிவிருத்திப் பணிகளுக்கு முதலீடு செய்யக் கருதப்படும் மதிப்பீட்டளவு ரூ. 98.72 கோடியாகும். அதன் விவரங்கள் கீழ்க்கண்டவாறு :

| திட்டம் | ரூபாய் லட்சத்தில் |
|---|---|
| மாநிலத் திட்டங்கள், மலைப்பகுதி மேம்பாடு திட்டம் மற்றும் மேற்கு மலைத் தொடர் மேம்பாடு திட்டம் | 9,467.16 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100%) | 89.11 |
| மாநில அரசும் மத்திய அரசும் சம அளவில் பங்கேற்கும் திட்டங்கள் (50 : 50) | 331.84 |
| மண்வளப் பாதுகாப்பு திட்டங்கள் | 149.93 |
| மொத்தம் | 10,038.04 |
| மத்திய அரசின் உதவி திட்டம் 50% கழித்தல் | 165.92 |
| மொத்தம் | 9,872.12 (அல்லது) ரூ. 9,872 கோடி |



1997 ஏப்ரல் 10]

1997-98 ஆம் ஆண்டின் மாநில திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் செயல்பட கருதப்பட உள்ளன:

| திட்டங்களின் பெயர் | 1997-98 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. உள்ளூர் வனப்பாதுகாப்பு | 7,189.71 |
| 2. ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் | 149.93 |
| 3. உயிரினபரவல் பாதுகாப்பு | 356.16 |
| 4. வன விரிவாக்கம் | 1,061.38 |
| 5. வனப் பாதுகாப்பு | 268.29 |
| 6. பழங்குடியினர் மேம்பாடு | 194.39 |
| 7. உற்பத்தி வனவியல் | 311.43 |
| 8. ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் திட்டமிடுதல் | 146.00 |
| 9. தகவல் தொடர்பு அடங்கிய உள்ளிட்ட அடிப்படை சாதனங்கள் | 84.13 |
| 10. மனிதவள மேம்பாடு மற்றும் பயிற்சி | 79.38 |
| 11. ஒருங்கிணைந்த கடலோர மேம்பாடு | 31.32 |
| மொத்தம் | **9,872.12** |

வன அபிவிருத்திக்கென பகுதி-2 திட்டத்தின் கீழ் 1997-98 ஆம் ஆண்டில் ரூ. **109.85** லட்சம் அளவில் பன்னிரண்டு திட்டங்களை செயல்படுத்த கருதப்பட்டுள்ளது.

**6. தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம்:**

தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் மிகப் பெரிய அளவில் உள்ளூர் மக்களின் முழு ஈடுபாட்டுடன் 1997-ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளது.

[1997 ஏப்ரல் 10

இத்திட்டத்தின் ஐந்து வருடச் செலவு ரூ. 499.20 கோடி என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் ஜப்பான் நாட்டு பன்னாட்டு பொருளாதார கூட்டு நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயல்படவுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கங்கள் விவரம் கீழ்வருமாறு :

1. பல்வேறு மர வகைகளை உருவாக்கியும் தீவிர மண் வள பாதுகாப்பு மற்றும் நீர்வளத்தை அதிகரித்தும் வன உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்.

2. இயற்கை மாறுபாடு நிறைந்த பகுதிகளை பாதுகாப்பதற்கு மர வளர்ப்பு பழக்கத்தை மக்களிடம் ஊக்குவித்தல், குறைந்தபட்ச காலத்தில் எரிமரம், சிறுமரங்கள் மற்றும் கால்நடை தீவனம் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வனச் சொத்துக்களை உருவாக்குதல்.

3. இத்திட்டத்தோடிணைந்த விஞ்ஞான அடிப்படையிலான நிலவளத்தின் தேவைகளை சாதகமாகப் பயன்படுத்தி கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு வசதிகளை அளித்தல்.

4. பூகோள ரீதியான தகவல் முறையினை நிறுவுதல், பல்வேறு பயிற்சித் திட்டங்கள் மற்றும் இயற்கை வளங்களை கூட்டு வனத் திட்டமிடுதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றின் மூலம் தமிழக வனத்துறையின் திறமையினை உயர்த்துதல்.

## 7. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி :

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 13-06-1974 அன்று கம்பெனிச் சட்டத்தின் ஆளுகையின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் பங்கு மூலதனம் முழுவதும் தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டது. இக்கழகத்தின் ஆளுகையின் கீழுள்ள 71,013 எக்டேர் காப்புக் காட்டினை வனத்துறையிலிருந்து குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### குறிக்கோள்கள் :

கூழ்மரம் மற்றும் முந்திரித் தோட்டங்களை உற்பத்தி செய்து, தொடரும் அறுவடை அடிப்படையில் பராமரித்தல் முக்கிய நோக்கமாக இக்கழகம் கொண்டுள்ளது.



1997 ஏப்ரல் 10]

### நிறைவேற்றுதல்கள்:

1995-96 மற்றும் 1996-97-ம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்ட தோட்டங்களின் விவரம் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது:

| | 1995-96 (பரப்பளவு | 1996-97 எக்டேரில்) |
|---|---|---|
| யூகலிப்டஸ் தோட்டங்களின் உற்பத்தி | 2614 | 3063 |
| முந்திரி தோட்டங்களின் உற்பத்தி | 966 | 397 |

### கூழ்மரம் விநியோகம்:

இக்கழகம் 1995-96 ஆம் ஆண்டில் 67,672 மெட்ரிக் டன் அளவு கூழ்மரங்களை தொழிற்சாலைகளுக்கு விநியோகம் செய்த அளவிற்கு எதிராக 1996-97 ஆம் ஆண்டில் 60,000 மெட்ரிக் டன் அளவு கூழ்மரம் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. அதில் தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் மற்றும் பேப்பர் லிமிடெட் நிறுவனத்திற்கு 32,000 மெட்ரிக் டன்னும் சேஷசாயி பேப்பர் மற்றும் போர்டு லிமிடெட் நிறுவனத்திற்கு 28,000 மெட்ரிக் டன்னும் கூழ் மரமும் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது.

## 1997-98 ஆம் ஆண்டின் திட்டங்கள்:

1997-98 ஆம் ஆண்டில் இக்கழகம் 3,000 எக்டேரில் அதிக பலன் தரும் கூழ்மரத் தோட்டங்களையும், 1,000 எக்டேர் பரப்பளவில் முந்திரித் தோட்டங்களையும் உற்பத்தி செய்யக் கருதியுள்ளது.

இக்கழகத்தின் 1995-96, 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டின் வரவு செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் லட்சத்தில்)

| | 1995-96 (உள்ளபடி) | 1996-97 வரவு செலவு பட்டியல்படி | 1997-98 வரவு செலவு பட்டியல் |
|---|---|---|---|
| நிதிவருவாய் | 942.91 | 1,160.85 | 1,508.25 |
| செலவுகள் | 936.13 | 1042.67 | 994.71 |
| இலாபம் (+) | 6.78 | 118.18 | 513.54 |

[1997 ஏப்ரல் 10

## 8. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்:

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் முந்தைய அரசு தேயிலைத் திட்டமாகும். இக்கழகம் 22-08-1975 ஆம் நாளன்று 1956 ஆம் வருடத்திய கம்பெனி சட்டத்தின் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டு 01-04-1976-லிருந்து ஒரு கழகமாக செயல்படத் துவங்கியது. நீலகிரி மாவட்டத்தில், பொருத்தமான நிலங்களில் தேயிலை உற்பத்தி செய்து சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளுக்கு நிரந்தர வேலையளித்து மறுவாழ்வு கொடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். தோட்ட உற்பத்தியும், மறுவாழ்வு பணியும் தொடரப்பட்டு மூன்று கட்டங்களில் 2,770 எக்டேர் நிலங்களில் உயர் இன தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. நான்காவது கட்டப்பணியாக 1653.50 எக்டேர் நிலப் பரப்பளவில், செயல்படாத சின்கோனாத் துறையின் நிலங்களில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது.

**பசுந்தேயிலை உற்பத்தி (லட்சம் கிலோவில்)**

| 1995-96 (உற்பத்தி) | 1996-97 (மதிப்பீடு) | 1997-98 (மதிப்பீடு) |
|---|---|---|
| 337.95 | 393.28 | 430.44 |

பதப்படுத்தப்பட்ட தேயிலை உற்பத்தி (லட்சம் கிலோவில்)

| 1995-96 (உற்பத்தி) | 1996-97 (மதிப்பீடு) | 1997-98 (மதிப்பீடு) |
|---|---|---|
| 76.27 | 85.08 | 99.00 |

1995-96 ஆம் ஆண்டில் தேயிலையின் விலை வீழ்ச்சியால், இக்கழகம் ரூ. 168.26 லட்சம் நஷ்டம் அடைந்துள்ளது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் ஒன்று முதல் மூன்றாம் பகுதி தோட்ட வருமானத்திலிருந்து அதற்கேற்பட்ட உற்பத்தி செலவை கழித்துப் பார்த்தால் ஏறத்தாழ ரூ. 8.00 கோடி வரை இலாபம் வரும். ஆனால் வால்பாறை மற்றும் நடுவட்டம் பகுதியில் (பகுதி-4) தேயிலைத் தோட்டங்களில் ஏராளமான பணம் முதலீடு செய்வதாலும் புதிய தேயிலைத் தொழிற்சாலைகள் அமைப்பதாலும், புத்தகப்படி நட்டம்



1997 ஏப்ரல் 10]

காட்டப்பட்டுள்ளது. இக்கழகம் வருங்காலத்தில் மிகப்பெரிய அளவில் இலாபம் ஈட்டும் தோட்டமாக மாற வாய்ப்புள்ளது.

**தொழிலாளர்கள்:**

இக்கழகம் 6,138 நிரந்தர தொழிலாளர்களைக் கொண்டுள்ளது. அதில் 4,785 பேர் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் ஆவர். சின்கோனா துறை மூடப்பட்டதால் 1,353 நிரந்தர தொழிலாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு உள்ளனர்.

**வருவாய் செலவினங்கள்:**

(ரூபாய் லட்சத்தில்)

| வருடம் | தேயிலை விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | வரி செலுத்திய பிறகு நிகர லாபம் (+) நஷ்டம் (-) |
|---|---|---|---|
| 1995-96 | 3,486.00 | 3,654.00 | (-)168.00 |
| 1996-97 (வரவு செலவு பட்டியலின்படி) | 3,759.00 | 4,064.00 | (-)305.00 |
| 1997-98 (வரவு செலவு பட்டியலின்படி) | 4,277.00 | 4,480.00 | (-)203.00 |

## 9. அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்:

அரசு ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத்துறையிலிருந்து 4,785.70 எக்டேர் நிலபரப்பு வன நிலங்களிலுள்ள ரப்பர் தோட்டங்களை குத்தகை எடுத்துக்கொண்டுள்ளது. 1956 ஆம் ஆண்டின் கம்பெனி சட்டத்தின் கீழ் 20-08-1984 அன்று அரசு ரப்பர் கழகமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ரூ. 4 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடியாகும்.

**உற்பத்தி மற்றும் விற்பனை:**

மூன்று வருடங்களின் ரப்பர் உற்பத்தி மற்றும் விற்பனைகள் பின்வருமாறு:

| வருடம் | கள உற்பத்தி அளவு (மெட்ரிக் டன்னில்) | விற்பனை | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1995-96 | 2,666 | 1,766 | 1,097.86 |
| 1996-97 (வரவு செலவு பட்டியலின்படி) | 2,600 | 3,575 | 2,091.00 |
| 1997-98 (வரவு செலவு பட்டியலின்படி) | 2,530 | 2,500 | 1,503.00 |

**வருவாய் மற்றும் செலவுகள் :**

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | ரப்பர் மற்றும் இதர பொருட்களின் விற்பனின் மூலம் வருவாய் | செலவுகள் | வரி செலுத்தப் பட்டபின் நிகர லாபம் (+) நஷ்டம் (-) |
|---|---|---|---|
| 1995-96 | 1,697.00 | 1,368.18 | (+) 328.82 |
| 1996-97 (வரவு செலவு பட்டியலின்படி) | 2,148.25 | 2,059.44 | (+) 88.81 |
| 1997-98 (வரவு செலவு பட்டியலின்படி) | 1,547.32 | 1,505.45 | (+) 41.87 |





**முடிவுரை :**

வனவியல் செயல்கள் யாவும் அதிக அளவில் உழைப்பு திறன் உருவாக்குதலாகும். அதிகப்படியான மூலதனம், கிராம மக்கள் மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள குறிப்பாக ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாக அமையும். நலிவடைந்த மக்கள், குறிப்பாக பழங்குடியினருக்கு ஊதியம் வழங்கும் வேலைவாய்ப்பினைத் தொடர்ந்து உண்டாக்குவதே நமது முக்கியமான கொள்கையாகும். வனப்பொருட்களின் உற்பத்தி அளவை பெருக்குவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் மாநிலத்தின் பொருளாதார, சமுதாய மற்றும் தட்ப வெட்ப நிலை போன்றவைகளைக் கருத்தில் கொண்டு வன வளத்தினை மேம்படுத்துவதில் அவசியத்தினையும், பாதுகாப்பதின் தேவையையும் நமது அரசு முழுமையாக அறிந்துள்ளது. மக்களின் ஒத்துழைப்போடு தட்பவெட்ப நிலையினை நிலைநிறுத்தவும், இயற்கையின் பரிசான மதிப்புமிக்க வன வளத்தினை உயர்த்தவும் மக்களின் முழு ஒத்துழைப்புடன் எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும். முடிவாக இத்தலைமுறை மட்டுமின்றி இனி வரும் தலைமுறைகளுக்கும் நன்மை பயக்கும் கொள்கைகளை செயல்படுத்துவதே வனத்துறையின் நோக்கமாகும்.

ஃஃ

தமிழ்நாடு ... காப்பக நூலகம் சென்னை-600 008
216828 D 11.3.97
527 363 166
N97.27.2

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.